தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி

தி.முருகரத்தனம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001

தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி

முனைவர் தி. முருகரத்தனம்,
முன்னாள் விரிதமிழ் இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 57

திருவள்ளுவர் ஆண்டு—2017— வைகாசி: சூன் 1986

நூல் : தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி

ஆசிரியர் : தி. முருகரத்தனம்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரு. 57-00

அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

பொருளடக்கம்

முன்னுரை		
இலங்கை	..	1
சிங்கப்பூர்	..	77
மலேசியா	..	111
முடிவுரையும் பரிவுரையும்	..	171
நூலடங்கல்	..	185
பின்னிணைப்பு (துணைவேந்தர் மடல்)	..	187

முன்னுரை

தமிழர்களுக்கு நீண்ட வரலாற்றுப் பெருமை உள்ளது போல 'இன்றைய உலகின் பல நாடுகளிலும் தமிழர்கள் பரவியிருக்கின்றார்கள்' என்ற ஒரு பெருமையும் உண்டு. இந்தியாவின் தமிழ் நாட்டில் தமிழர்கள் ஏறத்தாழ 4 கோடி பேர் வாழ்கின்றார்கள். இந்தியாவின் பிறமாநிலங்களில் தமிழர்கள் ஏறத்தாழ 25இலட்சம் பேர் வாழ்கின்றார்கள். இந்தியாவிற்கு வெளியே தமிழ் மொழி பேசுவோர் இலங்கையில் 37 இலட்சம் பேரும்' மலேசியாவில் 10 இலட்சம் பேரும், சிங்கப்பூரில் 1 இலட்சம் பேரும், பர்மாவில் 1 இலட்சம் பேரும், மொரிசியசில் 70,000 பேரும், தென் ஆஃபிரிக்காவில் 3 இலட்சம்பேரும், ரே யூனியனில் 1 இலட்சம் பேரும் வாழ்வதாக அறியப்படுகிறது. மேலும் பிரான்சு, இங்கிலாந்து, ஃபிஜி, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளிலும் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இந்தியாவிற்கு வெளியே தமிழர்கள் தொகை ஏறத்தாழ 60 இலட்சம் இருக்கும் எனத் தெரிகிறது. பெரும்பாலும், தமிழர்கள் வாழும் வெளிநாடுகள் ஆங்கில பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளாகும். பல்வேறு தொழில்கள் காரணமாகவும் வணிகம் காரணமாகவும் தமிழர்கள் இந்நாடுகளில் குடியேறினர். அவர்களுள் வேலை வாய்ப்புக்கள் தேடிக் குடியேறிய எளிய தமிழர்களே பெரும்பாலோர் ஆவர்.

பழம்பண்பாட்டுப் பெருமை, பல நாடுகளில் இன்று பரவி வாழும் பெருமை ஆகிய இரண்டின் காரணமாகவும் உலகெங்கும் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் தமிழ்க் கல்விக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் ஒரு சிறப்பிடம் கிடைத்துள்ளது. இப்பெருமை காரணமாகத் தமிழர்கள் உணர்வு பெற்றுத் தமிழ்ப் பண்பாட்டின் ஊற்றாக விளங்கும் தஞ்சை மாநகரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றினையும் நிறுவியுள்ளனர். வெளிநாட்டுத் தமிழர்களைப்பற்றி

ஆய்வதற்கும் இத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒரு துறை நிறுவப் பட்டுள்ளது. பொதுவாக, இன்றைய தமிழகத்தில் வெளிநாட்டுத் தமிழர்கள் பற்றித் தோன்றிய பரிவுணர்விற்கேற்ப அவர்களைப் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உருவம் கொண்டது. தாய்த் தமிழர் களும் சேய்த் தமிழர்களும் கூடியபோதெல்லாம் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதனைத் தமிழக அரசும் உணர்ந்தது; இவ்வுணர்வுக்கு உருவம் தந்ததே இப்பல்கலைக் கழகம்[1], இவ்வாறு அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழகம் என்ற முறையில் தமிழ் ஆராய்ச்சி நடத்தும் உலகின் பிற பல்கலைக் கழகங்களுடன் உறவு கொள்ள விரும்புவதும் முறையே.

இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் திட்டங்கள் வகுக்க வேண்டும்; ஆராய்ச்சிக்கான நூல்கள், கட்டுரைகள், வெளியீடுகள், பிற சான்றுகள் — இவற்றைத் தொகுக்க வேண்டும். கருத்துப் பரிமாற்றங்கள் முறையாக நடைபெறவேண்டும். ஆராய்ச்சி அறிஞர்களின் போக்குவரத்து இரு புறமும் நடைபெற வேண்டும். இவற்றைக் கருதித் தமிழர் வாழும் அண்டை நாடுகளில், தமிழ்க் கல்விநிலை எவ்வாறுள்ளது என அறிந்து வருமாறு தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக மதிப்பிற்குரிய துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிர மணியம் அவர்கள், என்னை அனுப்பி வைத்தனர். உலகெங்கும் நடைபெறும் தமிழியலாராய்ச்சியை ஒருங்கிணைத்துப் பார்க்கும் பரந்துயர்ந்த சிந்தனை அது. எனக்கு அது ஒரு பெரும் பொறுப்பு. மெய்யாலும் மனத்தாலும் முயன்று இயன்றவரை அறிந்து வந்தேன்.

மே 25 முதல் சூன் 23 வரை 29 நாள்கள் திருச்சிராப்பள்ளி, கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பேராதனை, கொழும்பு, சிங்கப்பூர், கோலாலம்பூர், பினாங்கு, கோலாலம்பூர், சிங்கப்பூர், சென்னை, தஞ்சை என என் செலவு அமைந்தது. ஏறத்தாழ 5,000 மைல்கள் பயணம். 12 நாள்கள் வாடகை விடுதிகளில்; 10 நாள்கள் நண்பர்கள் விருந்தோம்பலில்; 5 நாள்கள் போக்குவரத்து ஊர்திகளில்; 2 நாள்கள் பல்கலைக் கழக விருந்தினர் இல்லங்களில். இவ்வாறு இராப்போதுகள் கழிந்தன.

நான் இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் அந் நாடுகளில் உள்ள தமிழ்ப் பெருமக்களுக்கும், ஆராய்ச்சி அறிஞர் களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முதுமுனைவர்

வ. அய்.சுப்பிரமணியம் அவர்கள் மடல் எழுதித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கத்தையும், திட்டங்களையும் ஆராய்ச்சிக்கான வாய்புக்களையும் நன்கு விளக்கியிருந்தார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட செய்தி மடல்களும், மூன்று நாடுகளிலும் உள்ள கல்வியாளர்களுக்கும், தமிழ்அமைப்புகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டமையால் தமிழ்ப் பல்கலைக் கழக நிலை பற்றி அங்கெல்லாம் ஓரளவு அறிமுகம் ஏற்பட்டு இருந்தது. இவ்வறிமுகம் காரணமாக என்னுடைய பயணம் எளிதாகவும், வரவேற்புக்கு உரியதாகவும் அமைந்தது. நானும், கல்வி அறிஞர் களுக்கும், நண்பர்களுக்கும் என் பயணத்தின் நோக்கம் பற்றியும், வருகை பற்றியும், முன்னரே எழுதி, என் போக்குவரத்துத் திட்டங்களை வகுத்துக் கொண்டேன். தமிழ்ப் பல்கலைக் கழகத் திற்குச் சிறப்பாராய்ச்சியாளராக வந்திருக்கும் முனைவர் சிவத் தம்பி அவர்கள் என் இலங்கைப் பயணத் திட்டத்தை நுட்பமாக அமைத்துத் தந்தார்கள்; தம் நண்பர்களுக்கும் எழுதி ஆதரவு தேடித் தந்தார்கள்.

இந்நாடுகளின் கல்வி அறிஞர்களுக்குத் துணைவேந்தர் அவர்கள் எழுதிய மடலையும்[2], பல்கலைக்கழகத்தின் செய்தி மடலையும், என் பயணம் பற்றி விளக்கும் என் மடலையும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அமைப்பையும், திட்டங்களையும் விளக்கும் 'தமிழ்ப் பல்கலைக் கழகம்—ஒரு சிறு நோக்கு' என்னும் ஏட்டையும் நான் என்னுடன் கொண்டு சென்றேன். இவை அறிமுகத்துக்குப் பெரிதும் பயன்பட்டன.

இது என் அறிக்கை. கண்டன, கேட்டன அனைத்தையும் அளித்துள்ளேன். உணர்வைக் குறைத்து அறிவைத்தர முயன்றுள் ளேன். உவந்தது தந்துள்ளேன்; காய்ந்தது கடிந்துள்ளேன். சென்ற திசை சரியோ தப்போ என்ற அச்சம் என் உள்ளத்தில் உண்டு.

பரிந்துரைகளுக்குத் தயக்கம். எனினும் கடமையுணர்வு; பரிவு காட்டவே என் உள்ளம் விழைகிறது. புலமைச் செருக்கும் வளமைச் செருக்கும் சேய்நாடுகளில் சிலபோது இருக்கலாம். நம் எளிமையும் பன்மையும் எள்ளளவும் படலாம். மகள் புது வாழ்வு; சிறு குடித்தனம். தாய் பலநாள் வாழ்வு; பெருங் குடித்தனம். இருந்தாலும் தாயின் பாசம் பெரிது; கடமையும் உண்டு.

என் பயணத்தின் ஏவுதற்கருத்தா துணைவேந்தரவர்களுக்கு என் அன்பிலூறிய நன்றி.

தமிழகத்தில் முனைவர் இராம. சுந்தரம், முனைவர் சிவத் தம்பி, பேரா. சுந்தரசண்முகனார், திரு அரிகிருட்டிணன், திரு கலியமூர்த்தி ஆகியோரும், இலங்கையில் முனைவர் உவைஸ், முனைவர் வித்தியானந்தன், முனைவர் கைலாசபதி, பேரா.இராசரத்தனம்,திரு சண்முகலிங்கம்,பேரா.தில்லைநாதன், திரு ஆனந்தநாதன், முனைவர் பூலோக சிங்கம், முனைவர் பஸ்தியாம் பிள்ளை, முனைவர் பாலசுந்தரம், முனைவர் சதாசிவம், முனைவர் கந்தையா ஆகியோரும், சிங்கப்பூரில் திரு செயதேவன், திரு கண்ணப்பன், திரு வை. தி. அரசு, திரு நீலகண்டன், திரு மா.சி. வீரப்பன் ஆகியோரும்,மலேசியாவில் திரு செல்வராசு, முனைவர் சிங்காரவேலு, முனைவர் தண்டாயுதம், திரு காரைக் கிழார், திரு இர. ந. வீரப்பன், திரு கோடிவேல், திரு சோதிநாதன், திரு பாலருகிட்டிணன், திரு இராசமன்னார், திரு ரெங்கசாமிப் பிள்ளை ஆகியோரும் என் பயணம் வெற்றியுற உதவி நல்கி உறுதுணையாயினர். அவர்கள் அனைவரும் என் நெஞ்சுகந்த நட்புக்கும் உரியர்; நன்றிக்கும் உரியர்.

தி. முருகரத்தனம்.

1. இலங்கை

நாடும் மக்களும்

தமிழகத்தின் தென்கிழக்கே கோடிக்கரையிலிருந்து 22 கல் தொலைவிலே முருகனது வேலின் இலை போன்று தமிழகத்தின் பரப்பளவில் பாதியளவேயான 25,332 சதுர மைல் பரப்போடு பண்டைக்காலம் முதலே தமிழர்களால் ஈழம் எனும் பெயரில் வழங்கும் நாடே இலங்கையாகும். ஏறத்தாழ 35 ஆண்டுகளாக மட்டுமே கடவைச் சீட்டு (Passport) முறையோடு பிரிக்கப்பட்டுத் தனி நாடாக அது விளங்கி வருகிறது. இந்தியாவில் ஒரிசாவும், வங்காளமும் இந்தோஐரோப்பியப் பண்பாட்டகங்களாக விளங்குவன போன்று இலங்கையும் ஓர் இந்தோ – ஐரோப்பியப் பண்பாட்டகமாகும். இவ்விலங்கையின் பண்பாடு இந்தியாவில் உருவானஇந்தோ-ஐரோப்பிய நாகரிகத்தை ஒட்டியே உருவானதாகத் தெரிகிறது. இலங்கையின் மக்களும், இந்தோ–ஐரோப்பிய இனத்தாரும் தமிழரும் அரேபிய இனத்தாரும் ஆவர். அங்கு வழங்கும் மொழிகளும் இந்தியாவில் போன்றே இந்தோ–ஐரோப்பிய மொழியாகிய சிங்களமும் திராவிட மொழியாகிய தமிழும் ஆகும். பண்பாட்டுச் சமயங்களும் இந்திய மண்ணில் தோன்றிய பௌத்தமும் சைவமும் ஆகும்.[3]

1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி இவ்விலங்கையின் மக்கள் தொகை:-[4]

மொத்த மக்கள்		:	1,48,50,001
சிங்களவர் (பெரும்பாலும் பௌத்தர்)		:	1,09,85,666
தமிழ் பேசுவோர்	..	:	37,53,740
பிறர்	..	·	1,10,595

தமிழ் பேசும் மக்கள் மூவகையினர் [1]

(1) இலங்கைத் தமிழர் (பெரும்பாலும் இந்துக்கள்)	:	18,71,535
(2) இந்தியத் தமிழர் (பெரும்பாலும் இந்துக்கள்)	:	8,25,233
(3) இசுலாமியத் தமிழர் (சோனகர்)[3]	:	10,56,972
		37,53,740

மக்கள், கலை, பண்பாடு, சமயம், மொழி, இலக்கியம், வரலாறு ஆகிய இவற்றால் இந்தியாவோடு நெருங்கிய உறவு கொண்ட இலங்கை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சிறப்பான சிந்தனைக்கு உரியதாகிறது. அங்கு வாழும் மக்கள் பற்றிச் சிறிது விரிவாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இலங்கைத் தமிழர்

இலங்கையின் வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதிகளில் இலங்கைக்கே உரிய தமிழர் ஏறத்தாழ 18 இலட்சம் பேர் வாழ்கின்றார்கள். அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து வாழ்வோரும், பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் அதற்குப் பின்னரும் பல்வேறு காரணங்களால் குடியேறி வாழ்வோரும் ஆவர். இப்பகுதிகள் நில அமைப்பில் பெரும்பாலும் தஞ்சை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்றவை. நீண்டகாலமாகத் தமிழகத்துடன் நெருக்கமான உறவு இல்லாத காரணத்தால் இவர்கள் பேசும் மொழி, தமிழகத்துத் தமிழ்ப் பொதுமொழியின் ஒரு கிளை மொழியாகி விளங்குகின்றது. யாழ்ப்பாணம் என்பது இலங்கையின் வடகோடித் தீபகற்பம் ஆகும். மட்டக்களப்பு, கிழக்கு இலங்கையில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மொழி சிறிது வேறுபட்டதாகும். இவ்விரு பகுதிகளில் வாழும் அனைவருடைய சமயமும் சைவ சமயமே ஆகும், பாடல் பெற்ற சைவக் கோவில்கள் சில இங்கு உண்டு. திருமால் வழிபாடு இலங்கையில் ஓரளவு உண்டு இவ்வளவு நாளும் இலங்கைத் தமிழர் பெரும்பாலும் வேளாண்மையே செய்து வாழ்ந்தனர். வெள்ளையர்கள் வந்தபோது அவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு பலர் ஆங்கிலக் கல்வி கற்றுக் கொழும்பு போன்ற தென்னிலங்கை நகர்களில் குடியேறி, அரசினர் அலுவல

கங்கள், தொழில் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியில் அமர்ந்தனர். இதன் காரணமாக இந்நூற்றாண்டில் இலங்கையில் பல துறைகளில் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இத்தமிழர் விளங்கினர். தமிழ் மொழியின்மீதும் சைவ சமயத்தின்மீதும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள் இத்தமிழர்கள். அவர்கள் தமிழ்த்தொண்டு குறிப்பிடத்தக்கது.

அவர்கள் அல்லாமல், வணிகத்தின்பொருட்டு இலங்கையின் தலைநகரான கொழும்பிலும் பிற நகரங்களிலும் அண்மையில் குடியேறி வாழும் தமிழர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தம் தாய்த் தமிழகத்தை எப்போதும் நினைத்துக்கொண்டு இருப்பவர்கள்.

இந்தியத் தமிழர்

கடந்த ஒரு நூற்றாண்டாக மலை நாட்டுத் தேயிலைத் தோட்டங்களிலும், இரப்பர்த் தோட்டங்களிலும் தொழிலாளிகளாகப் பணியாற்றுவதற்குத் தமிழகத்தின் கிழக்கு மாவட்டங்களிலிருந்து அழைத்துக் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் ஏறத்தாழ $8\frac{1}{4}$ இலட்சம் பேர் இப்போது இலங்கையில் வாழ்கின்றனர். (சிறிது காலத்திற்கு முன் அவர்கள் 10 இலட்சத்திற்கு மேல் இருந்தனர்.) அவர்கள் ஏழைகள் மட்டுமல்லாமல், சமூக நிலையிலும் தாழ்ந்தவர்களாக இருந்தனர். இலங்கையில் பெரும்பாலும் தோட்டங்கள் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாக இருந்தன. இலங்கை நாடும் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. ஆதலால், ஆங்கிலேயர் இந்தியாவையும் இலங்கையையும் ஒன்றாகக் கருதி ஆட்சி செய்து வந்தனர். சிறு சிறு நிலங்களில் வழிவழியாக வேளாண்மையில் ஈடுபட்டிருந்த சிங்கள மக்கள், தம் தொழிலால் நிறைவு பெற்றுத் தோட்டங்களில் பணிபுரிய முன்வராது இருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியும், குறைந்த மக்கள் தொகையும், நிறைந்த வேலை வாய்ப்புக்களும், அப்போது எல்லோருக்கும் உதவியாக இருந்தன. மலை நாட்டு இலங்கையில் சிக்கல் எதுவும் அப்போது இல்லை.

1948-இல் ஆட்சியினைச் சிங்களவர் கையில் கொடுத்துவிட்டு ஆங்கிலேயர் அகன்றபோது, இவ்விந்திய மக்களுக்குச் சிக்கல்கள் தோன்றின. வேலை வாய்ப்புக்கள் குறைந்து, மக்கள் தொகைப் பெருக்கு எனும் நெருக்கடி ஏற்பட்டது. சிங்களத் தேசியத்திலும் பௌத்த சமயத்திலும் ஈடுபாடு கொண்ட சிங்கள மக்கள் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை அன்னியராகக் கருத முற்பட்டனர். சிங்களவர்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தந்துவிட்டுத் தமிழ்த்

தோட்டத் தொழிலாளர்கள் வெளியேறிவிட வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைத் தமிழர்களோடு இணைந்துவிட்டால் அரசியலிலும் தமக்கு வாய்ப்பு குறைந்துவிடும் அல்லது தீங்கு ஏற்பட்டுவிடும் என அவர்கள் மேலும் அஞ்சினார்கள். பொதுவாக வடஇலங்கையிலும் மலைநாட்டுத் தோட்டங்களிலும் வாழும் தமிழர்கள் இந்தியத் தமிழருடன் இணைந்து சிங்களவருடைய மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றிற்கு ஒரு தீங்காக அமைந்து விடுவர் என்ற அச்சம் சிங்களவர் உள்ளத்தில் ஊன்றிவிட்டது.[6]

இந்தியத் தமிழர்களின் சிக்கல்கள் தனிப்பட்டவர்களால் தீர்க்கக்கூடிய சிக்கல்களாக இல்லை. இந்திய அரசும் இலங்கை அரசும் இணைந்து தீர்க்க வேண்டிய சிக்கல்களாக அவை உருவம் கொண்டுவிட்டன. பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஒரு பகுதியினரைத் திருப்பி எடுத்துகொள்ள இந்திய அரசு இசைந்தது. மற்றப் பகுதியினரை வேண்டா வெறுப்போடு இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிவந்தது. அவ்வாறு இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர், சிங்கள மொழியினையும் பண்பாட்டினையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்துச் சூழலும் சிங்களச் சமூகத்தாரிடம் தோன்றிவருவதாகத் தெரிகிறது.[7] ஆனால், தமிழர்கள் தம் தாய்மொழியினையும் பண்பாட்டினையும் இழக்க முன்வருவார்களா என்பது ஒரு பெருங்கேள்வி.

ஒரு சில தலைமுறைகளாக இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுக்குத் தமிழகத்தில் எந்த ஒட்டும் உறவும் இல்லை. இந்த நிலையில் கல்வி வசதியும், மருத்துவ உடல்நல வசதிகளும், உறையுள் வசதிகளும் அவர்களுக்கு முழுமையாகக் கிடைக்கின்றன என்று சொல்லக்கூடிய சூழ்நிலையும் இல்லை. அரசியலிலும் பொருளாதாரத்திலும் நெருக்கடிக்குள்ளான இம்மக்கள், உறுதியான நிலை பெறத் தொழிற் சங்கங்களில் பங்கேற்று அவற்றின் உதவியினை நாடி நின்று வாழ்கின்றனர்.

வட இலங்கையில் உள்ள தமிழர்களிடம் இவ்விந்தியத் தமிழர் இவ்வளவு நாளும் நெருங்கி உறவு கொண்டும் இருக்கவில்லை. பல்வேறு காரணங்களால் இரு சாராரும் இரு சாதியினராகவே இருந்துவிட்டனர்.

இசுலாமியத் தமிழர்

இலங்கையில் இசுலாமியர் மூன்று பிரிவினராக அமைந்

துள்ளனர். அவர்கள் தொகை 11,34,556 ஆகும். அவர்களுள் ஒரு சாரார் பெரும்பாலும் அரேபியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் 7-ஆம் நூற்றாண்டு முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை வணிகத்தின் பொருட்டு இலங்கையில் குடியேறிய இசுலாமிய மக்களின் வழியினர் ஆவர். அரேபிய இசுலாமிய மக்கள், வணிகத்தின் பொருட்டு இலங்கை வந்தபோது இங்கேயே பெண் மக்களைக் கண்டு திருமணம் செய்து கொண்டு தங்கி இருத்தல் வேண்டும். இவ்வழியினரைச் **சோனகர்** (Moor) என்ற இனப் பெயரால் இன்று வழங்குகின்றனர். இவர்கள் தொகை 10,56,972. இலங்கையில் மற்றொரு பிரிவினர் அண்மையில் சாவாவிலிருந்து குடியேற்றப்பட்ட மலாய் மக்கள் வழியினர் ஆவர். இவர்கள் தொகை 43,378 ஆகும்.[8] மூன்றாம் வகையினர் இந்திய இசுலாமியர் ஆவர். இவர்களும், மிகப் பெரும்பாலான சோனகரும் தமிழ் பேசுவோராவர். இலங்கையில் தமிழர் வாழும் வட பகுதியினை ஒட்டியும் கிழக்குப் பகுதியினை யொட்டியும் இவ்விசுலாமியத் தமிழர் வாழ்கின்றார்கள் (இந்திய இசுலாமியர் வணிகராவர்). அவர்கள் ஓரளவு வேளாண்மையிலும் ஓரளவு வணிகத்திலும் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துபவர்கள். சிங்களவரைப் போலல்லாமலும் தமிழரைப் போலல்லாமலும் இவர்கள் இலங்கை முழுவதும் சிறு சிறு குடியினராகப் பரவி வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக வாக்குப் பெட்டியினை நம்பி வாழும் அரசியலில், இச்சிறுபான்மையினருக்கு ஒரு சிறப்புத் தோன்றியுள்ளது. இலங்கை இசுலாமியரும் இலங்கைத் தமிழரும் மொழியால் ஒன்றுபட்டு இனத்தாலும், மதத்தாலும் வேறுபட்டிருக்கின்றனர். சிங்களவரிடமிருந்தும் இசுலாமியர் மொழியாலும் மதத்தாலும் இனத்தாலும் வேறுபட்டிருக்கின்றனர். ஆதலால், அவர்களுக்கென ஒரு தனித்தன்மை உண்டு. இலங்கையில் இனத்தாலும் மொழியாலும் பிணக்கு வருகின்ற போது இசுலாமியர் நிலை சிக்கலுடையதாகிறது. அவர்கள் சில போது தமிழரையும், சிலபோது சிங்களவரையும் ஆதரிக்கும் நிலை இருந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இசுலாமியர் பலர், சிங்களம் கற்றுக் கொள்ள விரும்புகின்றனர். சிங்கள இனத்தோடு பலவகையில் ஒத்துப்போக அவர்கள் மனங்கொண்டு இருப்பதாகவும் தெரிகிறது. இசுலாமியர் பலருக்குச் சிங்களமும் தெரியும். வணிகத்திலும் பிற வழிகளிலும் இசுலாமிய மக்கள் கவனம் செலுத்தியதால் உயர் கல்வியில் அவர்கள் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளவில்லை எனச் சொல்லப்படுகிறது.[9] (தமிழ் ஆராய்ச்சியில் முனைவர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றோர் இலங்கையில் இருவரே எனச் சுட்டிக்காட்டப்படுகிறது).[10] இலங்கையின் பல்கலைக் கழகங்களில் இந்துக்களுக்கு இந்துப்

பண்பாட்டுத் துறைகளும், சிங்களவர்களுக்குப் பௌத்தப் பண்பாட்டுத் துறைகளும், கிறித்துவர்களுக்குக் கிறித்துவப் பண்பாட்டுத் துறைகளும் தனித்தனியே அமைந்திருப்பது போன்று, இசுலாமியப் பண்பாட்டுத் துறைகளும் அமைந்துள்ளன. இசுலாம் சமயம் இலங்கையிலும் தமிழகத்திலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாலும் இவ்விரு நாடுகளிலும் இசுலாமியர் தமிழ் மொழியே பேசுவதாலும் தமிழ் மொழியாராய்ச்சிக்கும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்கும் இவர்களிடையே நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இசுலாமியருடைய குடியேற்றங்களும், அவர்கள் சமயமும், பண்பாட்டுச் சிறப்புக் கூறுகளும் ஆராய்ச்சிக்கு உரியன. இலங்கை இசுலாமியத் தமிழர்களுடைய மொழியில் பல சிறப்புக் கூறுகள் உண்டு என அறியப்படுகிறது. இவையும் ஆராய்ச்சிக்கு உரியன.

சிங்களவர்

இலங்கையில் பெரும்பான்மை மக்கள் சிங்களமொழி பேசுவோர் ஆவர். 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி அவர்கள் தொகை 1,09,85,666 ஆகும். இவர்கள் முன்னோர்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்னர், கீழை இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் என வரலாறு கூறுகிறது. அவர்களுக்கு முன்னரும் இலங்கையில் **வேடர் (Veddas)** என்னும் ஓர் இனத்து மலைவாழ் மக்கள் வாழ்ந்திருந்தனர். சிங்களவர் அனைவரும் பௌத்த சமயத்தினர் ஆவர். அவர்கள் வளர்த்துள்ள பௌத்த சமயம், 2500 ஆண்டுகளுக்கு முன்னர், கீழை இந்தியாவிலிருந்து குடியேறியபோது அவர்களால் கொண்டுவரப்பட்டதாகும். தமிழகத்தின் வழியாகவும் பௌத்த சமயம் பழங்காலத்தில் இலங்கைக்குப் பரவியதாகத் தெரிகிறது. இன்று தேரவாத பௌத்த சமயத்தின் இருப்பிடமாக இலங்கை விளங்கிறது. இப்பௌத்த சமயச் சிங்கள மக்கள் தென் இலங்கையில் பரவி வாழ்கின்றார்கள். அவர்களுடைய பெருந்தொழில், இவ்வளவு காலமும் வேளாண்மையாக விளங்கியது. கடற்கரை ஓரங்களில் தாராளமாகப் பெய்து வரும் மழையின் துணைகொண்டு, சிறுசிறு நிலங்களை உடைமையாகப் பெற்றுத் தொழிலில் ஈடுபாடு கொண்டு அமைதியான மக்களாக இச்சிங்களவினத்தர் வாழ்ந்து வந்தனர். இவ்வீடுபாடு காரணமாகச் சென்ற நூற்றாண்டில் புதிதாகத் தோன்றிய தோட்டத் தொழிலுக்குச் செல்ல அவர்களுக்கு மனம் வரவில்லை. பௌத்தசமயம் எளிய வாழ்வில் நிறைவு அடையும்படியான ஒரு மனநிலையைத் தந்திருக்கின்றது.

இலங்கையின் வாழ்வில் பல சிக்கல்கள் உண்டு. சிங்களம், தமிழ் என்ற மொழி வேறுபாடும் சிங்களவர், தமிழர், சோனகர், பரங்கியர் மலாய்க் கலப்பினத்தார் என்ற இன வேறுபாடும், பௌத்தர், இந்துக்கள், இசுலாமியர், கிறித்துவர் சமய வேறுபாடும் இலங்கையில் பல சிக்கல்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன. பொதுவான வறுமை நிலையும், ஆங்கிலக் கல்வி கற்று முன்னேறியோர், ஆங்கிலக் கல்வி கல்லாது பின்தங்கியோர் என்ற சமூக வேறுபாடும். ஆகியச் சிக்கல்களோடு வேலையின்மையும் சேர்ந்து கொண்டது. இலங்கை தமக்கே உரியது எனவும், இலங்கையின் பண்பாடு சிங்களப் பண்பாடே எனவும், இலங்கையில் இருக்கத் தக்க ஒரே சமயம் பௌத்த சமயம் எனவும், வாழத்தக்க ஒரே மொழி சிங்களம் எனவும் சிங்களவர் கருதுகின்றார்கள். இலங்கையில் சிங்களவரே பெரும்பான்மையாக வாழ்கின்ற காரணத்தால் அரசியல் அவர்களுக்கு உரியதாகிவிடுகிறது என அவர்கள் கருதுகின்றனர். (இன்றைய அரசியல் பொருளாதார அமைப்பில் சிங்களவரல்லாதவர் தலைமை அமைச்சராக—ஆட்சித்தலைவராக வருதல் என்பது இயலாத ஒன்று.) இவ்வளவு நாளும் கல்விஅறிவு இல்லாது பின்தங்கியிருந்து படிப்படியாகக் கல்வி அறிவு பெற்று முன்னேற்றம் அடைந்தபோது, அவர்கள் தேசிய மனப்பான்மையும் மொழிப்பற்றும் சமயப்பற்றும் பெற்றுவிட்டனர்.

சிங்களப் பௌத்தர்களுக்குள்ள குறைகளை மூன்றாக வகுத்துக் காட்டுகின்றனர் அரசியல் அறிஞர்கள்: (1) கல்வியும் தொழிலும் பற்றியது; (2) சமயமும் பண்பாடும் பற்றியது; (3) மொழி பற்றியது.

கிறித்துவர் கல்விநிலையங்கள், ஐரோப்பிய நாகரிகம் பெற்ற கிறித்துவர்கள், கல்வியில் முன்னேற்றம் அடைந்த தமிழர்—இவை இலங்கைச் சிங்களப் பௌத்தர்களின் சிந்தனையில் உறுத்தி கொண்டிருந்தன. கிறித்துவர் பள்ளிகளில் மேலைநாட்டுக் கல்வியினைக் கற்று ஆங்கில அரசாட்சியில் உயர் பதவிகளிலெல்லாம் அமர்ந்துகொண்ட கிறித்துவர், தமிழர், சிங்களச் சிறுபான்மையினர் ஆகிய மேல்நிலை மக்களைப் பார்த்துப் பெரும்பான்யையான சிங்களப் பொதுமக்கள் அகம் குழைந்தனர். இதன் காரணமாகச் சிங்களத் தேசியம் உருவானது. சிங்களவர் வேண்டுகோள்கள் உருவம் பெற்றன:

(1) கல்வி நிலையங்களில் கல்வி மொழியாகத் தாய்மொழியே அமைதல் வேண்டும்.

(2) ஆட்சி அலுவலகங்களில் சிங்களமே மொழியாக வேண்டும்.

(3) கல்வி நிலையங்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கவேண்டும்.

(4) பௌத்த சமயமே தேசிய/அரசு சமயமாதல் வேண்டும். சிங்களப் பௌத்தத் தேசியவாதிகள் இவற்றில் வெற்றி கொண்டனர்.

தமிழர் சிங்களவர் உறவு

இவ்விரண்டு இனத்தாரும், வாழும் இடங்களாலும் பிரிந்து இருக்கின்றனர். அண்மையில் இவர்கள் பிள்ளைகளுக்கும் தனித் தனியே பள்ளிகள் அமைந்துவிட்டன. ஒருவர் மற்றையோரை அறியும் வாய்ப்பு இதனால் குறைந்து விட்டது. இருவருக்கும் பொதுவான ஆங்கிலவழிக் கல்வி அருகி விட்டது. இலங்கைத் தமிழரும் இலங்கையில் குடியேறியுள்ள இந்தியத் தமிழரும் ஒன்றாகிவிட்டால் என்னசெய்வது என்றகவலை சிங்களவரிடையே தோன்றி இருப்பதாகத் தெரிகிறது. அருகிலே 4 கோடி தமிழ் மக்களைக் கொண்ட இந்தியத் தமிழகம்—திராவிட இயக்க உருவில் விளங்கி வருவது சிங்களவர் சிந்தையில் அச்சத்தை மூட்டுவதாகத் தெரிகிறது. ஓரினத்தார் மற்றோர் இனத்தாரைப் பற்றிக் கொள்ளும் ஐயப்பாடுகளும், வம்பு எண்ணங்களும் இரண்டு சாராரிடையேயும் உறவினைக் கெடுத்து வந்திருக்கின்றன.[12] இன்றைய நிலையில் சிங்களம் ஒன்றே ஆட்சி மொழி என்ற கொள்கையும், பல்கலைக்கழகத்தில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையும், சிங்களவரைக் குடிபெயர்த்தேற்றும் கொள்கையும் தமிழர்கள் உள்ளத்தில் முள்ளாய் உறுத்துகின்றன.

இருசார் அரசியல் தலைவர்களிடையேயும் அறிவுடைமையும், பொறுமையும், விட்டுக்கொடுத்தலும், அமைதிப்போக்கும்தான் இலங்கை அரசியலில் ஒளி விளக்காய்த் திகழ வேண்டும். ஆயினும், தமிழ் இளைஞர்களிடையே தோன்றியுள்ள ஆத்திரமனப்பான்மை தீயாய் எரிகிறது. எங்கும் அச்சம் நிலவுகின்றது. அண்மையில் நிகழ்ந்த இனக் கலவரங்கள் தமிழரின் வெந்த புண்ணில் தைத்த வேலாகிவிட்டன. நாட்டின் ஒற்றுமையையும் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு இன்றைய அரசு, சிக்கல்களைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகப் பறைசாற்றிக் கொள்கிறது. சிங்களமும்

புலியும் சீறிக் கொண்டிருந்தால் நாட்டில் சீரழிவே ஏற்படும். பாரத பூமியில் பிறந்த புத்தர் பெருமான் அருளிச் செய்த அன்பும் அமைதியுமே வழிகாட்ட வேண்டும். இராம இராவணர், கற்பனையே ஆகட்டும்.[13]

தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகம் சேதுபந்தனம் இருந்த இடத்தில் அறிவுப்பாலமே அமைக்க விரும்புகிறது. அதற்கு அரசியல் இல்லை. தஞ்சை, தன்கருத்தில் கொள்ளவேண்டியன ஈராயிரமாண்டு வரலாற்றுப் பாதையில் இலங்கைத் தமிழர் நட்டு வந்த மைல் கற்களாகிய ஈழத்துப் பூதன் தேவனார், ஏலேலசிங்கன் திருவள்ளுவர் உறவு,தேவார ஆசிரியர்கள் பாடிய கோணேசுவரம் திருக்கேதீசுவரம், யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் கொழும்பி லும் நடந்த தமிழரசுகள், ஆரியச் சக்கரவர்த்திகள் அமைத்த தமிழ்ச் சங்கம், கிறித்தவ மறைக்கழகத்தார் தமிழும் ஐரோப்பிய மொழிகளும் கலைகளும் கற்பித்த பள்ளிகள், சைமன் காசிச் செட்டியின் (Simon Casie Chitty) Tamil Plutarch, தமிழின் புத்தூற்றாகிய ஆறுமுக நாவலர், சைவ சமய வாழ்வு, பதிப்புப் பெரும்பேராசான் சி. வை. தாமோதரம் பிள்ளை, பலர் மேற் கொண்ட இலக்கண இலக்கியப் புராண நூற் பதிப்புக்கள், கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி,வட்டுக்கோட்டை அமெரிக்கத் திருமறைக் கழகத்தின் தமிழ் நூற்கல்வி, சைவ சமய நூல்களின் மொழி பெயர்ப்புக்கள், அதன் மருத்துவ அறிஞர் கிரீனும் பிறரும் தமிழில் மொழி பெயர்த்த மருத்துவ நூல்கள், சபாபதிநாவலரின் திராவிடப் பிரகாசிகை,கூத்தப்பிரான் தத்துவக் கலையை உலகுக்கு விளக்கிய ஆனந்த குமாரசாமி, தமிழிலக்கிய சமய நூல்களின் மொழி பெயர்ப்புக்கள், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், கனகசபைப் பிள்ளையின் 1,800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர், கணேச ஐயர் தொல்காப்பியப் பதிப்புக்கள், திருத்தந்தை ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகளார், மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழாராய்ச்சி, தமிழ்த் தோட்டத் தொழிலாளர் குடியேற்றம் குடிபெயர்தல், சிங்களத் தேசிய எழுச்சி, தமிழ்த் தேசிய எழுச்சி, கல்வியாளரிடையேயும் எழுத் தாளரிடையேயும் எழுந்த பொதுவுடைமை உணர்வு, தமிழ்க் கல்வி அரசு மொழியாதல், தனிநாயக அடிகளாரின் உலகத் தமிழ்ப் பார்வை, புலி, சிங்கங்களிடையே பூசல், இந்தியத் தமிழ ரின் உடன்பிறப்புணர்வு.[14]

இலங்கையில் தமிழர்க்கு வாய்ப்பான ஓர் ஆராய்ச்சிப் பொருள், தமிழர் சிங்களவர் உறவு பற்றியதாகும். தமிழர் சிங்களவர் உறவாராய்ச்சி என்றால், இருமொழியாளரின்

இன்றைய, அன்றைய பண்பாட்டு வரலாற்றின் அனைத்துக் கூறுகள் பற்றிய ஆராய்ச்சியாகும். இன்றுள்ள இவ்விருவேறு சமூகத்தின் வரலாறும் ஆராயத் தக்கதே. இருவரும் ஒரு நாடாய் ஓரரசாய் வாழ வேண்டிய சூழலில் இருக்கின்றனர், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளுவது மட்டுமன்று, உணர்ந்து கொள்ளுவதும் இன்றியமையாதது. தமிழர், சிங்களவருடைய சமயத்தையும் மொழி வளர்ச்சியையும் இலக்கியப் படைப்புக் களையும் அறிந்து கொள்ளுதல் மட்டுமல்லாது, தம் அறிவுச் செல்வங்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் அவர்களுக்கு வழங்கவேண்டும். இது பிணக்கிலாத இணக்கத்துக்கு வழி வகுக்கும். இவற்றை உள்ளத்தில் கொண்டே துணைவேந்த ரவர்கள், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மொழிக்கும் இடம் கொடுக்க எண்ணம் கொண்டார்கள். தமிழர் சிலர் சிங்களம் கற்றிருத்தல் கருத்துப் பரிமாற்றத்துக்குத் துணைசெய்யும் என்பது மட்டுமல்லாது, ஆரிய மொழிகளாராய்ச்சிக்கும் உதவும் என்பது அவர்கள் கருத்து.

இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு இலங்கைத் தமிழறி ஞரிடம் பேசிப் பார்த்தேன். அவர்கள் என்னை ஏளனக் கண் கொண்டும் ஐயக் கண்கொண்டும் நோக்கினர். இன்றைய இலங்கையில் இவ்விருசாராரிடையேயும் இத்தகைய சிந்தனை ஒரு சிறிதும் இருக்கவில்லை. இந்நிலைக்கான காரணம் புரியக் கூடியதே. இனப் பூசல் அனைவர் உள்ளத்திலும் தீயாய் எரிகிற காலமாக இது உள்ளது. தமிழர் உள்ளத்தில் ஏமாற்றமும் கசப்பும் அச்சமும் குடி கொண்டிருக்கின்றன.

ஆனால், முந்தைய காலங்களில்—அண்மைக் காலம் வரை-வெள்ளையன் ஆண்ட காலம் வரை—நல்லிணக்கம் நிலவியது; இருசாரர் உறவு பற்றிப் பல ஆராய்ச்சிகள் நிகழ்ந்தன; கருத்துப் பரிமாற்றமும் மொழி பெயர்ப்புக்களும் நடந்தன. வெளியீடுகள் பல தோன்றின.

அண்டை நாடுகளில், தமிழர்தம் அடுத்த வீட்டுப் பெரும் பான்மை மக்களின் பண்பாட்டையும் மொழியையும் கற்பிக்க வாய்ப்பேற்படுத்த எண்ணும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டம் எளிதில் நிறைவேறக்கூடியதாகத் தோன்றவில்லை. (இவ்வியலின் அடிக்குறிப்புக்கள் பல இந்நிலை பற்றிப் பேசு கின்றன.)

கொழும்பில் 26—7—82

25-5-82 மாலை திருச்சிராப்பள்ளியிலிருந்து விமானத்தில் கொழும்பு சென்றடைந்தேன். பௌத்த, சைவ சமயங்களைப் போன்றே இந்தியாவிலிருந்து சென்ற இராமகிருட்டிண சமயத்தின் மன்றம் எனக்குத் தங்க வாய்ப்பளித்தது.

கொழும்பில் **முனைவர் உவைஸ்** (இசுலாமிய இலக்கியப் பேராசிரியர், மதுரை), **முனைவர் பேட்ரம் பஸ்தியாம் பிள்ளை** (கொழும்புப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர்; கலைப் புலத் தலைவர்) ஆகியோருடன் கலந்துரையாடி, இலங்கையின் சுற்றுப் பயணத்திற்கான சில திட்டங்களை வகுத்துக் கொண்டேன், இலங்கையில் தமிழ்க் கல்விக்கான வாய்ப்புக்கள் பற்றி முன்னரே முனைவர் உவைசிடம் கலந்துரையாடிக் கருத்துக்கள் பெற்றுக் கொண்டேன்.

26-5-82 இரவு புகைவண்டியில் யாழ்ப்பாணம்புறப்பட்டேன். 27-5-82, 28-5-82 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விருந்தினர் இல்லத்தில் பல்கலைக்கழக விருந்தினனர்கத் தங்கும் வாய்ப்புப் பெற்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 27—7—82

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்புலத் தலைவர் நாடறிந்த தமிழ்ப் பேராசிரியர் **முனைவர் கைலாசபதி** அன்புடனும், ஆதரவுடனும் வரவேற்று, பல்கலைக்கழகத்தில் என் பணிக்கு வேண்டிய உதவிகள் வழங்கினார். பல்கலைக் கழகத்தில் கலைப்புலத்து வரலாறு, பொருளாதாரம், புவியியல், மொழியியல், வடமொழி, இந்திய நாகரிகம், தமிழ் ஆகிய துறை களின் தலைவர்கள் அடங்கிய கூட்டம் முதலில் நடைபெற்றது. அதில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கம் பற்றியும், அமைப்புப் பற்றியும், திட்டங்கள் பற்றியும் அவர்களுக்கு நான் விளக்கியுரைத்தேன். பல்வேறு துறையின் தலைவர்களும் முன்னரே குறிப்புக்கள் தயார் செய்து கொண்டு வந்து விளக்கங் கள் வேண்டினர்; திட்டங்களையும் வழங்கினர்; தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் பல வகையிலும் உறவு வைத்துக் கொள்ள ஆர்வம் காட்டினர். ''**யாழ்ப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் இன்றைய சூழலில் தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றியிருப்பது** ஒரு வரப்பிரசாதமாகும்'' என்று கலைப்புலத்தின் தலைவர் **முனைவர் கைலாசபதி** குறிப்பிட்டுப் பேசினார்.

துறைத் தலைவர்கள் அடங்கிய அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட கருத்துக்கள் பேசப்பட்டன.

(அ) 'இலங்கையில் இளங்கலைப் பட்டப்படிப்பு முடித்தவர்க்குப் பட்ட மேற்படிப்பு தொடரத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வாய்ப்பு உண்டா?'—என அவர்கள் அறிய விரும்பினர். (பட்ட மேற்படிப்புக்குப் பொதுவாக இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வாய்ப்பு குறைவாக உள்ளது எனத் தெரிகிறது. இலங்கையில் பட்டப்படிப்பு சிறப்பாகத் தேறியவர்கள் (பி. ஏ, சிறப்பு) – முதல் வகுப்பில் தேறியவர்கள் – பல்கலைக்கழக இளநிலை ஆசிரியர்களாக அமர்த்தப்படுகின்றனர். இத்தகைய ஆசிரியர் பணிகளில் தொடர்ந்து பணியாற்ற முதுநிலைப் பட்டம் பெறுதல் இன்றியமையாததாக உள்ளது. இம் முதுகலைப் பட்டம், கற்பித்தல் முறையில் அமையாது, ஆய்வு முறையில் பெறத்தக்கதாக அமைந்துள்ளது. இதனைப்பெறுதற்கு ஓய்வும் வழிகாட்டும் பேராசிரியரும் தேவை. ஆனால் ஓய்வும், பேராசிரியரும் கிடைப்பது அரிதாக உள்ளது. இவ்விளநிலை ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழகம் ஊதியத்துடன் விடுமுறைதர இருக்கின்றது. ஆதலால், முதுகலைப் பட்டம் பெற இளநிலை ஆசிரியர்கள் வெளிநாடு செல்ல வாய்ப்பு உள்ளது.)

தமிழ்ப் பல்கலைக்கழகம் பட்டங்கள் வழங்குவதில்லையாதலால், இளநிலையாசிரியர்கள் தம் மேற்படிப்பை ஆராய்ச்சித் திட்டங்களாக வகுத்துக்கொண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் உறவு கொள்ளலாம் என விளக்கம் தரப்பட்டது.

(ஆ) இலங்கையைப் பொறுத்த வரையில் சிறப்பாகச் சில ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளலாம் என அக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

தமிழர் பகுதியிலுள்ள கோயில்களைப் பற்றிய ஆராய்ச்சி. (பாடல் பெற்ற திருக்கோயில்கள் இங்கிருக்கின்றன. இக்கோயில்களை இலங்கை அரசு போற்றிக் காத்து வருகிறது. ஆனால், இவற்றில் ஆய்வு செய்வதற்கு இலங்கை அரசு எண்ணம் கொள்வதில்லையாம்.)

நிலவுடைமைச் சமூக அமைப்புப் பற்றிய ஒப்புமை ஆராய்ச்சி.

மொழியியல் கணக்கீட்டாய்வு (Linguistic Survey). இலங்கைத்

தமிழர் பகுதியில் அரிய மொழி வழக்குகள் உள்ளன. (நீம் என்னும் முன்னிலைப் பெயர்ச்சொல், அங்கு வழக்கத்தில் உள்ளது சுட்டிக் காட்டப்பட்டது.)

இலங்கையில் வாழும் இசுலாமியர் சிங்களம் படித்துச் சிங்கள வர்களோடு உறவு வைத்துக்கொள்ள விரும்புகின்றனர். அவர்கள் தமிழ்மொழி ஆயத்தக்கது.

மொழியியல் துறைத் தலைவர் முனைவர் சுசீந்திரராசா இவ்வாறு குறிப்பிட்டுத் தமிழ்ப் பல்கலைக்கழகம் **மொழியியல் கணக்கீட்டு ஆய்வு (Linguistic Survey) நடத்த வேண்டுமென்றும்,** இலங்கையைப் பொறுத்தவரை இங்குள்ள **அறிஞர் உதவுவர்** என்றும் தெரிவித்தார்.

தமிழ்–சிங்கள உறவாராய்ச்சி: இவற்றின் உறவுகள் பற்றி, முன் ஓரளவு ஆய்வு நடைபெற்றது. இப்போது ஆய்வுக்கு வாய்ப்பு குறைந்து வந்துள்ளது. இத்தகைய ஆய்வினை இப்போது சிங்களவர் வெறுக்கின்றனர்; தமிழர்க்கும் அக்கறை இல்லை.

(இ) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத் திற்கும் மொழி பெயர்ப்பதற்கான புலமை பெற்றவர்களும், திறமை பெற்றவர்களும் இலங்கையில் பலர் உள்ளனர் என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கைத் தமிழரின் மேலை நாட்டுக் கல்வி இதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. பண்டைத் தமிழ் நூல்கள்பலவற்றை அவர்கள் முன்னரே மொழிபெயர்த்துள்ளனர்.

(ஈ) தமிழர்கள் பேரெண்ணிக்கையில் குடியேறியுள்ள நாடு களில் இலங்கைக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. இலங்கையில் தமிழர் தோட்டத் தொழிலின் பொருட்டு அண்மையில் குடியேறி யது மட்டுமல்லாது, 2,000 ஆண்டுகளாகவே அங்கு வாழ்ந்துள்ள னர். இன்று தமிழ்மொழி பேசுவோர் 37 இலட்சம் பேராவர். தமிழகத்தின் பண்பாடுகள் அனைத்தும் அங்கும் இடம் பெற்று உள்ளன. எனவே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இலங்கைத் தமிழர் கள் பற்றிச் சிறப்பாக ஆய்வு நடத்த வேண்டும் என வேண்டிக் கொள்ளப்பட்டது. அதற்குமேலும் **இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் பதவி (Sri Lanka Chair)** ஒன்றும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. பல்வேறு வெளிநாட்டுத் தமிழர்க்கான ஒரு துறையும், அதில் ஒரு பேராசிரியரும், இணைப் பேராசிரியர் ஆராய்ச்சி மாணாக்கர் களும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முன்னரே அமர்த்தப்பட்டு

விட்ட காரணத்தினால் சிறப்பாக இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் பதவியும் அமைக்க இலங்கைத் தமிழர்கள் ஓரளவு பொருளுதவி செய்தால், அவ்வேண்டுகோள் கவனிக்கப்படும் என்று நான் சுட்டிக் காட்டினேன். இல்லையேல் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடு களுக்கும் தமிழ்ப் பேராசிரியர் பதவி அமர்த்தும்படியான ஒரு பெரும்பணி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தோன்றிவிடுமென நான் விளக்கினேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர் தேர்விலும், அவர்கள் மேற்கொள்ளும் திட்டங்களிலும், இலங்கைத் தமிழர் களுக்கும் வாய்ப்பு வேண்டுமென அக்கூட்டத்தில் பேராசிரியர்கள் வேண்டுகோள் விடுத்தனர். தமிழ்ப்பல்கலைக் கழகமும் யாழ்ப் பாணப்பல்கலைக் கழகமும் இணைந்து ஆற்றத்தக்க திட்டங்கள் பற்றி இக்கூட்டத்தில் வழங்கப்பட்ட குறிப்புக்கள் இவை:—

Jaffna University, Jaffna, Sri Lanka
Link—Programme

Proposals: Basis for Discussion

We would like to place the following proposals to build a permanent link with the Tamil University, Tanjore in order to realise the academic aspirations shared by both the Universities.

1. Visiting fellowships, at least five, be awarded annually to scholars in Jaffna University to do research in selected fields of study.

2. Scholarships/Studentships, at least five, be awarded to young scholars in the Jaffna University to enable them to work for higher degrees, preferably for Doctorate on selected topics in which both the Universities may pe interested.

3. Collaboration be extented on projects sponsored in the Jaffna University in areas like archaeology epigraphy and linguistics survey (which are important from the point of history of the Tamils and their language) and translation.

4. Funds, fully or partly, be provided to organise seminars on all aspects of Sri Lanka Tamils' language, literature, society, religion, culture etc.

5. Publication of research materials produced by the scholars in Sri Lanka be undertaken by the Tanjore University.

6. A Chair established at Tanjore for Sri Lankan (Tamil) studies.

Details of the proposals welcome to Tamil University could be worked out later.

அக்கூட்டத்திற்குப் பின்னர் காலை 11-30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து ஆசிரியர்கள் ஏறத்தாழ 25 பேர் பங்கு கொண்ட கூட்டம் நடைபெற்றது. பல்வேறு துறைத் தலைவர்களோடு பல ஆசிரியர்களும் இதில் பங்கு கொண்டனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கம் பற்றியும், திட்டங்கள் பற்றியும் அக்கூட்டத்திலும் நான் விளக்கினேன். அக்கூட்டத்தில் தொல்பொருள் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இல்லை என்ற குறை தெரிவிக்கப்பட்டது.[15] அப் பல்கலைக்கழகத்தில் **தென்னாசியக் கல்வி மன்றம்** (Association of South Asian Studies) துவக்கப்பட்டு இருப்பதால் தமிழ்ப் பல்கலைக்கழகத்தோடு உறவு வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து **ஆசிரியர் மன்றம்** மாலை நான்கு மணி அளவில் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய் திருந்தது. அறிவியல் உட்பட்ட பல்வேறு துறை ஆசிரியர்கள் அதிலே பங்கு கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் பற்றி மேலும் விளக்கங்கள் தெரிந்து கொண்டனர். அவர்கள் அனைவருமே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களையும், திட்டங்களையும் வரவேற்று, இப்பல்கலைக்கழகத்தோடு உறவு வைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறை ஒன்று உள்ளது. **முனைவர் இராமகிருட்டிணன்** அத்துறையில் பணி செய்து வருகிறார். இந்திய நாகரிகத் துறை என்று ஒன்றும், இசுலாமிய நாகரிகத் துறை என்று ஒன்றும் இப்பல்கலை கழகத்தில் இயங்குகின்றன. முனைவர் இராமகிருட்டிணன், தம்

முதுகலை மாணவர்களுடன் இணைந்து **சைவ சமயக் கலைச் சொற்கள்** பற்றியும், **தொல்காப்பியத்தில் சைவ சமயக் கருத்துக்கள்** பற்றியும் ஆராய்வதாகக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகம் இப்போது தான் உருவம் பெற்று வருகிறது; புதிய கட்டடம் கட்டப் படுகிறது. இலங்கைத் தமிழர் சமயம், பண்பாடு பற்றிய ஆராய்ச்சிக்கு இந்நூலகத்தையே நாம் நம்ப வேண்டியுள்ளது. இலங்கையிலும், தமிழகத்திலும் வெளியான பல நூல்கள் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவர் முனைவர் கைலாசபதியின் முயற்சியால் பல பழம் பதிப்புக்களும், ஏட்டுச்சுவடிகளும் ஓரளவு தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தின் பொறுப்பாளர் **திரு முருகவேள்** இந்து வைதிக சமயம், சித்த ஆயுர்வேத மருத்துவம், சைவசமயம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர். சித்த மருத்துவம், ஆயுர்வேதம் ஆகிய துறைகளில் ஏராளமான சுவடிகளும், நூல்களும் இலங்கையில் இருந்திருக்கின்றன. இவற்றை ஒரு **நூல் விளக்கப் பட்டியலாகத் (Bibliography)** திரு முருகவேள் தொகுத்திருக்கின்றார். அதிலே நூற்றுக்கணக்கான பழஞ்சுவடிகளைப் பற்றியும், நூல்களைப் பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உதவியோடு வெளியிடுவதற்குத் திரு முருகவேள் விரும்புகிறார்.

யாழ்ப்பாண நகரில் 28—5—82

மறுநாள் காலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் **முனைவர் வித்தியானந்தன்** அவர்களிடம் கலந்துரை யாடிய பின்னர் யாழ்ப்பாணத்து நகரவை முதல்வர் **திரு ராசா விசுவநாதன்**, யாழ்ப்பாணத்து முதுபெரும் புலவர் பண்டிதமணி **கணபதிப் பிள்ளை**, ஓய்வு பெற்ற அலுவலர் **திரு அம்பிகைபாகன்** (மல்லாகம்), பிள்ளைப்பேற்று மருத்துவத் துறை ஓய்வு பெற்ற பேராசிரியர் **டாக்டர் சின்னத்தம்பி** ஆகியோரை அன்று கண்டு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ்க் கல்வியோடும், தமிழ்ப் புலமையோடும், தமிழர் இயக்கத்தோடும் அவர்கள் கொண்டிருந்த உறவு எனக்கு வியப்பினைத் தந்தது.

திரு அம்பிகைபாகன் அவர்கள் கடந்த 125 ஆண்டு களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்ப் பணியினை விளக்கினார்கள். தமிழ் இலக்கியங்களும் சமய நூல்களும் பல, சென்ற நூற்றாண்டுகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு

வெளியிடப்பட்டிருக்கின்றன; தமிழ் ஆராய்ச்சியும் ஓரளவு நடை பெற்றிருக்கிறது. இந்தப் பழைய மொழிபெயர்ப்புக்கள் இன்றும் யாழ்ப்பாணத்துக் கடைகளிலும், நூலகங்களிலும், தனியார் இல்லங்களிலும் கிடைக்கின்றன. அவை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நூலகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவன எனலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரியாக நுண்கலைப் பயிற்சிக்கென **இராமநாதன் இசைக்கல்லூரி** என்ற ஒன்று அங்கே இயங்கி வருகிறது. ஆனால், அதற்குத் தக்க தகுதிகள் இன்னும் கிடைத்தனவாகத் தெரியவில்லை; தக்க முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இக்கல்லூரிக்குக் கிடைக்கவில்லை என்ற குறை தெரிவிக்கப்பட்டது. இக்கல்லூரி, இதற்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் உதவி கிட்டுமாயின் பயன்படுத்திக் கொள்ளும்.

பிள்ளைப் பேற்று மருத்துவத்துறையறிஞர் டாக்டர் சின்னத்தம்பி அவர்கள் முதுமையிலும் துடிப்பான தமிழுணர்வுகளைக் கொண்டுள்ளவர். இங்கிலாந்திலே மருத்துவக்கல்வி பயின்ற தமிழ்ப் பற்றுள்ளவர் இவர். இன்றைய அறிவியற்கலைகளையும் தமிழ் வாயிலாகக் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை இலங்கையில் தோற்றுவிக்கப் பாடுபட்ட இயக்கத்தின் முன்னணியில் நின்று பணியாற்றியவர் இவர். இவ்வியக்கத்தின் வரலாற்றை The Diary of the Tamil University Movement என்ற பெயரில் இவர் வெளியிட்டு உள்ளார். மருத்துவத்துறை நூல்கள் பலவற்றை இவர் தமிழில் வழங்கியுள்ளார். ''பல்கலைக் கழக மட்டத்தில் அறிவியலையும் மருத்துவத்தையும் பொறியியலையும் தமிழில் கற்பித்தல் இலங்கையில் கடினமாக இருக்கலாம். ஆனால், 4 கோடி தமிழர்கள் வாழும் நாட்டில் ஏன் தயங்கிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என அப்பெரியவர் வினாத்தொடுத்தார். இலங்கையில் மக்கள் சிறு தொகையினராக இருத்தலால் எல்லாவற்றையும் செய்தல் கட்டுபடியாகக்கூடியதாக இல்லை என்பதும், மக்கள் பெருந்தொகையினராக இருக்கும் தமிழகத்தில் இவை கட்டுபடியாகக் கூடியனவாக இருக்கும் என்பதும் இவர் வாதம். இவரிடம் புத்தூக்கம் பெற்றுத் திரும்பி வந்தேன்.

இன்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் வித்தியானந்தன் அவர்களுடன் கலந்துரையாடினேன். 'தமிழர் சால்பு', 'தமிழியற் சிந்தனை' என்னும் நூல்களின் ஆசிரியராக முன்னமே எனக்கு இவர்கள் அறிமுகமாகி

யிருந்தார்கள். (முதல் நாள் இவர்கள் கொழும்பு சென்றிருந் தார்கள்) தம் சிற்றுந்தில் ஏற்றி அழைத்துச் சென்று யாழ்ப்பாண நகரின் பகுதிகள் பலவற்றைத் துணைவேந்தரவர்கள் எனக்குக் காட்டினார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகத்தொடு கொள்ளத்தக்க உறவுகள் பற்றி இவர் களுடன் பேசினேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தோற்றத்தை அவர்கள் ஆர்வத்துடன் வரவேற்றுப் பேசினார்கள். பொதுத் திட்டங்கள் வகுத்தல், பிற உறவுகள் வைத்தல் பற்றித் தாம் முன்னர் விளக்கி வரைந்ததைப் பின்பற்றியிருக்கின்றார்கள். என் இலங்கைப் பயணம் தொடங்குவதற்கு முன்னரே, தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தரவர்கள் இவர்களோடு தொடர்பு கொண்டபோது, இரு பல்கலைக் கழகங்களிடையே அமையத் தக்க உறவுகள் பற்றி இவர்கள் விளக்கி எழுதியிருந்தார்கள். அத்திட்டங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துப் பல்வேறு துறைப்பேராசிரியர்கள், துணைவேந்தவர்களுடன் கலந்துரையாடி வகுத்தது எனச் சொல்லப்பட்டது. அத்திட்டங்களடங்கிய மடல் இங்குக் கவனித்தற்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை,

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Professor **S. VITHIANANTHAN,**
M.A. (Ceylon), Ph.D. (Lond),
VICE-CHANCELLOR,

திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
Thirunelvely,
Jaffna.

Telephone: JAFFNA 481
7594

Date: 24-4-82

My dear Dr. Subramoniam,

Link-up of the University of Jaffna
with the Tamil University, Thanjavur.

I am in receipt of your kind letter on the above subject. I am sorry for the long delay in replying.

It is evident from the programme of work announced by your University that it intends to concentrate on research and publication.

One of the main interest of your University is to co-ordinate research in Tamil Studies done outside India.

Although the primary link-up of the University of Thanjavur could be with the Department of Tamil (including Linguistics) of the University of Jaffna, the academic personnel and other resources available in the University of Jaffna in the areas of Archaeology, Epigraphy, Early History and Religion could be utilized. Recent archaeological discoveries in the Peninsula would be of great interest to South Indian Tamil Scholars. The vexed problem of the evolution of the Brahmi script can be studied in depth by scholars on both sides. Accordingly I suggest a link-up with either the Department of Tamil or with the proposed Centre for South Asian Studies of the University of Jaffna. The main thrust can, of course, be in Tamil Studies.

The University of Jaffna as the premier institution for Tamil Studies in this country, can link-up with the Tamil University of Thanjavur, and forge further ahead in Tamil research, which now is done largely on the personal initiative of the researchers here. With the available staff in the Department of Tamil, we are fully equipped to link with any foreign institution for the furtherance of the following areas of study:

1 Social and Literary History of the Tamils.

2 Literary Theories and Criticism in Tamil.

3 Tamil Folklore Studies.

4 Sri Lankan Tamil Studies.

5 Textual criticism.

6 Drama and other performing Arts of the Tamils.

7 Culture and Communication among the Tamils.

8 Translation Theory and practice.

9 Tamil Grammatical Tradition.

10 Historical Linguistics and Sri Lankan Dialectal Studies.

The link-up should be in relation to

(a) joint undertaking of research projects

(b) exchange of academic and research staff

(c) exchange of postgraduate students.

and

(d) joint undertaking documentation.

I would suggest that at the outset arrangements be made for a preliminary meeting with the officials of the University of Jaffna and that a joint body be set up to out the details.

With kind regards,

Yours Sincerely,

(Prof. S. Vithiananthan).

/ True Copy /

யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க மற்றொரு நிறுவனம் **ஈவிலின் ரத்தனம் பல்பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்** (THE EVELYN RUTNAM INSTITUTE FOR INTER CULTURAL STUDIES) என்பதாகும். முனைவர் ஜெம்ஸ். டி. ரத்தனம் என்னும்பெருஞ்செல்வர், ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டு வெளிநாடுகளில் வளத்தோடு வாழும் தன் பிள்ளைகளின் பொருளுதவியுடன் அமைத்த நிறுவனமாகும் இது. இலங்கை இந்தியா முதலான பல்வேறு பண்பாடுகளில் ஆராய்ச்சி ஆர்வம் கொண்ட அறிஞர் இவர். தமக்கெனத்தனி ஒரு கட்டடத்தில் இலங்கையியல், இந்தியவியல் கல்விக்குரிய ஏராளமான நூல்களையும், பல்வேறு பண்பாட்டாய்வுக்குரிய நூல்களையும் தன்னகத்தே கொண்ட நூலகம் ஒன்றினையும் இவ்வாராய்ச்சி நிறுவனம் பெற்றுள்ளது. இவ்வறிஞரே தம் காலத்தில் தொகுத்த ஏராளமான நூல்களை இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளார். இலங்கையியல், இந்தியவியல் ஆராய்ச்சிக்குத் தக்க ஓர் இடம் இது எனலாம். யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகத்தோடு நெருக்கமான உறவு கொண்டு இந் நிறுவனம் இயங்க விரும்புகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து வரலாற்றுத்துறைத் தலைவரே இந்நிறுவனத்தின் இயக்குநராக இப்போது விளங்குகின்றார். இந்தியா, இலங்கை முதலான நாடுகளில் உள்ள பல்வேறு அறிஞர்களின் ஆட்சியில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

மட்டக்களப்பில்

யாழ்நகரிலிருந்து மாலை 5-30 மணியளவில் புறப்பட்டு மறுநாள் 29—5—82 விடியற் காலை, மட்டக் களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரியை அடைந்து பல்கலைக் கழக விருந்தினர் இல்லத் தில் தங்கினேன்.

காலை மட்டக்களப்புப் பல்கலைக் கழகத்துக் கல்லூரி இயக்குநர் **பேராசிரியர் இராசரத்தினம்** அவர்கள் என்னை வந்து கண்டார்.

தமிழருக்கெனத் தனித் தனியே பல்கலைக் கழகங்கள் தொடங்க வேண்டும் என்று அரசின் மொழிக்கொள்கையால் மட்டக்களப்பில் இக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. பல்வேறு அறிவியல் துறைகள், வேளாண்மைத் துறை ஆகியவை மட்டும் இப்போது இக்கல்லூரியில் நடைபெற்று வருகின்றன. கலைத் துறைப் பாடங்கள் இப்போது இங்குத் தொடங்குவதாக எண்ணம் இல்லை போலும். இக் கல்லூரி, தமிழகத்தின் ஓர் உயர் நிலைப் பள்ளி போலக் காட்சியளிக்கிறது. முதல் பட்ட வகுப்பு வரை மட்டுமே இங்குப் பாடம் கற்பிக்கப்படுகிறது. எல்லாவற்றையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்ற ஒரு முயற்சியும், அது முடியாது தவிக்கும் ஒரு நிலையுமாக இங்கு இரண்டுங்கெட்ட நிலை விளங்குகிறது (இது பற்றிப் பின்னர் காணலாம்). இக் கல்லூரியின் இயக்குநர் பேராசிரியர் இராசரத்தினம் மட்டக் களப்புப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு நோக்கங்களையும் செயற் பாடுகளையும் விளக்கினார். இக்கல்லூரியில் ஆராய்ச்சிக்கான வாய்ப்பு வேறு ஒன்றும் இல்லை. தமிழ்க் கல்விக்கென வாய்ப்பு ஒன்றும் இல்லை. தமிழ் மாணவர்கள் தமிழ்ப் பண்பாட்டின்மீதும் இலக்கியத்தின்மீதும் ஆர்வம் கொண்டு மன்றங்கள் நடத்தி வரு கின்றனர். நான் சென்றிருந்த போது, பாரதி நூற்றாண்டு விழா விற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருந்தனர். இதழ் ஒன்றும் வெளியிட என்னிடம் கருத்துக்களும் கேட்டுப் பெற்றுக் கொண்டனர்.

இப்பல்கலைக் கழகக் கல்லூரி, மட்டக்களப்பு நகரத்திலிருந்து ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தள்ளி அமைந்து உள்ளது. பேராசிரியர் இராசரத்தினம் அவர்கள் என்னைத் தம்முடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று நல்ல முறையில் விருந்தோம்பிப் பின்னர் மட்டக்களப்பு நகரத்திற்கு அழைத்துச் சென்றார்.

மட்டக்களப்பு நகரத்தில் **புலவர் நடராசா** என்பவரைச் சந்தித்தேன். அவர் இலங்கைத் தமிழகத்திலும் இந்தியத் தமிழகத்திலும் வெளியான நூல்கள் பலவற்றைத் தொகுத்து வைத்திருக்கிறார். அகராதிகள், இலக்கண நூல்கள், இலக்கிய வரலாறுகள் முதலிய நூல்கள் அவர்களால் தொகுக்கப்பட்டு உள்ளன. கடந்த நூற்றாண்டில் வெளி வந்த தமிழ்நூல்கள் மட்டுமே, 200 அவர் தொகுத்து வைத்துள்ளார். இலங்கைத் தமிழ் அறிஞர்கள் நாவலர் ஞானப்பிரகாசர் முதலான பலர் எழுதிய நூல்கள் அனைத்தும் அவரிடம் உள்ளன. ஈழத்தின் வரலாற்றுச் சான்றுகள் கொண்ட நூல்களும் அவரிடம் முழுமையாக உள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதியிலே கிடைத்த தமிழ் ஏட்டுச் சுவடிகள் பலவும் அவர் வைத்துள்ளார். பொதுவாகப் பழைய தமிழ்நூல்கள், பிற இடங்களில் வெளியான பல அவருடைய நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

அப்படிப்பட்ட பல நூல்கள் தொகுப்பதற்கு யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இன்னும் நல்ல வாய்ப்புக்கள் உண்டு என்று அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பிலுள்ள நூலகம் ஒன்று, தமிழ் நூல்கள் ஏறத்தாழ 16 ஆயிரம் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய தமிழர் வாழும் பகுதிகள் பற்றியும் அவர்கள் வரலாறு பற்றியும், இலக்கியம்பற்றியும், அறிவதற்கு வாய்ப்பான நூல்கள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்புக் கிறித்துவ சங்கம் 200 ஆண்டுகளாகவே இவ்வூரில் பணியாற்றிக் கொண்டிருந்தது. கல்விப் பணியும் தமிழ்ப் பணியும் அது செய்து வந்துள்ளது. அச்சங்கத்திடம் உள்ள ஏடுகள், வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெருந் துணையாக இருக்குமென அறிந்தேன். கிறித்துவ சமயத்தைச் சார்ந்த ஒருவர் அங்குச் சென்று ஆராயின் 200 அல்லது 300 ஆண்டு வரலாறு அறிய நல்லவாய்ப்பு ஏற்படும். ஐரோப்பியர் தமிழரோடு கொண்டிருந்த உறவும் எண்ணமும் புலப்படும்.

மட்டக்களப்பு ஒரு துறைமுகமாகவும் பயன்பட்டு வந்தது என்பது கருதத்தக்கது. அங்கு ஒல்லாந்தியர் கட்டிய கோட்டை ஒன்று இன்றும் காக்கப்பட்டு அரசு அலுவலகமாகப் பயன்பட்டு வருகிறது.

மட்டக்களப்பில் கல்வி நிலையங்களில் தமிழ்மணம் வீசுவதை விட, அதன் மண்ணில்தான் அதன் மணம் மிகுதியாக வீசிக் கொண்டிருக்கிறது.

அன்று பிற்பகல் பல்கலைக் கழகக் கல்லூரியில் அறிவியற் புலத்தின் தலைவர் **முனைவர் செல்வி மனோசபாரத்தினம்** அவர்களிடமும், அக்கல்லூரியின் செயலாளர் அவர்களிடமும் பேசும்படியான வாய்ப்புக் கிடைத்தது. இலங்கைத் தமிழர் நிலை பற்றியும், கல்வி நிலை பற்றியும், தமிழ் மொழியின் நிலை பற்றியும், தமிழ் மாணவர்கள் பற்றியும், இலங்கையரசின் மொழிக் கொள்கை பயிற்சி மொழி பற்றியும் கருத்துக்களை அவர்களோடு பரிமாறிக் கொள்ளும் வாய்ப்புப் பெற்றேன்.

பேராசிரியர் இராசரத்தினம் அவர்கள் தோட்டத் தொழிலாளர் பற்றியும், வடஇலங்கைத் தமிழர் பற்றியும் இங்கிலாந்திலே ஆய்வு நிகழ்த்தியவர்; பௌத்த சமயம் முதலான பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டவர். செல்வி மனோசபாரத்தினம் இங்கிலாந்தில் முனைவர் பட்டம் பெற்றுப் பரந்த அறிவும் அனுபவமும் கொண்டவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

31—5—82, 1—6—82

30—5—82 மாலை **2-30** இற்குக் கண்டி சென்றடைந்து அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகக் குடியிருப்புக்களை அடைந்து பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் **தில்லைநாதன்** அவர்களோடு தங்கிப் பல்கலைக்கழகத்துப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கினேன்.

இலங்கையில் **கண்டி** ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது. அது ஒரு மலைப் பகுதி. அப்பகுதி முழுவதும் காடுகளும், தேயிலைத் தோட்டங்களும், இரப்பர்த் தோட்டங்களும், தென்னந்தோப்புக்களும் நிறைந்துள்ளன. இலங்கையின் செல்வமே இலங்கையின் நடுப்பகுதியான இக் கண்டியைச் சுற்றிய பகுதியில் அமைந்து உள்ளது எனலாம். புத்தர் கோவிலுக்கும் பெயர்போனது **கண்டி**.

இந்த மலைப்பகுதியில் அமைந்த தோட்டங்களில் வேலை செய்வதற்காகவே தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் கடந்த காலத்தில் ஏராளமானவர் குடியேற்றப்பட்டனர். இன்றைக்கும் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் தமிழர்களே. அவர்கள் ஏறத்தாழ 8 இலட்சம் பேர். இலட்சக்கணக்கான இசுலாமியத் தமிழர்களும் இங்கு வாழ்கின்றனர். இப்பெருமை வாய்ந்த கண்டியை அடுத்து 5 கிலோமீட்டர் தொலைவில் **பேராதனைப் பல்கலைக் கழகம்** அமைந்துள்ளது. உயரமான மலைச் சரிவுகளில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளதால் எங்கும் பசுமையான சூழ்நிலையே தென்படுகிறது. மலையின் சரிவுகளில் பல்வேறு துறைகளும், மாணவர் விடுதிகளும், ஆசிரியர், அலுவலர் குடியிருப்புக்களும் அமைந்துள்ளன. பசுமையும், குளிர்ச்சியும் கல்விச் சூழலுக்குத் தக்க வாய்ப்பினை நல்கிக் கொண்டிருக்கின்றன. ஆக்சுபோர்ட் பல்கலைக்கழகத்து அமைப்பினைப் பின்பற்றி இப்பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்டதாக அங்குப் பேசப்படுகிறது. ஆனால், துறைகளும், வீடுகளும் வேறு வேறாக அமைந்து இருப்பதால் ஆசிரியர்களிடையே உறவாடல் குறைந்துஇருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இலங்கையில் மிகச் சிறந்த பல்கலைக்கழகமாக இதனை அமைக்க வேண்டுமென இலங்கை அரசு சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பல்வேறு துறைகளும் இப்பல்கலைக்கழகத்தில் தான் உள்ளன. இதன் மற்றொரு சிறப்பு தமிழுக்கும், சிங்களத்திற்கும் இப்பல்கலைக்கழத்தில் இடம் கொடுக்கப்பட்டதாகும். மற்ற பல்கலைக்கழகங்களெல்லாம் சிங்களத்திற்கு அல்லது தமிழிற்கு என அமைந்திருக்கின்றன. இலங்கையின் தலைநகரமான கொழும்பில் அமைந்திருக்கும் பல்கலைக்கழகத்தில்கூடத் தமிழ் இன்று மெல்லமெல்ல மறைந்துகொண்டு வருகிறது. ஆனால், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழுக்கான வாய்ப்பு இன்றும் அமைந்து உள்ளது. கண்டியைச் சுற்றிய மலைநாட்டுப் பகுதியில் தோட்டத் தொழில் பற்றித் தமிழர் வாழ்வதும் இப்பகுதியில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இசுலாமியர் ஓரளவு குடியேறி இருப்பதும் தமிழ் இங்கே இடம்பெறுவதற்கோர் வாய்ப்பாக உள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களும் பலர் படித்து வருகின்றனர்.

இப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இப்போது பொறுப்பேற்றிருப்பவர் **திரு தில்லைநாதன்** அவர்கள். அவர்களுக்கு முன் தலைவராக விளங்கிய **முனைவர் வேலுப்பிள்ளை** அவர்கள் இப்போது வெளிநாடு சென்று உள்ளார்கள். இங்குள்ள

தமிழ்த் துறையில் தமிழ்ப் பட்ட வகுப்பு நடைபெற்று வருகிறது. 2,3 மாணவர்களே படிக்கின்றனர். பொதுவாக மாணவர்கள் தமிழ் படிக்க வருவது இப்போது குறைந்து வருகிறது. வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும் கணிதம், பொருளாதாரம், வணிகவியல் முதலான கல்வியில் மாணவர்கள் நாட்டம் செலுத்துகின்றனர். கடந்த காலத்தில் 10, 15 மாணவர்கள் தமிழ் படிக்கும்படியான நிலை இருந்துவந்தது. தமிழ் படிக்கும் மாணவர்கள் குறைந்தால் தமிழ்த்துறை இங்கு இயங்குவது சிறிது கடினமாகிவிடும் போலும். உயர்நிலைப் பள்ளியை முடித்தவுடன் பல்கலைக்கழகம் வந்து சேரும் மாணவர்கள் ஓரளவுக்கு ஆங்கிலமும், தமிழும் கட்டாயமாகப் படிக்கின்றனர். அனைத்து மாணவர்களும் முதலாண்டில் தமிழ் படிக்கும்படியாக இருத்தலால் தமிழாசிரியர்கள் கட்டாயம் தேவைப்படுவர்.

தமிழ் முதுகலைக் கல்வி, ஆராய்ச்சி வழியாகவே பெற வேண்டுவதாக அமைந்துள்ளது. அவ்வாறு பெறும் முதுகலைப் பட்டம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருப்பவர்களுக்கும், ஆராய்ச்சி மேற்கொள்ளுவோர்க்கும்தான் தேவைப்படுகிறது. பொதுவாக முதுகலை படிக்க வருவோர் மிகவும் குறைவு. பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், பிற இலங்கைப் பல்கலைக் கழகங்களிற் போன்று பொதுவாக முதுகலைக் கல்வி வளரவில்லை. ஆராய்ச்சியும் மிகமிகக் குறைவே. தனிப்பட்ட முறையில் புலமை பெற்றோர் ஆராய்ச்சி செய்யலாம். ஆராய்ச்சிக்கென உதவித் தொகையோடு கூடிய மாணவர் பதவிகள் (Stipendiary Research Fellowships) பல்கலைக்கழகத்திலேயே இல்லை. முதுகலைக் கல்விக்கும், ஆராய்ச்சிக் கல்விக்கும் பொதுவாகவே இலங்கை மேலைநாடுகளையே நம்பி இருந்துவிட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த் துறையிலும் ஆராய்ச்சிப் பட்டம் (Ph. D) பெற்றோர் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். தமிழ்த் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள் மேலைநாடு சென்று ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கு இப்போது வாய்ப்புக்கள் குறைந்துபோய் விட்டன. ஆதலால் ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்காக இந்தியா உள்பட்ட பிறநாடுகளில் உள்ள வாய்ப்பினை அவர்கள் இப்போது நாடி நிற்கின்றனர்.

ஆனாலும், இலங்கையின் மற்ற பல்கலைக்கழகங்களைப் போன்றே பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் எல்லாத் துறைகளிலும் மேலைநாடுகளில் படித்து ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற அறிஞர்கள் பேராசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

அவர்கள் ஒரு சில ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு நடத்தி வருகின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு தில்லைநாதன் அவர்களோடு அங்குள்ள தமிழ்க் கல்வி நிலை பற்றி நீண்ட நேரம் நான் கலந்துரையாடினேன். 31–5–82 திங்கட்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைப் பேராசிரியர்களோடும் உரையாடினேன்.

(1) முனைவர் லெஸ்லி குணவர்த்தனா (வரலாறு)

(2) முனைவர் சதாசிவம் (தமிழ்த் துறைப் பேராசிரியர்)

(3) முனைவர் அனுராதா சேனாதிரத்னா (சிங்கள, நுண் கலைத்துறை)

(4) முனைவர் கே. எம். டீ. சில்வா (பல்கலைக்கழகப் பொருள் நல்கை ஆணைக்குழு உறுப்பினர்; வரலாற்றுப் பேராசிரியர்)

(5) முனைவர் மைக்கேல் பெர்னாண்டா (சிங்களத் துறை)

(6) முனைவர் ஆனந்த குலசூரியா (கலைப்புலத் தலைவர், சிங்களப் பேராசிரியர்)

பல்கலைக்கழகப் பொருள் நல்கை ஆணைக்குழு உறுப்பினர் **பேராசிரியர் டி. சில்வா** அவர்களோடு **துணைவேந்தர் முனைவர் பி. எல். பண்டிதரத்னா** அவர்களைக் கண்டு, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கம், அமைப்புக்களைப்பற்றி விளக்கவும் வாய்ப்பு கிடைத்தது. துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அமைப்பு பற்றி அறிந்து, அதனோடு உறவு வைத்துக் கொள்ளவும், அதற்காக ஆதரவு நல்கவும் விருப்பம் தெரிவித்தார்கள்.

முனைவர் லெஸ்லி குணவர்த்தனா : வரலாற்றுத் துறையின் இவ்விணைப் பேராசிரியர் தென்னிந்தியாவின் நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி ஆய்வு நிகழ்த்தி உள்ளார்; அதன் பொருட்டுத் தமிழகத்திற்கும் வந்துபோய் உள்ளார்; இப்போது பண்டை அறிவியல், தொழில்நுட்பவியல், உலோகவியல், நீர்ப்பாசனம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டு, ஆய்வு நிகழ்த்திக் கொண்டு வருகிறார். இவ்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பண்டைய அறிவியல் துறையோடு உறவு வைத்துக் கொள்ள விருப்பம் காட்டினார். இத்துறைகள் மட்டுமல்லாது தமிழகத்துப் பௌத்தம்,

சிங்களப் பௌத்தம் ஆகியவற்றின் உறவு பற்றியும் ஆராய அக்கறை கொண்டுள்ளார். 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் தமிழில் இருந்த புத்தசாதகக் கதைகள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். ஆனால் இன்றைய சிங்களத்தில் பௌத்த மத ஆராய்ச்சியில் பௌத்த மதத்தின் பிற பிரிவுகளைப் பற்றி ஆராயப்படுவது இல்லை என்று குறைபட்டுக் கொண்டார் அவர்.

இலங்கையில் பரவிய பௌத்த சமயத்தைத் தமிழகத்தின் பௌத்த சமயத்தோடு ஒப்பிட்டுத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆராயலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். வரலாற்றுச் சான்றுகள் (Monuments), பௌத்த சமயக் கல்வியில் சிங்களவர் பங்கு, பாலி மொழிப் பௌத்த நூல்கள், சமூகவியல் கண்ணோட்டத்தில் பௌத்த சமயம் என்னும் பொருள்கள் பற்றி மேலும் ஆராய வாய்ப்பு உண்டு என அவர் குறிப்பிட்டார்.

அறுமொழிப்பரமேட்டியர் எனும் கொள்கையைப் பற்றிச் சிங்களத்துப் பௌத்த சமயத்தில் பேசப்படுவதாகக் குறிப்பிட்டு, அதனைப் பற்றிய குறிப்புக்கள் தமிழ்மொழியில் உள்ள பௌத்த நூல்களில் உள்ளனவா என அவர் வினாவினார். 'அறுமொழிப் பரமேட்டியர்' என்பது சட்பாஷா பரமேஸ்வர (Parameshtin) என்னும் பௌத்த பிக்குகள் பற்றியதாகும். ஆறு மொழிகளைப் படித்துப் புலமை பெற்ற பௌத்த பிக்குகள் பற்றிய கொள்கை இது. அம்மொழிகளாவன: (1) பாலி, (2) வடமொழி, (3) சிங்களம், (4) தமிழ், (5) ஆந்திரம், (6) துளு.

மேலும் அவ்வறிஞர் கம்பகத்தில் அமைந்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் கற்பிக்கப்படுவதைக் குறிப்பிட்டு, அச்சித்த மருத்துவக் கல்வி பற்றி ஒரு குழப்பம் உள்ளதெனச் சுட்டிக் காட்டினார். சித்த மருத்துவத்தையும், ஆயுர் வேதத்தையும் இணைத்துக் குழப்புவதாகும் அது. இவ்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏதாவது செய்யலாம் என்பது அவர் கருத்து.

முனைவர் அனுராதா சேனாதிரத்னா: இவர் கொழும்பில் அழகியற் கல்வி நிறுவனத்தின் (Institute of Aesthetics Studies) முன்னாள் இயக்குநர். இந்திய வரலாற்று ஆராய்ச்சி மன்றம் (Indian Council of Historical Research) அழைத்ததன் பேரில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டவர். இப்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழித்துறையில்

பணியாற்றி வருகிறார். சிங்களக் கலைகளுக்கும், தமிழ்க் கலைகளுக்கும் இடையேயுள்ள உறவு பற்றி ஓரளவு அறிவு பெற்றவர் இவர் எனத் தெரிகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைப் புலம் அமைந்து இருப்பது பற்றி அவர் மகிழ்ச்சி அடைந்தார். அதோடு உறவு கொள்ளவும், அதன் திட்டங்களில் பங்கு பெறவும் அவர் ஆர்வம் காட்டினார். தாம் இயக்குநராக இருந்த நேரத்தில் அந்நிறுவனத்தில் இசை, நடனம், சிற்பம் ஆகியவற்றில் சான்றிதழ்க் கல்வி (Certificate Courses) நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முனைவர் ஆனந்த குலசூரியர்: பேராதனைப் பல்கலைக் கழகத்துக் கலைப் புலத்துத் தலைவர் (Dean) ஆகிய இவர், தமிழ் ஆராய்ச்சிப் போக்குகளை ஓரளவு அறிந்தவர்; பாரீசில் நடைபெற்ற மூன்றாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கு பெற்றவர். அப்பல்கலைக் கழகத்தில் உயர் மட்டத்தில் ஆராய்ச்சிக்கான வசதி குறைவு என்பதைக் குறிப்பிட்டு அவர் கவலை தெரிவித்தார். ஆனால், இப்போது (Board of Higher-education) என்ற ஒன்று, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரைவில் தொடங்க இருப்பது பற்றிக் குறிப்பிட்டார். முது நிலைக் கல்வி, அதற்குத் தக்கபடி ஆராய்ச்சி ஆகியவை பற்றி இந்த அமைப்பு கவனிக்கும் என்பது அவர் நம்பிக்கை.

முனைவர் சதாசிவம்: கொழும்பிலும் பேராதனையிலும் தமிழ்ப் பெரும்பேராசிரியராக விளங்கி வரும் முனைவர் சதாசிவம் அவர்கள் இலங்கையில் கல்வி கற்று இங்கிலாந்தில் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற்று, அமெரிக்கா முதலான கீழை மேலை நாடுகளுக்கு விரிவான முறையில் பயணம் மேற்கொண்டு, உலகத் தமிழ் ஆராய்ச்சியாளர்களின் அறிமுகமும், உறவும் பெற்றவராக விளங்குகிறார்கள். முனைவர் சதாசிவம் அவர்கள், தம் சொந்த ஆராய்ச்சியாக, சுமேரிய திராவிட அல்லது குமரிமொழிக் குடும்ப வேர்ச் சொல்லகராதி (An Etymological Dictionary of Sumero-Dravidian or Kumari Family of Languages . . . .) என்னும் திட்டத்தை மேற்கொண்டு செய்து வருகிறார்கள். (அதன் ஒரு பகுதி, சிறு கட்டுரையாக வெளிவந்துள்ளது.) அவர்கள், கீழ்க் கண்ட கருத்துக்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின்முன் வைத்தனர்:

(1) ''சென்னைப் பல்கலைக் கழகம் 50 ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட (தமிழ் லெக்ஸிகன் என்னும்) **தமிழ்ப் பேரகராதியினைப்** புதுக்கியும், திருத்தியும் தமிழ்ப் பல்கலைக் கழகம் பெரிதாக

ஒன்றனை உருவாக்கவேண்டும். இந்தத் தமிழ்ப் பேரகராதியில் பலவகைக் குறைகள் இருப்பதாகப் பேராசிரியர் **பரோ,** (Prof. T. Burrow) பேராசிரியர் **எமனோ,** (Prof. M.B. Emeneav), பேராசிரியர் **கிப்பர்,** (Prof. F. B. J. Kuiper) ஆகியோர் எடுத்துக் காட்டியுள்ளனர். இவ்வாறு புதுப் பேரகரார்தி தொகுக்கும் பொழுது இலங்கைத் தமிழ் அறிஞர்களுக்கும் வாய்ப்பு (Representation) வேண்டும். கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பொருள் உதவியோடு (ரூ. 8,780) 1967 முதல் 72 வரை A Dictionary of Ceylon Tamil Usages — என்ற ஒரு திட்டம் செயற்பட்டது. இலங்கை முழுவதும் பயணம் மேற்கொண்ட இந்து, முசுலீம், கிறித்துவ மாணவர்கள் உட்படப் பலர் பங்கு கொண்டு தயாரித்த இலங்கைத் **தமிழ்க் கிளை மொழி அகராதியாக** இது அமைந் துள்ளது; இப்போது 50 ஆயிரம் அட்டைகளாக வைக்கப்பட்டு, இன்னும் நூல் உருவம் காணாது அமைந்துள்ளது. பேராசிரியர் பரோவின் மேற்பார்வையில் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் ஓர் ஆண்டு பணியாற்றி அதனைச் செப்பம் செய்துள்ளார். இந்தக் குறிப்புக்கள் எல்லாவற்றையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் பயன்படுத்திக்கொள்ளுமாறு அதற்கு வழங்கத் தடை ஒன்றும் இல்லை.''

(2) ''தமிழில் கலைச்சொல் ஆக்கத்துக்காகத் தமிழர் பல நாடுகளுடன் இணைந்து பாடுபடும் ஓர் ஒருங்கிணைப்பு முயற்சி தேவை; கோலாலம்பூர் முதலான பல்வேறு இடங்களில் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாடுகளில் பலமுறை இத்தேவை எடுத்துக் காட்டப்பட்டது. கலைச்சொல் அகராதியைப்பற்றி இலங்கை யிலோ தமிழகத்திலோ ஒருவர் ஆராய்ச்சி மேற்கொள்ளலாம். இவ் ஒருங்கிணைப்புப் பணி இல்லாதபோது கீழ்க்கண்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அ) இலங்கையின் சூழ்நிலைக்கு ஏற்ப அமைந்த கலைச் சொற்களும், இலங்கையில் ஆட்சி பெற்ற கலைச் சொற்களும் தமிழ்க் கலைச்சொற் பட்டியலில் இடம் பெறாது போய்விடும்; இலங்கையில் பயன்பாட்டுக்கு எற்றவையும் அகராதியில் இடம் பெறுதல் நலம்.

ஆ) தமிழகத்தில் வெளியாகும் பாடநூல்கள் இலங்கையிலும் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளன. இலங்கைத் தமிழகம் ஒரு மிகச் சிறிய பகுதியாக அமைந்துள்ளதால் தனக்கு வேண்டிய பாடநூல்கள் முதலான வாய்ப்புக் களைத் தானாகவே நிறைவேற்றிக் கொள்வது கடின

மாக உள்ளது. இந்தியத் தமிழகத்தை இவ்வகையில் அது சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இக்காரணத்தால் இலங்கைக் கருத்துக்களும் கலைச் சொல் ஆக்கத்தில் இடம்பெறுமாறு ஒருங்கிணைப்புப் பணி அமைவது நல்லது. தமிழகத்துப் பாடநூல்கள் விற்பனைக்கும் இலங்கையின் கல்வி நிறுவனங்கள் உதவியாக இருக்கும். இலங்கைத் தமிழர்களுக்குப் பொதுவாகவும் இது ஓர் உதவியாகும்.''

முனைவர் சதாசிவம் கருதுவது போன்றே இலங்கைத் தமிழறிஞர் பலர் கருதுகின்றனர். ஆனால், இந்த ஒருங்கிணைப்பு முயற்சியில் சிக்கல் இல்லாமல் இல்லை. இலங்கை அரசு, அங்குள்ள தமிழர்கள் எந்த வகையிலும் இந்தியத் தமிழரோடு உறவு வைத்துக் கொள்வதை விரும்புவதில்லை. இலங்கைத் தமிழரின் பல ஒருங்கிணைப்பு முயற்சிகளை இலங்கை அரசு தடுத்துக் கொண்டே வருகிறது. "Sri Lankan Tamil Technical Terms should as far as possible be in the context of Sri Lankan Culture"—என்பதே இலங்கை அரசின் கொள்கையாம். இருப்பினும் இலங்கைத் தமிழ், தனித்துப் போகாதவாறு இரண்டு தமிழும் இணைந்து செல்லச் செயல் செய்க என, திரு சதாசிவம் வேண்டிக் கொண்டார். அவருடைய விருப்பம் பெரும்பாலான இலங்கைத் தமிழர்களது உள்ளக்கிடக்கையின் எதிரொலியாகும்.

இ) இலங்கையில் பதிப்பிக்கப்பட்ட தொல்காப்பியம் கணேசஐயர் பதிப்புக்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடலாம்.

பேராதனைப் பல துறைப் பேராசிரியர்களிடை

31—5—82

பேராதனைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுத் துறை ஆசிரியர் **முனைவர் எஸ். பத்மநாபன்** அவர்கள் இல்லத்தில் பல்வேறு துறையினைச் சார்ந்த ஆசியர்களான தமிழர்கள், மாலை விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக வந்திருக்கும் எனக்குச் சிறப்புச் செய்யவும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள், திட்டங்கள் பற்றி

அறியவும் அவர்கள் விரும்பினர்; பல்வேறு வினாக்களைத் தொடுத்து விளக்கங்கள் பெற்றுக் கொண்டனர். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட (1) முனைவர் எஸ். பத்மநாபன் (வரலாறு), (2) திரு ஏ. சின்னத்தம்பி (பொருளாதாரம்), (3) திரு சிவராமன் (அரசியல்), (4) திரு எம். எல். எ. காதர் (அறிவியல்) (5) பேராசிரியர் சதாசிவம் (தமிழ்), (6) திரு எஸ். சி. காசிநாதன் (மெய்யியல்), (7) முனைவர் அருணசாலம் (தமிழ்), (8) திரு துரை மனோகரன் (தமிழ்), (9) திருமதி பி. புவனேசுவரி (புவியியல்), (10) திரு சிவ சங்கரன் (புள்ளியியல்), (11) திரு சத்தியநாகம் (வணிகவியல்), (12) திரு ஆனந்த நாதன் (மெய்யியல்), (13) திரு ஜயந்த குமார் (வணிகவியல்) ஆகியோர் விடுத்த வேண்டுகோள் வருமாறு:

(1) இலங்கையில் சிறப்பு இளங்கலைப் (பி. ஏ. சிறப்பு) பட்டம் பெற்றுப் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிவரும் ஆசிரியர்கள் முதுகலைப் பட்டம் பெறும் வாய்ப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நல்க வேண்டும்.

(2) இலங்கையில் தமிழரின் வாழ்வியல் கூறுகளான அரசியல், பொருளாதாரம், சமயம் பற்றித் திட்டங்கள் மேற்கொண்டு ஆராயவும் தமிழ்ப் பல்கலைக் கழத்தில் வாய்ப்பு வேண்டும்.

(3) இலங்கைத் தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் நிகழ்த்தி நிறைவு செய்த ஆராய்ச்சி உரைகளைப் (Theses) பதிப்பிக்கும் வாய்ப்பு தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இருந்தால் நல்லது. இலங்கையில் தமிழ் நூல்கள் பதிப்பித்து விற்பனை செய்தல் மிகக் கடினமாக உள்ளது.

(4) மலைநாட்டுத் தமிழர்களான தோட்டத் தொழிலாளர் பற்றியும் ஆய்வு நிகழ்த்த வேண்டும். ஒருசிலர் இத்தகைய ஆய்வினை மேற்கொண்டு நடத்தி வருகின்றனர். பொதுவாக இத்திட்டங்களுக்குத் தொழிலாளர் சங்கங்களும், யுனெஃச்கோ போன்ற நிறுவனங்களும் பொருள் உதவி செய்ய வாய்ப்பு உள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகமும் அத்தகைய உதவியினைப் பெற்று ஆய்வு செய்யலாம். தோட்டத் தொழிலாளர்கள் பற்றி ஆராய்வதில் ஆர்வம் கொண்டுள்ளவர் பொருளாதாரத் துறை ஆசிரியர் திரு சின்னத்தம்பி அவர்கள். (தோட்டத் தொழிலாளர்களுள் மிகப் பெரும்பாலோர் அண்மையில் தமிழகத்திலிருந்து சென்று இலங்கையில் அப்பணியினை மேற்கொண்டுள்ளவரும்

ஆவார். அவர்கள், வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியாது இன்றும் வறுமையில் வாட்டமுற்று வருகின்றனர். அத்தகைய வாழ்க்கையிலிருந்து தோன்றியவர் **திரு சின்னத்தம்பி** அவர்கள். இலங்கைப் பல்கலைக் கழங்களில் பல்வேறு துறைகளில் தமிழர்கள் பலர் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் தோட்டத் தொழிலாளர் களான இந்தியத் தமிழரிடமிருந்து தோன்றிப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியம் நிலைக்குத் திரு சின்னத்தம்பி போன்று உயர்ந்தவர்கள் நால்வரே ஆவாராம். அவர்களைத் தனித்துக் கண்டு உரையாடி மலைநாட்டுத் தமிழரான இந்தத் தோட்டத் தொழிலாளர் பற்றிப் பல கருத்துக்களை நான் தெரிந்து கொண்டேன்.)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஆசிரியத் தமிழர்கள் கீழ்க்கண்டவாறு பல்வேறு பொருள்கள் பற்றி-ஆய்வு நிகழ்த்தி வருகின்றனர். இவை பெரும் பாலும் முதுகலை ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் முனைவர் (பிஎச்.டி.) ஆராய்ச்சிப் பட்டத்திற்குமென மேற்கொள்ளப் பட்டன:

(அ) திருக்குறள் சட்டக் கருத்துக்களும், ராவ்சன் சட்டக் கருத்துக்களும்—திரு ஆனந்தநாதன்—மெய்யியல் துறை முதுகலைப் பட்டத்திற்கு.

(ஆ) தமிழகத்துச் சோழ, பாண்டியர் காலச் சூழல்கள்—முனைவர் சி. சண்முகநாதன்—வரலாற்றுத் துறை.

(இ) மலைநாட்டு இந்தியத் தொழிலாளர் சமூகப் பொருளா தார வாழ்க்கை—திரு சின்னத்தம்பி—பொருளாதாரத் துறை—முதுகலைப் பட்டத்திற்கு.

(ஈ) திராவிட மொழிகளும் சுமேரிய மொழிகளும்-முனைவர் சதாசிவம்—தமிழ்த் துறை.

(உ) தென்னிந்தியக் கோவில் அமைப்பும் ஆட்சியும்—திரு எஸ். குணசிங்கம்—வரலாற்றுத் துறை.

(ஊ) இலங்கையில் தமிழ்த் தேசியம்—தோற்றமும் வளர்ச்சி யும் — திரு என். செல்வராஜு — அரசியல்—முதுகலைப் பட்டத்திற்கு.

அண்மையில் நிறைவேறிய ஒருசில ஆராய்ச்சித் திட்டங்கள் :

(அ) 13-ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் வரலாறு—முனைவர் எஸ். குணசேகரன்—வரலாற்றுத் துறை—முதுகலைப் பட்டத்திற்கு.

(ஆ) கோணேசுவரம்—முனைவர் எஸ். குணசிங்கம்.

(இ) ஆறுமுக நாவலர் சைவப் பணி—முதுகலை ஆய்வு—இந்தியப் பண்பாட்டுத் துறை விரிவுரையாளர்.

(ஈ) இந்தியத் தமிழர் குடி அகல்வு—கே. ஜே. ஜெய்சிங்—அரசியல்.

(உ) சிங்கள நாடக மேடை — முனைவர் மைக்கேல் பெர்னாண்டா —சிங்களத் துறை.

(ஊ) இந்திய சிலோன் உறவுகள், 1961-எஸ்.யூ.கோடிகரா.

(எ) பேராதனைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுத் துறை, **இலங்கை வரலாறு** எழுதுதலை ஒரு பெருந் திட்டமாகப் போட்டு ஆய்வு நிகழ்த்தி வெளியிட்டு வருகின்றது. இலங்கை அரசின் உதவியோடு இத்திட்டம் நடைபெறுகிறது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறை சிறப்பு மிக்கதாக அமைந்து உள்ளது. அதில் 23 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். அவர்களுள் பெரும்பாலோர் இங்கிலாந்தில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றவர்கள். இலங்கை வரலாறு எழுதும் திட்டம் அரசின் உதவியோடு நடைபெறுகிற காரணத்தால் இலங்கையில் தமிழர் பண்பாடு பற்றிய வரலாறு எவ்வாறு எழுதப்படும் என்பது கேள்விக் குரியதாக அமைந்துள்ளது.

கொழும்பில் 'தினகரன்' ஆசிரியர் 1—6—82

பேராதனையிலிருந்து புகைவண்டிவழிக் கொழும்பு வந்தடைந்து 7.30 மணிக்கு வெள்ளவத்தையில் இராமகிருட்டிண மடத்து விடுதியில் தங்கினேன்.

கொழும்பிலே வெளிவரும் தமிழ் நாளேடான **தினகரனின்** ஆசிரியர் **திரு சிவகுருநாதன்** அவர்கள் அருகில் குடியிருக்கின்றார்கள். இரவு 8.30 மணியளவில் அவர்களைக் கண்டு, பொதுவான பொருள் பற்றி உரையாடினேன்.

தமிழ் நீர்வேட்டு ஆசிரியர் என்ற முறையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்ய அவர் உடன்பட்டார். 29—5—82 நாளுக்குரிய தினகரனில் என் வருகை பற்றிய குறிப்புக்களை அவர் வெளியிட்டிருந்தார். தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி நான் கொண்டு சென்றிருந்த குறிப்புக்களைப் பற்றிய விளக்கங்களையும் அவர் கேட்டறிந்தார். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி விளக்குமாறு கேட்டுக் கொண்டு 3—6—82 அன்று அவ்வாறு கூட்டத்திற்கும் அவர் ஏற்பாடு செய்தார். இலங்கையில் தமிழர்கள் இன்று சிங்களவராலும் அரசாலும் பலவகையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் துன்பக்குரலோடு அவர் வெளியிட்டார். இலங்கை வாழ் தமிழர்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இன்று இலங்கையின் வட பகுதியில் வாழும் தமிழர்கள் எப்போது தமிழகத்திலிருந்து இலங்கையில் குடியேறினார்கள் என்ற நினைவு இல்லாது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்,அத்தமிழர் குடும்பங்களில் சாக்காட்டுச் சடங்கு போன்ற வற்றில் வழங்கும் பாடல்கள் பலவும் ‘தென் பாண்டி மழவராயர்’ எனத்தொடங்கிப் பாடப்படுவனவாக அமைந்திருக்கின்றன. இத்தகைய குறிப்புக்கள் வட இலங்கைத் தமிழர்கள் யார், எப்போது, எங்கிருந்து சென்று குடியேறினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

கோயிற்காணி என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் நிலங்கள் நிறைய உண்டு. அவை தமிழகத்துச் சிதம்பரம் கோவிலுக்கு உரியனவாகும். சிதம்பரம் கோவிலில் பூசை வழிபாடு ஆகிய வற்றுக்காக யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் கொடுத்த கொடை யாக அவை இருக்கலாம். அவை இப்போது அரசின் ஆதரவோடு பொதுவுடைமைப் பொருளாக, ஏழை மக்கள் உடைமையாக இருந்து வருகின்றனவாம்.

பண்டாரநாயகாவின் அமைச்சரவையிலிருந்த பொது வுடைமை அமைச்சர் ஒருவர் (குடி அமைத்தல் அமைச்சு) இதற்கு உடந்தையாக இருந்து அம்மாற்றங்களுக்கு இசைவு தந்தாராம். சிதம்பரம் கோவிலுக்கா இனி இவை சேரப்போகின்றன என்று கேட்கும் சூழ்நிலை இன்று உருவாகிவிட்டது.

இன்றைக்கும் இலங்கையின் வட தமிழகம் இந்தியத் தமிழகத் திலிருந்து பிரிக்க முடியாதபடி உறவு கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் நடைபெறும் திரைப்படத்தைப் பார்ப்பதற்காக இலங்கையிலிருந்து கள்ளத் தோணியில் இரண்டு மணி நேரத்தில் வந்துவிட்டுத் திரும்பிவிடுகின்ற வழக்கம்கூட இருக்கிறது எனத் திரு சிவ குருநாதன் குறிப்பிட்டார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் 2—6—82

காலை 10 மணி. கொழும்புப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றேன். அங்குக் கலைப்புலத் தலைவர் முனைவர் பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை அவர்கள் அறையில் அறிவியல், வரலாறு, தமிழ், கல்வி, சிங்களம், மொழியியல், சட்டம், புவியியல், பௌத்த சமயவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் பங்கு கொண்ட கூட்டத்தில் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்கு அமைக்கப்பட்டது. மொழியியல், வரலாற்றுத் துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள் பற்றியும் அமைப்புப் பற்றியும் ஆர்வத்தோடு கேட்டுத் தெரிந்து கொண்டு, அதனோடு ஆராய்ச்சி முறையில் உறவு வைத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்தனர். தமிழ் ஆராய்ச்சிக்கு உரியனவான பல கருத்துக்களை அவர்கள் சுட்டிக் காட்டிப் பொதுவாக ஆராய்வதற்கு நிறைய வாய்ப்பு உள்ளதென விளக்கினார்கள். அவர்களில் வரலாற்றுத் துறையைச் சார்ந்த முனைவர் **அபயசிங்கா** எடுத்துக்காட்டிய சில கருத்துக்கள் இங்குக் குறிக்கத்தக்கனவாம். அவை, தமிழர்கள் இலங்கையை ஆண்ட வரலாற்றை எடுத்துக் காட்டுகின்றன:-

(1) சில நூற்றாண்டுகளுக்கு முன் இலங்கை யானைகள் தமிழகத்திற்கு அனுப்பப்பட்ட செய்தி வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது.

(2) கி. பி. 1540-இன் போர்த்துக்கீசியப் பதிவேடுகளில் இலங்கைக் கோட்டையரசர் அனுப்பிய கடிதங்களில் ''தமிழில் இந்தக் கட்டு நான் எழுதுவித்து . . . . என உண்மை யாகக் கூறுகிறேன்'' என்பது போன்ற எழுத்துக்கள் காணப்படு கின்றன.

(3) 1850-இல் கண்டி அரசர்கள் கிரந்த எழுத்தால் பதி வேடுகளில் கையெழுத்து இட்டுள்ளனர்.

(4) 18-ஆம் நூற்றாண்டில் கண்டியில் மலபார்த் தெரு என்ற பெயரில் தமிழர் தெரு இருந்திருக்கிறது.

(5) *1739*-இல் கண்டியில் நாயக்கர் அரசாண்டு கொண்டிருந்தனர்.

(6) *1689*-இல் நாயக்க அரச குடும்பப் பெண்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு மணமுடிக்கப்பட்டனர்.

(7) *1850*-இல் கண்டியை ஆண்ட கடைசி அரசன், நாயக்க அரசனே.

(8) குடும்பப் பெயர்கள் தமிழ் மரபினை ஒட்டியே அமைந்திருக்கலாம்.

சில திட்டங்கள்:

(1) சில நூற்றாண்டுகளுக்கு முன் டச்சு ஆட்சியாளர்கள் கொழும்பினைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தனர். அவர்களுடைய ஏடுகள் ஏறத்தாழ 10 ஆயிரம் பல்வேறு பழம் பொருட் காப்பகங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வேடுகளில் இலங்கை, தமிழகம் ஆகியவற்றின் மக்கள் நிலை, அரசு நிலை ஆகியவற்றின் குறிப்புக்கள் ஏராளமாக உள்ளன. ஹாலந்து நாட்டின் உதவியோடு இவ்வேடுகள் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளலாம்.

(2) சட்டப் பேராசிரியர் நடராசா அவர்கள் பொதுவாகத் தமிழ்ச் சட்டங்கள் பற்றி ஆராய்தலில் ஆர்வம் காட்டினார்.

(3) சிங்கள மொழித் துறையில் பணியாற்றும் முனைவர் ஜெ.பி. திஸ்ஸநாயக, தமிழ் சிங்கள உறவு பற்றி ஆராயலாம் எனக் கருதுகிறார்கள். இவர், கலிஃபோர்னியாவில் மொழியியல் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்.

இக்கூட்டத்தில் கொழும்புப் பல்கலைக் கழகமும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் இணைந்து பொது ஆராய்ச்சித் திட்டங்கள் வகுத்து நடத்துவதற்கு வாய்ப்பாக ஓர் இணைப்பு நிறுவனம் (A panel of local scholars) உருவாக்கலாமெனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இவ்விணைப்பு நிறுவனம் சில திட்டங்கள் தயாரித்துத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. கொழும்புப் பல்கலைக் கழகத்து ஆட்சியின் வழி இவ்வாராய்ச்சி முயற்சிகளை மேற்கொள்ளலாம் எனவும் கருதப் பட்டது.

கொழும்புப் பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் 2-6-82

12-30 மணியளவில் கொழும்புப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பதிவாளர் ஆகியோரைக் கண்டு உரையாடல்.

1) துணைவேந்தர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் சித்த மருத்துவத் துறையில் பெரிதும் ஆர்வம் காட்டினார்கள். ஏனெனில், தம் பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் இயங்கிவரும் நாட்டு மருத்துவக் கல்லூரியின் (Institute of Indigenous Medicine) சித்த மருத்துவத் துறை ஆதரவின்றி இருப்பதை உணர்ந்து, அதற்காகத் தமிழகத்தின் ஆதரவினைப் பெற்று அதனை வளர்க்க அவர்கள் எண்ணம் கொண்டுள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளையும் திட்டங்களையும் அறிந்தபின் துணைவேந்தர் அவர்கள் மொழியியல், இசை முதலான நுண்கலைகள், கல்வி ஆகிய துறைகளில் இரண்டு பல்கலைக் கழகங்களும் ஒத்துழைப்பதற்கு வாய்ப்புண்டு எனக் குறிப்பிட்டார்கள்; கொழும்புப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர்கள் பல்வேறு காரணம் பற்றி இந்தியா வருகின்றபோது தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும் காணலாம் எனக் குறிப்பிட்டார்கள். 'முன்பெல்லாம் இலங்கைப் பல்கலைக் கழகங்கள் மேலை நாட்டினையே நோக்கி இருந்தன. இப்போது ஆஸ்திரேலியாவை நோக்கி நிற்கின்றன. இனி இந்தியா பற்றி யோசிக்கலாம்' என அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய நாட்டு மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்களில் இருவர் என்னை வந்து கண்டு, சித்த மருத்துவக் கல்வி வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் பற்றி உரையாடிச் சென்றார்கள்.

கொழும்புப் பல்கலைக் கழகத்துப் பதிவாளரும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவத் துறை பற்றி அக்கறை காட்டினார்கள். பொதுவாக இந்தியாவில் பல்கலைக் கழகக் கல்வி முறைகள் பற்றி அறிந்துகொள்ள அவர்கள் விரும்பினார்கள். இந்தியப் பல்கலைக் கழகங்களில் மாணவர் சேர்க்கை, பல்கலைக் கழகங்களுக்குப் பண வருவாய், அவற்றுக்கு அரசின் உதவி, பல்கலைக் கழகப் பொருள்நல்கை ஆணைக்குழுவின் பணி ஆகியவை பற்றி அவர்கள் விரிவாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

தமிழ்த் தோட்டத் தொழிலாளர் தலைவர்களிடை 2—6—82

பிற்பகல் 3 மணி. உணவு விடுதி ஒன்றில் தோட்டத் தொழிலாளர் நண்பர்களும், CEYLON WORKERS CONGRESS என்னும் மாபெருந் தொழிலாளர் அமைப்பின் பொறுப்பாளர்கள் சிலரும், அதன் துணைச்செயலாளர் **திரு ஏ எம். டி, இராசன்** அவர்களும், இணைப்புச் செயலாளர் **பி. கே. எம். இராசாமணி** அவர்களும், பல்கலைக் கழக நண்பர்கள் சிலரும், தொழிலாளர், ஆராய்ச்சி நிறுவனத்தின் பொறுப்பாளரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர்கள் அனைவரும் தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழர் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ள இருப்பது பற்றி ஆர்வம் காட்டினார்கள். தோட்டத் தொழிலாளர் பற்றி ஆராயவும், நிறுவனத்தின் சிறப்பு உதவி நல்கவும் அவர்கள் இசைந்தனர். மேற்கு ஜெர்மனியின் தொழிலாளர் சங்கத்தின் உதவி பெற்று ஆய்வு நடப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்; வேறு சில வழிகளிலும் உதவி பெறலாம் என நம்பிக்கை ஊட்டினர்.

தோட்டத் தொழிலாளர்கள் நிலை பற்றிப் பொதுவாக ஆராய்வது மட்டுமல்லாது அவர்கள் வட இலங்கையிலும் தமிழகத்திலும் இனக் கலவரத்தின்போது சென்று குடி அமர்ந்தது பற்றியும், அதனால் ஏற்பட்ட சிக்கல்கள் பற்றியும் ஆராய்வதில் அவர்கள் விருப்பம் காட்டினார்கள். பொதுவாக, இலங்கையிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் பிற இடங்களில் சென்று குடி அமர்தலில் இடர்ப்பாடுகள் இல்லாமல் இருத்தல் வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். இலங்கையில் வாழுகின்ற போதும் தம் தனித் தன்மையோடு பிறருடன் இணைந்து வாழ்தலையே அவர்கள் விரும்புகின்றனர். தமிழகத்திற்குத் திரும்பி வந்த தோட்டத் தொழிலாளர்கள் துன்பமின்றி குடியமர இயலவில்லையே என அவர்கள் ஏங்கினர். இலங்கையில் இனக் கலவரம் காரணமாக அங்குக் கால் கொள்ள முடியாமை குறித்தும் அவர்கள் கவலைப் படுகின்றனர். அவர்கள் அக்கரையிலும் இக்கரையிலும் குறை காணுகின்றனர்.

தோட்டங்களின் தொடக்கப் பள்ளிகளில் எளிய முறைகளில் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகிறது. கல்வியின் தரம் பிற்பட்டதாக உள்ளது வசதியுமில்லாது தரமில்லாக் கல்வி கற்பதால் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் உயர் கல்வி கற்கச் செல்வது பாதிக்கப்படுகிறது.

இலங்கையின் பொது வாழ்க்கை நீரோட்டத்தோடு தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் இணைந்து செல்வது கடினமாக உள்ளது என்று கூறி இத்தொழிலாளர் தலைவர்கள் கவலை கொள்கின்றனர். தமிழ்ப் பல்கலைக் கழகமும் தமிழகமும் இவ் வகையில் உதவலாகாதா என்ற ஏக்கம் அவர்கள்பால் அமைந்துள்ளது.

இலங்கைக் கல்வியமைச்சகத்தில் 3—6—82

காலை 9 மணி. இலங்கைக் கல்வியமைச்சகத்துடன் இயங்கும் பல்கலைக்கழகப் பொருள்நல்கை ஆணைக்குழுவின் சார்பாகப் பிரித்தானியக் குழு (British Council) இலங்கைக்குக் கொடையாக வழங்கிய ஆங்கிலக் கல்விக்கான நூல்களை இலங்கை அரசின் தலைவர் மேதகு செயவர்த்தன அவர்கள் பெற்றுக் கொள்ளும் விழா ஒன்று நடைபெற்றது. இலங்கையின் பல்வேறு பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள், பல்கலைக் கழகப் பொருள்நல்கை ஆணைக் குழுவின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இலங்கையில் ஆங்கிலக் கல்வியினை வலுப் படுத்தப் பிரித்தானியக் குழு ஆங்கிலப் பாட நூல்களை இலங்கை மக்களுக்குக் கொடையாக வழங்கியது. இலங்கை அரசின் தலைவர் அவர்கள் நூல்களைப் பெற்றுக் கொண்டு, இலங்கை அரசின் கல்விக் கொள்கைகளை விளக்கினார்கள். அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல்வேறு துணைவேந்தர்களையும் பேராசிரியர் களையும் கண்டு உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நிகழ்ச்சி முடிந்த பின்னர் பல்கலைக் கழகப் பொருள்நல்கை ஆணைக்குழுவின் தலைவரையும், உறுப்பினர்கள் திரு **மயில் வாகனன்** அவர்களையும், முனைவர் **ரெஃபை** அவர்களையும் தனியே கண்டு உரையாடினேன். பல்கலைக் கழகத்தின் திட்டங் களையும் உறுப்பினர்களுக்கு விளக்கினேன். தலைவர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு உறவு வைத்துக் கொள்ளவும் முறைப்படி அணுகுகின்ற போது உதவி நல்கவும் ஆவன செய்வ தாகக் குறிப்பிட்டார்கள்.

திரு மயில்வாகனன் அவர்கள் தமிழ்க் கல்விக்கும் முனைவர் ரெஃபை அவர்கள் இசுலாமியக் கல்விக்கும் இவ்வாணைக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் என் வேண்டு கோளைப் பரிவுடன் கேட்டுத் தக்கவாறு கல்வி உறவு அமைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாம் என்றனர். திரு மயில்வாகனன்

அவர்கள் சைவ சமயம் பற்றியும் பொதுவாகத் தமிழ்க் கல்வி பற்றியும் அவற்றில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் ஆர்வத்தோடு விளக்கினார்கள். திரு மயில்வாகனன் அவர்கள் திருமந்திரம், கந்தபுராணம் ஆகியவை பற்றி விளக்கங்கள் கேட்டுவிட்டு அவை பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளலாம் என்றார்கள்; அவை பற்றிய கல்வியும் குறைந்துவிட்டது என்ற கருத்தைக் கூறித் தமது வருத்தத்தையும் தெரிவித்தார்கள். இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வி முழுவதற்கும் இவ்வாணைக் குழுவே பொறுப்பேற்றிருக்கிறது பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் சேர்க்கை, உயர்மட்டத்தில் ஆசிரியர்கள் அமர்த்தல், பாடத்திட்டங்கள் வகுத்தல், கல்வி நிறுவனங்களுக்குப் பொருள் வழங்கல், அயல்நாட்டில் கல்விக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புதல் முதலான பல்வேறு பணிகளை இவ்வாணைக்குழு நேரிடையாகக் கவனிக்கிறது. தமிழகத்தில் அரசுக்கும், அரசு, தனியார் கல்லூரிகளுக்கும் இடையிலே இயங்கிவரும் உயர் கல்வி இயக்ககம் (Directorate of Collegiate Education) போன்று சிறிது கூடிய அதிகாரத்துடன் இலங்கைப் பல்கலைக் கழகப் பொருள் நல்கை ஆணைக்குழு இயங்கி வருகின்றது. ஆதலால் இவ்வாணைக் குழுவின் ஆதரவு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் பொதுவாகத் தேவைப்படும்.

இலங்கையின் உயர் கல்வி அமைச்சு, அதன் பணி, அதன் வெளியீடுகள் ஆகியவை பற்றித் தெரிந்து கொள்ளவும் அப்போது அங்கிருந்த வாய்ப்பினை நான் பயன்படுத்திக்கொண்டேன். கல்வி அமைச்சு, பல்கலைக் கழகக் கல்வி பற்றிய புள்ளிவிவரங்கள் கொண்ட ஒருசில வெளியீடுகளை மட்டும் வெளியிட்டு இருந்தது. யுனெஸ்கோ அமைப்பின் சார்பாக முனைவர் ராய் என்பார் இலங்கைப் பல்கலைக் கழகப் பொருள்நல்கை ஆணைக்குழுவின் புள்ளிவிவர அலுவலராகப் பணியாற்றிக் கொண்டு வருகின்றார்கள். இலங்கைக் கல்வியினை மேம்படுத்தப் பல பணிகள் தேவைப்படுகின்றன என்றும், சரியான புள்ளி விவரங்கள் இல்லை என்றும், இலங்கையில் பட்ட மேற்படிப்புக் கல்வி வளர்ச்சி அடையவில்லை என்றும் அவர் கருத்துக்கள் தெரிவித்துள்ளார். இலங்கைப் பல்கலைக் கழகம் பற்றிய புள்ளிவிவர நூல் ஒன்றினை அவர்கள் எனக்குத் தந்துள்ளார்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கக் கூட்டம் 3—6—82

மாலை 6.30 மணி. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பான என் வருகையினை அறிந்த 'தினகரன்' நாளேட்டின் ஆசிரியர்

திரு சிவகுருநாதன் அவர்கள் 'தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி இலங்கைத் தமிழ் மக்களுக்கு விளக்கியுரைக்க வேண்டும்; அது கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வழியாக இருக்க வேண்டும்' எனக் கூறி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். இக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நீண்ட காலமாக இலங்கையில் தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் நிறுவனமாக இயங்கி வந்துள்ளது. இந்தியத் தமிழகத்திற்கும் இலங்கைத் தமிழகத் திற்கும் இடையே உறவு அமைக்கும் பாலமாகவும் இத்தமிழ்ச் சங்கம் இவ்வளவு நாளும் இயங்கி வந்துள்ளது. தமிழகத்தில் இருந்துவரும் அறிஞர்களையும் புலவர்களையும் அறிமுகம் செய்யும் ஒரு நிலையமாகவும் அது விளங்குகின்றது. ஆர்வம் உள்ள இலங்கைத் தமிழ் அறிஞர்களும் பெருமக்களும் இச்சங்கத் தில் பங்கு பெற்று, அதனைப் போற்றி வருகின்றனர். கல்வி நிலையங்கள், பொதுக்கூட்டங்கள், இலக்கிய நிகழ்ச்சிகள், வெளியீடுகள் ஆகியவை நடத்தல் இச்சங்கத்தின் பணியாக இருக்கின்றது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பற்றி விளக்கி உரைக்க ஒரு வாய்ப்பாக நானும் அதனைப் பயன்படுத்திக் கொண்டேன்.

தலைவர் அறிமுகத்திற்குப் பின்னர் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றியும் இலங்கைத் தமிழ் மக்களும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைந்து எவ்வாறு செயல்பட லாம் என்பதைப் பற்றியும் அரைமணி நேரம் விளக்கி உரை நிகழ்த்தினேன். ஏறத்தாழ 150 பேர் கூடி இருப்பர். என் உரைக்குப் பின்னர் மேலும் விளக்கங்கள் பெறப் பலர் வினாக்கள் கேட்டனர். சிலர் கருத்துரைகளை வழங்கினர். இலங்கைத் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள் ஆகியோருடைய உறவுகள் பற்றி யும் இருபாலும் உள்ள மொழி இலக்கியப் பணி பற்றியும் வினாக் கள் பல எழுந்தன. கொழும்பின் இளைஞர்கள் பலர் தமிழ் பற்றி யும் தமிழர்கள் பற்றியும் பல்வேறு வகையான உணர்வுகளையும் கருத்துக்களையும் கொண்டிருக்கின்றனர். தோட்டத் தொழி லாளர் மரபிலே தோன்றிய இளைஞர்கள் ஆத்திரம் உற்றவர் களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சிந்தனையில் இன்றைய தமிழகம் முழுமையாக இடம் பெற்றிருக்கிறது. தமிழகத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், அது அரசியல் ஆனாலும், சமூகம் ஆனாலும், இலக்கியம் ஆனாலும், மொழி ஆனாலும், அவர்கள் மதிப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பணியில், உயர் கல்விப் பயிற்சி இல்லாத காரணத்தால் அவர்கள் நேரிடையாகப் பங்குகொள்ள இயலாமல் போனாலும், அதன்

பணியினை அவர்கள் கூர்ந்து கவனித்து வருகின்றனர் என்பது தெரிகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு நூல்கள் வாங்கி அனுப்புதல், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டங்களை இலங்கையில் செயல் படுத்துதல் ஆகியவற்றில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் உதவத் தயாராக இருப்பதாக அதன் பொறுப்பாளர்கள் உறுதி கூறினார் கள்; கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட நூல்கள் சிலவற்றை அன்பளிப்பாகவும் என்னிடம் தந்தனர்.

நான் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கலந்துரையாடிவிட்டுக் கிழை நாடுகளுக்குச் சென்றபின்னர் அச்சங்கத்தின் தலைவர் திரு பி. சங்கரப்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தரவர்களுக்கு 15–6–'82-இல் மடல் எழுதியிருக்கின்றார்கள். அதில் இலங்கைத் தமிழர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை வரவேற்பதில் காட்டும் ஆர்வமும், அவர்கள் தமிழகம் இலங்கை பற்றிக் கொண்டுள்ள பெருமிதமும், சிலதுறைகளில் தமிழுக்கு அவர்கள் தந்துள்ள ஏற்றமும், ஆனாலும் தமிழர்தம் இலக்கியப் பணிக்கும் கல்விக்கும் ஏற்பட்டுள்ள குறைகளும் தெள்ளெனத் தென்படுகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகம் இலங்கையொடு கொள்ளத்தக்க உறவினை அம்மடல் சுட்டிக் காட்டுகிறது என நான் எடுத்துக் கொண்டேன்.

COLOMBO TAMIL SANGAM

No. 7, 57th Lane,
Colombo-6.
Phone: 83759

Cultural Centre

Dr. V. I. Subramoniam, 15th June, 1982
VICE–CHANCELLOR,
Tamil University,
Thanjavur,
South India.

Dear Sir,

We wish to congratulate the Organisers and the Government of Madras on the establishment of the Tamil University

at Thanjavur. Dr. T. Murugarathanam of your University was recently in Ceylon, addressed the members of the Sangam and explained the objects and functions of the University.

The Colombo Tamil Sangam offers your University its whole hearted co-operation in its efforts to promote the study of Tamil and Tamil Culture. We gave Dr T. Murugarathanam copies of the books published by the Colombo Tamil Sangam.

The cost of printing in Ceylon are very high and we cannot sell more than 1000 copies as the Tamil reading public is small. Only small novels and stories about Cinema stars have a larger sale.

Please excuse me if I point out a mistake in your News Bulletin. You have referred to us as imigrants from South India. This may be true of 50% of the Tamils who came to Ceylon during the British period and settled down in the Plantations and Colombo. We Tamils are the original inhabitants of Ceylon. Ceylon was a part of Kumarikandam, the land of our early Sangams. The others, if they came at all, came afterwards. Elam was the land of Tamils and Saivism. We had Tamil Kingdoms in Northern and Eastern Provinces till we were conquered by the Portuguese, Dutch and British. I have dealt with those briefly in my book. Your University will have to do further research on the history of ancient Tamils.

The Tamils in Ceylon are concentrated in Northern and Eastern Provinces, the Hill country plantations and Colombo. I told Dr. Murugarathanam that most of us whom he met, though residing in Colombo, are from Jaffna. I requested him to contact the Tamil Organisations in Northern & Eastern Provinces and the Hill Country. I have no doubt that he would have done so. Your University should maintain close contacts with organisations especially in Jaffna.

We in Ceylon started teaching all subjects in Tamil at the Universities from 1965. Even in Tamil Nadu, you have still not reached the stage. You have still not faced the problem of technical words in Tamil for modern subjects which we faced

and overcame in the sixties and seventies. We appointed various Committees. These Committees prepared Glossaries of Technical Tamil words for various subjects which were printed by the Ceylon Government. These Glossaries are being revised from time to time. It would be better to have these Glossaries in your Library. You can buy them from the Government of Ceylon or if you want, the Tamil Sangam will buy them and send them to you.

At the meeting which we had with Dr. Murugarathanam, there were some complaints that India does not buy Tamil books published in Ceylon or give encouragement to Tamil Authors in Ceylon. Both Dr. Murugarathanam and I explained the position to the members present. Can we become closer through the aid of your University? I would suggest the following for your consideration.

(a) We can exchange books on a mutual basis, free. For example the Colombo Tamil Sangam will buy all Tamil books published in Ceylon and send them to you free. Similarly you can buy Tamil books published in India wanted by us and send them to us free. At the end of the year, the Account can be balanced. Similar arrangements can be made by other organisations also.

(b) The authors in Ceylon wish to reach the larger Tamil reading public in India. It is not the question of money or profits. If we can make the following arrangement, it will be satisfactory. The authors in Ceylon will assign the Copy right of the books to the Indian printers. The Indian printers will publish and take all the proceeds. They will give 100 complimentary copies to the Ceylon authors.

The Tamil students in Ceylon require education in Medicine and Engineering. In Ceylon, we get a quota of 25%. If it is on merit, we will get about 80% of the places. Even in Malaysia admissions are by quotas. You will be doing a great service if you can establish Medical and Engineering Faculties at your University. We were told by Dr. Murugarathanam that this is

outside the scope of your Act. Please speak to your Chief Minister and get these two Faculties included. These two Faculties can be restricted to foreign Tamil students. High fees can be levied. If you can do this, the entire University can be financed out of these fees alone.

Please excuse me for the length of this letter.

Congratulations and best wishes.

Yours faithfully,

Sd/-

(P. SANGARAPILLAI)

President

இலங்கையில் சில நிறுவனங்கள் 4—6—82

முற்பகல் கொழும்புப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் பேட்ரம் பஸ்தியாம் பிள்ளை அவர்களை மீண்டும் கண்டு பல்வேறு கருத்துக்களைத் தெரிந்து கொண்டேன். முனைவர் பேட்ரம் நல்ல ஆர்வமுள்ள வரலாற்று ஆராய்ச்சி அறிஞராகத் தென்பட்டார். வரலாற்று ஆராய்ச்சியில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு பல புதிய திட்டங்கள் வகுத்து ஆய்வு நிகழ்த்தலாம் என்பது அவருடைய கருத்து.

பிற்பகல் இலங்கையின் **பழைய நூல்கள் பாதுகாப்பகம்** (Archives), **அரும்பொருட் காட்சியகம்** (Museum), **இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்** ஆகியவற்றைக் காணப் பயன் படுத்திக் கொண்டேன்.

இலங்கை வானொலியும் செய்தித் தாள்களும் 4—6—82

மாலை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக என்னிடமிருந்து பேட்டியும் செய்தியும் வேண்டும் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தமிழ்ப் பிரிவுத் தலைவி திருமதி **பொன்மணி குலசிங்கம்** அவர்கள் எனக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். அவ்வாறே திருமதி வசந்தா நடராசன் அவர்கள் கலைக்கோலம் நிகழ்ச்சிக்கு என் பேட்டி ஒன்றினையும் செய்தி

ஒன்றினையும் பதிவு செய்து கொண்டார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்கள் பற்றியும் அமைப்புப் பற்றியும் விளக்கம் தருவதாக அப்பேட்டி அமைந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத் திற்கு இலங்கைத் தமிழர்களும் தமிழ் அறிஞர்களும் எவ்வாறு உதவலாம் என்பது பற்றிய செய்தியினை என் வேண்டுகோளாக வானொலிச் செய்தியில் குறிப்பிட்டேன். இலங்கை வானொலி யில் பணியாற்றும் சிலர் மேலும் ஆராய்ச்சி செய்ய விருப்பம் கொண்டுள்ளார்கள். (அவ்வாறு ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றவர் முனைவர் நடராசா.) தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றித் தமிழர்கள் கொண்டிருந்த ஆர்வம், அவர்கள் என்னை வரவேற்று மகிழ்ந்ததிலிருந்து தெளிவாகப் புலப்பட்டது.

தினகரன் நாளேடு என் வருகையினை அறிந்து முதல் முதலாக என்னைப் பற்றிய விளக்கங்களைச் செய்தித் தாள்களில் வெளி யிட்டது. வீரகேசரி பத்திரிகை ஒரு பேட்டியையும் பெற்றுக் கொண்டது.

பொதுவாகவே தமிழகத்திலிருந்து செல்லும் தமிழ் அறிஞர் களையும், தமிழர் தலைவர்களையும், கலைஞர்களையும் இலங்கை வானொலியும், இலங்கைச் செய்தித் தாள்களும் போற்றிப் பாராட்டிச் செய்திகள் வெளியிட்டுச் சிறப்புச் செய்கின்றன. அவர்களுடைய தாராள மனத்தினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் திற்கு நான் பயன்படுத்திக் கொண்டேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு எளிய முறையில் கிடைத்த விளம்பரம் அது எனக் கொள்ளலாம்.

கொழும்பில் சில நண்பர்கள் 4—6—82

இரவு பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சதாசிவம் அவர்கள் ஒரு விருந்து வழங்கினார்கள். இலங்கையின் பல்கலைக் கழகங்கள் பற்றியும், தமிழ் அறிஞர்கள் பற்றியும், தமிழ் உலகின் 'அரசியல்' பற்றியும் பொதுவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு அப்போது ஏற்பட்டது. இலங்கை வானொலியிலிருந்து ஓய்வு பெற்ற முனைவர் நடராசா அவர் களையும், முனைவர் சதாசிவம் இல்லத்தில் கண்டு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. முனைவர் நடராசா அவர்கள் ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் பயணம் செய்து, தமிழ் ஆராய்ச்சிக்கு உள்ள வாய்ப்பினை அறிந்திருக்கின்றார்கள். தமிழ் ஏட்டுச்

சுவடிகள் பல ஐரோப்பிய நூலகங்களில் பேணிப் பாதுகாக்கப் பட்டு இருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

முன்னர் கொழும்புப் பல்கலைக் கழகத்துத் தமிழ் உயர் விரிவுரையாளராயிருந்து இப்போது **வெளிப் பல்கலைக் கழகத்தின்** (Open University) இயக்குநராகப் பணிபுரிகின்ற முனைவர் **கந்தையா** அவர்களை இரவு கண்டு உரையாடினேன். முனைவர் கந்தையா, தமிழைப் பொறுத்தவரை அரசின் போக்குப் பற்றிச் சில விளக்கங்களைத் தந்தார்கள். அவர் குரல் தனிக் குரலாக ஒலித்தது. அவர், தம்முடைய தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பைச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முடித்து, இலண்டனில் தேவாரம் பற்றி ஆராய்ச்சி செய்து, முனைவர் பட்டம் பெற்றிருக் கிறார். அவர் வாயிலாகத் தமிழகத்துப் பல்கலைக் கழகப் பட்டங் களுக்கு இலங்கையிலுள்ள மதிப்பினை அறிய முடிந்தது. பொது வாக இலங்கையில் தமிழகத்துப் பட்டங்களைக் குறைத்து மதிப்பிடுகின்றனர் என்பது பலர் அறிந்த செய்தி.

5–6–82 காலை 8 மணி. சிங்கப்பூர் விமானத்தைப் பிடிக்கக் கடநாயகா விமான நிலையத்திற்குப் புறப்படல். முனைவர் கந்தையா, என் 25 மைல் நெடும்பயணத்தை எளிதாக்கித் தம்முடைய காரில் அழைத்துச் சென்று என்னை அனுப்பி வைத்தார்.

அன்று காலை 7-30 மணிஅளவில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு சிவ சிதம்பரம் அவர்கள், நான் தங்கியிருந்த இராமகிருட்டிண மடத்தில் என்னைக் காண வந்தார்கள். அரசியல்வாதியாகிய அவர், தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டு இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி தெரிவித்தார்; ஆர்வத்தோடு அதுபற்றிப் பல கருத்துக்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்; இலங்கைத் தமிழர்கள் அதை விரும்பி வரவேற்கிறார்கள் என்றும், அதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு உதவவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்; அதன் வளர்ச்சிக்குத் தாங்கள் எவ்வகையிலும் உதவ முன் வருவதாக வாக்களித்தார். அக்கட்சியின் தலைவர் அமிர்த லிங்கம் அவர்களைச் சிலமுறை முயன்றும் காண முடியாத குறை யினைத் திரு சிவ சிதம்பரம் அவர்கள் தீர்த்து வைத்தார்கள் எனக் குறிப்பிட வேண்டும்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களையும் திட்டங்களை யும் இலங்கை அரசின் தமிழ் அமைச்சர்களுக்கு விளக்க முடியாது

போனது, எனக்கு ஏமாற்றமாக இருந்தது. தமிழ் அமைச்சர் திரு தொண்டைமான் அவர்கள் என் பயணத்தின்போது தமிழகம் வந்து விட்டார்கள் என அறிந்தேன். மற்றொரு அமைச்சர் திரு.இராசதுரை அவர்கள் சுற்றுப் பயணத்தில் இருந்துவிட்டார்கள்.

இலங்கையில் நூலகங்கள்

இலங்கையில் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் நூலகம் உள்ளது. பல்கலைக் கழகக் கல்வியின் ஒரு முக்கியமான கூறாக இந்நூலகங்கள் கருதப்படுகின்றன. புதிதாகத் தொடங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், மட்டகளப்புப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் நூலகங்கள் இப்போதுதான் உருவம் பெற்று வருகின்றன. இலங்கைப் பல்கலைக் கழகத்து நூலகங்களுள் பேராதனைப் பல்கலைக் கழகத்து நூலகம் சிறப்பிடம் பெறுகிறது.

பேராதனைப் பல்கலைக் கழகம் ஒரு தேசியப் பல்கலைக் கழக மாக அமைக்கப்படுவதையொட்டி இங்குள்ள நூலகமும் தேசிய நூலகமாக கருதப்பட்டுச் சிறப்புற அமைக்கப்படுகிறது. இப் பல்கலைக் கழக நூலகத்தில் நூல் பகுப்பிற்காக டூயி கண்ட பதின்மை முறை மேற்கொள்ளப்படுகிறது. 3,80,000 நூல்கள் இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. எல்லா மொழிகளுக்குமுரிய நூல்களும் இதிலே உள்ளன. இந்நூலகத்தில் பாடநூல் படிக்கும் கூடமும் இதழ்கள் படிக்கும் கூடமும் வசதியாகவும் பெரிதாகவும் அமைந்துள்ளன. இதழ்கள் கூடத்தில் ஏராளமான வெளிநாட்டு இதழ்கள் இடம் பெற்றிருக்கின்றன. மாணவர்களும் ஏராளமான பேர் இந்நூலகத்தினைப் பயன்படுத்துகின்றனர். இந்நூலகத்திற்கு இரண்டு சிறப்புக்கள் உள்ளன:

(அ) இலங்கைக்கூடம் (Ceylon Room) என ஒன்று அமைக்கப்பட்டு, அதில் இலங்கையின் வரலாறு, பண்பாடு, சமூகம், மொழிகள், கலைகள் ஆகியவை பற்றி வெளியான அனைத்து நூல்களும் வைக்கப்பட்டுக் காக்கப்படுகின்றன. அவைகள் படிப்பதற்காக வெளியே வழங்கப்படுவதில்லை. எதிர்காலத்திற்கெனப் போற்றிக் காக்கப்படும் நூல்களைக் கொண்ட கூடமாக அது விளங்குகிறது. வெளியே எடுத்துச் சென்று படிப்பதற் கென இங்குள்ள நூல்கள் மற்ற பிரிவுகளில் வைக்கப் பட்டுள்ளன. ஆனால், எவரும் இலங்கைக் கூடத்திற்குச் சென்று நூல்களைப் பார்வையிட்டு அங்கேயே படிக்கலாம்.

(ஆ) இந்தியாவில் இருப்பது போன்று இலங்கையில் வெளியாகும் அனைத்து வெளியீடுகளையும் பதிவு செய்யும் சட்டம் இருக்கிறது. அச்சட்டத்தின்படி எல்லா வெளியீடுகளும் பதிவாளர் ஒருவரிடம் பதிவு செய்யப் படுகின்றன. பதிவு செய்யப்படும் நூல்கள் ஒருபடி பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குக் கட்டாயமாக அனுப்பி வைக்கப்படுகின்றது. அந்நூல்களும் அங்கேயே பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. (இப்போது அவை முறையாகப் பகுத்தும், தொகுத்தும் ஒழுங்கு படுத்தப் பட்டு வைக்கப்படவில்லை என்றும், பின்னர் அவை வைக்கப்படலாம் என்றும் கூறப்பட்டது.) அதனால் இலங்கையில் வெளியாகும் எந்த நூலும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இல்லை என்னும் நிலை இல்லாமல் இருக்கும் எனலாம். இந்தியாவில் இருக்கும் தேசிய நூலகங்கள் நிலையினையே இங்குள்ள பேராதனைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது. கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து ஏராளமான நூல்கள் பேராதனைக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த நூற்றாண்டு முதல் இந்த நூற்றாண்டு வரை இலங்கையில் வெளியான தமிழ் நூல்கள் பெரும்பாலானவற்றை இப்பேராதனைப் பல்கலைக் கழகத்தில் காணமுடிகிறது. ஆதலால், இலங்கையிலேயே ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயனாகும் நூலகமாக இது விளங்குகிறது எனலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அண்மையில்தான் அமைக்கப்பட்டுள்ளதால் பழைய நூல்கள் அங்கே இருப்பது அறிதாகும். ஆனாலும், சில ஆண்டுகளுக்கு முன்னர் அதன் தொடக்கக் காலத்தில் பழைய நூல்களும் சுவடிகளும் தொகுக்கும் முயற்சியில் அன்று அதன் தலைவராக விளங்கிய முனைவர் கைலாசபதி அவர்கள் முயற்சி மேற்கொண்டு பல நூல்களைத் தொகுத்து வைத்துள்ளார்கள்.

கொழும்புப் பல்கலைக்கழக நூலகம் சாதாரண நிலையில் அமைந்துள்ளது. இலங்கையில் தமிழியல், சிங்களவியல், அறிவியல், பௌத்த சமயவியல் என ஒவ்வொரு துறைக்கும் சிறப்புத் தந்து தனித் தனியே பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்ற காரணத்தால் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய நூல்களை ஒரே நூலகத்தில் காண்பது அரிதாக இருக்கும் போலும்.

இலங்கையில் **பழைய நூல் காப்பகம்** ஒன்றும் (Archives), **பழம் பொருட்காட்சியகம்** ஒன்றும் (Museum) அரசின் துறைகளாக இயங்கி வருகின்றன. பழைய நூல் காப்பகம் செய்தி இதழ்கள், பழைய பதிவேடுகள் முதலியவற்றைக் காப்பதில் கவனம் கொண்டு இயங்கி வருவதாகத் தெரிகிறது. இவை அண்மையில் தோன்றிய காரணத்தினால் மேலும் வளர்ச்சி பெற வேண்டிய நிலையில் உள்ளன. சென்னையில் அமைந்த ஆவணக் காப்பகம், பழம் பொருட்காட்சியகம் போன்று அவை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

இலங்கையைப் பற்றிய அனைத்து நூல்களையும் விளக்கி யுரைக்கும் அரிய நூலடங்கல்கள் இரண்டு வெளிவந்துள்ளன. ஒன்றினைத் தொகுத்தவர் இலங்கையின் பல்வேறு நூலகங்களில் பணிபுரிந்த **குணதிலக** என்பவர். இலங்கை ஆராய்ச்சிக்கு அவை இன்றியமையாது வேண்டப்படுவன:

(1) *A Bibliography of Ceylon*: A Systamatic Guide to the Literature on the Land, People, History and Culture, published in Western Languages from the sixteenth century to the present day by H. A. I. Goonetilleke, (1970).

Pub: Inter Documentation Co,
Poststrasse 114, 16300 Zug,
Switzerland.

(2) *Ceylon National Bibliography*, Ceylon National Services Board, Colombo-7.

இலங்கை பற்றிய நூல்களை வாங்குவதற்குத் தக்க விற்பனை யகங்கள் இரண்டு குறிப்பிடத்தக்கன:

(1) Messrs. Krishnasamy, No. 13, Stuart Place, Colobmo-2.

(2) Messrs. Lake House Book Shop, Sir Chittambalam Gardiner, Mawatte, Colobmo-2.

இலங்கையில் பயிற்சி மொழி

இலங்கையில் ஆட்சிமொழியாகவும் பல்கலைக் கழகங்கள் உட்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிற்சிமொழியாகவும் தமிழ் பெரிதும்

இடம் பெற்றுள்ளது எனவும், அதற்கு ஏற்ற முறையில் தமிழ் அங்கு வளர்க்கப்பட்டுள்ளது எனவும் பொதுவாகத் தமிழகத்தில் ஒரு கருத்து பரவி இருக்கிறது. இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் எனவும், ஆட்சிமொழி சிங்களம் ஒன்றே எனவும் கொள்ளப்பட்டிருக்கிறது. இலங்கையில் 'எங்கும் சிங்களம்' என்னும் தேசியக் கொள்கையால் தமிழ், தமிழரது பகுதிக்கு ஒதுக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களில் சிங்களம் செங்கோல் ஓச்ச வேண்டும் என முடிவெடுத்தபோது தமிழர் ஆங்கிலத்தைப் பற்றிக் கொண்டிருக்க முடியவில்லை. தமிழும் அரியணை ஏறியது.

பள்ளிக் கல்வி, தாய்மொழியிலேயே நடைபெறுகிறது. சிங்களவர் சிங்களத்திலும், தமிழர் தமிழிலும் பள்ளிக் கல்வியினைக் கற்கின்றார்கள். இலங்கைப் பள்ளிக் கல்வி முழுவதும் கட்டணம் இன்றியே அரசினர் செலவில் நடத்தப்படுகிறது. ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்பிக்கப்படும் பள்ளிகள் அரசால் ஒழிக்கப்பட்டு விட்டன. பள்ளிக் கல்வி 10 ஆண்டுகளாகவும், மேல்நிலைப் பள்ளிக் கல்வி இரண்டாண்டுகளாகவும் அமைந்துள்ளன. எல்லா நிலையிலும் எல்லாப் பாடங்களையும் தமிழர் பகுதிப் பள்ளிகள் தமிழிலேயே கற்பிக்கின்றன. பள்ளிகளில் ஆங்கிலம் விருப்பப் பாடமாக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட சூழலும் வந்தது. இந்நிலையில் மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லுகின்றபோது தாய்மொழிவழிப் படிக்க வேண்டியது இன்றியமையாததாகிவிடுகிறது. பல்கலைக் கழகங்களில் தாய்மொழியிலேயே எல்லாத் துறைக் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும் என்பதும் அரசின் கொள்கை. எனவே,இக்கொள்கைக்கேற்பப் பல்கலைக் கழகங்களில் கலையியல், அறிவியல், தொழிலியல் கல்விகள் தமிழிலேயே கற்பிக்கப்படுகின்றன. இந்நிலையில் கீழ்க்கண்ட சூழல்கள் எழுந்துள்ளன:

(1) கலைச்சொற்கள்: கலைச்சொற் குழுக்கள் அமைக்கப்பட்டு, பல்வேறு கல்வித் துறைகளுக்கும் தனித்தனியே கலைச்சொற் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டும் வெளியிடப்பட்டுள்ளன.

(2) பாடநூல்கள்: பல்வேறு கல்வித்துறைகளிலும் பாடநூல்கள் வெளிவந்துள்ளன. மருத்துவத்துறை, பொறியியல் துறை ஆகிய துறைகளில் பல நூல்கள் வெளிவந்துள்ளன.

(3) மொழிபெயர்ப்பு நூல்கள்: பல்வேறு கல்வித் துறைகளிலும் ஆங்கிலத்தில் வெளிவந்தவை தமிழில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அவை அரசால் அச்சடிக்கப்பட்டு வெளிவந்துள்ளன.

(4) ஆசிரியர்கள்: அனைத்து மட்டங்களிலும் தமிழில் கல்வி கற்பிக்கும் நிலையினை ஆதரிக்கும் ஆசிரியர்களும், எதிர்க்கும் ஆசிரியர்களுமென இரண்டு திறத்தாரும் இருக்கின்றனர். ஆனால், இது அரசின் கொள்கையாக அமைந்திருப்பதால் அதனை அவர்கள் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்திலுள்ளனர்.

இன்றைய நிலையில், முதல் பட்ட வகுப்பு வரையில் கலையியல் பாடங்கள் தமிழில் நடைபெறுகின்றன. ஆனால் மருத்துவம், அறிவியல், தொழில் நுட்பவியல் பாடங்கள் முதல் ஆண்டு தமிழிலும், இரண்டாவது ஆண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும், அதற்கு மேல் ஆங்கிலத்தில் மட்டும் நடைபெறும் சூழல் இருப்பதாகத் தெரிகிறது. அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பவியல் கல்வியைப் பொறுத்தவரையில் பட்டப்படிப்பு முடிவு வரையில் தமிழிலேயே கற்பிக்கும் நிலை இலங்கையில் இன்னும் உருவாகவில்லை.

பல்கலைக் கழகக் கல்வியினைத் தமிழ்மொழியில் கற்பிப்பதில் பல இடர்ப்பாடுகள் இருப்பதாகப் பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பொதுவாக, இந்தியாவில் காணப்படுவது போன்றே அங்கும் சிக்கல்கள் இருப்பதாகத் தெரிகிறது. அந்தச் சிக்கல்கள் ஆவன:

(1) போதுமான அளவில் தமிழில் கலைச்சொற்கள் இல்லாமை.

(2) போதுமான பாடநூல்கள் இல்லாமை.

(3) தமிழில் கற்பிக்கவல்ல ஆசிரியர்கள் இல்லாமை.

(4) கலைச்சொல் ஆக்கத்திலும் பாடநூல்கள் தயாரிப்பதிலும் ஏற்படும் இடையூறுகள் ஏராளமாக உள்ளன. அவற்றை விலக்க முடிவதில்லை. கடுமையான திட்டங்களும் செயல்பாடுகளும் தேவைப்படுகின்றன. அரசின் உதவியும் தூண்டுதலும் தொடர்ந்து இல்லாமை.

(5) தமிழிலேயே கருத்துவளம் இல்லாமையும், சொல் வளம் இல்லாமையும்.

(6) ஒரே கல்வி நேரத்தில் தாய்மொழிக் கல்வியினைச் செயல்படுத்துகின்றபோது சிங்கள மாணவர்களுக்குத் தனியே ஆசிரியர்களும் தமிழ் மாணவர்களுக்குத் தனியே ஆசிரியர்களும் ஒரே துறையில் வேண்டப்படுகின்றமை. இது பெருஞ்செலவினை

ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாகத் தமிழுக்கெனக் கல்வி நிறுவனம், சிங்களத்திற்கெனக் கல்வி நிறுவனமெனப் பிரிக்கப்பட வேண்டிய சூழல் உருவாகிறது. ஒவ்வொரு பாடத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகை மாணவர்கள் வர வேண்டுமென விதிக்கப் படும் சூழ்நிலை ஏற்படுகிறது. தமிழ்மொழி வழியாகக் கல்வி கற்பிப்பதற்கு 36 இலட்சம் மக்களுக்கென முயற்சிகள் மேற் கொள்ளுதலும், கல்வி நிறுவனங்கள்அமைத்தலும், பாடப் புத்தகங் கள் வெளியிடுதலும் பெருமுயற்சியாகிவிடுகின்றன.

(7) தமிழ்மொழி வழியாகப் பாடம் கற்பிக்கப்படும்பொழுது மாணவர்கள் ஆங்கில அறிவினை இழந்து விடுகின்றனர்; அதன் காரணமாகஆங்கிலத்தின்வழியாகப் பெறும் உலகக் கல்வி வளர்ச்சி யினையும் மாணவர்கள் இழக்க நேரிடுகின்றது என்ற அச்சம் பலரிடம் நிலவுகிறது. இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பெரும் பான்மையான ஆசிரியர்கள் ஆங்கிலத்திலே பயின்று வெளிநாடு களில் உயர் கல்வி கற்றவர்கள் ஆதலால், தமிழில் பயிற்சி குறைந்துள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். பொதுவாகப் பல்கலைக் கழக மாணவர்களின் கல்வித் தரம், தாய் மொழிவழிக் கல்வியால் குறைந்துவிட்டதென்று நம்பப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்மொழி வழிக் கல்வி பல்கலைக் கழகங்களில் அவ்வளவு வெற்றி பெறவில்லை என்றே கூறலாம். இந்நிலையில், தாய்மொழிக் கல்வி என்ற அரசின் கொள்கை பற்றியும், அதன் வரலாறு பற்றியும் ஓரளவு இங்கு ஆராய்தல் வேண்டும்.

15 ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது தென்னிலங்கையில் 'அனைத்தும் சிங்களம்' என்ற ஒரு தேசியக் கொள்கை முழக்கம் பரவியது. ஆட்சியிலும், கல்வி நிறுவனங் களிலும், செய்தி இதழ்களிலும் சிங்களமே செங்கோலோச்ச வேண்டும் என்ற கொள்கை சில அரசியல் கட்சிகளால் வற்புறுத்தப் பட்டு வந்தது. இந்தக் கொள்கையின் காரணமாக இலங்கையின் தமிழர்களும் தம் தாய்மொழி வாயிலாக அனைத்து நிலைகளிலும் கல்வி கற்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. 15 ஆண்டு களாகத் தொடக்கப்பள்ளி முதற்கொண்டு பல்கலைக் கழகக் கல்வி வரை அனைத்துப் பாடங்களிலும் தாய்மொழியிலேயே கற்பிக்க வேண்டும் என்ற ஆணையினைச் சிங்கள அரசு பிறப்பித்தது. இந்த ஆணையினைத் தொடக்கக் கல்வியில் தொடங்கி மேல்நிலைப் பள்ளிக் கல்வி வரையில் சிங்கள அரசு பெருமுயற்சியுடன் செயல் படுத்தி வந்தது. தாய்மொழி வாயிலாகக் கற்பிப்பது கட்டாய

மாக்கப்பட்டது. ஆங்கிலம், விருப்பப் பாடம் ஆக்கப்பட்டது. மேல் நிலைக் கல்வி முடித்து வருகின்ற நிலையில் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் நுழைகின்றனர். அவர்களுக்குக் கட்டாய மாகத் தாய்மொழி வழியாகப் பாடம் கற்பிக்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் சிங்களத் தேசியக் கொள்கையுடைய அரசு மாறியது. அண்மையில் வந்த அரசு இந்தக் கொள்கையினை அவ்வளவாக வற்புறுத்துவதாகத் தெரியவில்லை. இதன் காரணமாக அண்மை யில் பல்கலைக் கழகங்களில் தாய்மொழிவழிக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற கொள்கை தளர்ச்சியுற்றது. இருக்கும் பிற வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு அறிவியல் துறைகளிலும், பொருளாதாரம், மருத்துவம் முதலிய தொழிலியல் துறைகளிலும் ஆங்கிலத்திலேயே இன்று கல்வி கற்பிக்கப்படுகின்றது. ஆனால், மேல்நிலைப் பள்ளியில் ஓரளவு ஆங்கில அறிவோடு பயின்றுவரும் மாணவர்கள் இத்துறைகளில் ஆங்கில வாயிலாகக் கல்வி கற்றலில் துன்பம் அடைகின்றனர். அதன் பொருட்டுப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு முதல் ஆண்டில் ஆங்கில ஆழ்படிப்பு கற்பிக்கப் படுகிறது. முதல் ஆண்டு தாய்மொழி வாயிலாகப் பாடங்கள் நடக்கின்றன. இரண்டாவதாண்டு தாய்மொழியிலும் ஆங்கிலத் திலுமாகப் பாடங்கள் நடத்தப்படுகின்றன. மூன்றாவதாண்டும் அதற்கு மேலும் ஆங்கிலத்திலேயே பாடங்கள் நடைபெறுகின்றன.

இதுதான் இலங்கையின் இன்றைய தாய்மொழிவழிக் கல்வி யின் நிலையாகும். இவ்வகையில் இலங்கை மேற்கொண்ட முயற்சி களும் அனுபவங்களும் இங்குத் தமிழகத்திற்குப் பாடமாகவும் முன்னெச்சரிக்கையாகவும் அமையலாம். இச்சூழலில் இலங்கைத் தமிழர் கலைச்சொல் ஆக்கம், பாடப் புத்தகங்கள் தயாரித்தல் ஆகியவற்றில் தமிழகத்தின் உதவியினை எதிர்பார்க்கின்றனர். இவ் வகையில் தமிழகத்து உதவி அவர்களுக்கு முயற்சியும் ஊக்கமும் தருவது மட்டுமல்லாது, அவர்களது முயற்சிக்கு வெற்றி ஊட்டுவ தாகவும் அமையலாம்.

இலங்கையின் பயிற்சிமொழி பற்றிய முயற்சிகள் நமக்குப் பயன்படும். அங்குக் கலைச்சொற் பட்டியல்கள் பல துறைகளுக்கு ஆக்கப்பட்டுள்ளன. அவையும் பயன்படும் பயிற்சிமொழி தமிழாதல் கருதிப் பலப்பல ஆங்கில நூல்கள் —தரமான பாடப் புத்தகங்கள்—தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் களும் தமிழகத்திற்குப் பயன்படும். அவற்றைத் தமிழகத்தில் மீண்டும் மொழிபெயர்க்க வேண்டுவதில்லை. எடுத்துக் காட்டாக The Wonder That was India (by A. L. Basham), A History of South India (by KA. Neelakanta Sastri) ஆகிய இரண்டும் 20

ஆண்டுகளுக்கு முன்னரே மொழி பெயர்க்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

சித்த மருத்துவம் 4—6—82

காலை 8-00 மணி கொழும்புப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆர்வத்தோடு அறிவுறுத்தியபடி நாட்டு மருத்துவக் கல்லூரிச் சித்த மருத்துவத் துறை விரிவுரையாளர் **டாக்டர் பவானியும்** அவர் மனைவி **டாக்டர் திருமதி பவானியும்** (யுனானி மருத்துவத் துறை விரிவுரையாளர்) இராம கிருட்டிண மடத்தில் என்னைக் காணவந்தனர். அங்குள்ள சித்த மருத்துவக் கல்வியின் நிலையினைக் கவலையுடன் விளக்கினர். தமிழகத்தின் உதவியினை நாடினர். அவர்களோடு உரையாடியதில் பெற்ற கருத்துக்கள் இவை. அக் கல்லூரியின் இயக்குநருடன் கலந்துரையாட வேண்டும் என்பது அத் துணைவேந்தர் எண்ணமும் என் எண்ணமும் ஆகும். காலம் வாய்ப்பாக அமையாமையால் அது கைகூடவில்லை.

தமிழகத்தைப் போன்று இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் சித்த மருத்துவம் தேசிய மருத்துவமாகக் கருதப்பட்டுப் போற்றப்படுகிறது. இச்சித்த மருத்துவத்திற்கு அங்குத் **தமிழ் வைத்தியம்** என்ற பெயர் நிலவுகிறது. இலங்கையின் வடபகுதியில் இம் மருத்துவத்தில் பரம்பரைப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் பலர் இன்றும் பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தைப் போன்றே மக்கள் அதன்மீது இன்றும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். கடந்த காலத்தில் அரசும் நாட்டுமருத்துவக் கல்வியை வளர்ப்பதற்குக் கல்லூரி அமைத்து முயற்சிகள் மேற்கொண்டு இருந்திருக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் சித்தமருத்துவம் வழங்குவதைப் போன்று சிங்களவர் பகுதிகளில் ஆயுர்வேத மருத்துவம் வழங்கி வருகிறது. சித்த மருத்துவத்தைத் தமிழர் தம்முடைய மருத்துவக் கலையாகக் கருதுவது போன்று ஆயுர்வேதத்தினைச் சிங்களவர் தமக்குரிய மருத்துவக் கலையாகக் கருதி வருகின்றனர். இலங்கையிலுள்ள முகமதியர்கள் யுனானிமருத்துவக் கலையினைத் தமக்கு உரிய மருத்துவமாகப் பின்பற்றி வருகின்றனர். இது இந்தியாவில் இருக்கும் நிலையினைப் பின்பற்றுவது போல் தோன்றுகிறது. இம் மூன்று மருத்துவக் கலைகளுக்கும் உரிய **நாட்டு மருத்துவக் கல்லூரி** ஒன்று கொழும்பில் இயங்கி வருகிறது. (An Institute of Indigenous Medicine, Bandaranayakapura, Rajagriya Sri Lanka). இது கொழும்புப் பல்கலைக் கழகத்தோடு இணைந்தியங்கும் ஒரு கல்வி நிறுவனமாகும். இதில் ஓர் இயக்குநரும், மூன்று துறைகளுக்குரிய

பேராசிரியர்களும் பணியாற்றுகின்றனர். இந்தக் கல்லூரியில் சித்த மருத்துவத் துறை 1929 முதலே இயங்கி வருகிறது. இப்போது ஒவ்வொரு மருத்துவத் துறையிலும் நான்காண்டுச் சான்றிதழ்ப் படிப்பு நடைபெற்று வருகிறது. சித்த மருத்துவத்திற்கு 25 மாணவர்களும், யுனானி மருத்துவத்திற்கு 25 மாணவர்களும், ஆயுர்வேத மருத்துவத்திற்கு 100 மாணவர்களும் சேர்க்கப்படு கின்றனர். சித்தமருத்துவத்தையும், யுனானி மருத்துவத்தையும் தமிழில் கற்பிக்கின்றனர். ஆயுர்வேத மருத்துவத்தினைச் சிங்களத் தில் கற்பிக்கின்றனர்.

நாட்டுமருத்துவங்கள், மேலைநாட்டு மருத்துவத்தோடு போட்டி போட்டு வழங்கி வருவதால் இம்மூன்று மருத்துவக் கலையினரும் துன்பப்படுகின்றனர் எனத் தெரிகிறது. யுனானி மருத்துவம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி பெற்றதாகத் தெரிய வில்லை. ஆயுர்வேதம் அரசின் ஆதரவினைப் பெற்று ஏற்றம் பெற்று வருகிறது. ஆயுர்வேதத்திற்கு வடமொழியில் முதல் நூல்கள் உள்ளன. இலங்கையில் பாலி மொழியில் ஓரளவு அம்மருத் துவத்திற்கென நூல்கள் தோன்றி இருப்பதாகத் தெரிகிறது. சிங்கள மொழியிலும் சில பழைய நூல்கள் இதற்கெனத் தோன்றி உள்ளன. பாலிமொழி சிங்களத்தவருடைய பௌத்த சமய மொழி யாகவும், சிங்களம் தாய் மொழியாகவும் விளங்குகின்ற காரணத் தால் இவ்விரண்டு மொழிகளிலும் சில ஆயுர் வேத இலக்கியங்கள் தோன்றிய நிலை வந்தது போலும். பொதுவாக, ஆயுர்வேதம் என்பது சிங்களத்திற்குரியது என்ற எண்ணம் நிலவுகிறது. ஆனால், (அதே போன்று) சித்த மருத்துவம் யாருக்குரியது எனவும், அதன் தாயகம் எது எனவும், எவ்வாறு அது அங்கு வழங்குகிறது எனவும், அங்குச் சிலர் வினா எழுப்பி வருவதாகவும் தெரிகிறது. தமிழகத்தைப் போன்றே இலங்கையிலும் சித்தமருத்துவத்தை மறைத்து வைத்தே தமிழர்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றார்கள். சித்த மருத்துவத்திற்கென ஏராளமான சுவடிகளும் நூல்களும் தமிழகத்தினைப் போன்று இலங்கையிலும் கிடைத்திருக்கின்றன. இருப்பினும், நாட்டு மருத்துவக் கல்லூரியில் சித்தமருத்துவத் துறை ஆதரவற்ற துறையாக விளங்கி வருகிறது. பொதுமக்கள் ஆதரவும் அமைப்புக்களின் ஆதரவும் அதற்கு இல்லாமல் இருக்கிறது.

இன்றைய இலங்கை அரசு மேற்கொண்டிருக்கும் சிங்களத் தேசிய உணர்வாலும், கல்விக் கொள்கைகளாலும், மொழிக் கொள்கைகளாலும் சித்தமருத்துவத் துறை நாட்டு மருத்துவக் கல்லூரியில் இடம் பெற்று இருப்பது அரிதாகிவிட்டது. தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக அமைத்துத்

தமிழருக்கெனக் கல்வி நிறுவனங்களை இலங்கை அரசு அமைத்து வருகிறது. இதனை ஒட்டிக் கொழும்பிலுள்ள சித்த மருத்துவத் துறையினைத் தமிழ்ப் பகுதியோடு இணைத்து விடலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது. அதன் காரணமாகச் சித்த மருத்துவத் துறை மற்ற மருத்துவத் துறைகளோடு இணைந்து நின்று இயங்க ஊக்கமும் ஆக்கமும் பெறுவதற்குத் தடை ஏற்பட்டு விடும் என்று சித்த மருத்துவத் துறை பேராசிரியர்கள் அச்சமுற்றிருக்கின்றனர்.

பொதுவாகவே சித்த மருத்துவத் துறைக்கு இந்தியத் தமிழகத்திலும், இலங்கைத் தமிழகத்திலும் அரசு மட்டத்திலும் பிற மருத்துவ அறிஞர்களிடையேயும் ஆதரவும் மதிப்பும் இல்லை. இலங்கை அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் சித்த மருத்துவம் ஒரு தனி மருத்துவமாகக் கருதத்தக்கதா எனஐயப்பாடு கொண்டுள் ளனர். சித்த மருத்துவம் ஒரு தனி மருத்துவக்கலை எனக் கருதுமாறு அதற்கான அடிப்படைக் கொள்கைகள் உண்டா எனவும் அவ்வறிஞர்கள் வினா எழுப்பி நிற்கின்றனர். ஆனால், பல்வேறு மருத்துவத் துறைகளின் அறிவோடு மருத்துவக் கல்லூரி களில் பணியாற்றி வரும் சித்த மருத்துவ அறிஞர்கள் அது ஒரு தனி மருத்துவக் கலையாக வளர்ந்து வந்துள்ளது எனவும், வளரத் தக்கதே எனவும் உறுதியாக நம்புகின்றனர். ஆனால், இந்நிலையினை உறுதிப்படுத்த அவர்களுக்கு ஆராய்ச்சி வாய்ப்பும் ஆதரவும் தேவைப்படுகின்றன. இதற்கான உதவியினை இலங்கைச் சித்த மருத்துவ அறிஞர்கள் தமிழகத்திலிருந்து எதிர்பார்க் கின்றனர். இத் துறையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்துச் சித்த மருத்துவத் துறையோடு இணைந்து பாடுபட அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இலங்கை அரசின் கொள்கைகள் எவ்வாறு இருந்தாலும் கொழும்புப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தரும், பதிவாளரும் சித்தமருத்துவம் தனிக்கலையாக வளரத்தக்கது எனவும், வளர வேண்டியது எனவும் கருத்துக் கொண்டிருக் கிறார்கள். இத்தகைய சிந்தனைப் போக்குடைய கல்வியாளர்கள் இலங்கையில் இன்னும் பலர் இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இத்தகைய மனப்போக்கின் காரணத்தால் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பதிவாளரும், துணைவேந்தரும் என்னை அன்போடும், ஆதரவோடும் வரவேற்று நான் நாட்டு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியரோடும், இயக்குநரோடும் கலந்துரையாட வேண்டும் என்று தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். இலங்கை அரசிடம் ஆதரவு பெற இயலாத சித்த மருத்துவத் துறை, தமிழகத்துடன் உறவு வைத்துக் கொண்டாவது வளம் பெற வேண்டும் என்பது

இந்தப் பல்கலைக் கழகக் கல்வியாளர்களின் உள்ளக்கிடக்கையும் நல்லெண்ணமுமாகும் போதும்.

யாழ்ப் பல்கலைக் கழகத்தின் நூலகராக இன்று பணியாற்றும் திரு முருகவேள் **சித்தமருத்துவ ஆயுர்வேத மருத்துவச் சுவடிகள்** அடங்கல் ஒன்றினைத் தயார் செய்து உள்ளார்கள். நூற்றுக் கணக்கான சித்த நூல்கள் இவ்வடங்கலில் இடம் பெற்றுள்ளன. இவ்வடங்கல் சித்த மருத்துவ ஆராய்ச்சிக்காகப் பெரிதும் பயன் படும் என நம்பப்படுகிறது. அதனை இலங்கையில் வெளியிட வாய்ப்பு இல்லாது தவிக்கும் அவர் தமிழகத்தில் வெளியிடும் வாய்ப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தருமா எனக் கேட்டு நிற்கின்றார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகம் அந்நூல் அடங்கலை வெளியிடுமானால் அதனைத் தாம் தந்துதவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்கள். இலங்கையிலும் தமிழகத்திலும் மருத்துவத் துறையில் இணைந்து பாடுபடுவதற்காக இந்நூலடங்கல் தமிழகத் தில் வெளிவருவது முன்னோடியாக அமையும் என்று எதிர் பார்க்கலாம்.

இலங்கையில் உள்ள சித்தமருத்துவ அறிஞர்களும் புரவலர் களும் கீழ்க்கண்ட திட்டங்களை விரும்புகின்றனர் எனத் தெரிகிறது:

(1) சித்த மருத்துவத்திற்கென அடிப்படைக் கொள்கைகள் உண்டோ என ஐயம் கொண்டு நிற்கும் பிற மருத்துவ அறிஞர் களும் அரசின் உயர்அலுவலர்களும் தெளிவு பெற அடிப்படைக் கொள்கைகள் ஆய்வின் மூலம் வரையறை செய்யப்படவேண்டும்.

(2) இதற்கு வாய்ப்பாகக் கல்லூரிகளில் பாடத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

(3) நாட்டு மருத்துவக் கல்லூரிகளில் சித்த மருத்துவத் துறை ஆசிரியர்கள் உயர் தகுதி பெற அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

(4) தமிழகத்திலும் இலங்கையிலும் அவற்றில் பணிபுரியும் சித்த மருத்துவ அறிஞர்கள் இணைந்து நின்று, பொது ஆராய்ச்சித் திட்டங்கள் வகுத்துச் செயல் படுதல் வேண்டும்.

(5) கொழும்பு, நாட்டு மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்காகத் தமிழகத்தில் வெளியான நூல்கள் பல பயன்படுகின்றன.

(அ) நோய் நாடல் (டாக்டர் உத்தமராயன்)

(ஆ) குண பாடம் – (தியாகராாசன்)

(இ) உடல் தத்துவம்

(ஈ) சித்த மருத்துவச் சுருக்கம். ஆனால், தமிழகத்துப் பழனித் தேவத்தானம் வெளியிட்ட பல சித்தமருத்துவ நூல்கள், 'மூலிகை மணி' என்னும் இதழ் அங்கு இருக்கும் அறிஞர்களுக்குத் தெரியவில்லை. இவ்வாறு சித்த மருத்துவப் பாட நூல்கள் தயாரிப்பதிலும் அவற்றை வெளியிடுவதிலும் இன்று அங்கு உதவி தேவைப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களின்படி பணியாற்றிச் சித்தமருத்துவத்தின் தனித் தன்மை எடுத்துக் காட்டப்படுமானால் இலங்கை அரசிடமிருந்தும், இந்திய அரசிடமிருந்தும், பிற மேலைநாட்டுப் பொருள்உதவி நிறுவனங்களிடமிருந்தும் ஆயுர்வேதத் துறை நிதி உதவி பெற்று வளர்வதைப் போன்று சித்தமருத்துவத் துறையும் நிதி உதவி பெற்று வளர முடியும் என இலங்கை அறிஞர்கள் நம்புகின்றனர். இந்நிலையினை ஒட்டி இருபாலும் அறிஞர்கள் இணைந்து பாடுபடவேண்டும் என்பது அவர்கள் வேண்டுகோள்.

இலங்கையில் கல்விநிலை

இலங்கையில் கல்வி நிலை பற்றிப் பொதுவாக அறிந்து கொள்ளுதல் நம் நோக்கத்திற்குப் பயன் உள்ளதாக இருக்கும்.

இந்தியாவில் முதல்நிலை, இரண்டாம் நிலை, மேல்நிலைஎன வழங்கப்படும் பள்ளிக்கல்வி 12-ஆண்டுகள் நடைபெறுவதாகும். மேல்நிலைப் பள்ளிக் கல்வியினை இலங்கையில் கல்லூரிக்கல்வி எனக் கூறுகின்றனர்.இதனை முடித்தவுடன் மாணவர்கள் பட்டப் படிப்பிற்காகப் பல்கலைக் கழகங்களுக்கு நேரே செல்கின்றனர். அப்பல்கலைக் கழகங்களில் அவர்களுடைய படிப்பு பி. ஏ., பி. எஸ்ஸி., எம். பி., பி. எஸ்., பி. இ., ஆகியவற்றில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம். பி.ஏ., பி.எஸ்ஸி., ஆகிய பட்டப் படிப்பு மூன்று ஆண்டுகளில் நிற்பதோடல்லாது நான்காவது ஆண்டும் தொடர்ந்து (பி.ஏ. சிறப்பு), பி.எஸ்ஸி. (சிறப்பு) என ஹானர்ஸ் பட்டமாகவும் அமையலாம், முதல் பட்டப்படிப்பு முடிந்தவுடன் பெரும்பாலோர் அரசினர் பணி, தொழில் நிறுவனங்கள் பணி

ஆகியவற்றுக்குச் சென்று விடுகின்றனர். பல்கலைக் கழகப் பணியில் அமர்ந்தோரே அதற்கு மேலான இரண்டாண்டு முதுநிலைப் (Master) பட்டப் படிப்பு தொடர விரும்புகின்றனர். அவர்கள் மிகச் சிலரே. பல்கலைக் கழகக் கல்விப் பணியில் சேர்ந்தவர்கள் ஆராய்ச்சிப் பட்டம் பெற வேண்டியவர்களாகின்றனர். முது நிலைக்குமேல் பிஎச்.டி. ஆராய்ச்சி 2 ஆண்டுகளாகும்.

இலங்கையில் தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரையில் அனைத்தும் அரசினர் செலவில் அனைவருக்கும் வழங்கப் படுகின்றன. இன்றைய நாளில் அனைவரும் கல்வி கற்க முன் வருகின்றனர். கடந்த காலத்தில் அவ்வாறு இருந்ததாகத் தெரிய வில்லை. ஆதலால் கல்வியில் முன்னேற்றமடைந்தோரும், கல்வியில் பின்னடைந்தோரும் என வேறுபாடுகள் மிகுதியாக இப்போது காணப்படுகின்றன. இதன் காரணமாக அரசு சில ஒதுக்கீட்டு முறைகளைப் பின்பற்றிக் கல்விச் சமன்செய்ய முயற்சி செய்கின்றது. அம் முயற்சியில் சில இனத்தாருக்கு நன்மையும், சில இனத்தாருக்குத் தீமையும் ஏற்படும் சூழலும் உருவாகி உள்ளதாகத் தெரிகிறது. இலங்கையில் மேல்நிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் ஏறக்குறைய 1,00,000 மாணவர்கள் கற்கின்றனர். பல்கலைக் கழகம் நுழைவுக்கென 40,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். அவர்களுள் 5,000 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக் கழகக் கல்விக்கெனத் தேர்வு கிடைக்கின்றது. ஆதலால், பெரும் பாலான மாணவர்கள் ஏமாற்றம் அடைகின்றனர்.

இந்தியாவில் இருப்பது போன்று இணைந்த கல்லூரிகள் (Affiliated Colleges) இலங்கையில் இல்லை. உயர்கல்வி என்றால் அனைத்து மாணவர்களும் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கும் கல்வியே ஆகும். ஆதலால், பல்கலைக் கழகங்களில் 5,000/6,000 மாணவர்கள் படிக்கும் நிலை அங்குள்ளது,

உயர்கல்வியினை முழுவதுமாக ஆட்சி செய்யப் **பல்கலைக் கழகப் பொருள் நல்கை ஆணைக்குழு** (University Grants Commission) ஒன்று செயல்படுகிறது. மாணவர்கள் சேர்க்கை, உயர் மட்டத்தில் ஆசிரியர்கள் அமர்த்தல், ஆராய்ச்சித் திட்டங் களுக்கு உதவுதல், பல்கலைக் கழகங்களுக்குப் பொருள் நல்கல், பல்கலைக் கழகங்கள் தோற்றுவித்தல். துணைவேந்தர்கள் அமர்த்தல், கல்விக் கொள்கைகளை வகுத்தல், ஆசிரியர் களுக்கு நெடுவிடுப்பு வழங்கல் ஆகிய முக்கியமான பணிகளை அவ்வாணைக் குழுவே செய்கிறது. (இலங்கையில் தனியார் பள்ளி களும், தனியார் கல்லூரிகளும் ஒழிக்கப்பட்டுவிட்டன.) ஆதலால்,

பல்கலைக் கழக ஆணைக்குழு என்பது தமிழகத்தில் உள்ள உயர் கல்வி இயக்ககம் (Directorate of Collegiate Education....) போன்ற ஒன்றாகக் கருதத்தக்கது.

இலங்கையில் சிங்களர்க்கெனப் பல்கலைக் கழகமும், தமிழர்க்கெனப் பல்கலைக் கழகமும், அறிவியலுக்கெனப் பல்கலைக் கழகமும், பௌத்த சமயத்திற்கெனப் பல்கலைக் கழகமும், பொதுப் பல்கலைக் கழகமும் எனப் பல பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்றன. அவை பெரும்பாலும் பட்டப் படிப்புக் கல்வியே (Under-Graduate Courses) கற்பிக்கின்றன. பட்டப் படிப்பிற்கு மேலான பட்ட மேற்படிப்புக் கல்வி,ஆராய்ச்சிப் படிப்பு ஆகியவை இப்பல்கலைக் கழகங்களில் மிகமிக அரியனவாகவே உள்ளன; இல்லை என்றுகூடக் கூறிவிடலாம். முதுநிலைக் கல்வி (Master Degree Courses) கற்பித்தல் வழியாகவும், ஆராய்ச்சி வழியாகவும் பெறுதல் என இரண்டு வழிகளில் அமைந்து உள்ளது. இப்போது தான் பலர் முதுநிலைக் கல்வி கற்க முன் வருவதாகத் தெரிகிறது. (தமிழ்த் துறைகளில் இப்போது 10/12 பேர் முதுகலை கற்று வருகின்றனர்.) ஆனால் பட்ட மேற்படிப்பிற்கும், ஆராய்ச்சிக்கும் இலங்கைப் பல்கலைக் கழகங்கள் இதுநாள் வரை இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களையே சார்ந்து இருந்திருக்கின்றன. பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு முதுநிலைப் பட்டம், ஆராய்ச்சிப் பட்டம் பெறச் சம்பளத்தோடு கூடிய நெடுவிடுப்பு தாராளமாக—கட்டாயமாக வழங்கப்படுகிறது.இங்கிலாந்துக்குச் செல்ல போக்குவரத்துக்கும் பொருள் உதவி நல்கப்படுகிறது. பல்கலைக் கழக இளநிலை ஆசிரியர்கள் இவ் வாய்ப்புககளைப் பயன்படுத்திக்கொண்டு வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று மேற்படிப்பு முடித்து வர வேண்டும் என்ற சூழல் முன்னர் இருந்தது. இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு பல்கலைக் கழக ஆசிரியர்கள் பெரும்பாலோர் வெளிநாடுகளுக்குச் சென்று முதுநிலைப் பட்டங்களையும், ஆராய்ச்சிப் பட்டங்களையும் பெற்று வந்து கொண்டிருந்தனர். இக்காரணங்களால் பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்புக் கல்வியும், ஆராய்ச்சிக் கல்வியும் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் வளராமலே போய்விட்டன. இலங்கைப் பல்கலைக் கழகங்களில் முனைவர் பட்டம் பெற்ற ஆராய்ச்சி அறிஞர்களும், இங்கிலாந்து முதலான மேலைநாடுகளில் ஆராய்ச்சி நெறி முறைகள் கற்று வந்தவர்களும் பலர் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் அனைவருமே பட்டப் படிப்புக் கல்வியே கற்பித்து வருகின்றனர். இந்தியாவில் பல்கலைக் கழகப் பொருள் நல்கை ஆணைக்குழு, ஆயிரக்கணக்கில் பொருள் உதவியோடுகூடிய ஆராய்ச்சி மாணவர் பதவிகளை (Stipendiary Research Fellowships) தோற்றுவித்து

உயர்மட்ட ஆராய்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களும் இத்தகைய ஆராய்ச்சி மாணவர் பதவிகளை ஏராளமாகத் தோற்றுவித்து வழங்குகின்றன. இத்தகைய நிலை இலங்கையில் இல்லை. பொருள் உதவியோடு கூடிய ஆராய்ச்சி மாணவர் பதவிகள் இலங்கையில் எங்கும் இருப்ப தாகத் தெரியவில்லை. இலங்கையில் ஆராய்ச்சிக் கல்வி வளரா மைக்கு இதுவும் ஒரு காரணம். இலங்கை, இன்றும் வாழ்க்கைப் பண்டங்களுக்குப் பெரும்பாலும் வெளிநாட்டு இறக்குமதிகளையே நம்பிக் கொண்டு இருப்பது போன்று கல்வித் துறையிலும் வெளி நாட்டையே சார்ந்து வந்திருக்கிறது!

ஆனால், இன்றைய நிலை மாறிவிட்டது. வெளிநாட்டுப் போக்குவரத்து கடினமாகிவிட்டது. இங்கிலாந்தில் வரவேற்பும் குறைந்துவிட்டது. அரசாங்கம் அயல்நாட்டுக் கல்வியின் பொருட்டு பொருள்உதவி செய்வதும் குறைந்து விட்டது. வெளிநாட்டுக்குச் செல்லும் உதவித்தொகைகளை இன்று பல பல்கலைக் கழகங்களும் பிரித்துக் கொள்ள வேண்டிய சூழலும் தோன்றிவிட்டது. கொழும்புப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் குறிப்பிட்டது போன்று இப்போது இலங்கைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஆஸ்திரேலியா நோக்கி நிற்கின்றனர். முன் இங்கிலாந்து உதவி யதைப் போன்று இப்போது ஆஸ்திரேலியா உதவுவதாகத் தெரி கிறது. ஆனாலும், வாய்ப்பு குறைவே. இந்நிலையில் தமிழர்கள் வாய்ப்புக்களும், உரிமைகளும் பறிக்கப்பட்டு இரண்டாம் தரக் குடிமக்களாகச் சிங்கள அரசினரால் கருதப்படும் கொடுமையும் உருவாகிவிட்டது. இதனை எதிர்த்துத் துணிந்து பேசவோ போராடவோ பெரும்பாலான தமிழர்கள் தயங்குகின்றனர். பொதுவாகத் தமிழர்களும், தமிழ்க் கல்வி நிறுவனங்களும் தாய்த் தமிழகத்தின் உதவியினை இப்போது பெரிதும் நாடி நிற்கின்றனர்.

இலங்கையில் தமிழாராய்ச்சி

இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், தம் பட்டமேற்படிப்புக் கல்வியையும் ஆராய்ச்சியையும் பெரும்பாலும் இங்கிலாந்திலேயே பெற்று வந்தனர். ஒருசிலர் இந்தியா வந்ததும் உண்டு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக் கல்லூரி, இலண்டன் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது என்பதனையும் இங்கு நினைவில் கொள்ளலாம். இந்நிலையால் இலங்கையில் உயர் கல்வி வளராமற் போனாலும் வேறுசில நன்மைகள் விளைந்தன எனலாம். ஆங்கிலம் என்னும் புதுமைக்கால அறிவுவாயில்

இலங்கை ஆசிரியர்களுக்கு எளிதாகியது. மேற்கே மெத்த வளர்ந்த சில புத்தம் புதிய கலைகளும் எண்ணங்களும் தமிழுக்குக் கிடைக்க வாய்ப்பேற்பட்டது. அறிவியலடிப்படையிலான ஆராய்ச்சி நெறிமுறைகளும் தமிழுக்குக் கிடைக்க வாய்ப் பேற்பட்டது. இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழரைவிட மிகுதி யாக மேலைநாட்டு நாகரிகத்தைத் தழுவினர். பல புத்தாராய்ச்சி உரைகளும் (Theses) முடிவுகளும் தமிழுக்குக் கிடைத்தன. அவை யெல்லாம் இங்கிலாந்தில் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளாதலால் அவை தமிழுக்குரியனவோ, இலங்கைக்குரியனவோ, இங்கிலாந்துக் குரியனவோ எனக் கேள்விக்குரியனவாக நின்றாலும் அவை தமிழாராய்ச்சியின் வளர்ச்சிப் படிகளே. இருப்பினும் அவை (பெரும்பாலும்) வெளிப்படாது இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களின் நூலகங்களிலேயே குடிகொண்டுவிட்ட காரணத்தால் தமிழகத்தைத் தாக்கியதும் குறைவாகவே உள்ளது. இலங்கையும் இந்தியாவும் ஆங்கிலப் பேரரசின் வல்லாட்சியிலிருந்து விடுபட்டுத் தமக்கிடையே அரசியல் தடைகளை ஏற்படுத்திக் கொண்டு, தம் போக்கில் இயங்கத் தொடங்கிய காரணத்தால் (சென்ற நூற் றாண்டிலும் இந்த நூற்றாண்டின் முற்பாதி வரையிலும் தமிழறி ஞரிடையே நெருங்கிய உறவு இருந்ததுபோல்) நெருங்கிய உறவு வைத்துக்கொள்ள முடியாது போனது இதற்கு ஒருகாரணம் எனலாம். மேலைநாடுகளில் மேற்கண்டவாறு நிறைவேறிய சில ஆராய்ச்சிகள் வருமாறு:

(1) பத்துப்பாட்டில் வரலாற்று சமூக மொழியியல் ஆய்வு—எஸ். வித்தியானந்தன்—இலண்டன் பல்கலைக் கழகம், 1950.

(2) கி.பி. 800 முதல் 920 வரையில் வந்த தமிழ்க் கல் வெட்டுக்களின் மொழியாராய்ச்சி—ஆ. வேலுப்பிள்ளை ஆக்சுஃபோர்டு பல்கலைக் கழகம், 1960.

(3) பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனை—தனிநாயக அடிகளார்—இலண்டன் பல்கலைக் கழகம், 1957.

(4) சிங்களத்தின்மீது திராவிடத்தின் தாக்கம்—என். ஹெச். பி. சில்வா—ஆக்சுஃபோர்டு பல்கலைக் கழகம், 1961.

(5) தமிழ் வினைச்சொற்களின் அமைப்பு—ஏ. சுதாசிவம்—ஆக்சுஃபோர்டு பல்கலைக் கழகம்—1956.

(6) கி. பி. 7, 8—ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டுக் களின் மொழியாராய்ச்சி—கே. கணபதிப் பிள்ளை—இலண்டன் பல்கலைக் கழகம், 1935.

(7) தொல்காப்பியச் சொல்லதிகார ஆராய்ச்சி—ஹெச். எஸ். டேவிட்— இலண்டன் பல்கலைக் கழகம், 1956.

(8) தமிழ் வீரயுகப் பாடல்—க. கைலாசபதி—பர்மிங்காம் பல்கலைக் கழகம்.

(9) சீவக சிந்தாமணியின் காலம், அதன் பிராகிருத வட மொழி ஆய்வுகளோடு ஒப்பீட்டாய்வு — செல்வி ஏ. முத்துக்குமார்—ஆக்சுஃபோர்டு பல்கலைக் கழகம்.

(10) பழந்தமிழ்ச் சமூகத்தில் நாடகங்கள் கா.சிவத்தம்பி—பர்மிங்காம் பல்கலைக் கழகம்.

(11) யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ்ப் பெயர்ச்சொல்லின் வடிவ அமைப்பு — தனஞ்சயராசசிங்கம் — எடின்பெரோ பல்கலைக் கழகம்—1972.

(12) இலங்கையின் பண்டைத் தமிழ்க் குடியேற்றங்களும் யாழ்ப்பாண அரசுத் தொடக்கமும் — இந்திரபாலா—இலண்டன் பல்கலைக் கழகம்.

(13) கலித்தொகை மொழியாராய்ச்சி—பி. பூலோக சிங்கம்.

ஆராய்ச்சி செய்வதற்காக ஆராய்ச்சி அறிஞர், மாணவர் பதவிகள் (Research Fellowships and Research Scholarships....) எனப் பல்கலைக் கழகத்தில் ஒன்றும் இல்லையானாலும் கூட பிஎச்.டி.க்கு மேல் ஆராய்ச்சி செய்யும் ஆசிரியர்களுக்குப் பொருள் உதவி செய்யக் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் திட்டம் உள்ளது. [இலங்கையின் ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் இவ் உதவித் தொகைத் திட்டம் (Scheme of Research Grants) உள்ளது.] இவ் உதவியினைப் பயன்படுத்தி அவ்வப்போது சில இளைஞர்கள் திட்டங்களை வகுத்துப் பணிபுரிகின்றனர். பொது வாக, இங்கு நடைபெற்ற ஒருசில ஆராய்ச்சித் திட்டங்கள் நாம் கருத்தில் கொள்ளத் தக்கனவாகும்:

(அ) தமிழர் பழக்க வழக்கங்கள்—முனைவர் பாலசுந்தரம், தமிழ் விரிவுரையாளர்—பல்கலைக் கழகத்தில் ரூ.4,000 உதவி பெற்று அத்திட்டத்தை அவர் நிறைவேற்றி இருக்கிறார்.

(ஆ) இந்தியாவில் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோர்—சூல் அண்ட் வெல்ட் (Schule and Welt)

(இ) இலங்கையில் டச்சுக் கல்வி முறை (The Dutch Educational System in Sri Lanka........)

இலங்கையின் பல்கலைக் கழகங்களிலும் பிற இடங்களிலும் சில திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை நாம் கருத்தில் கொள்வது நம் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிக்குத் துணை ஆகலாம்.

(அ) பௌத்தக் கலைக் களஞ்சியம் (**The Buddhist Encyclopaedia**) – பதிப்பு ஆசிரியர் பேராசிரியர் தீரசேகரா. இலங்கை அரசின் ஆதரவோடு இத்திட்டம் நடைபெற்று வருகிறது.

(ஆ) இலங்கை வரலாறு–பேராதனைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை. அரசாதரவுண்டு.

(இ) சிங்கள மொழிப் பேரகராதி–இத்திட்டம் ஒரு தனி நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது. நெடுங்காலமாகின்றதாம்.

(ஈ) சிங்களக் கலைக் களஞ்சியம் – இலங்கை அரசு பண்பாட்டுத் துறையின் பண உதவியுடன் இத்திட்டம் நடைபெறுகிறது. சில தொகுதிகள் வெளியாகி உள்ளன.

(உ) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதலாண்டுப் பட்டப்படிப்பு மாணவர்கள் துணையைக் கொண்டு ஊர்ச் செய்திகளைத் தொகுக்கும் 'ஊராய்வுத் திட்டம்' ஒன்று நடந்து வருகிறது. தொகுப்போடு பணி நிற்கிறது.

பல்கலைக் கழகங்களில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட சில ஆராய்ச்சிகள் இவை:

நச்சினார்க்கினியரின் இலக்கியத் திறக் கோட்பாடு
– எஸ் பரமேசுவரன், முதுகலைப் பட்டத்திற்காக.

வையப்பாடல்
– கே. எஸ். நடராசா, முதுகலைப் பட்டத்திற்கு.

இலங்கைத் தமிழ்ப் பிரபந்தங்கள்
– கே. எஸ். நடராசா, பிஎச். டி. பட்டத்திற்கு (இலங்கை).

நாவலர் மரபு
–திருமதி ஒய். கணேசலிங்கம்,

சி.வை. தாமோதரம் பிள்ளை–திருமதி சண்முக தாசு.

மட்டக்களப்பு நாட்டுப்புறப் பாடல்கள்
— டாக்டர் பாலசுந்தரம் —இலங்கை பிஎச். டி.
பட்டத்திற்கு.

நாவலியூர்ச் சோம சுந்தரப் புலவரின் கவிதைகள்
— திருமதி கே. சின்னய்யா-முதுகலைப் பட்டத்திற்கு.

இரண்டாம் பாண்டியப் பேரரசின் ஆட்சிமுறை
—எஸ். குணசிங்கம்—இலங்கை முதுகலைப் பட்டத்திற்கு.

சோழப் பேரரசின் தொடக்கக் கால இந்து ஆலய அமைப்பும் அவற்றின் பணிகளும்
— எஸ். குணசிங்கம் — இலங்கை பிஎச். டி. பட்டத்திற்கு.

தமிழியல் பற்றிய சில வெளியீடுகள் இலங்கையில் வெளிவந்து உள்ளதை அறிந்து மகிழலாம்:

(அ) சாசனமும் தமிழும்—ஆ. வேலுப்பிள்ளை.

(ஆ) திருக்குறள்—சிங்கள மொழிபெயர்ப்பு.

(இ) தமிழில் பௌத்தம் — தம்மரத்ன — எம். டி. குணசேன அண் கோ.

(ஈ) தமிழர்களும் பண்டை இலங்கையின் பண்பாட்டுப் பன்மையும்—டி. ஜே. கனகரத்தனம்.

(உ) மணிமேகலை — சிங்கள மொழிபெயர்ப்பு — தம்மரத்ன தேரோ.

(ஊ) இலங்கையில் தமிழ்ப் பண்பாடு—இராகவன், எம். டி.

அடிக்குறிப்புகள்

1. "During the Fifth World Tamil Conference held at Madurai in January 1981, the participants including the foreign delegates expressed the need for the establishment of Tamil University to fulfil the long-felt aspirations of the Tamil enthusiasts and the people of Tamil Nadu."—

Explanatory Statement, The Tamil University Ordinance, 1981.

2. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வெளிநாட்டுத் தமிழர்க்கு எழுதிய மடல் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

3. "Mr. Premadasa, who presided over the meeting said if one were to investigate the nationality of one's grandfather and great grandfather he himself would be an Indian. The Sinhalese were the descendants of Prince Vijaya of Bengal in India. He deprecated the practice of asking the nationality of one's grandfather and great grandfather before the grant of Sri Lanka citizenship. If one had all other qualifications he should be granted full citizenship without hesitation.

Language should not be a barrier for people to come together for common good. Lord Buddha was born in India and was an Indian. They should join together without distinction of caste, community and language to establish a righteous society in which every citizen is equal in law and practice."

p. 5, The Hindu, 27–7–'82.

(Mr. Premadasa is the Prime Minister of Sri Lanka.)

"Historically speaking it is well known that the cultural and linguistic consciousness of the Tamils in this country has always been influenced by developments in India in general and South India in particular."

"The fact of the matter is that events and trends in India did play an important part in shaping the cultural process from very early times. In so far as the Tamils are concerned the

major events in India during the last hundred years or so have had their unmistakable impact on them. This applies to politics as much as to culture: the rise of the Neo-Hindu movements—Arya Samaj, Brahma Samaj and the Ramakrishna Mission—the founding of the Indian National Congress (1885), the 'Renaissance' in Bengal, the Swadeshi Movement (1906—19 5), the different regional movements that arose in South India which eventually crystallized in the emergence of the Dravidian Nationalism, the agitations for the formation of Linguistic states are some of the more significant events that have contributed to the cultural and linguistic consciousness of the Sri Lankan Tamils."

"Although there have been, and there continues to be, certain avowed socio-cultural differences between 'Sri Lankan Tamils"—who have been living in this country for centuries—and the "Tamils of Indian Origin"—those who came here during the heyday of the plantations—both sections have shared the common characteristic of looking up to India in different degrees for cultural and spiritual sustenance. Language, religion, myth and history have doubtless contributed to the survival of this feature, which is deeply embedded in the consciousness of the average Tamil. Along with these may be considered the individual influences of personalities like Swami Vivekananda[1] (1863-1902), Mahatma Gandhi (1869-1948), both of whom visited Sri Lanka and especially Jaffna where they were accorded rousing welcome and Ananda K. Coomaraswamy (1877-1947) who also visited Jaffna on more than one occasion.". — K. Kailasapathy, The Cultural and Linguistic Consciousness of The Tamil Community in Sri Lanka.

4. Çensus of population and Housing, Sri Lanka, 1981, Primary Release-No. 1, Department of Census and Statistics, Ministry of Plan Implementation, Sri Lanka.

5. அடிக்குறிப்பு 3-இல் கண்ட அறிக்கை மொழிவாரியாக மக்கள் தொகையை வழங்கவில்லை. ஆனால், இனத்தொகுதி (Ethnicity) என்னும் தலைப்பில் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், இலங்கைச் சோனகர் (Moor), பறங்கியர்,

மலாயர், ஏனையவர் என்ற வகையினரைக் குறிப்பிடுகிறது. இலங்கைச் சோனகர் என்பார் இசுலாமியர். இவர்கள் பெரும் பாலும் தமிழ் மொழி பேசுவோரே. ஒரு சிலர் (5%இருக்கலாமாம்) சிங்களம் பேசுவோராம்.

6. "The problem also had its local implications. The presence of more than a million Indian Tamil estate workers in the heart of the Sinhalese country, as it were, and that too in the island's economically most rewarding sectors (the tea and rubber plantations) posed both political and an economic threat to the Sinhalese people, especially to the Kandyan Sinhalese.

Its origins could be traced back to the reluctance of the Sinhalese to take to the regimented life of the estates. In a situation where nature is bountiful and where the average peasant owns even a fragment of land, where feudal and rigid social considerations keep him tied to the rural frame-work, there was, until the pressures of population and lack of employment opportunities began to be felt, an understandable reluctance to take to the barrack style labour required by the plantation sector.

The Indians posed a threat to the Sinhalese only when the question of representation in the legislature become an issue in the 1920s and thereafter."—PP. 28 & 29, A. Jeyaratnam Wilson.

"It was on the third aspect of the Sinhalese Buddhist problem – language—that bitter conflict arose between the Sinhalese and Ceylon Tamils. The demand to make the Sinhalese language the sole official language arose from a mixture of motives. Primarily the motivation was cultural and economic. There was widespread anxiety that the process of deracination gaining ground among the middle and upper rungs of Sinhalese society would ultimately destroy the Sinhalese language, Sinhalese culture, and Sinhalese Buddhism. There was besides fear of Tamil 'domination' from South India. But above all there was antagonism to the presence of large numbers of Ceylon Tamils in the public services.

By having Sinhalese made the only official language, the Sinhalese-educated hoped that they would dethrone the English educated (both Sinhalese and Ceylon Tamils) from their privileged positions and consequently have greater employment opportunities made available to them. They achieved a measure of success in the latter objective, but their hopes were not realised in regard to the former. They succeeded only to the extent that they had English removed from its position of primacy in the official sphere, and as the medium of instruction in the educational sector both in the secondary schools and at university levels.

Fear of cultural swamping from South India has also been a matter of concern to Sinhalese Buddhist nationalist opinion. Bandaranaike himself gave expression to these misgivings during the language debate in the House of Representatives in October 1955 when he said:

> "I believe there are a not inconsiderable number of Tamils in this country out of a population of eight million. Then there are forty or fifty million people just adjoining, and what about all this Tamil literature, Tamil teachers, even the films, papers, magazines, so that the Tamils in our country are not restricted to the northern and eastern provinces alone; there are a large number, I suppose over ten lakhs, in Sinhalese provinces. And what about the Indian labourers whose return to India is now just fading away into the dim and distant future? The fact that in the towns and villages, in business houses and in boutiques most of the work is in the hands of Tamil speaking people will inevitably result in a fear, and I do not think an unjustified fear, of the inexorable shrinking of the Sinhalese language...'
>
> — PP. 24 & 25, A. Jeyaratnam Wilson

7. "Sinhalese nationalist opinion had at this time come round to the view that the Indian Tamils would have to be accommodated in some kind of way, especially in view of the obvious hesitation on the part of India to take most of them back. In the circumstances, they sought to compel the Indian

Tamils in the plantation areas to adopt Sinhalese as their mother tongue. In this way the Indians could, they hoped, be absorbed."
— P. 34, A. Jeyaratnam Wilson.

8. இப்புள்ளி விவரங்களுக்கு ஆதாரம் அடிக்குறிப்பு 4-இல் காட்டப்பட்ட வெளியீடு.

"The Ceylon Muslims comprise two groups—the Ceylon Moors mostly of Arab and Indian extraction who came as traders to the island during the seventh to the fifteenth centuries and intermarried with the natives, and the Malays of more recent origin, descendants of Javanese mercenaries brought by the Dutch." — PP. 55 & 56, A. Jeyaratnam Wilson.

9. "The fact that the Muslims are a Tamil-speaking group gives rise to competition for their support between the Sinhalese and Ceylon Tamil political leadership. The Muslim political leadership, unlike the Ceylon Tamil, does not have strong feelings on the question of the Tamil language. Some of their leading political organisations are in favour of Muslims adopting the Sinhalese language as their mother tongue. But on this matter there is a divergence of opinion between the Muslims of the Sinhalese areas and the Muslims residing in the Tamil-speaking areas. In the latter case, there is a demand for Sinhalese being taught, but mainly as a second language.

Though a few Muslim personalities have from time to time supported the Ceylon Tamil political leadership, the general trend has been for the Muslims to identify themselves with the Sinhalese leadership in national politics. They see in such identification many advantages. For instance, until recent times the Muslims as a community, for various reasons, had not taken to higher education and the professions as the other communities had done. Since 1956 increasing attention has been paid by successive ministers of education, particularly W. Dahanayake (1956-9) and Badiuddin Mahmud (1960-4 and 1970) to improving educational facilities available to the Muslim population."—P P 56 & 57, A. Jeyaratnam Wilson.

10. இலங்கையில் தமிழில் உயராராய்ச்சிப் பட்டம் பெற்ற இரு தமிழறிஞர்களுள் முனைவர் உவைசும் ஒருவர். மதுரைப் பல்கலைக் கழகத்தில் இசுலாம் இலக்கியத் துறை ஒன்று இயங்கி வருகிறது; இதன் முதற்பேராசிரியராக முனைவர் உவைஸ் அழைக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார். மற்றொருவர் முனைவர் கமாலுதீன் என்பவர்.

11. தேரவாத பௌத்த சமயம் பண்டைத் தென்னிந்தியா வில் பரவலாக வழங்கியதைப் பேரா. வையாபுரிப் பிள்ளையவர் கள் எழுதிய குறிப்பு ஒன்று சுட்டுகிறது.

"Nagarjuna Konda inscriptions prove that there was a mahavihara for Buddhist recluses coming from different countries among which Damila is mentioned. These Buddhists were Theravadins. Gandhavamsa says (J.P T.S. 1886, pp. 66-67) that Kanchipura was one of the main centres of Pali Buddhism of Theravada. Madurai also (Madhurasutta pattana) is mentioned as the place where Buddhaghosa and Buddhamitta lived for sometime, before the former repaired to Kanchipura. Buddhagosa was a native of Tirunelveli region. Uraga-pura (modern Uraiyur in the Tiruchinapalli District) was the birth place of Buddhadatta who lived in the village of Bhutamangala near 'the flourishing inland port of Kaveripattana.' Buddhagosa and Buddhadatta were contemporaries and they flourished in the 5th century A.D. South India continued to be the centre of Pali Buddhism as late as the 12th century A.D., a date to which Anuruddha (a Buddhist teacher of South India, according to the Talaing records) the celebrated author of the Abhidhammttha is assigned." — PP. 40 & 41, S. Vaiyapuri Pillai.

12. "The psychological barriers are just as great. The Sinhalese, as already stated, tend on occasion to group the indigenous Tamils with the Tamils of South India and view them in their entirety as 'the Dravidian peril'.

The Average middle-class Sinhalese is in sharp competition with his Ceylon Tamil counterpart for white collar jobs and the commonly held image of the latter is that he is hard-working, clever, industrious and intensely communal, the last mentioned view being reinforced by the fact that, until 1956,

Ceylon Tamils in positions of authority tended to prefer their compatriots in the matter of public service appointments and promotions. On the other hand, sections of the Ceylon Tamil intelligentsia look on the average educated Sinhalese as being 'lazy and foolish'. Such an extravagant and self-defecting communalism could not but produce, as it did after 1955, an equally intense communal reaction from sections of the Sinhalese intelligentsia. The deterioration of Sinhalese–Tamil relations in the years after 1956 can be largely attributed to this fact."

— P. 47, A. Jeyaratnam Wilson.

13. இலங்கையின் சிக்கல்களையும் அவற்றுக்குரிய தீர்வு களையும் பற்றி அரசியல் அறிஞர்களும் வரலாற்றாசிரியர்களும் குறிக்கும் கருத்துக்கள் இவை:

"It will thus be realised that in a plural society like that of contemporary Sri Lanka, with solidarity patterns based upon shared religion, language, ethnic identity, caste and region commanding a loyalty rivalling at least in some situations that which the nation state itself is able to generate, a national consensus on basic social and political goals is hard to establish.

However, an overwhelming number of middle class Ceylon Tamils in the north and east look towards the Sinhalese south and the capital city, Colombo, for economic gain and political preferment. This inhibits the development of a separatism that looks to south India as an alternate focus of loyalty, though in times of stress there has been an attraction to extra-national movements such as the D. M. K. and a turning to Madras for succour.

On the other hand, as the Sinhalese Buddhists are politically and socially divided, and are unsure of their own strength and cohesion, they tend to regard the non-Buddhist minorities, especially the Ceylon and Indian Tamils and Roman Catholics, as a greater threat than they actually are.

In a sense, therefore, there are two nationalisms in Sri Lanka, a Sinhalese nationalism and a Tamil nationalism

which vacillates, depending on the degree of intensity of Sinhalese Buddhist political consciousness, between a terminal loyalty to the Tamil nation and an overriding loyalty to a Ceylonese nation.

But there is a balancing factor. The Sinhalese power elites are keenly aware of the need to maintain national unity. They have therefore not pushed Sinhalese Buddhist nationalism too hard so as to bring about the break-up of the nation itself. The Buddhist ethos of moderation acts here as a deterrent to extremism."—pp. 58 and 59, A. Jeyaratnam Wilson.

"The concessions made to the Tamil minority regarding the status of their language in the Sri Lanka polity were a fulfilment of a pledge given in the government's first statement of policy in the National State Assembly on 4 August 1977' well before the outbreak of the communal disturbances. Two articles in the new constitution set the tone. Article 19 declares that Sinhalese and Tamil shall be the national languages of Sri Lanka (with Sinhalese remaining the sole official language), a major departure from the established language policy since the mid-1950s. Equally important, Article 26 abolished the distinction between citizens by descent and citizens by registration— an irritant to the Indian Tamils—and thus removed the stigma of second-class citizenship attaching to the latter. Combined with the elimination, in December 1977, of the bar, in force since the 1930s on plantation workers resident on estates voting in local government elections, this ensured that persons of recent Indian origin are treated on a par with Sri Lankan citizens by descent. The position of Indians resident in Sri Lanka was further improved by affording to 'stateless' persons the same civil rights as are guaranteed by the constitution to citizens of the country. No previous constitution, not even that of 1947, offered the minorities a more secure position within the Sri Lanka polity than does the present one.

So far the Indian Tamils have responded more positively to these conciliatory gestures than the T. U. L. F. When S. Thondaman— leader of the Ceylon Workers Congress, the main political party cum trade union of the Indian plantation

workers—entered the cabinet with the introduction of the new constitution in september 1978, it marked a major break through in Sri Lanka's politics for it brought the Indian Tamils within Sri Lanka's 'political nation' for the first time since the 1930s. The T.U.L.F. now very much a party of the indigenous Tamils, has ostentatiously dissociated itself from the processes of constitution-making in its anxiety to underline a commitment to Eelam, a separate state for the Tamils. They appear to lack the political strength for the bold initiatives which a policy of reconciliation calls for. Above all, it is all too conscious of the challenge from a youth wing of the party and especially an extremist terrorist group who are the most committed adherents of separatism. Thus, for the second time since the 1930s the pace-setters in Tamil politics are a youth group."

— PP. 559 & 560, K. M. De Silva

14. "In fact it is not an exaggeration to state that during the early phase of the Tamil renaissance Sri Lankans have led the way in many fields. The 'Jaffna School' was highly esteemed by religious and secular scholars in South India. It may be of incidental interest to note that two of the first graduates of the University of Madras – C.W. Thamotaram pillai and C. Viswanatha pillai—were from Jaffna. The former who virtually settled down in Madras became a member of the Madras University syndicate and was perhaps the "most sought after" Tamil scholar of his day.

It must also be pointed out that quite a few of the Sri Lankans mentioned above spent many years of their lives in India: Thamotaram Pillai and Ponnampalam Pillai, for instance, held important positions in government or state service and for all purposes were expatriates. Others like Navalar and Kumaracami pulavar travelled frequently in South India In that sence although they were Sri Lanka their centre of activity was Madras, considered till recently the land **par excellence** of Tamil and Saivism. The poineer Tamil scholars of the last century thought in fundamental terms without regional or geographical limitations and emphasis.

However with the growth of nationalism and the political separation of India and Sri Lanka and the inevitable struggle

for nationhood by the people of the two countries, many Tamils in Sri Lanka began to feel that their destiny was to be determined in their own country and not elsewhere. Consequenty in the post independent years Tamil studies in Sri Lanka began to assume and reflect a distinctive tone and voice. This new trend manifested itself initially and markedly in creative literature resulting in the movement for "National literature". In 1956 the movement was launched by a group of writers although its genesis goes back to a few years earlier.
— K. Kailasapathy, Tamil Studies in Sri Lanka.

15. வரலாற்றுத் துறை ஆசிரியர் ஒருவர் இது பற்றிக் கீழ்க் கண்டவாறு ஒரு குறிப்பு தந்துள்ளார்:

"May I also please make this suggestion. Archaeology as a discipline includes many aspects such as Pre and Protohistoric archaeology, art, architecture, sculpture, painting and epigraphy. Unfortunately, the State of Tamil Nadu is lagging far behind in comparison with other States in the research on Pre and Protohistoric Archaeology, although relatively there is much of a scope for this in Tamil Nadu. We cannot also ignore the fact that after Dr. R. Nagaswamy took over as Director of Archaeology, much has been done-more so in epigraphy. More concentration in this field will help us to trace the roots of the Tamil Civilization which should form an important field of research in the specially instituted Tamil-University. Incidentally, I would like to mention, that the Blue print for the International Institute of Tamil Studies had also the idea of setting up a separate Department of Archaeology ond Anthropology. Unfortunately, this has not been followed up thus far. Therefore, it devolves upon you to open a separate Department for Archaeology under which the Departments of Art, Architecture, Sculpture, Painting, Anthropology and Epigraphy can be made sub Departments. The Department of Archaeology must have, besides trained archaeologists, an expert each in Geography, Geology, Botany, Zoology, Chemistry and Computer Science. I hope you will give this matter your candid consideration. Recent archaeological finds in Sri Lanka are of absorbing interest to students of Tamil Prehistory and protohistory."

— Dr. S. K. Sitrampalam, Department of History
University of Jaffna, Thirunelvely, Sri Lanka

2. சிங்கப்பூர்

முன்னுரை

சிங்கப்பூர், வைரத்தின் வடிவிலமைந்த ஒரு சிறிய தீவு; குறுக்கும் நெடுக்கும் 22.5, 4.8 கி.மீ. தொலைவே உடையது; தமிழகத்தின் தென்கிழக்கே 1500 மைல் தொலைவில் உள்ளது. ஆனால், கீழை நாடுகளும் மேலை நாடுகளும் இணைவதற்கு வாய்ப்பான ஓர் இடத்தில் ஒரு நல்ல துறைமுகத்தைப் பெற்று, அதனால் உலகத்தின் கவனத்தை ஈர்த்து, ஒழுக்கத்தோடும் கட்டுப்பாட்டுடனும் சமூகத்தினை அமைத்து வாழும் ஒரு நாடாக சிங்கப்பூர் இன்று விளங்குகிறது. நடுவிலே காடுகளும் குன்றுகளும் உள்ளன. சுற்றிலும் 50 தீவுத் திட்டுக்கள் அமைந்துள்ளன. துறைமுகப் பணி, கப்பல் கட்டுதல், கட்டுப்பாடற்ற வணிகம் ஆகியவையே சிங்கப்பூரின் பொருளாதார வாழ்க்கையாகும். அதனுடைய சமூக வாழ்க்கை உலகப் பொதுமையினை நோக்கி நடைபோடுகின்றது. அனைத்து மக்களும் இணைந்து வாழும் ஒரு நாடு அது. எல்லோருமே வந்து குடியேறியவர்கள்.

சிங்கப்பூரின் வரலாறே 160 ஆண்டுகள் மட்டுமே பழமை யுடையது. சர் ஸ்டாம்ஃபோர்டு ராஃபில்ஸ்(Sir Stamford Raffles) என்ற ஆங்கிலேயர், ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்திற் காகத் தேடிச் சென்று 1819-இல் சிங்கப்பூர்த் தீவைக் களமாக அமைத்தார். அப்பகுதியை ஆண்டு கொண்டிருந்த சுல்தான்களிடமிருந்து அவர் உரிமை பெற்றார். இந்திய அரசின் பகுதியாகவும் தனியரசாகவும் இங்கிலாந்தரசின் பகுதியாகவும் நீண்ட நாள் அது விளங்கியது. 1942 முதல் 1945 வரை 2-ஆம் உலகப் போரின் போது ஜப்பானியர் சிங்கப்பூரைக் கைப்பற்றி வைத்திருந்தனர்; பின்னர் அதனை ஆங்கிலேயர் திரும்பப் பெற்றனர். அது ஓரளவு உள்ளாட்சி பெற்று ஆங்கிலேயர்

ஆட்சிக்குக் கட்டுப்பட்டு இருந்து 1965-இல் கட்டறுத்து விடுதலை பெற்றுத் தனிக் குடியரசு ஆகியது.[1]

பொருளாதாரத்தில் நல்ல வாழ்க்கைத் தரத்தை அது இன்று பெற்றிருக்கிறது. சமயமும் மொழியும் அங்குப் பொருளல்ல. பலருக்கு அங்குப் பணமே தெய்வம் போலும்! 4 பேருக்கு ஒரு தொலைபேசியும் 6 பேருக்கு ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்கும் வாழ்க்கைத் தரத்தை அது அடைந்திருக்கிறது.[2]

மொத்த மக்கள் தொகை 24 இலட்சம். சீனர் 18 இலட்சம் (76%), மலாய் மக்கள் 4 இலட்சம் (15%), இந்தியர் 1,62,000 (6.3%) என்ற அளவில் சிங்கப்பூரின் மக்கள் தொகை அமைந்துள்ளது (1979-இன் கணக்கு).

சிங்கப்பூரின் இந்திய மக்கள் தொகை இங்குச் சிறப்பாகக் கவனிக்கத் தக்க ஒன்றாகும். சிங்கப்பூரின் வழக்கப்படி இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் இலங்கையிலிருந்தும் சென்று குடியேறிய அனைவரும் இந்தியர் எனக் குறிப்பிடப்படுகின்றனர். அங்கு வாழும் இந்தியர் தொகை, மொழி வாரியாகவும் நாடு வாரியாகவும் இவ்வாறு அமைந்திருக்கிறது:—

இந்தியர்	..	1,62,000	..	100%
தமிழர்	..	98,425	..	65%
மலையாளிகள்	..	22,000	..	15%

இந்தியரில் எஞ்சிய 20% பங்கினர் பெரும்பாலும் இந்தி, வங்காளம், தெலுங்கு, பஞ்சாபி பேசுவோராவர்.

இத்தமிழரில் இலங்கையிலிருந்து சென்று குடியேறிய தமிழர் 3%, ஏறத்தாழ 3,000 பேர். இந்தியத் தமிழரில் 75% மக்கள், சிங்கப்பூர், மலேசியாவில் பிறந்து அவற்றைத் தாயகமாகக் கொண்டவர்கள்; இந்தியாவுக்கு வந்து போவோர் 15 விழுக்காட்டுக்கும் உட்பட்டவர்களே. பெரும்பாலான தமிழர்கள் இப்போது தாய்த் தமிழகத்திற்குத் திரும்பி வருவது பற்றி எண்ணிக் கொண்டிருப்பதில்லை.[3]

சிங்கப்பூர் அரசு பரந்தமனப்பான்மையுடையதாகத் தெரிகிறது. அது இனமொழி வேறுபாடு காட்டுவதில்லை. அங்குப் பூமிபுத்திரர் என்போர் எவருமிலர். 1957 முதல்தான் அங்குக் குடியுரிமை முறையே வந்தது. ஒழுங்கும் கட்டுப்பாடும் தூய்மையும் முன்னேற்றமுமே அவ்வரசின் குறிக்கோள். தொழிலாளர்களே,

அங்குப் பெரும்பான்மையோர். இன்றைய அரசின் தலைவர்கள் தொழிலாளர் தலைவர்களே.

சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள் கல்வி நிலையில் உயர உயரத் தமிழ்ப் பண்பாட்டின்மீதும், தமிழ் இலக்கியங்களின்மீதும், தமிழ்ச் சமயங்களின் மீதும் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். இவ்வகையில் சிங்கப்பூர் ஒரு சின்னஞ்சிறிய தமிழ் நாடாக விளங்கி வருகிறது. அங்குள்ள தமிழர்களை இணைக்கும் இலக்கியச் சங்கிலியாகக் **கோ. சாரங்கபாணியார்**, தோற்றுவித்த தமிழ் முரசு என்னும் ஏடு இப்போது விளங்கி வருகிறது. சிங்கப்பூர்த் தமிழர்களின் செய்திகளைத் தருவதோடு தமிழகத்தின் செய்திகளையும் அது தந்துகொண்டிருக்கிறது. சிங்கப்பூர்த் தமிழரின் இலக்கிய உணர்வையும், ஆர்வத்தையும் விளக்கும் கருவியாகவும், ஞாயிறு முரசாகவும் அது இயங்கி வருகிறது. கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலான இலக்கியங்களை வெளியிட்டுச் சிங்கப்பூர்த் தமிழ்மக்களிடையே இலக்கிய எழுத்தார்வத்தை அது தூண்டி வருகிறது. ஒரு முறை அதன் ஆசிரியர் திரு **வி என். எம். முகைதீன்**, சிங்கப்பூரில் சுமார் 150 கவிஞர்களும் 20 எழுத்தாளர்களும் 5 நாவல் ஆசிரியர்களும் அற்புதமாகப் பணியாற்றுகின்றனர்; சிங்கப்பூரில் வெளிவரும் சிறுகதைகள் இணையற்றவை; தமிழக எழுத்தாளர்களின் சிறுகதைகளைவிட இவை விஞ்ஞான ரீதியாக 10 ஆண்டு முன்னேறியவை என்று குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூர்த் தமிழரின் சமய வாழ்க்கை, தமிழகச் சமய வாழ்க்கையின் மறுபதிப்பே. ஆனால், அங்கு வைதிகம் இல்லை. மாரியம்மன், திரௌபதி, முருகன், பிள்ளையார், தீ மிதிப்பு, பூக்குழி—காவடி,வெளிநாட்டார் வியப்பு—இவை அங்குள்ள இந்துத் தமிழர் சமயம். சிங்கப்பூரின் ஓர் இலட்சம் தமிழரில் ஏறத்தாழ 40 பங்கினர் இசுலாமியத் தமிழர் எனக் கருதப்படுகிறது.

இன்றைய சிங்கப்பூர் அரசு இன வேறுபாட்டைப் புறக்கணித்துச் சிங்கப்பூர் என்னும் நாட்டுக் குடிமக்களையே காண விரும்புகிறது. தமிழர் எண்ணங்களில் தமிழகம் பசுமையாகத் தோற்றமளித்தாலும் சீனர் மலாயரைப் போன்று அவர்களும் 'சிங்கப்பூர்த் தமிழர்' என்னும் நிலையிலிருந்து 'தமிழ்ச் சிங்கப்பூரினர்' என மாற மனங்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

சிங்கப்பூர் அரசில் தமிழர்க்குச் சிறப்பான இடம் இருக்கிறது. சிங்கப்பூர் அரசின் தலைவர், தமிழ்ப் பெண்ணை மணம் பூண்ட கேரளத் தேவன்நாயர் ஆவார். மேலும் இரு தமிழர், அமைச்சர்

களாக இருக்கின்றனர். (ஆனால் தமிழரைவிட இரண்டு மடங்கான மலாய் மக்கள் அமைச்சகத்தில் இடம்பெறவில்லை என்பது இங்கு எண்ணத்தக்கது.)

முன்னர், ஆங்கிலேயர் கட்டாயத்தால் ஆங்கிலம் கற்றுவந்த சிங்கப்பூர், இன்று தானே விரும்பி ஆங்கிலத்தை அரியணை ஏற்றியுள்ளது. அதனோடு தமிழும் மாண்டரின் சீனமும் மலாயும் ஆட்சி மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன. (மலாய் தேசிய மொழி எனவும், ஆங்கிலம் அலுவல்மொழி எனவும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன.) தமிழகத்திற்கு அப்பால் தமிழ் எங்கும் பெறாத ஏற்றம் இது.

சிங்கப்பூரில் எல்லா வாய்ப்புக்களும் உண்டு. எல்லா நிலைகளிலும் தமிழர்க்கும் தமிழுக்கும் வாய்ப்புண்டு. தமிழர் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறலாம்; சிறப்புப் பெறலாம்.[4]

திட்டமிடல் 5—6—82 சனி, மாலை

தாமாகவே முன்வந்து அறிமுகம் செய்துகொண்ட பள்ளி ஆசிரியர் **செயதேவன்** அவர்கள் இல்லத்தில், அவர்களுடைய அன்பு விருந்தோம்பலுடன் அன்று தங்கும் வாய்ப்பு கிடைத்தது. திரு செயதேவன் தமிழ் உணர்வும் ஆர்வமும் கொண்டு, பல்வேறு இயக்கங்களில் பங்குபெற்றுப் பணியாற்றிவரும் சிங்கப்பூர்த் தமிழ ராவார். சிங்கப்பூர் வானொலியில் பணியாற்றும் திரு **கண்ணப்பன்** அவர்களும் என்னை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந் தார். சிங்கப்பூரில் நான் செய்ய வேண்டிய பணிகள் பற்றி அவர் களுடன் கலந்து திட்டமிட்டுக்கொண்டேன்.

தமிழர் இயக்கங்களிடை 6—6—82 காலை 10 மணி

(சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள் உணர்வாலும் உறவாலும் தமிழகத்தோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றனர்.) தமிழகத்தின் நினைவுகள் அவர்கள் உள்ளத்தில் பசுமையாக நின்று நிலவுகின்றன. சிங்கப்பூரில் தமிழர் உறவுடைய மன்றங்களாக ஏறத்தாழ 80 உள்ளனவாம்! (இவ்வாறு ஒருவர் கணக்குக் கூறு கின்றார்.) தமிழ் ஆர்வமுள்ள பல மன்றங்களின் பொறுப்பாளர் கள் இணைந்து இன்று ஒரு கூட்டம் நடத்தினர். அடுத்த உலகத் தமிழ் மகாநாட்டைச் சிங்கப்பூரில் நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதலும் வழிவகை காணுதலும் இந்தக் கூட்டத்தின்

நோக்கங்களாகும். பல்வேறு அமைப்புக்களின் பொறுப்பாளர்கள் 15 பேர் அங்குக் கூடினர். இக்கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களையும் திட்டங்களையும் விளக்குவதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கேள்விகள் பல கேட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி மேலும் பல கருத்துக்களை அவர்கள் தெரிந்துகொண்டனர்.

மலேயாப் பல்கலைக் கழகத்தில் நூலகராகப் பணியாற்றிய திரு **இக்குவனம்** அவர்கள் மலேயா நூலகங்களில் இதுவரை நடைபெற்ற தமிழ்ப் பணி பற்றிச் சில குறிப்புக்கள் தந்தார்: மலேயாப் பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறைத் தலைவராக விளங்கிய முனைவர் **இராம சுப்பையா** மலேயாவில் தமிழ்க் கல்வி ஆராய்ச்சிக்கான நூல்கள் அனைத்தையும் தொகுத்து வைத்து உள்ளார். 1973-க்கு முன் வெளியான பத்திரிகைகள் அனைத்தும் நுண்படமாக (மைக்ரோ பிலிம்) எடுக்கப்பட்டுள்ளன. இலண்டன் நூலகங்களிலிருந்துகூட அவ்வாறு நுண்படங்கள் எடுத்துக் கொண்டுவந்து முனைவர் இராம, சுப்பையா தொகுத்துக் கொடுத்தார். அவை பற்றி ஓர் ஆய்வும் நடைபெற்று உள்ளதாகத் தெரிகிறது. எதிர்காலத் தமிழ் ஆராய்ச்சிக்கு அக்குறிப்புக்கள் பயன்படும். அவை மலேயாப் பல்கலைக் கழகத்து நூலகங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

சிங்கப்பூரில் வெளியாகும் நூல்களை எல்லாம் பதிவு செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால், ஆராய்ச்சிக்குத் தனிப்பட்டோருடைய முயற்சியையும் நம்பி இருக்க வேண்டி இருக்கின்றது. சிங்கப்பூரில் தமிழர்கள் நூல் வெளியிடும் வாய்ப்பும், விற்பனை செய்யும் வாய்ப்பும் மிகக் குறைவாகவுள்ளது. தமிழர், குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்ற காரணத்தால் வெளியீடுகள் பொதுவாகக் குறைந்துள்ளன. அதன் காரணமாக அச்சக வாய்ப்புக்களும் மிகக் குறைவாகவேயுள்ளன.

சிங்கப்பூரில் தமிழில் உயர்கல்வி இல்லை. தமிழில் பட்டம் பெறுவோர் தோன்றுதல் இல்லையாகிவிட்டது. சிங்கப்பூர்த் தமிழர்கள் தமிழில் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு என்ன என்ற வினா எழுப்பப்பட்டது. இவ்வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் உதவி செய்யுமா என இக்கூட்டத்தில் பலர் அறிய விரும்பினர்.

தமிழ் வரலாற்றுக்கான சான்றுகள் சிங்கப்பூரைவிட இந்தோனேசியாவில் மிகுதியாக உள்ளன எனவும், அவை அங்குப் போற்றிக் காக்கப்படுகின்றன எனவும் அக்கூட்டத்தில் சில அறிஞர்கள் சுட்டிக்காட்டினர்.

சிங்கப்பூர் அரசின் செய்தி அலுவலருடன்

6—6—82 நண்பகல்

சிங்கப்பூர்ப் பண்பாட்டு அமைச்சகத்தில் செய்தி அலுவலராகப் பணியாற்றும் திரு **வை. திருநாவுக்கரசு** என்பாரைக் கண்டு உரையாடினேன். மயிலாடுதுறையில் பிறந்து, சேலம் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றுப் பத்திரிகை நடத்துதலில் பயிற்சி பெற்று,அதன் காரணமாகச் சிங்கப்பூர்த் தமிழ் முரசு பத்திரிகைப் பணிக்குச் சென்று, சிங்கப்பூர்த் தமிழர் வாழ்க்கையோடு கலந்து அனுபவம் பெற்று, இப்போது சிங்கப்பூர் அரசின் பண்பாட்டுத் துறையில் உயர் பணியாற்றிவரும் தமிழ்த் தெலுங்கர் அவர்.

அவர் இன்றைய சிங்கப்பூரின் பொதுவான நிலையையும் தமிழரின் நிலையையும் விளக்கினார். பொதுவாக, அவர் குரலில் ஏமாற்றமும் நம்பிக்கையின்மையும் ஒலித்தன. $1\frac{1}{4}$ இலட்சம் இந்தியர்களில் ஏறத்தாழ 1 இலட்சம் பேர் தமிழராக வாழும் சிங்கப்பூரில் தமிழர் வாழ்க்கை வளப்படுவதற்கும் கல்வி மேம்பாடு அடைவதற்கும் வாய்ப்புக்கள் சிறப்பாக இல்லை என அவர் வருத்தம் தெரிவித்தார். சீனர், மலாயர், இந்தியர் ஆகியோரில் தமிழர்கள்தான் குறைவாகப் பள்ளிகளில் கல்வி கற்கின்றனர் எனவும், மேல் வகுப்புக்கள் செல்லச்செல்லப் பள்ளி விட்டு நீங்குவோர் தொகை கூடுதலாக இருக்கிறது எனவும் தமிழ் மாணவர்கள் தாய்மொழியில் கற்பதைவிட்டு ஓரளவு சீனமும்(10%), மலாயும் (1%) படிக்கச் சென்றுவிடுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாகப் பல்கலைக் கழக நிலை வருகின்றபோது தமிழ் மாணவர்கள் மிகக் குறைவாக இருக்கும்நிலை உருவாகியிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார். தமிழ்க் கல்வியையோ இந்தியக் கல்வியையோ படிக்க மாணவர்கள் முன்வராத காரணத்தால் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்வித்துறையும் இந்தியக் கல்வித்துறையும் ஏற்பட வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றதாம். ஓரளவு பல்கலைக் கழகக் கல்வியை நாடும் தமிழ் மாணவர்கள் வாழ்க்கைக்கு நேரிடையாகவும் உடனடியாகவும் பயன்படும் வணிகவியல், ஆட்சியியல், பொருளாதாரம் முதலான துறைகளுக்குச் சென்றுவிடுகின்றனர். பொதுவாக, சிங்கப்பூர் மக்கள் சமூக நிலையில் ஏற்பட்ட மாற்றமும் தமிழரின் உணர்வுநிலையில் ஏற்பட்ட மாற்றமும் இவற்றுக்குக் காரணமாக அமைந்தன. உயர்நிலைப் பள்ளிகளில் தமிழருக்கென நடைபெறும் கல்வியினைக்கூட தொடர்ந்து நிலைநிறுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டிப் பல்கலைக் கழக மட்டத்திலும் தமிழ்

ஆராய்ச்சிக்கும் கல்விக்கும் வாய்ப்பு அரிது என்றும் திரு திருநாவுக்கரசு குறிப்பிட்டார். நாட்டின் மிக உயரிய அரசுத் தலைவர் கல்வித் தொகையினை (Presidential Scholarship) பெற்று வெளிநாடு சென்று படிக்கவல்ல தமிழ் மாணவர் தோன்றவில்லையே என்று கூறி, அவர் கவலைப்பட்டார்.

தமிழ் முரசுடன் 6–6–82 பிற்பகல்

சிங்கப்பூர்த் தமிழ்மக்களின் வாழ்விலும் மொழியிலும் கடந்த அரை நூற்றாண்டாகப் பங்கு கொண்டு பணியாற்றிய நாளேடு **தமிழ் முரசு** ஆகும். தமிழர்களிடையே விழிப்புணர்ச்சி, ஒற்றுமை, தமிழ்உணர்வு, இலக்கியஉணர்வு ஆகியவற்றை ஏற்படுத்தியதில் தமிழ் முரசு இதழுக்குப் பெரும்பங்கு உண்டு. இன்றும் தமிழ் முரசு ஏடு ஒன்றுதான் சிங்கப்பூர்த் தமிழ்மக்களின் செய்தி ஏடாக விளங்குகின்றது. இவ்வேட்டினை வளர்த்தவர் அங்குள்ள தமிழர் களால் **தமிழவேள்** என்று அன்புடன் போற்றப்படும் கோ. சாரங்க பாணி அவர்கள். இன்று அவர்கள் இல்லை. அந்நாளேட்டின் ஆசிரியரைக் காணும் வாய்ப்பினை 6–6–82 ஞாயிறு பிற்பகல் அமைத்துக் கொண்டேன். அதன் இன்றைய ஆசிரியர் திரு முகைதீன் பொதுவாக மலேயா, சிங்கப்பூர்த் தமிழர்களைப் பற்றியும் அந்நாடுகளின் வரலாறு பற்றியும் பல்வேறு கருத்துக் களை உணர்ச்சியோடு எடுத்து விளக்கினார். மலேயாவில் கெடா எனப்படும் கடாரத்தில் அகழ்வராய்ச்சி நடத்தப்பட்டதையும் இந்தியச் சமயச் சான்றுகளாகக் கட்டடம், கோவில், சிலை முதலியவை கிடைத்துள்ளமையையும் அவர் குறிப்பிட்டார். தமிழ்ப் பண்பாடு அங்குப் பரவியதற்கான சான்றுகள் அவை என்றார்.

''சென்ற நூற்றாண்டில் தமிழகத்தின் நாகூரிலிருந்து சென்ற முன்ஷி அப்துல்லா என்னும் இசுலாமியர் ஒருவர் முதல்முதலாக மலாய் மொழியில் இலக்கணம் எழுதினார்; வசன நூல்கள் எழுதினார். இவருக்குப் பின்னரே மலாய் மொழியில் இலக்கிய வளர்ச்சி தொடங்கியது. இவர் நூல்களைத் திரட்டிச் சென்று முனைவர் இராம. சுப்பையா ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பல்கலைக் கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்'' என மேலும் அவர் வரலாறு கூறினார்.[5]

இன்றைய மலாய் மொழி என்பது அரபி, சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கையென முகைதீன் கருதுகிறார். இன்று மலாய் மொழி பிற மொழியின் கலப்பின்றித் தூய்மைப் படுத்தப்படுகிறதாம்.

''இடைக்காலத்தில் தமிழகம், மலேயா, சிங்கப்பூர், சாவகம் உள்ளிட்ட ஸ்ரீவிஜயப் பேரரசு ஒன்று இருந்தது பற்றி வரலாறு குறிப்பிடுகிறது. இப்பேரரசால் இந்துசமயமும் தமிழ்ப்பண்பாடும் கீழை நாடுகளில் பரவின எனலாம். இத்தகைய விவரங்களை **Pallava Influences on South East Asia** (சுதேசமித்திரன் வெளியீடு 1968) எனும் நூல் விளக்குகிறது. இந்தியா, தென்கிழக்கு ஆசியா ஆகியவற்றின் அண்மைக்கால வரலாறுகளை டச்சு பிரஞ்சு மொழியில் அமைந்த பதிவேடுகள் நிறைய விளக்குகின்றன''.

மலாய் மொழியில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வெளி வந்துள்ளது. 1967-இல் சீன மொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டு மலேயாப் பல்கலைக் கழக இந்தியத்துறையில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் பொருள்உதவியுடன் வெளியிடப் பட்டுள்ளது.

மலேயாவில் மலாக்காச் செட்டியார் என்போர் பல நூற் றாண்டுகளுக்கு முன்னர் அங்குக் குடியேறி மலாய் மொழியை மேற்கொண்டனர். ஆனால், அவர்கள் பழக்க வழக்கங்கள் இந்தியச் சமுதாயத்திற்கு உரியன. அவர்கள் எண்ணிக்கையோ 150 தான்.

சிங்கப்பூரில் ஆண்டுதோறும் கதை, கவிதை நூல்கள் 8/10 வெளி வருகின்றன.

நூறாயிரம் தமிழர்கள் வாழும் சிங்கப்பூரில் தமிழ் முரசு ஏடு இன்று 9,000 படிகள் விற்பனை ஆகின்றன. தமிழகத்தைப் போன்றே தமிழ் உணர்வும், ஆர்வமும் அழுத்தமாகப் பெற்ற தமிழர்களில் ஒருவராக இத்தமிழ் முரசின் துணைஆசிரியர் திரு **மே. திருநாவுக்கரசு** விளங்குகின்றார்.

சிங்கப்பூர் வானொலியில் — 6—6—82 இரவு

சிங்கப்பூர் வானொலிக்கு வேண்டிய பேட்டி ஒன்றினை அங்குப் பணியாற்றும் திரு கண்ணப்பன் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். 8-6-82 காலை, மாலை அப்பேட்டிகள் சிங்கப்பூர் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. தமிழ்ப் பல்கலைக் கழகத் தின் நோக்கங்களையும் திட்டங்களையும் அப்பேட்டியில் நான் விளக்கினேன்.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில்
7—6—82 முற்பகல்

இந்தியா, இலங்கை, தென்கிழக்காசியா ஆகிய நாடுகளைச் சார்ந்த பல்கலைக் கழகங்களுள் மிகச் சிறந்த பல்கலைக் கழகமாகச் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. அழகிய மலைச் சரிவில் அமைக்கப்பட்டுள்ளது. புதிய துறைகளும் கட்டடங்களும் இன்றும் உருவாகிக்கொண்டுவருகின்றன. கோடை விடுமுறை ஆதலால் பல்கலைக் கழகத்தில் கல்விப்பணி சிறிது குறைந்திருக்கிறது. பல ஆசிரியர்கள் விடுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு வெளியே சென்றுவிட்டனர். பல்கலைக் கழக நூலகம் குளிர்சாதன வசதியோடு விரிவாகவும் அழகாகவும் தூய்மையாகவும் அமைக்கப்பட்டுள்ளது. நூலக உதவியாளர்கள் பலரையும் கண்டு நூலகம் பற்றிச் சில செய்திகளைத் தெரிந்து கொண்டு, அந்நூலகம் பற்றிய வெளியீடுகள் சிலவற்றையும் பெற்றுக் கொண்டேன்.

('சிங்கப்பூரின் கல்வி நிலை' பற்றி ஒரு குறிப்பு இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இங்குக் குறிக்கப்படும் பல கருத்துக்களுக்கு விளக்கமாகவும் பின்னணியாகவும் அது அமையும்.)

தென்கிழக்காசியக் கல்வி நிறுவனம் 7—6—82 பிற்பகல்

பல்கலைக் கழகத்தின் ஒரு பெருந்துறை போன்று தனித்து இயங்கும் ஒரு நிறுவனமாக இது விளங்குகின்றது. முற்றிலும் அரசாங்கத்தினுடைய பொருள் உதவியோடு சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, ஃபிலிப்பைன்சு, பர்மா ஆகிய நாடுகள் உள்ளிட்ட தென்கிழக்காசியாவின் அரசியல் பொருளாதார சமூக வளர்ச்சி பற்றியும் இன்றைய மாற்றங்கள் பற்றியும் அரசியல் சூழ்நிலை பற்றியும் ஆராயும் நிறுவனமாகும் இது. 1968—இல் தொடங்கப்பட்டது. அந்நிறுவனத்தில் ஆராய்ச்சி எல்லையில் இந்தியாவும், இலங்கையும் உட்படவில்லை. ஆனால், தென்கிழக்காசியாவின் இந்திய மக்களும், இலங்கை மக்களும் வாழ்கின்ற காரணத்தால் அவர்களும் அந்நிறுவனத்தின் ஆராய்ச்சிக்கு உட்படுகின்றனர். பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களை வகுத்து, ஏராளமான வெளியீடுகளை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. தொடர்ந்து ஒருசில ஆராய்ச்சி இதழ்களையும் அந்நிறுவனம் வெளியிடுகின்றது. முனைவர் **வீரமணி** என்ற தமிழர் அந்நிறுவனத்தில் தமிழரைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க

ஆராய்ச்சி அறிஞராக விளங்குகின்றார். அவர் அண்மையில் ஆராய்ச்சித் திட்டம் ஒன்றினை மேற்கொண்டு இந்தோனேசியா சென்றுள்ளார். அந்நிறுவனத்தின் தலைவராக விளங்கும் முனைவர் **சாந்து**, மெக்ஸிக்கோ பயணம் மேற்கொண்டுள்ளார். அடுத்த ஆராய்ச்சி அறிஞராக விளங்கும் முனைவர் **ங்க்** என்னும் சீனப் பெண்மணியைக் கண்டு, அந்நிறுவனம் பற்றிப் பல கருத்துக் களை அறிந்து கொண்டேன். தென்கிழக்காசியாவின் தமிழ் மக்கள் சிக்கல்களைக் குறித்து ஆராய்வதற்கு அந்நிறுவனத்தில் வாய்ப்பு உண்டு என்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் அந்நிறுவனத் தோடு இணைந்து திட்டமிட வாய்ப்பு உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜெர்மானியப் பேராசிரியர் ஒருவர் 'இந்தியரிடையே மாறி வரும் சமயக் கொள்கை'களைப் பற்றி ஆராய்ந்து வருகிறார். அவருக்கு ஆராய்ச்சித் துணையாக இந்தியப் பெண்மணிகள் முனைவர் நிர்மலா, செல்வி சுசிலா ஆகியோர் பணியாற்று கின்றனர். 3 ஆண்டுகள் நடைபெறும் திட்டமாக இது அமைந் துள்ளது. பல்வேறு இனத்தாரிடையே திருமணம் பற்றி ஆராயும் திட்டம் ஒன்றும் இங்கு நடைபெற்று வருகிறது.

இந்நிறுவனத்திற்கென அமைந்த நூலகம் தென்கிழக்காசிய நாடுகள் பற்றிய அனைத்து வெளியீடுகளையும் வாங்கிப் போற்றி வைத்துள்ளது. இந்நூலகத்தில் நூல்களும் வெளியீடுகளும் ஏறத்தாழ 45,000 இருக்கின்றன எனவும், நுண்படங்கள் ஏறத் தாழ 82,000 (Microfilms, 6 550, Microfiches 75,270) உள்ளன எனவும் அதன் ஆண்டறிக்கை குறிப்பிடுகிறது. சிங்கப்பூரிலேயே உயர்மட்டத்தில் ஆராய்ச்சி நடத்த வாய்ப்பான நூலகமாக இது விளங்குகின்றது. தென்கிழக்காசியாவின் சிக்கல்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆராய்கின்றபோது இந்நிறுவனத்தில் அமைந் துள்ள வசதிகள் பலவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் ஆய்வுத் திட்டங்கள். மாணவர் பதவிகள், ஆராய்ச்சிப் பேராசிரியர் பதவிகள் முதலானவை தமிழ்ப் பல்கலைக் கழகத் துடையவை போன்று விளங்குகின்றன.

மொழி நிறுவனங்கள்

சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகத்தில் மொழி மையம் (The Language Centre) என ஒன்று உள்ளது பல்கலைக் கழகத் தின் பல்வேறு புலங்களில் கற்று வரும் மாணவர்கள் பெரும் பாலும் ஏதாவது ஒரு மொழியைப் பாடத் திட்டத்தை ஒட்டிக்

கற்கின்றனர். மேலை ஐரோப்பிய மொழிகளான ஆங்கிலமும், பிரான்சும், ஜெர்மனியும்; கீழை ஆசிய மொழிகளான மலாய், தாய், சீனம், சப்பான் ஆகிய மொழிகளும் கற்பிக்க அம்மையத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வைந்து மொழிகளுக்கும் மொழி ஆய்வுக்கூடங்களும், மொழிப்பதிவுக்கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இதிலே ஏறத்தாழ 600 மாணவர்கள் கற்று வருகின்றனர் என ஒரு குறிப்புக் கூறுகிறது.

சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகத்தோடு சீனர்களுக்குரிய பழைய நன்யாங் பல்கலைக் கழகம் இணைந்தபோது **சீன மொழி ஆய்வு மையம் (The Chinese Language and Research Centre)** அதில் இருந்தது. அம்மையத்தில் சீன மொழி கற்பிப்பதற்கும் ஆய்வதற்கும் இரண்டு பிரிவுகள் உள்ளன. சிங்கப்பூரில் சீன மொழியின் வளர்ச்சிக்கு அம் மையம் துணை செய்கின்றது. சீன மொழிக்குரிய பாடப் புத்தகங்கள் தயாரித்தல் முதல், மொழியாய்வு நிகழ்த்துதல் வரை இம் மையத்தில் பணிகள் நடக்கின்றன.

வட்டார மொழி மையம் (The Regional Language Centre)

கம்பூச்சியக் குடியரசு, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், ஆஸ்திரேலியா, பிரான்சு, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் தொடர்பு கொண்டு நடத்தும் மொழி வளர்ச்சி மையம் ஆகும் இது. கிழக்காசிய அரசு பொருளாதாரச் சூழலில் மொழிக் கல்வியினைத் தக்கவாறு வளர்ப்பது இம்மையத்தின் நோக்கமாகும். கீழை ஆசிய வட்டாரம் பல்வேறு மொழிகள் பேசும் சூழல் உடையதால் அந்தச் சூழலுக்கு ஏற்ற மொழி ஆராய்ச்சியினையும் அம் மையம் மேற்கொள்கிறது. சான்றிதழ்ப் படிப்பு, பட்டப் படிப்பு, ஆராய்ச்சி, கருத்தரங்குகள், வெளியீடுகள், இதழ்கள், மாநாடுகள், செயற்கூடங்கள் ஆகியவை நடத்தி இம் மையம் பணிபுரிந்து வருகிறது. இம் மையத்திலுள்ள நூலகம் கீழை ஆசியாவிற்குரிய பல்வேறு மொழிகளைப் பற்றிய செய்திகளையும் தன்பால் கொண்டுள்ளது. மொழிக் கொள்கை, மொழிப் பண்பாடு, மொழி வரலாறு ஆகியவை பற்றிய செய்திகளை இந்நூலகத்தில் பெற வாய்ப்பு உண்டு.

பல தனித்தனி வெளியீடுகள் மட்டும் அல்லாது அந்நிறுவனம் இரண்டு இதழ்களையும் வெளியிடுகிறது. இந் நிறுவனத்தில்

தமிழுக்கு வாய்ப்பு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், மகாலட்சுமி என்னும் ஒரு தமிழ்ப் பெண் பணிபுரிந்து வருவதாக அறிந்தேன்.

இம் மொழிமையம் பற்றிய செய்திகளைக் கல்விக் கல்லூரியில் பணிபுரியும் திரு ந. கோவிந்தராசன், எனக்கு எடுத்து விளக்கினார்கள். இதனை நேரில் காணும் வழிவகை எனக்குக் கிடைக்கவில்லை.

கல்விக் கல்லூரி 7–6–82 இரவு

சிங்கப்பூரில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான பள்ளி ஆசிரியர்கள் பொருட்டுப் பல்வேறு பயிற்சிகளையும் வழங்குவதற்கு இந் நிறுவனம் 10 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டு நடந்து வருகிறது. ஆங்கிலம், சீனம், தமிழ், மலாய் ஆகிய மொழிகள் கற்பிக்கும் பள்ளி ஆசிரியர்கள் இங்கே குறுங்காலப் படிப்பும், நெடுங்காலப் படிப்பும், கல்விப் பட்டப் படிப்பும், கல்வி முதுநிலைப் பட்டப் படிப்பும் கற்கின்றனர். பிஎச். டி. எனும் ஆராய்ச்சிப் பட்டப் படிப்பும் கற்பிக்கப்படுகின்றது. சிங்கப்பூரில் உள்ள பள்ளிக் கல்வி நிறுவனங்களின் பல்வேறு தேவைகளையும் இந்நிறுவனம் கவனித்துக் கொள்கிறது. இருப்பினும், பொதுவாகப் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள் குறைவாக உள்ளனர். தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கும் பாட நூல்கள் தயாரித்தலுக்கும் அந்நிறுவனத்தில் வாய்ப்புக்கள் முழுமையாக இல்லை. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கும் தமிழ் அறிவில்லாத தமிழர்களுக்கும் தமிழ் கற்பிப்பதற்கு ஏற்ற வாய்ப்பினை அந்நிறுவனம் நாடி நிற்பதாகத் தெரிகிறது. இந்நிறுவனத்தின் தமிழ்த் துறையில் டாக்டர் திண்ணப்பன், திரு செல்வரத்தனம், திரு கோவிந்தராசன் ஆகிய 3 பேர். இப்போது பணியாற்றி வருகின்றனர்.

இக் கல்லூரியில் பணியாற்றிவரும் திரு நா. கோவிந்தராசனை 7-6–82 இரவு சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சிங்கப்பூர்த் தமிழர் வாழ்விலும் தமிழ் மக்களின் வாழ்விலும் இணைந்து அக்கறை கொண்டுள்ள அவர், பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டார். கல்வித் துறைகளுக்கான பயிற்சிகள் நடத்தும் இக்கல்விக் கல்லூரி பற்றியும், வட்டார மொழிமையம் பற்றியும் அவர் விளக்கமான செய்திகள் தந்ததோடு, சிங்கப்பூர் பற்றியும் பல செய்திகள் தந்தார்.

சுசாரரமலாய என்ற மலாய் மொழியின் தொடக்கக் கால இதிகாசம், இராச சோழ என்பவர் சீனாவுக்குச் செல்லும் வழியில்

துமாரிக் என்னும் இடத்தில் தங்கிக் கடல் கன்னி ஒருத்தியைத் திருமணம் செய்து **சங்கநல உத்தமா** என்னும் இளவரசனை ஈன்று செல்ல, அவன் சிங்கத்தோடு தொடர்பு கொள்ளச் சிங்கப்பூர் என்ற பெயர் தோன்றியது எனக் குறிப்பிடுகின்றதாம். அந்த இதிகாசம் வரலாற்றின் சான்றுகளை உருவகப்படுத்தி உரைத்திருக்கலாம். இத்தகைய வரலாறு ஆராயத் தக்கதெனத் திரு கோவிந்தராசன் குறிப்பிட்டார்.

தேசியக் காப்பகங்கள் 8—6—82 காலை

சிங்கப்பூரில் **தேசிய நூலகம்** என ஒன்று இயங்கி வருகிறது. அதில் இன்றைய மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்கள், வெளியீடுகள் ஆகியவை ஏராளமாக வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் தலைநகரில் விளங்கும் மாவட்ட நூலகம் போன்று அது சுறுசுறுப்பாக விளங்குகின்றது. ஆங்கிலம் (6,46,609), சீனம் (3,54,508), மலாய் (1,58,428), தமிழ் (72,657) ஆகிய மொழிகளில் மொத்தம் 12,32,262 நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன என அரசுக் குறிப்பு கூறுகிறது (1980). அந்நூலகத்தில் **தென்கிழக்காசியக் கூடம்** என ஒன்று உள்ளது. இதில் தென் கிழக்காசியாவைப் பற்றிய அனைத்து வெளியீடுகளையும் காண லாம். இதிலிருந்து நூல்களை வெளியே எடுத்துச் சென்று படிக்க இயலாது. ஆராய்ச்சி மாணவர்கள் மட்டுமே உள்ளே சென்று படிக்கலாம் ஆராய்ச்சிக்கு வாய்ப்பாகத் தென்கிழக்கு ஆசியாவின் அனைத்து வெளியீடுகளையும் போற்றிக் காப்பது இந்தக் கூடத்தின் நோக்கம் போலும்.[6]

1887 முதல் 1890 வரை சிங்கப்பூரில் வெளிவந்த தமிழ் ஏடான **சிங்கை நேசன்** அந்நூலகத்தில் பேணிப் பாதுகாக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. அவ்வாறு ஏறத்தாழ 40 ஆண்டுகளாக நடைபெற்று வரும் தமிழ் முரசின் ஏடுகளும் நுண் படமாக்கப்பட்டு, அந்நூலகத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் அந்நூலகம் ஆராய்ச்சிக்குப் பயன்படும்.

தேசிய நூலகத்தை அடுத்துத் தேசிய அரும் பொருட் காட்சி யகம் அமைந்துள்ளது. சிங்கப்பூரின் வரலாறே 160 ஆண்டுக் காலமுடையதாதலால் அதற்கு முந்தைய பண்பாட்டுச் சின்னங் கள், வரலாற்றுச் சின்னங்கள் இல்லை. ஆதலால், அத் தேசிய அரும்பொருட் காட்சியகம் சிறியதாகவே விளங்குகிறது. அரசர் இருக்கைகள், அணிகலன்கள், பழஞ் சிங்கப்பூர்ச் சான்றுகள், புகைப் படங்கள் ஆகியவை அக்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

இது பெரும்பாலும் மலாய் மக்களின் உறவில் தோன்றியவை. தமிழருக்குரிய பகுதி ஒன்றும் அங்கு இல்லை. சென்னை எழும்பூர் அரும் பொருட் காட்சியகம் போன்று ஆராய்ச்சிக்காகப் பயன் படக்கூடியதாகவும் தெரியவில்லை. ஆராய்ச்சி வெளியீடுகள் ஒன்றும் அங்கில்லை.

அடுத்துத் தேசியப் பழஞ்சுவடி, பழம்பதிவேடுகள் காப்பகம் (National Archives and Records Centre....) ஒன்று இயங்கு கிறது. கி. பி. 1800 முதலான அரசாவணங்கள் – கீழையாசி யாவைப் பற்றியவை – அங்குள்ளன. தனியார் காப்பகங்களின் நுண் படங்களும் இங்குப் பெறப்பட்டுப் பேணப்படுகின்றன.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை
8–6–82 இரவு

முன்னைய மலேயாப் பல்கலைக் கழகம், முன்னைய நன்யாங் பல்கலைக் கழகம் ஆகிய இரண்டும் சேர்ந்து 1980 முதல் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகம் என்னும் ஒரு பெரும் பல்கலைக் கழக மாக உருவாகியது. இதிலே அறிவியல், மருத்துவம், கட்டடவியல், கலையியல், சமூகவியல், மொழியியல், வணிகவியல் முதலான பல்வேறு புலங்கள் அமைந்துள்ளன. அவை எல்லாவற்றிலும் ஏறத்தாழ 200 தமிழ் மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஆனாலும், தனியே ஒரு தமிழ்த் துறை இல்லை. தமிழ் மொழி இலக்கியம் கற்க மாணவர்கள் 15 பேர் முன் வருவார்களேயானால் ஒரு தமிழ்த் துறை தோற்றுவிக்க வாய்ப்பு உண்டு எனப் பல்கலைக் கழகம் குறிப்பிடுகின்றது. அந்த நிலை இன்னும் இப்பல்கலைக் கழகத்தில் உருவாகவில்லை! சிங்கப்பூர் நாட்டில் ஒரு சிறு பிரிவின ராகிய தமிழ்ச் சமூகத்தினர் பொருளாதாரத்தில் போட்டி போட்டுத் தம் வருமானத்தைக் கூட்டி வாழ வேண்டிய சூழலில் தமிழ் இலக்கியம் படிப்பதற்கு எண்ணமும் வாய்ப்பும் குறைவா கவே உள்ளது. ஆனாலும், தமிழ் மாணவர்கள் பலர் தமிழ்ச் சிந்தனைப் போக்கு உடையவர்களாக விளங்குகின்றனர்.

இவர்கள் பலரும் சேர்ந்து **சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை** ஒன்றை அமைத்து உள்ளனர். தமிழ் மாணவர்களை ஒன்றுபடுத்தல், அவர்களிடையே சமூக உறவினை வளர்த்தல், தமிழ் பற்றிக் கருத்தரங்குகள் நடத்துதல், மலர்கள் வெளியிடுதல், சிங்கப்பூருக்கு வரும் தமிழகத்து அறிஞர்களை அழைத்துப் பேச வைத்தல், தமிழ்ச் சுடர் என்னும் இதழ்

நடத்துதல், பிற மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தல், பொங்கல் விழா நடத்துதல், பிற சங்கங்களுக்கு உதவி செய்தல் ஆகிய பல்வேறு பணிகளை அத்தமிழ்ப் பேரவை செய்து வருவதாக அதன் செயலாளர் திரு கலைச்செல்வன் குறிப்பிட்டார். அவை மட்டுமல்லாது பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை ஒன்றினைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்கான பெரு முயற்சியினையும் அப்பேரவை மேற்கொண்டுள்ளது. இதற்குப் பல்கலைக் கழகத்து அதிகாரிகள், அமைச்சர்கள், தமிழ்ப் பெருமக்கள் ஆகியோரைக் கண்டு வற்புறுத்தி அப்பேரவையின் மாணவர்கள் முயற்சி மேற் கொண்டுள்ளனர். பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையினைத் தோற்றுவித்து எவ்வாறு அதனை நடத்த முடியும் என்பதனை இந்த மாணவர்கள் தம் வெளியீடுகள் வழியாகக் குறிப்பிட்டுள் ளனர். பல துறை மாணவர்களும் ஓரளவு தமிழ் கற்க வாய்ப்பு இருக்கும்படி அத்துறையினை அமைக்கலாம் என்பது அவர்கள் கருத்துப் போலும். இம்முறை, கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தில் செயல்பட்டு வருகிறது.

சொந்தமாகக் கட்டணம் செலுத்துதல், படக் காட்சிகள் நடத்துதல் ஆகியவற்றின் வழியாக அம்மாணவர்கள், தம் பேரவைக்குப் பொருள் தேடிக் கொள்கின்றனர்.

நாமக்கல்லிலிருந்து சென்ற துறைமுகத் தொழிலாளரின் மகன் திரு கலைச்செல்வன், பல்கலைக் கழகத்தில் வணிகவியில் படித்து வருகின்றார். தமிழின்மீது ஆர்வமும் ஊக்கமும் கொண்ட இளைஞராக அவர் தென்படுகிறார்.

பிரித்தானியர் குழுவினர் (The British Council) பல நாடு களிலும் ஆங்கிலத்திற்குச் செய்வது போன்று பிற நாடுகளில் உள்ள தமிழருக்கும், தமிழுக்கும் தமிழகம் பணிபுரிய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். சிங்கப்பூரில் உள்ள தமிழர் களுக்குப் பொருளாதார வகையில் உதவியும் பணியும் செய்வதற்கு ஒரு நிறுவனம் தேவை என்று அம்மாணவர் வற்புறுத்தினார். சைனா எம்போரியம் என்ற ஒன்று சிங்கப்பூரில் சீன மக்களுக்கு எவ்வாறு பாடுபட்டு, அவர்களை முன்னேற்றுகிறது என்பதை அந்த மாணவர் குறிப்பிட்டார். சிங்கப்பூரில் தமிழர்கள் பலர் செயற்கை வாழ்க்கை வாழ்கின்றனர் என்றும், காலம் செல்லச் செல்லத் தமிழைக் கை விடுகின்றனர் என்றும், ஆங்கிலத்தையும் சீன மொழியையும் கற்று வருகின்றனர் என்றும், எதிர் காலத்தில் ஆங்கிலம் மட்டும் அறிந்த தமிழராக அவர்கள் விளங்குவார்கள் என்றும் அந்த மாணவர் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சர் பேரா. செயக்குமாரிடத்து 9-6-82 நண்பகல்

சிங்கப்பூர் அரசின் அமைச்சரவையில் இலங்கைத் தமிழர் ஒருவரும், தமிழகத் தமிழர் ஒருவரும் இடம்பெற்று இருக்கின்றனர். இவர்கள் சிங்கப்பூர்க் குடியுரிமை பெற்ற தமிழர்களாவர். இவர்களுள் செல்வாக்கு மிக்கவராக விளங்கும் சட்டத் துறைத் துணை அமைச்சர் பேராசிரியர் செயக்குமார் அவர்களைக் கண்டு உரையாடும் வாய்ப்பினைத் தேடி அமைத்துக் கொண்டேன். இவர் இப்போது உள்துறை அமைச்சகப் பொறுப்புகள் சிலவற்றையும் கவனித்து வருகின்றார். பெயர் பெற்ற பன்னாட்டுச் சட்டத் துறைப் பேராசிரியர் இவர். அவரைச் சந்தித்த போது தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றிச் சில குறிப்புகள் தந்து, அவற்றின் நோக்கங்கள், திட்டங்கள் ஆகியவற்றை விளக்கினேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டங்கள் பற்றியும், கொள்கைகள் பற்றியும், சிங்கப்பூர் அரசின் கல்வி அமைச்சருக்கு நேரே எழுதினால் தக்கது செய்யலாம் என அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைக்கு வாய்ப்பு இல்லாது இருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பள்ளிக் கல்வி மட்டத்திலும் தமிழ் படிக்கும் மாணவர்கள் மேல் வகுப்புகளுக்குச் செல்லச்செல்ல விலகி விடுவது பற்றிச் சிங்கப்பூர் அரசின் தமிழர்கள் சிந்திப்பதாகத் தெரிகிறது. சிங்கப்பூர்த் தமிழ் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கப் பாட நூல்கள் போதுமானவையில்லை எனவும், தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத தமிழர்கள் தமிழ்மொழி கற்பதற்குப் பாட நூல்கள் தேவை எனவும், பொதுவாகத் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பதற்கான வசதிகள் தேவை எனவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் கற்பிப்பதற்குப் பாடங்கள் பதிவு செய்யப்பட்ட நாடாக்கள், படங்கள், பிற பதிவு ஏடுகள் பொதுவாகக் குறைவாக இருப்பதாக அமைச்சர் கவலை தெரிவித்துள்ளார்கள். ஆங்கிலத்தில் இவை கிடைப்பது போன்று தமிழிலும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். தமிழைக் கற்பிக்கும் பாடநூல்கள் (Teaching-Materials) பற்றிய பட்டியல்கள் அனுப்பி வைக்குமாறும் என்னிடம் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் தொடங்கிய உலகத் தமிழ்ப் பணி அவ்வளவாக அங்குப் பயன்படவில்லை என நான் நடத்திய உரையிலிருந்து தெரிந்துகொண்டேன்.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை தொடங்குவதற்கான முயற்சியில் அவ் அமைச்சர் அவர்கள் உதவலாம். அவ்வாறு உதவ வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களுக்கு நான் கருத்துக் கூறி, அத்தமிழ்க் கல்வித் திட்டத்திற்குத் தமிழகம் ஏதாவது உதவக் கூடும் என்றும் குறிப்பிட்டேன்.

சிங்கை நகர் ஒரு சிங்கார நகர். கை நிறையப் பொருள் வேண்டும். எல்லோரும் ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கின்றனர். பொருளில்லார்க்கில்லை இவ்வுலகம் என்பது அவர்கள் வேதம். கல்வியைக் கருத்தில் கொண்டுவந்த நான், பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று 4 நாள்களில் கோலாலம்பூர் புறப்பட்டேன்; 9–6–82 இரவு பேருந்தில் வடதிசை நோக்கிச் சென்றேன்.

சிங்கப்பூரில் கல்வி நிலை

சிங்கப்பூரில் இன்று ஏறத்தாழ ஓர் இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் குடியேறிவர்கள். அவர்களுள் ¾ பங்கினர் வெளிநாடுகளிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்றவர்கள். பெரும்பாலோர் தொழிலாளர்கள்; கடந்த 100 ஆண்டுகளில் சென்றவர்கள்; (ஓரளவு இசுலாமிய வணிகரும் உண்டு.) இன்றும் கடைகளிலும் தொழில் நிறுவனங்களிலும் துறைமுகத்திலும் தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றனர். ¼ பங்கினர் வணிகத்திலும் அரசினர் பணிகளிலும் தொழில் புரிகின்றனர்; சமூகத்தின் மேல்நிலையில் இருக்கின்றனர்; இன்றும் வட்டித்தொழில் புரியும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் இவர்களில் குறிப்பிடத்தக்கவர். பலர் இந்தியாவோடு தொடர்பு வைத்துக்கொண்டிருக்கின்றனர். மற்றையோர்க்குஇந்தியாவோடு இப்போது தொடர்பில்லை.

சிங்கப்பூரில் தொடக்கக் கல்வியும் இரண்டாம் நிலைப் பள்ளிக் கல்வியும் 10 ஆண்டுகள் நடைபெறுவதாகும். பிறகு மேல்நிலைக் கல்வி (Higher Secondary) 2 ஆண்டுகள் நடைபெறுவது. அதன் பின்னர் மாணவர்களுக்குக் கட்டாயப் படைப் பயிற்சி கொடுக்கப் படுகிறது. பின்னர் பட்டப் படிப்பு 3 ஆண்டுகள். பட்ட மேற் படிப்பு 2 ஆண்டுகள். முதல் பட்டப்படிப்பினை 4 ஆண்டுகள் தொடர்ந்து சிறப்புப் பட்டமும் பெறலாம்.

பள்ளிக்கல்வியில் மாணவர்கள் அனைவரும் முதலாவதாக ஆங்கில மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும். இரண்டா

வதாகச் சீனம், மலாய், தமிழ் ஆகிய தாய்மொழிகளில் ஒன்றைக் கட்டாயம் கற்க வேண்டும். மேல்நிலை முடிக்கின்ற வரை அந் நிலை உள்ளது.

கல்வி, இந்தியாவில் போன்றே கட்டணம் கட்டிப் படிக்க வேண்டிய கல்வியாகும். ஆனால், அரசு தாராளமாக மாணவர் களுக்குக் கல்வி உதவி (Scholarships) வழங்குகின்றது. மேல் நிலைப் பள்ளியில் பயிற்சியினை முடித்துவிட்டுப் பல்கலைக் கழக மட்டத்தில் மாணவர்கள் தொழிற்கல்வியினையோ கலைக் கல்வி யினையோ, அறிவியல்கல்வியினையோ, வணிகவியல்கல்வி யினையோ மேற்கொள்ளலாம். அங்கும் பல மாணவர்களுக்கு அரசு, கல்வி உதவி வழங்குகின்றது. தமிழ் மாணவர்கள் 100 க்கு 10 பங்கினர் சீன மொழி கற்கவும் 100 க்கு 1 பங்கினர் மலாய் மொழி கற்கவும் செல்கின்றனர். சீனர்கள் நடத்தும் நிறுவனங் களில் பணி புரியவும் பிற வேலை வாய்ப்பினைக் கருதியும் தமிழரும் சீனம் படிக்க முனைந்து இருப்பதாகத் தெரிகிறது. சிங்கப்பூரில் 100 க்கு 75 பங்கு மக்கள் சீனர்களே. அவர்கள் பொருளாதார மேம்பாட்டோடு சமூகத்தில் வலிமை பொருந்தியவராகவும் விளங்குகின்றார்கள். மலாய் மக்கள் தமிழர்களைப் போன்றே எளிய நிலையில் வாழ்கின்றார்கள். பள்ளிக்கல்வியில் தமிழ் மாணவர்கள் இடையில் கல்வியைக் கைவிடுவது என்பது மிகக் கூடுதலாக விளங்குகின்றது. குடும்பத்திற்குப் பொருள் தேடுதல் குறித்துப் பள்ளியில் தமிழ் மாணவர்கள் படிப்பதை விட்டுவிடுவ தாகத் தெரிகிறது. தமிழ் கற்பிக்கும் பள்ளிகள் சிங்கப்பூரில் ஏறத்தாழ 700 இருப்பதாகவும் தமிழ் மாணவர்கள் தொடக்கப் பள்ளிகளில் 15,000, உயர் நிலைப் பள்ளிகளில் 7,500, புகுமுக வகுப்புகளில் 300 முதல் 400 வரையில் படிப்பதாகவும் தெரிகிறது.

சிங்கப்பூரில் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகம் என ஒரே ஒரு பல்கலைக் கழகம் இயங்குகின்றது. இப்பல்கலைக் கழகம் நல்ல வசதியோடும் வளத்தோடும் நன்முறையில் ஆட்சி செய்யப் பட்டு நடைபெறுகிறது. ஒரு நாட்டிற்கு வேண்டிய அனைத்துக் கல்விகளும் இங்கே கற்பிக்கப்படுகின்றன[7] பல்வேறு துறைகளிலும் ஏறத்தாழ 7000 மாணவர்கள் கற்கின்றனர். அவர்களுள் தமிழ் மாணவர்கள் 200 பேர் இருக்கலாம். தமிழ்க் கல்வியினையும் இந்தியக் கல்வியினையும் எடுத்துப் படிக்கும் மாணவர்கள் போது மான அளவு இல்லாமையால் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வித்துறை அல்லது தமிழ்க் கல்வித்துறை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. குறைந்தது 15 மாணவர்களாவது தமிழ்க் கல்வி படிக்க முன் வருவார்களே

யானால், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையோ இந்தியக் கல்வித் துறையோ ஏற்பட வாய்ப்பு இருக்கும் எனத் தெரிகிறது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்க் கல்வித் துறை ஏற்பட வேண்டும் என்று தமிழர்கள் சிலர் பல்கலைக் கழகத் துணைவேந்தர்க்கு வேண்டுகோள் விடுத்த போது அத்துணைவேந்தர், பல்கலைக் கழகத்தில் சேர்க்கைக்காக விண்ணப்பம் செய்த தமிழ் மாணவர்கள் 32 பேர் எனவும், அவர் களுள் சேர்க்கைக்குத் தகுதி உடையவர்கள் 8 பேர் எனவும், தமிழுக்கு வர விரும்புவோர் 4 பேர் எனவும் ஒரு புள்ளி விவரத்தை அனுப்பி விட்டு வாளாவிருந்து விட்டார். மலேசியா வும் சிங்கப்பூரும் ஓர் அரசாக இயங்கிய போது 1950–ஆம் ஆண்டு வாக்கில் சிங்கப்பூரின் ஒரு பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வித் துறை தொடங்கப்பட்டது. சிங்கப்பூரும் மலேசியாவும் இரு நாடுகளாகப் பிரிந்த போது இந்தியக் கல்வித் துறை, கோலாலம்பூரில் உள்ள பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டது. பல ஆண்டுகளாகச் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை ஏற்பட வாய்ப்பு இல்லாமல் இருந்து வருகின்றது.

சிங்கப்பூர் ஒரு சிறு நாடாக விளங்குவதால் பல்கலைக் கழகத் தின் அனைத்துந் துறைகளுக்கும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் அங்கேயே கிடைப்பது அரிதாக உள்ளது. ஆதலால், பல்வேறு துறைகளிலும் வெளிநாட்டு ஆசிரியர்கள் பலர் பணியாற்றி வரு கின்றனர். பல துறைகளில் தமிழர்களும் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றிருக்கின்றனர். வரலாற்றுத் துறை, பொருளாதாரத் துறை, மெய்யியல் துறை, சமூகவியல் துறை ஆகிய துறைகளில் ஒரு சில தமிழர்கள் பணியாற்றுவதை அறிந்தேன். ஆனால், எல்லோரும் முதல் பட்டக் கல்வியே கற்பித்து வருகின்றனர்.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகம் பெரும்பாலும் முதல் பட்டக் கல்வியையே நடத்தி வருகிறது. பட்ட மேற்படிப்புக் கல்வியும் ஆராய்ச்சியும் அங்குக் குறைவாகவே உள்ளன. (1979–80-இல் 6 மாணவர்க்கு மட்டுமே ஆய்வுதவி வழங்கப்பட்டுள்ளது.) பல்கலைக் கழகத்தில் பணியாற்ற முன்வரும் ஆசிரியர்களுக்கு மட்டுமே பட்ட மேற்படிப்புக் கல்வியும் ஆராய்ச்சியும் தேவைப் படுகின்றன. அவற்றுக்குப் பெரும்பாலும் அப்பல்கலைக் கழகம் மேலை நாடுகளையே நம்பியிருக்கின்றது. தகுதி உள்ள மாணவர் களுக்குச் சிங்கப்பூர் அரசு உதவி செய்து, பட்ட மேற் கல்வியினை யும் ஆராய்ச்சியினையும் பெற்று வர ஏற்பாடு செய்கின்றது. இந்தியாவைப் பொறுத்த வரையில் ஓர் கசப்பான செய்தி என்ன வெனில், இந்தியப் பல்கலைக் கழகங்களின் பட்டங்களைச்

சிங்கப்பூர் அரசு, தான் வழங்கும் பட்டங்களுக்குச் சம தகுதி யுடையனவாகக் கருதுவதில்லை. சிங்கப்பூரில் பல்கலைக் கழகங் களிலும் மற்ற இடங்களிலும் பணி புரியும் தமிழர்கள், அயல் நாடுகள் சென்று பட்டங்கள் பெற்று வந்தோரே ஆவர். இந்தியா வில் தகுதிகள் புறக்கணிக்கப்பட்டு, சாதிக்கும் வட்டாரத்திற்கும் ஒதுக்கீடு செய்து, ஒழுக்கம் கெட்ட முறையில் பல்கலைக் கழக மாணவர் சேர்க்கை நடைபெறுவதாகக் கருதி இந்தியப் பட்டங் கள் அங்குப் புறக்கணிக்கப்படுகின்றனவாம்.

பொதுவாக, உயர்தமிழ்க்கல்விக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் சிங்கப்பூரின் பல்கலைக் கழகத்தில் வாய்ப்பு இருப்பதாகத் தெரிய வில்லை. சிங்கப்பூர் மக்கள் பொருளாதார மனப்பான்மை கொண்டு வாழ்கின்ற காரணத்தால் தமிழர் பலரிடையேயும் இந் நிலைபற்றிக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை.

பொதுவாகச் சிங்கப்பூர்த் தமிழ் மக்களிடத்திலும் சிங்கப்பூர் அரசிடத்திலும் அமைந்த கவலை, பள்ளிகளில் நிலவும் தமிழ்க் கல்வியினை எவ்வாறு காப்பது என்பதும் எவ்வாறு சிறப்புறச் செய்வது என்பதுமேயாகும். பள்ளிகளில் தமிழ்க்கல்வி கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் பாட நூல்களும் போதிய அளவு இல்லாமையே அங்குப் பெருங்குறையாகக் கொள்ளப்பட வேண்டும். தமிழில் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்குப் பெருஞ் செலவு பிடிக்கிறது. மேல் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல மாணவர்கள் தொகையும் குறைந்து விடுகிறது. அந்நிலை யினை மாற்ற, அரசும் தமிழர் தலைவர்களும் ஆவல் கொண்டு உள்ளனர் எனத் தெரிகிறது. தமிழிலேயே படிக்க வாய்ப்பு இல்லாத தமிழர்களுக்குத் தமிழ் அறிவினை எவ்வாறு ஊட்டுவது என்பதும் அங்குள்ள தமிழர்களின் கவலையாக உள்ளது.

சிங்கப்பூரில் பல்கலைக் கழகத்திற்கு அப்பால் ஆசிரியர் பயிற்சி / கல்விக் கல்லூரியிலும், தென்கிழக்காசிய ஆராய்ச்சி நிறுவனத்திலும், வட்டார மொழி மையத்திலும் மட்டுமே ஓரளவு ஆராய்ச்சி நடக்க வாய்ப்பிருக்கின்றது. ஆனால், அங்கும் தமிழியலாராய்ச்சிக்கு வாய்ப்பு மிகக் குறைவே. (இவை பற்றி முன்னரே குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன.)

இந்தச் சூழ்நிலையில் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத் தில் தமிழ்த்துறை நிறுவுதலுக்கு அங்குள்ள தமிழர்கள் அருமுயற்சி மேற்கொண்டுள்ளார்கள். இது குறித்துச் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை, ஆய்வு நூல் தொடரில்

(Research Monographs Series) **ஆய்வறிக்கை, சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி, 1981** (Report on the Establishment of a Department of Tamil Studies at the National University of Singapore 1981 . . . .) என ஓர் அறிக்கையினைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரில் தமிழர்கள் நிலை, தமிழ்க் கல்வியின் நிலை, பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை தோற்றுவிப்பதற்கான தேவை முதலானவற்றை இவ்வறிக்கை நன்கு விளக்குகிறது. அறிவு முறையிலும் அளவை முறையிலும் பேசும் இவ்வறிக்கையின் சில பகுதிகள் இங்குப் பயன்படும்:

சிங்கப்பூரில் தமிழ் மொழியின் தற்கால நிலை

தொடக்கம்

1965-ஆம் ஆண்டின் சிங்கப்பூர்க் குடியரசு விடுதலைச் சட்டம், சிங்கப்பூரின் மொழிக் கொள்கை பற்றிப் பின்வருமாறு விளக்குகிறது:

(1) மலாய், மாண்டரின், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளாகும். (2) மலாய் மொழி தேசிய மொழியாகும். அதனுடைய வரிவடிவம் உரோமன் எழுத்துக்களாகும்.

குடியரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றான தமிழ்,பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படுகிறது. பாலர் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு வரை ஒருவர் தமிழ் மொழியைப் பயிலலாம்.

சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. நாடாளுமன்றத்தில் தமிழில் உரை நிகழ்த்தலாம். மலாய், மாண்டரின், ஆங்கிலம் முதலான மொழிகளில் நிகழும் உரைகள், உடனுக்குடன் மொழி பெயர்க்கப்படும்.

அரசாங்க அறிக்கை அனைத்திலும் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கப் பத்திரங்களிலும் தமிழ் இடம்பெற்றுள்ளது (எ.கா: வருமான வரிப் பத்திரம்). அனைத்து வங்கிகளும் தமது ஆண்டறிக்கையைத் தமிழிலும் வெளியிடுகின்றன.

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகம், தன் நுழைவுத் தகுதிகளில் ஒன்றாக மலாய் அல்லது மாண்டரின் அல்லது தமிழ் ஆகிய பாடங்களில் தேர்வு பெறுவதைக் கட்டாயமாக்கி உள்ளது.

தமிழுக்கு இத்தகைய ஏற்றம் இருந்தும், மற்ற ஆட்சி மொழி களுக்குக் கிடைக்கும் உரிமைகள் தமிழுக்குக் கிடைக்கவில்லை. சிங்கப்பூரில் பல்கலைக் கழக மதிப்புப் பெறாத ஒரு மொழியாக இருப்பது தமிழ்தான். உயர்கல்வி நிலையமான பல்கலைக் கழகத் தில் தமிழ் இடம்பெறாதது தமிழ் மொழியின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குத் தடையாய் உள்ளது. மற்ற ஆட்சி மொழிகளோடு ஒப்பிடுகையில், தமிழின் தரமும் நிலையும் நாளுக்கு நாள் சரிவு கண்டு வருகின்றன.

பள்ளி நிலையில் சிக்கல்

தேவைக்கேற்ற தமிழ்ப் பாடநூல்கள் இல்லாமை தொடர்ந்து நிலவி வருகிறது. உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப் படும் தமிழ், கற்கப்படும் தமிழ் இன்றும் தமிழ்நாட்டுப் பாட நூல்களையே நம்பியிருக்கிறது. சிங்கப்பூரின் மொழித் தேவைக் கேற்ப எழுதப்பட்ட தமிழ்ப்பாட நூல்கள் இல்லாமை, மாணாக் கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றன.

கல்வி அமைச்சிலும் சிங்கப்பூர்ப் பாட நூல் மேம்பாட்டுக் கழகத்திலும் பாட நூல்களும், துணை நூல்களும் தயாரிக்கப் பணிக்கப்படும் ஆசிரியர்களின் கல்வித்தகுதி, தமிழாசிரியர் என்பதைத் தவிர வேறேதுமில்லை. பெரும்பாலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களைத் தமிழாக்கம் செய்யும் மொழிபெயர்ப் பாளராகவே அவர்கள் பணியாற்றுகின்றனர். சிங்கப்பூரின் மொழித் தேவைகளுக்கேற்ப, தமிழ் மொழி பேசுவோரின் தேவைகளுக்கேற்பப் புதுப்புதுச் சிந்தனைகளைத் தோற்று விக்கும் மனிதர்களாக அவர்கள் இல்லை.

சிங்கப்பூரின் கல்வித்திட்டம் மாபெரும் மாற்றம் கண்டு வருகிறது. மாறிவரும் கல்விக்கொள்கைகளுக்கேற்ப, ஆசிரியர் களின் நிலையும் தரமும் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. ஏறக்—குறைய பத்து ஆண்டுகளில், உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று விக்கும் ஆசிரியர்கள் அனைவருமே பல்கலைக் கழகப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பர். ஆனால், தமிழ்மொழி ஆசிரியர் மட்டும் பள்ளி இறுதிச் சான்றிதழுக்கு ஒப்பான கல்வித் தகுதி யையே பெற்றிருப்பர்.

எதிர்காலத்தில், தமிழ்மொழி மட்டுமே பள்ளி இறுதிச் சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். அச்சமயத்தில் சரிவு கண்டுவரும் தமிழின் நிலை, மேலும் அதன் நிலையிலும்

தரத்திலும் சரிவு காணும். அதோடு, எந்தவொரு பள்ளியிலும் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியரே மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பார். இதனால், அவருடைய தன்னம்பிக்கை மேலும் தளர்ச்சியுறும்.

தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் மத்தியில் தற்போது கற்கக்கூடிய பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருப்பவர்களென (ஊதிய அடிப்படையில்) பொதுப்பணிக் கழகத்தினாலும், கல்வி அமைச்சினாலும் எவரும் கருதப்படவில்லை. ஆயினும், கேள்விகள் எழும்போது மட்டும் ஒரு சிலரைப் பல்கலைக் கழகப் பட்டம் வைத்திருப்பவர்களெனக் காட்டும் முயற்சி அவ்வப்போது நடைபெறுகிறது.

தமிழாசிரியர் சிலர் இந்தியப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களாக இருக்கின்றனர்; அவர்களுள் ஒருசிலரே தமிழ் மொழியில் பயிற்சி பெற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களுடைய பல்கலைக் கழகப் பட்டப்படிப்புக்கேற்ப ஊதியம் தரப்படுவதில்லை. மாறாகச் சிங்கப்பூரில் பள்ளியிறுதிச் சான்றிதழ் பெற்றவருக்குத் தரப்படும் ஊதியமே அவர்களுக்கும் தரப்படுகிறது. ஆயினும், பட்டதாரித் தமிழாசிரியர் இல்லாத குறை சுட்டிக்காட்டப்படும்போதெல்லாம், இந்த ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பொதுமக்களுக்குக் காட்டப்படுகின்றனர்.

தமிழ்மொழி ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும் கல்விக் கழகத்தில்கூட, மற்றப் பிரிவுகளில் பணியாற்றுவோரிடம் எதிர் பார்க்கப்படும் கல்வித்தகுதி இல்லாதவர்களே, தமிழ்மொழி ஆசிரியர்களுக்குப் பயிற்றுவிக்கின்றனர். பள்ளி இறுதிச் சான்றிதழுடன் கூடிய ஆசிரியர் பயிற்சி மட்டுமே பெற்றவர்கள் தமிழாசிரியர்களைப் பயிற்றுவிக்கின்றனர்.

பல்கலைக் கழகத்தில் இல்லாமை

பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்கு இடம் இல்லாதது சிங்கப்பூரில் அதற்கு ஏற்றம் இல்லாத சூழலை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்குத் துறை அமைக்கப் படாததால், மற்ற ஆட்சி மொழிகளோடு ஒப்பிடும்போது, தமிழ் மொழிக்குச் சம வாய்ப்புக்கள் இல்லை.

பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பகுதி இல்லாமையால், உயர் நிலை வகுப்புகளுக்கும் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளுக்கும் தேவைப்படும் பல்கலைக் கழகப் பயிற்சி பெற்ற தமிழ்

மொழி ஆசிரியர்களை உருவாக்க முடியவில்லை. மற்ற ஆட்சி மொழிகளைப் பயிற்றுவிக்கப் பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கி வரும் இவ்வேளையில், நாம் இந்தியப் பட்டதாரிகளை, மற்றப் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு ஒப்ப நடத்தாத சூழலில், தமிழ் மொழிக் கல்வி தொடர்ந்து ஏற்றம் பெறாது.

தமிழ் மொழி, பள்ளிகளில் பயிற்று மொழியாக இருந்தாலும் அதற்கான மொழி வல்லுநர்களுக்கு நாம் இந்தியாவையே நம்ப வேண்டியுள்ளது. சிங்கப்பூர்ச் சூழலுக்கேற்பத் தமிழ் மொழியாற்றல் வளர்க்கப்படாததால், மற்ற ஆட்சி மொழிகளுடன் தமிழ்மொழியை ஒப்பிடும்போது அதன் தரம் குறைந்ததாகவே காணப்படுகிறது.

பாடத்திட்டம்,தமிழ்மொழிக் கல்விக்கான துணைக்கருவிகள், தமிழ்மொழி கற்பதில் உள்ள இடர்கள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்யச் சிங்கப்பூரில் ஆற்றல் மிகுந்தவர்கள் இல்லை.

சிங்கப்பூரில் இருக்கும் தமிழ்மொழி, இந்தியப் பண்பாடு முதலான கூறுகளை ஆராய்வதற்குச் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகம் உட்பட இந்த உயர்கல்வி நிலையங்களிலும் திறமை படைத்த ஆய்வாளர்கள் இல்லை.

குமுகாய நிலையில் சிக்கல்

சிங்கப்பூரின் தேவைகளுக்கேற்பச் சிந்திக்கும் திறன் பெற்ற தமிழ் அறிஞர்கள் பற்றாக்குறை சிங்கையில் நிலவுகிறது. இந்தியப் பண்பாடும் தமிழ்மொழியும் காட்டும் சிந்தனைகள், தத்துவங்கள் ஆகியவற்றைச் சிங்கப்பூர் மக்கள் அறியாமல் இருக்கின்றனர்.

சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழகத்தில் தமிழ்மொழியுடன் கூடிய பல்கலைக் கழகப் பயிற்சி பெற்றோர் ஒருவர்கூட செய்தி, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் தமிழ்மொழி—பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் பங்காற்றவில்லை. மற்ற ஆட்சி மொழிகளுக்கு இக்குறைபாடு இல்லை. இவ்வுண்மையை, சிங்கப்பூர் ஒலிபரப்புக் கழக இந்திய நிகழ்ச்சிகளின் தரத்தைக் குறை கூறுபவர்கள் இதுகாறும் சுட்டிக் காட்டாமல் இருக்கின்றனர்.

நாளிதழ்கள், பிற தமிழ் வெளியீடுகள் தொடர்பான துறையிலும் தேர்ச்சி பெற்ற சிங்கப்பூரார்கள் இல்லை.

குமுகாய நிகழ்ச்சிகளையும், அமைப்புக்களையும் நடத்த வல்ல தமிழுடன் கூடிய இருமொழித்திறன் கொண்டவர்கள் பற்றாக்குறை, சிங்கப்பூரில் நிலவுகிறது.

சரிவு கண்டுவரும் தமிழ்மொழித் தரமும், பண்பாட்டு அறியாமையும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. இதனால் தமிழ் பேசும் மக்களின் மத்தியில்கூட, பண்பாட்டுச் சரிவும் ஒதுக்கப்படுதலும் தென்படுகின்றன.

அரசியல் தலைவர்களும் குமுகாயத் தலைவர்களும், தமிழர்கள் தமது தொன்மைமிக்க செழிப்பான பண்பாட்டு—இலக்கியக் கூறுகளை மற்றச் சிங்கப்பூரார்களுக்கும் தர முயல வேண்டுமெனப் பன்முறை அறைகூவல் விடுத்திருக்கின்றனர். ஆயினும், அவ்வாறு நிகழ்வதாகத் தெரியவில்லை. தமிழிலிருந்து ஆங்கிலம், மாண்டரின், மலாய் முதலான மொழிகளில் அப்படைப்புக்களை எழுதச் சிங்கப்பூரார்கள் அறவே இல்லாததுதான் இதற்கு அடிப்படைக் காரணம்.

முரண்பாடு

1956-இல், தமிழை ஒரு பாடமாக 4,426 மாணாக்கர் பயின்றனர். தமிழ்மொழி வாயிலாகவே பெற்ற தமிழ்க் கல்வி ஆறாவது வகுப்புடன் முடிவுற்றது. ஆனால், தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் முக்கியப் பாடங்களாகக் கொண்ட இந்தியப் பகுதி, சிங்கப்பூரில் அமைந்திருந்த அப்போதைய மலாயாப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டது.

1981-இல் ஏறத்தாழ 17,000 மாணாக்கர் தமிழைப் பயிலுகின்றனர். தமிழ், சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக விளங்குகிறது. எனினும், சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி இல்லை.

பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி அமைந்தால் பின்வரும் வழிகளில் பயன்கள் ஏற்படும்:

1. சிங்கப்பூரின் அரசியல் அமைப்பு, ஆட்சி மொழிகள் பற்றிக் குறிப்பிடும் பகுதி முழுமையாக நடைமுறையில் வெற்றிபெறும்.

2. தமிழ்மொழி எதிர்நோக்கும் சிக்கல்கள், இன்னும் பத்தாண்டுகளில் தீர்க்கப்படும்.

3. தரத்திலும் நிலையிலும் சரிவு கண்டுவரும் தமிழ்மொழி காப்பாற்றப்படும்.

4. தமிழர்கள் மட்டுமன்றி, எல்லாச் சிங்கப்பூரார்களும் வளமைமிக்கதொரு பண்பாட்டின் முழுப்பயனையும் பெறுவர். இந்தியப் பண்பாட்டை அறிவதால் முழுமை யான புதியதொரு சிங்கப்பூர்க் குடிமக்கள் உருவாகலாம்.

பரிந்துரைகள்

1. பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பகுதி அமைவதால், மற்ற ஆட்சிமொழிகளுக்குத் தரப்பட்டுள்ள வாய்ப்புக்களும் மதிப்பும் தமிழுக்கும் கிடைக்கும்.

2. தமிழ்மொழி தனது நிலையிலும் தரத்திலும் மேலும் சரிவு அடைவதைப் பல்கலைக் கழகத்தில் அமையும் தமிழ்ப் பகுதி தடுத்து நிறுத்தும். சிங்கப்பூரில் தமிழ்மொழி, தமிழிலக்கியம் தொடர்பான எல்லாத் துறைகளிலும் தமிழின் நிலை உயரும். காலவோட்டத்தில் இடை விடாத எண்ணிக்கையில் பட்டதாரித் தமிழ்மொழி ஆசிரியர் தோன்றுவர். சிங்கப்பூருக்கு ஏற்ற பாடநூல்கள் உருவாகும். தமிழரல்லாத இதர சிங்கப்பூரார்களும் தமிழின் சுவை அறிவர்.

3. நாளிதழ்கள், தமிழ்வெளியீடுகள், ஒலி—ஒளி பரப்புத் துறை, அரசாங்கத்தில் தமிழ் பயன்படுத்தப்படும் துறை கள் ஆகியவற்றிற்குத் தேவையானவர்களைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதி தோற்றுவிக்கும்.

4. தமிழ்மொழியின் தர உயர்வுக்கும், இந்தியப் பண்பாட்டு மேம்பாட்டுக்கும் தமிழ்ப் பகுதி வித்திடும். இதனால் முழுமையான சிங்கப்பூர்ப் பண்பாடு உருவாக ஏதுவாக இருக்கும்.

5. தமிழ்மொழி—இந்தியப் பண்பாடு பற்றிச் சிங்கப்பூரார்கள் ஆழமாகவும் அகலமாகவும் அறிய வாய்ப்பு ஏற்படும்.

அடிக்குறிப்புகள்

1. See *Singapore Facts and Pictures 1980,* pub. by the Information Division, Ministry of Culture, Singapore.

2. Standards of Living

	1976	1977	1978	1979
Per capita indigenous GNP at market prices ($)	5,148	5,574	5,988	6,515*
Electricity consumption per person per year (Kwh)	1,722.4	1,952.3	2,233.4	2,431.0
Water consumption per person per year (litres)	87,554	91,779	96,640	1,01,357
Persons per radio set	6	6	6	6
Persons per television set	7	7	7	6
Persons per doctor	1,336	1,250	1,262	1,276
Persons per dentist	5,261	4,975	4,904	4,792
Persons per government hospital bed	265	269	275	278
Persons per telephone	6	5	4	4
Pupils per teacher	26	26	25	24
Pupils per school	979	960	962	960

*Preliminary

3. தமிழர்களும் பிற இந்தியர்களும் சிங்கப்பூரில் எவ்வாறு குடியேறினர் என்பது பற்றியும் சிங்கப்பூர் வாழ்வில் அவர்கள் பங்கு எத்தகையது என்பது பற்றியும் கீழ்க்கண்ட குறிப்பு தரும் விளக்கம் இங்குக் கருதத்தக்கது:

1819-இல் ஆங்கிலேயர்களின் வணிகநிலையமாக நிறுவப் பெற்ற சிங்கப்பூரில், தென்கிழக்காசியா, சீனா, இந்தியத் துணைக் கண்டம் ஆகியவற்றிலிருந்தெல்லாம் வந்த மக்கள் குடியேறத் தொடங்கினர். பொருளாதார ஏற்றம் கருதியோ, தத்தம் நாடுகளில் நிலவிய போரிலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் தப்புவதற்கோ, தம் வாழ்வில் மாற்றம் கருதியோ அவர்கள் இங்கே வந்தனர். எனவே, அவர்கள் குடியேறிய இடத்தில் என்ன இடர்ப்பாடு இருப்பினும் அரும்பாடுபட்டுத் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டுமெனும் மனத்துணிவுடன் அங்கே வாழத் தலைப்பட்டனர்.

அவர்களுள் பலர் வேளாண்மைப் பணிக்கும் பிற தொண்டூழியங்கட்கும் என வெள்ளையர்களால் நேரடியாக இங்குக் கொணரப் பட்டனர்; சிலர் மலேசியாவிலிருந்து கடந்த 80 ஆண்டுகளில் வந்து குடியேறினர்; இன்னும் சிலர் தம் தாயகம் விட்டுப் பொருளாக்க வளம் தேடி இங்குப் புறப்பட்டு வந்தனர்.

சிங்கப்பூரில் தெற்காசிய மக்கள் குடியேற்றம்

(1) குற்றவாளிகள் குடியேற்றம் (2) கட்டுப்படுத்தப்பெற்ற குடியேற்றம் (3) தாமாக வந்த குடியேற்றம் என மூன்று பிரிவில் இக்குடியேற்ற வரவு அமையும். இக்குடியேற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாகவோ, மூன்றுமே ஒரு காலக் கட்டத்திலோ நிகழ்ந்து உள்ளன.

தெற்காசியக் குடியேற்றத்தின் புதுக்காலம் 1933–இலிருந்து அதாவது ஆங்கிலப் பேரரசு முழுவதிலும் அடிமை முறை ஒழிக்கப் பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது. மலாக்கா, பினாங்கு போல, 'இந்தியாவின் சிட்னி' எனக் கருதப்பட்ட சிங்கப்பூரின் தொடக்க நிலை வளர்ச்சிக்கு இந்தியர்கள் பெரிதும் உதவினர். குற்றவாளிகளின் உழைப்பால் உருவாக்கப்பட்ட இந்த மூன்று துறைமுகங்களும் முதலில் கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழும் பின்னர் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் கீழும் வந்தன. இந்தோ–னேசியச் சுமத்ராவில் இப்போதுள்ள பெங்கூளு எனுமிடத்தில் தான் முதன்முதலில் இவர்கள் வைக்கப்பட்டிருந்தனர். 1825-இல்

இது டச்சுக்காரர்களுக்கு உரிமையானதால், இங்கிருந்த குற்ற–வாளிகள் பினாங்கிற்கும், அங்கிருந்து சிங்கப்பூர், மலாக்காப் பகுதிகட்கும் மாற்றப்பட்டனர். இவ்வாறு சிங்கப்பூருக்குக் கொணரப்பட்ட இந்தியர்கள் தமது அரிய உழைப்பால் சிங்கப்–பூரை உருவாக்கினர். அதன் நெடுஞ்சாலைகளை அமைத்துத் தந்ததோடு துப்புரவுப் பணிகளையும் மேற்கொண்டனர். சதுப்பு நிலங்களைத் தூர்த்துப் பாலங்களைக் கட்டி வியர்வை சிந்தி உழைத்தனர். சிங்கப்பூரில் உள்ள பழமையான தமிழ் இந்து ஆலயமான மாரியம்மன் கோவிலை இக்குற்றவாளிக் குடியேற்ற வாசிகளே 1828–இல் அமைத்தனர். சீன நாட்டுப் பாட்டாளி களைவிட இவர்கள் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்தனர். 1867-இல் தீபகற்பக் குடியேற்றங்கள் காலனி அலுவலகக் கட்டுப் பாட்டிற்கு மாற்றப்பட்டமையால், குற்றவாளிகளைக் குடியேற்றி அவர்கள் உழைப்பைச் சுரண்டும் போக்கு மறையலாயிற்று.

தீபகற்பக் குடியேற்றப் பகுதிகளில் கரும்புத் தோட்டங் களிலும், மிளகு, தென்னந்தோப்புக்களிலும் வேலை செய்தற்காக வங்க விரிகுடாவைக் கடந்து 1800-இலிருந்து தென்னிந்தியர்கள் வரத்தொடங்கினர். தமிழர்களும் பிறரும் தாமாக இங்குக் குடியேற வந்தமை 1857 வரை நீடித்தது. அதன் பின்னர்க் கப்பலில் நெரிசலைத் தவிர்ப்பதற்காகச் சில கட்டுதிட்டங் களை அப்போதைய இந்திய அரசு கொணர்ந்தது. இதனால் பயணிகள் தொகை குறைந்து, கப்பல்கள் வருமானத்தை இழந்தன.

1890-ஆம் ஆண்டளவில், ஒப்பந்தப் பிணைப்புக்கு உட் படாத உழைப்பாளராகிய தமிழர்கள் கணிசமான அளவுக்கு அங்குக் குடியேறிவிட்டனர். மலேயாப் பகுதிகட்குச் சட்ட முறைக் கூலிகளாக உழைக்க வந்தோர் அவ்வொப்பந்தக் கெடு முடிந்தபின்னரும், நீடித்துத் தங்க முற்பட்டனர். அவர்கள் வமிசத்தினரும் அங்கேயே வளர்த் தொடங்கினர்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, இவ்வாறு உழைக்க வருவோர்க்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டமை யாலும் அவர்களுடைய வேலை நிலைமைகளில் பல வளர்ச்சி முறைகள் அமைந்தமையாலும் குடியேறவந்த தமிழர்கள் தொகை 1913-இல் மும்மடங்காகிவிட்டது. சிங்கப்பூரை மலேயாவுடன் இணைக்கும் ஜோகோர் பாலம், செம்பாவாங் துறை முகத்தலம், கல்லாங் விமான நிலையம் எனச் சிங்கப்பூர் பெற்ற வளர்ச்சிக்கெல்லாம் தமிழர்களின் அரும்பாடுகளே அடிப் படையாயின.

நாளடைவில் படித்த தென்னிந்தியர்களும், வட இலங்கைத் தமிழர்களும் பிரிட்டிஷ் நிருவாக அமைப்பில் பணியாற்ற இங்கு வந்து சேர்ந்தனர். அலுவலக எழுத்தர்கள், மேற்பார்வை யாளர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள் என்றெல்லாம் பல்வேறு அலுவல்களில் அவர்கள் அமர்ந்தனர். கல்விப் பணியிலும் காவல் (போலீசு) துறையிலும் அவர்களே நிறையத் தொடங்கினர். தொடக்க காலத்தில் கிறித்துவத் தொண்ட மைப்புக்களும் (மிஷினரிகளும்) அரசாங்கமும் நடத்திய பள்ளி களில் இந்தியர்களே ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர். காவலர்களாக, (போலீசுகாரர்களாக) சீக்கியர்களும் தமிழர் களுமே பெரும்பாலும் இடம்பெற்றனர். (சிங்கப்பூரில் ஒரு காலத்தில் காவலர்களாய் இருந்தவர்கள் அனைவரும் தமிழர் களேயாவர்.)

இருபதாம் நூற்றாண்டிலிருந்து, தெற்காசிய மக்கள் அங்கேயே தங்கி வாழ விரும்பியதால் அவர்களின் எண்ணிக்கை பெருகத்தொடங்கிற்று.

இவ்வாறு குடியேறிய இந்திய மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராயிருப்பினும், அரசியல், தொழிற் சங்க வளர்ச்சிகளில் எல்லாம் முக்கியப் பங்கேற்றிருந்தனர்.

—ஏ. மணி, சிங்கப்பூரில், உலகத்தமிழ்,
ம. கா. பல்கலைக் கழகம் (1981).

4. சிங்கைத் தமிழர் பற்றித் தமிழர் வாழ்வில் இணைந்து போன தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்கள் கருத்து இங்குக் கருதத்தக்கது:

தமிழர் திருநாள் பற்றித் தமிழவேள் திரு.சாரங்கபாணி அவர்கள் ஒருமுறை பேசியது வருமாறு: ''இந்நாட்டில் பன்னெடுங் காலத்திற்கு முன்பே குடியேறி இந்த நாட்டை வளப்படுத்தியவர் களுள் தமிழர்களாகிய நாமும் அடங்குவோம் என்பதை இங்கு எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அவ்வாறு உயர்ந்த பணியினை இந்நாட்டிற்கு நல்கிய தமிழர்கள், பிற இனத்தவரோடு கௌரவமான நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்களா என்று சிந்தித்துப் பார்த்தால் அவர்களின் அவல நிலையைத்தான் எவரும் காண முடிகிறது. இங்குப் பல தலைமுறைகளாக வாழ்ந்து விட்ட தமிழர்கள், தங்கள் வாழ்வில் வளம் காண முடியவில்லை என்றால் அவர்கள் தம் நிலையை உணராமல் வாழ்ந்து விட்டார் கள் என்பதை அறிகிறோம். இந்தத் தாழ்நிலையைப் போக்கி

அவர்கள் நிலையை உயர்த்த வேண்டியது அவசியமல்லவா? இது பற்றிச் சிங்கைத் தமிழர் பிரதிநிதித்துவ சபை பல முறை சிந்தித்துத் தமிழர்களிடையே ஒற்றுமையை உண்டாக்கித் தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பு இவற்றை வளர்த்தால்தான் அவர்கள் வாழ்வு வளம்பெறும் என்று எண்ணி அதன் அடிப்படையில் தமிழர் திருநாளைத் தோற்றுவித்தது.

தை மாதம் முதல் நாளில் இவ்விழா தொடங்குவதால் சிலர் பொங்கல்தான் தமிழர் திருநாள் என்று தவறாக நினைத்துக் கொள்கின்றனர். பொங்கல் விழா தமிழர்களில் இந்துக்களால் கொண்டாடப்படும் விழா. கிறித்துவத் தமிழரோ, முசுலிம் தமிழரோ பொங்கல் கொண்டாடுவதில்லை. தமிழர் திருநாளோ இந்து, முசுலிம், கிறித்துவம் முதலான சமயங்களைச் சார்ந்த, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட, தமிழ்ப்பண்பாடுடைய அனைவரும் ஒன்றுபடச் செய்யும் ஒற்றுமை விழா. இவ்விழாவில் நீங்கள் அடையும் பயனை நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் இவ்விழா எத்தகைய சிறப்புடையது என்பதையும், ஆண்டுக்கு ஒரு முறை இதற்காக நீங்கள் செலவழிக்கும் பொருள், நேரம் எவ்வளவு பயனளிக்கிறது என்பதையும், பல சமூகத்தவர்களும் தமிழர்களின் உயர்வுக்கு ஒத்தாசை செய்ய முன்வருவதையும் அறியலாம்.

இவ்விழாவில் உங்களது குழந்தைகளுக்கு விளையாட்டு, பேச்சு, பாட்டுப் போட்டிகளை வைத்து, அவர்களுக்கு உடல் உறுதியையும், அறிவையும் வளர்த்துவிடுகிறீர்கள். அதில் வெற்றி பெற்றவர்கட்கு உரிய பரிசுப் பொருளைத்தந்து மேலும் ஊக்குவிக்கிறீர்கள். இதனால் விளையாட்டுக்களில் பங்குகொண்ட சிறுவர் சிறுமியர் வளம் பெறவும், பிற இனத்தவருடன் சம நிலை பெறவும் வாய்ப்பளிக்கிறீர்கள். பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் தங்களது இசையை வளர்க்கமுடிகிறது. அதேபோல் பேச்சாளர்களாகவும், நல்ல அறிவுத் திறனுள்ளவர்களாகவும் ஆகமுடிகிறது. இவையெல்லாம் தமிழர் திருநாளால்விளையும் நல்லபயன் என்பதை எவரும் மறுக்கமுடியாது'' இது திரு சாரங்கபாணிஅவர்களின் கோட்பாடு ஆகும்.

பக்—19, 21, சிங்கப்பூர், அரு. சோமசுந்தரன்
பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, (1980)

5 "The Tamil Muslim element was strengthened by continuous immigration from the Coromandal coast and by inter-marriage with women from there. Tamil continued as a strong literary language among them, formal education being imparted in this language to their children. A classic example of the blending of Malay and Tamil Islamic traditions is found in the work of the eminent Malay writer, Munshi Abdullah, in the early nineteenth century. He blonged to a family of mixed Arab, Tamil and Malay descent that had been settled in Malacca for three generations. He was educated in Arabic, Tamil and Malay, and made significant contributions to Malay literature".

(--P. 7-8, Indians in Malaysia and Singapore.)

6· The Collections

The Library attempts to collect books and other materials in Malay, Chinese, Tamil and English which will promote and satisfy the informational, educational and recreational needs of citizens, workers, parents, firms, associations and public agencies. The collections include books, periodicals, newspapers, maps, music scores, microfilms, films and gramophone records totalling over 600,000 items.

The Home Reading Collections include

fiction and non-fiction in Malay, Chinese, Tamil and English
magazines in Malay, Chinese, Tamil and English
music scores and orchestral scores
braille books
young People's Collection

The Reference Collections include

The General Reference Collection, housed in Room I

The Business, Scientific and Technical Collection housed in Room II

The South East Asia Collection

The United Nation Collection and publications of other

international organisations
The Newspaper Collection
The Microfilm Collection
The Map Collection
The Picture Collection.

7 The National University became a legal entity on 8 August 1980. Operationally, however, it began on 7 July 1980.

The National University of Singapore has eight Faculties, viz., Arts and Social Sciences, Law, Science, Medicine, Dentistry, Engineering, Architecture and Building, Accountancy and Business Administration, and three schools, viz., Post-graduate Medical Studies, Postgraduate Dental Studies, and Management. The Department of Extramural Studies and the English Language Proficiency Unit are non-Faculty departments.

In August 1981, the student enrolment stood at 10,485 of whom 532 were reading for higher degrees or a postgraduate diploma. The undergraduate student population included 4,738 women. About 14.5% of the student body was in full-time residence in the colleges and hostels. Approximately 78.5% of the academic staff are locally domiciled.

The annual recurrent costs of the University are largely met by the Government of Singapore.

— P—4, National University of Singapore, 1982—3, General Information.

3. மலேசியா

முன்னுரை

தமிழகத்திலிருந்து வங்கக் கடலால் பிரிக்கப்பட்டு ஏறத்தாழ 1200 மைல் தொலைவில் சிங்கத்தின் வால் போன்று நீண்டுள்ள நிலப் பகுதியே மலேசியாவாகும். மலேசியா என்பது அரசியல் அடிப்படையிலான ஒரு நாடு. உண்மையில் அந்நாட்டில் மேலை மலேசியா, கீழைமலேசியா என இரண்டு பகுதிகள் அடங்கியுள்ளன. மேலை மலேசியா என்பது பர்மா தாய்லாந்திற்குத் தெற்கே 500 மைல் அளவு நீண்டு இருக்கும் தீபகற்பமாகும். அதன் தெற்குக் கோடியில் இருப்பதுதான் சிங்கப்பூர் என்னும் தனி அரசு. அம் மேலை மலேசிய நிலப்பரப்பிற்குக் கிழக்கே விளங்கும் பெருந் தீவான போர்னியோவின் ஒரு பகுதி கீழை மலேசியாவாகும். இடையில் 400 மைல் கடல். இவ்விரண்டு பெருநிலப்பரப்புகளும் 1963-இல் இணைந்து மலேசியக் குடியரசாக அமைந்தன. இவ் விரண்டும் மொழியாலும் பண்பாட்டாலும் சமயத்தாலும் பெரும் பாலும் ஒத்திருக்கின்றன. ஆனாலும் பொருளாதாரம், கல்வி, நாகரிக நிலையில் இரண்டுக்கும் இடையில் பெருவேறுபாடு காணப் படுகின்றது. நான் சென்று தமிழ் ஆராய்ச்சிக்கான வாய்ப்பினை அறிந்து வந்த மலேசியா மேலை மலேசியாவாகும். (மேலை மலேசியாவில் மட்டுமே பெருந் தொகையாகத் தமிழர்கள் வாழ் கின்றனர்.) இவ்வறிக்கையில் தரப்படும் அனைத்துச் செய்திகளும் அம்மேலை மலேசியாவைப் பற்றியதேயாகும். இப்பகுதி மேலை மலேசியா அல்லது தீபகற்பப் பகுதியென வழங்கப்படுகிறது. (கீழை மலேசியா என்னும் தீவின் பகுதிகள் இங்கு முற்றிலுமாக ஒதுக்கப்படுகின்றன.)

அம் மேலை மலேசியா தென் வடலாக 500 மைலும் கீழ் மேலாக 200 மைலும் நிலப்பரப்புடையது. நடுவிலே பெரும்பாலும்

மலைப் பகுதிகள் நிறைந்துள்ளன. நிலம் வளமான சமவெளி கொண்டுள்ளது எனச் சொல்ல முடியாது. அதன் மொத்தப் பரப்பு 50,800 சதுர மைல்களாகும்; ஏறத்தாழத் தமிழகத்தின் அளவை உடையது. இரண்டு நூற்றாண்டுகளாகக் காலத்தின் கோலத்தால் இந்தியாவைப் போலவே மலேயாவும் (தீபகற்பம்) ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டிருந்தது. 1957–இல் விடுதலை பெற்றது.

(பெட்ரோலியம், தகரம், இரப்பர், பனை ஆகியவை இந் நாட்டின் விளை பொருள்கள் ஆகும்.) பெரும்பாலும் வெளி நாட்டிற்கு ஏற்றுமதி ஆவதும், மக்களுக்குத் தொழிலாக அமை வதும் இவையேயாகும். வேறு வகையில் நாடு தொழில் வளம் பெற்றதாகக் கூற முடியாது. பல உணவுப் பண்டங்கள் முதற் கொண்டு போக்குவரத்துப் பொருள்கள், மின் கருவிகள், துணிகள், ஆடைகள், பிற வாழ்க்கைச் சாதனங்கள் ஆகியவை பெரும் பாலும் வெளிநாடுகளிடமிருந்தே இறக்குமதி ஆகின்றன. விளை பொருள்கள் தவிர, மலேசியா தனக்கெனப் படைக்கும் பொருள்கள் மிகக் குறைவே. ஆதலால் உலகச் சந்தையின் பொருளாதார மாறுபாட்டிற்கேற்ப அந்நாட்டின் பொருளா தாரம் அலை பாய்கிறது.

பல நூற்றாண்டுகளாகவே மலேசிய நாட்டில் மலாய் மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்கள் தாய் மொழி மலாய் எனப்படுகிறது. அவர்கள், தாமே மலேயா நாட்டின் பூமிபுத்திரர் என உரிமை கொண்டாடுகின்றனர். (அண்மைக் காலம் வரை பொருளாதார வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் நாகரிக நிலையிலும் பிற்பட்டவராகவே அவர்கள் விளங்கினர்.) இன்று அவர்கள் இசுலாமிய மதத்தைப் பின்பற்று பவர்கள் ஆவர். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் மலேயா நாடு இந்தியாவினுடைய தாக்குதலுக்கு உள்ளாகி அதன் பண்பாட்டு எல்லைக்குள் இருந்திருக்கலாம். ஸ்ரீவிசயப் பேரரசு என்பது இந்தியாவின் சில பகுதிகளையும் மலேயாவையும் உட்படுத்திய ஓர் அரசாகும். ஆதலால், சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அம்மலேய மக்கள் இந்தியர்களாக இருந்திருக்கலாம். இசுலாமிய அரசுகளும் சமயமும் தென் கிழக்காசிய நாடுகளில் பரவியபோது மலேசியாவும் இசுலாமிய ஆட்சியில் அகப்பட்டது. ஆனாலும், இந்திய நாகரிகத்தின் பல்வேறு வரலாற்றுச்சான்றுகளை இன்றும் மலேயா நாட்டில் காண முடிகிறது.[1] கடந்த இரண்டு நூற் றாண்டுகளாக மலேயா மக்கள் தம் ஆட்சியினை இழந்து ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு இருந்தனர். அதனால், ஆங்கிலப்

பேரரசில் பல்வேறு இனத்தாரும் அங்குக் குடியேறும் நிலை இருந்தது.

மலாய் மக்களுக்கடுத்தபடியாக இங்குச் சீன மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு அடுத்தபடியாக இந்திய மக்கள் அங்கு குடியேறியுள்ளனர். இந்த இந்திய மக்களில் பெரும் பாலோர் தமிழர்களே. இந்த நாட்டிற்குரிய பூமிபுத்திர மலேயர்கள் ஏழை எளிய உழைப்பாளர்கள் ஆவர். சீனர்கள் நகரப் பகுதியில் வாழும் வணிகர்கள்; தொழில் நிறுவனத்தார். தமிழர்கள் ஆங்கிலேயரால் தோற்றுவித்து வளர்க்கப்பட்ட தோட்டங்களில் பணியாற்றுவதற்கு வந்த உழைக்கும் கூலி மக்கள். வங்களாத்திலிருந்தும், பஞ்சாபிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வந்த இந்திய மக்கள் அரசுப் பணிமனைகளிலும் தொழில் நிறுவனங்களிலும் சிறிது மேல் மட்டத்தில் பணியாற்றுகின்றனர்.

அந்நாட்டில் பெரும்பான்மையோர் இசுலாம் மதத்தைப் பின்பற்றும் மலாய் மக்கள், அவர்கள் ஏறத்தாழ 53.9%; அடுத்த பெரும்பான்மையோர் பல்வேறு சீனக் கிளை மொழிகளைப் பேசிக் கன்பூசிய பௌத்த மதங்களைப் பின்பற்றும் சீன மக்கள். இவர்கள் 34.9%; அடுத்த பல்வேறு மொழி பேசும் இந்தியர்கள் 10.5%; இந்த இந்தியரில் தமிழர் ஏறத்தாழ 75 பங்கினர் தெலுங்கரும் மலையாளிகளும் இலங்கைத் தமிழரும் இந்தியர்களுக்குள் அடங்குவர். இவர்களில் பெரும்பாலோர் இந்து சமயத்தினர். ஒரு சிறுபான்மையினர் தமிழ் இசுலாமிய சமயத்தினர். சீனர்கள் மீண்டும் தாயகம்திரும்பும் எண்ணம் இல்லாதவர்கள். திரும்பும் வாய்ப்பு இல்லாத இந்தியர்கள் இம்மலை நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.[1அ]

மலேசியாவில் மக்கள் தொகை (1970)		–87,14,430
1)	மலாய் மக்கள் (முகமதியர்)	–46,63,284
2)	சீனர் (கன்பூசியக் கலப்புச் சமயத்தினர்)	–31,17,896
3)	**இந்தியர் :**	– 9,33,250
	(அ) இந்தியத் தமிழர்	7,46,558 (80%)
	(ஆ) இலங்கைத் தமிழர்	25,288 (2.7%)
	(இ) தெலுங்கர்	31,332 (3.4%)
	(ஈ) மலையாளிகள்	44,199 (4.7%)

(உ) பிற இந்தியர் 72,138 (7.7%)
(ஊ) பாகித்தானியர் 10,185 (1.1%)
(எ) பிற இலங்கையர் 3,550 (0.4%)

இன்றைய மலேசிய அரசின் தலையாய கொள்கைகள் :

1. இசுலாமே நாட்டுச் சமயம்; அரசின் சமயம்.
2. மலாய் மக்களே பூமி புத்திரர்கள்.
3. மலாய் மொழியே தேசிய, அரசு, கல்வி மொழி.

இந்த முப்பெருங் கொள்கை, சட்டத்தின் அடிப்படையில் மூர்க்கத்தனமாக வற்புறுத்தப்படுகின்றது. அந்நாட்டின் இன்றைய சிக்கல்களே இதனால் தெரிகிறது. அக்கொள்கைகளைப் பற்றிச் சீனர்களும் இந்தியர்களும் பெரிதும் கவலை கொண்டாலும் எதிர்த்து யாரும் ஒன்றும் பேசவோ செய்யவோ இயலாத நிலையில் இருக்கின்றனர்.[2] அரசின் இக்கடும்பிடிக் கொள்கைகளால் தமிழர்கள் மலாய் படிக்க ஓட வேண்டியுள்ளது. மாதம்தோறும் 100 இந்தியத் தமிழர் இசுலாமிய மதத்தைத் தழுவுகின்றனர் என ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மலேசியச் சமூகத்திலும் கல்வி நிறுவனங்களிலும் தமிழர்கள் எவ்வாறு இருந்தாலும் மலேசிய அரசில் அவர்களுக்கு ஓரளவு இடம் இருக்கிறது. மலேசிய இந்தியக் காங்கிரஸ் என்ற ஒன்று ஓரளவு இந்தியர்களை ஒற்றுமைப்படுத்துவதில் வெற்றி அடைந்துள்ளது. இந்தியர்களுக்கு அங்கு வேறு அரசியல் கட்சி இருப்பதாகத் தெரியவில்லை. அம் மலேசிய இந்தியக் காங்கிரஸ் இப்போது தமிழர்கள் கைக்குள்ளேயே அமைந்துள்ளது.[3] மலேசிய அரசில் மான்புமிகு சாமிவேல் அவர்கள் முதல்நிலை அமைச்சராகவும் மாண்புமிகு பத்மநாபன், சுப்பிரமணியம் ஆகியோர் துணை அமைச்சர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். ஆனாலும், தமிழருடைய தேவைகளும் உணர்வுகளும் நிறைவேறுகின்றன என்று சொல்ல முடியவில்லையாம்; 31 இலட்சம் சீனர்களுடன் போட்டியிடும் 46½ இலட்சம் மலாயர்க்கு 9¼ இலட்சம் தமிழர் தேர்தலில் தேவைப்படுகின்றனர்!

சமூக நிலையில் தமிழர்கள் பெரும்பாலும் கீழ்நிலை உழைப்பாளர்கள். (மிக மேல் நிலையில் இருப்பவர் சீனர்கள்.) இலங்கையிலிருந்து வந்த தமிழர்களும் இந்தியாவின் வட பகுதியிலிருந்து வந்த இந்தியர்களும் அரசின் அலுவலகங்களிலும் பிற பணிமனைகளிலும் ஓரளவு உயர் பொறுப்புக்களில் பணி புரிகின்றனர்.

தமிழகத்தின் வட மாவட்டங்களிலிருந்து நிலம் இல்லாத வேளாண்மைக் கூலிகளாக விளங்கிய தாழ்த்தப்பட்ட மக்களே சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் இங்குக் குடியேறினர். அவர்களுடைய 3-ஆவது 4-ஆவது பரம்பரை இப்போது மலேசியாவில் வாழ்ந்து கொண்டு இருக்கிறது. பெரும் பாலோர்க்கு இந்தியாவோடு தொடர்பு அற்று விட்டது. அவர்கள் மலேயாவையே தம் தாயகமாக்கிக் கொண்டனர். அண்மையில் வாணிகம், அரசலுவல், கல்வி முதலான காரணங்களுக்காக அந் நாட்டில் சென்று குடியேறிய தமிழர்கள் மட்டுமே இந்தியாவை நினைத்துக் கொண்டிருக்கின்றனர். தமிழகத்தில் இருப்பது போன்று வட்டாரம், சமயம் ஆகியவை அங்குள்ள தமிழரிடமும் குடி கொண்டிருக்கின்றன. சாதிப் பிரச்சினை, குடிப் பழக்கம், சமய மூட நம்பிக்கை (பல தெய்வ வழிபாடு, உருவ வழிபாடு, கோவில் களில் பலியிடல், காவடி எடுத்தல், தீ மிதித்தல்) ஆகியவை இம் மக்களின் வாழ்க்கைக் குறையாக இன்றும் இருந்து கொண்டிருக் கின்றன.[4] இலங்கைத் தமிழர் ஒரு புறமும் நகரங்களில் வாழும் படித்த தமிழர்கள் ஒரு புறமும் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு புறமும் பிற இந்தியர் ஒரு புறமும் ஆக இந்தியர்கள் ஒட்டியும் ஒட்டாதும் இந்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனாலும், தமிழ் மொழி உணர்வும் இந்துசமய உணர்வும் சில பொதுப் பழக்க வழக்கங்களும் அவர்களை இணைத்து ஒன்றுபடச் செய்கின்றன. பொருளாதார வாழ்க்கையில் இன்று தோட்டத் தொழிலாளர்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும், அவர்கள் ஏழைகளே. நகரங்களில் வாழும் தமிழர்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டு உள்ளனர். மலேசியப் பொருளாதாரம் அவர்களுக்கு ஓரளவு உயர்ந்த வாழ்க்கைத் தகுதியைத் தந்துள்ளது. (ஆனால், அனைவர்க்கும் அல்ல.)[5] பொருளாதாரச் சிக்கல் ஓரளவு தீர்ந்தாலும் தமிழர்களுக்குப் பண்பாட்டுச் சிக்கல் தீர்ந்தது எனக் கூறமுடியாது. படித்த தமிழர் ஆங்கிலம் ஒன்றே கற்று ஐரோப்பிய நாகரிகத்தை மேற்கொண்டு விட்டனர். தமிழைப் புறக்கணித்துவிட்டனர். தமிழ்ப் பண்பாட்டு மரபின் தொடர் அறுந்துவிட்டது. இன்று ஆங்கிலம் கற்றும் பயனில்லை. தமிழ் கற்கவும் வாய்ப்பில்லை. மலாய்ப் பண்பாட்டில் இணையவும் முடியவில்லை; விருப்பமும் இல்லை. அவர்கள் தமக்குத் தாமே அன்னியர்; அடியற்ற மக்கள்; மரபற்ற மக்கள்[6]

மலேய நாட்டின் பொருளாதாரம் பண்டங்கள் நுகர்கின்ற பொருளாதாரமாக (Consumeristic economy) அமைந்துள்ளது. நாட்டின் பழகு பொருள்கள், உந்து வண்டிகள், வானொலி, தொலைக்காட்சி, பதிவுக் கருவிகள் முதலியன எளிய முறையில்

குறைந்த விலையில் ஏராளமாகக் கிடைக்கின்றன. பெரும்பாலான வீடுகளில் அவற்றைக் காண முடிகிறது. சப்பான், கொரியா, ஆங்காங்கு முதலிய நாடுகள் இப்பண்டங்களை ஏராளமாகத் தயாரித்து இந்நாட்டைத் தம் பொருள் விற்பனைச் சந்தைகளாக ஆக்கிக் கொண்டுள்ளன. இன்றைய மலேசியாவில் பலர் இல்லங்களில் காணப்படும் வானொலி, தொலைக் காட்சி, பதிவுக் கருவிகள், குளிரறை ஆகிய நுகர் பண்டங்கள் வந்து சேர்கின்றபோது அவர்களுடைய கல்வி உடல்நலம் குடியிருப்பு ஆகியவற்றின் தேவைகள் நிறைவேறிவிட்டன என்று சொல்ல முடியாது. கல்வி, உடல்நலம், குடியிருப்பு ஆகியவை இன்னும் பெரும்பாலான மக்களுக்கு விலை மிக்க அரிய பொருளாகவே அமைந்துள்ளன. உலகச் சந்தையில் தகரம், இரப்பர், பனையெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் ஊசலாடுகின்றபோது மலேசியாவின் பொருளாதாரமும் ஊசலாடும் நிலையில் உள்ளது.[7]

மலேசியாவில் தமிழர்கள் சிறுபான்மையினர். அரசியலும் சமூகமும் இனத்தின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. இதன் காரணமாக மொழி, பண்பாடு, கலை, கல்வி ஆகியவற்றைத் தமக்கென வகுத்துக் கொள்வது கடினமாக உள்ளது. அவற்றுக்கு அவர்கள் பெரிதும் தாய்த் தமிழகத்தையே சார்ந்து இருக்கின்றனர். அது ஓரளவு தவிர்க்க முடியாததும் இயல்பானதுமாகும். மலேசியாவில் தமிழர் குடும்பங்களில் இன்று ஒலிக்கும் தமிழ்ப் பாடல்கள், பேசும் படங்கள், இன்றைய இலக்கியங்கள், சமய நிறுவனங்கள் ஆகியவை இதற்குச் சான்றாக விளங்குகின்றன. ஆனால், இவற்றுக்கு வாயிலாக அமைந்த அந்தத் தமிழுக்காவது அங்கு வாழ்வுண்டா என்பது ஐயமே!

தம் சமய வாழ்வைப் பொறுத்தவரை மலேயத் தமிழர்கள் தமிழகத்தின் பட்டிதொட்டிகளையே, அங்குப் படைத்துவிட்டார்கள் என்று சொல்லும்படி அமைந்துள்ளது. தமிழகத்தில் விளங்குவதுபோன்றே திராவிடக் கிராமத் தேவதைச் சமயம் ஒருபுறமும் வைதிக பிராமண சமயம் ஒருபுறமுமாக இருவகைச் சமயங்கள் விளங்குகின்றன. இன்று 10 இலட்சமாக விளங்கும் தமிழர்களின் முன்னோர்கள் இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் மேலும் எண்ணிக்கையில் கூடுதலாக இருந்தனர். அவர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் ஆதிதிராவிட மக்கள். ஆகவே தோட்டப் புறங்களில் சமயம் மாரியம்மன், காளியம்மன், முனீசுவரன், ஐயனார், வைரவர் கோவில்கள்; வழிபாடுகள், தெய்வத்திற்கு உயிர்ப்பலி இடல், தேர்த் திருவிழா, அலகு குத்துதல், தீ மிதித்தல், குடி கூத்து. நகர்ப் புறங்களில் நடுக்குடி,

மேற் குடிமக்கள்—முக்கியமாக நகரத்துச் செட்டிமார் — அமைத்த சுப்பிரமணியர் ஆலயங்கள்,விநாயகர் ஆலயங்கள், சிவன் கோவில் கள், இவற்றுக்கு ஆகம முறைப்படி அமைந்த கட்டடங்கள், வழி பாடுகள், இறக்குமதி செய்யப்பட்ட பிராமண அர்ச்சகர்கள், பங்குனி உத்திரம், தைப்பூசம், நவராத்திரி, விநாயக சதுர்த்தி, காவடி எடுத்தல், காணிக்கை குவித்தல் என்ற முறையில் சமயம், தீ மிதித்தல், காவடி எடுத்தல், அலகு குத்தல், பலியிடல் முதலானவை பிற சமயத்தாரிடையே தலைக் குனிவை ஏற்படுத்து கின்றன என்று தமிழருள் பலரே சீர்திருத்தம் பேசும் போக்கும் அங்கு உண்டு. இனவேறுபாட்டடிப்படையில் கடுஞ்சமயப் பீடிப்புடன் இயங்கும் அச்சமுதாயத்திலும் அரசியலிலும் தமிழர் தம் இனத்தையும் சமயத்தையும் கட்டாயமாகப் பின்பற்றித் தம் தனித்தன்மையைக் காட்டிக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டு உள்ளதுபோலும். ஆனாலும், காலமாறுபாட்டையும் புதுமைச் சூழலையும் அறிவியல் வளர்ச்சியையும் கருத்தில் கொண்ட சமய மாக அயலகத் தமிழர் சமயம் அமைய வேண்டும் என நாம் எதிர் பார்ப்பது முறையே.

அமைச்சர் சுப்பிரமணியத்துடன் 10—6—82 முற்பகல்

9—6—82 இரவு சிங்கப்பூரிலிருந்து பேருந்து வண்டி வழியாகக் கோலாலம்பூரை அடைந்தேன்.

துணைஅமைச்சர் மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு செல்வராசு கோலாம்பூர் பேருந்து நிலையத்திலிருந்து வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றார். பின்னர் அவர் காலை 9 மணி அளவில் தாம் பணிபுரியும் துணை அமைச்சர் மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்களின் அலுவலகத் திற்கு அழைத்துச் சென்றார்.

மலேசிய அரசில் குடிஅமர்த்தலுக்கானஅமைச்சகத்தில் துணை அமைச்சராகத் திரு சுப்பிரமணியம் அவர்கள் பொறுப்பு ஏற்று இருக்கிறார்கள். தமிழகத்தின் நாமக்கல் வட்டாரத்திலிருந்து சென்ற தொழிலாளியின் வழியினர் இப்போது பெருமை மிகு அமைச்சராக விளங்குகின்றார்கள். அவர்களைக் கண்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டேன் அவர்கள் இனிய முகத்தோடு எளிய தோற்றத்தோடும் விளங்கிப் பரிவோடு கருத்துகளைக் கேட்டுக் கொண்டார்கள். (தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு உதவுவ தாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்) கல்வி பற்றிய அனைத்துப்

பொறுப்புகளையும் பல்கலைக் கழகங்கள் ஏற்றிருப்பதைச் சுட்டிக் காட்டி அவற்றை அணுகுமாறும் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்தியக் கல்வித்துறைத் தலைவர் முனைவர் சிங்காரவேலு

நண்பகல் அளவில் கோலாலம்பூருக்கு அருகில் 10 மைல் தள்ளி மலேயாப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. அங்குத் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றும் முனைவர் தண்டாயுதம் துணையோடு பிற்பகல் பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வித் துறைக்குச் சென்றேன். அதன் தலைவர் முனைவர் சிங்காரவேலு அவர்களை முதலில் கண்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றியும் அங்குள்ள இந்தியக் கல்வித் துறையின் பணிகள் குறித்தும் திட்டங்கள் குறித்தும் விரிவாக 2மணி நேரம் கலந்துரையாடும் வாய்ப்புப் பெற்றேன். முனைவர் சிங்காரவேலு அவர்கள் கீழை ஆசிய நாடுகளில் இராமாயணம் பற்றி ஆராய்ச்சி செய்து மலேயாப் பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் முனைவர் பட்டம் பெற்றவர்கள்; 12 ஆண்டுகளாக இந்தியத் துறையின் தலைவராக விளங்கி வருகிறார்கள்; ஆரவாரம் இல்லாத முறையில் இந்தியத் துறையினைக் கட்டுப்பாடோடு நடத்தி வருகிறார்கள். அவரோடு உரையாடியதில் நான் பல விளக்கங்களைப் பெற்றுக் கொண்டேன்.

1. தனி மலாய் மொழிக் கொள்கை, பல்கலைக் கழகத்திலும் முழுமையாக வற்புறுத்தப்படுகிறது. தமிழ்த் தட்டச்சு எழுத்தாளர்கள் கூடக் கட்டாயமாக மலாய் மொழி தெரிந்திருக்க வேண்டுமாம். இந்தியக் கல்வித் துறையில்கூட ஒரு பிரிவில் மலாய் மொழியில் கற்பித்தல் வேண்டியிருக்கிறது. இந்தியத் துறையில் படிக்க வரும் மலாயருக்குத் தமிழை மலாய் மொழியில் கற்பிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

(2) முழுவதும் மலாய் வழிக் கல்வி கற்பித்தலுக்கு ஒரு தேசியப் பல்கலைக் கழகம் மலேசியாவில் நிறுவப்பட்டுள்ளது.

(3) மன்னர் ஆசியக் கழகம் (Royal Asiatic Society) என்பதன் கிளை ஒன்று மலேசியாவில் செயல்பட்டு வந்தது. அதன் கடந்த காலப் பணிகள் பல தென் கிழக்காசிய ஆராய்ச்சிக்காகப் பயன்படலாம்.

சிங்காரவேலு, தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ளத்தக்க சில ஆராய்ச்சித் திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள்:

(அ) மலாயருக்குத் தமிழ் கற்பிக்கப் பாட நூல்கள் தயாரித்தல்

(ஆ) தென்கிழக்காசியப் பொருள் பற்றிக் கருத்தரங்கு நடத்துதல்

(இ) தென்கிழக்காசியாவில் சமயம், வரலாறு பற்றி ஆராய்தல்

(ஈ) மலாய்—தமிழ், தமிழ் — மலாய் ஆகிய அகராதிகள் வெளியிடலாம்.

(உ) மலாய்—தமிழ் உறவினை ஆராயல். முன்னரே ஒரு மலாய்ப் பேராசிரியர் இது பற்றி எழுதி உள்ளார்கள்.

பல்கலைக் கழக இந்தியத் துறையில்

11—6—82 முற்பகல்

பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறைத் தலைவர் முனைவர் சிங்காரவேலு இந்தியத் துறையின் எல்லா ஆசிரியர்களையும் கண்டு கலந்துரையாட ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அக் கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி விளக்கினேன். பின் அவர்கள் கருத்துரைகள் கேட்க விரும்பினேன். எதிர் காலத்தில் தமிழ் ஆராய்ச்சிக்காகச் செய்ய வேண்டியவை பற்றி ஆசிரியர்கள் பலர் கருத்துக்கள் வழங்கினர். இந்தியத் துறையில் ஒவ்வோராசிரியரும் ஏதாவது ஓர் ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொண்டு செய்து வருகிறார்கள். முதல் பட்டம் பெற்றவர்கள் முதல் வகுப்பிலே தேறியிருந்தால் இளநிலை ஆசிரியராகச் சேர்ந்து தமிழ் முதுகலைப் பட்டம் பெற வாய்ப்பு உண்டு. அவ்வாறு சிலர் அங்கே பணி புரிகிறார்கள். முதுகலைப் பட்டம் பெற்று அவர்கள் பள்ளிகளுக்கு ஆசிரியர்களாகச் செல்லலாம். இந்தியத் துறை ஆசிரியர்கள் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சித் திட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு;

(1) திரு டேனியல் — கிறித்துவ இலக்கியம்.

(2) திரு இராசு — மலேசியாவில் நகர்ப்புற இந்தியர்.

(3) திரு சுப்பிரமணியம் — மலேசியத் தமிழ்ச் சிறு கதைகள் — முதுகலைக்காக.

(4) திரு பழனியப்பன் – மலாய் இந்திய இலக்கிய ஒற்றுமை– மகாபாரதக் கதைக் கூறுகள்.

(5) திரு இராசா கிருட்டிணன் – சாதி முறை – இலங்கை வம்சாவளி வரலாறு– பிஎச்.டிக்காக.

(6) முனைவர் திலகவதி–மலேசியத் தமிழ் மொழியியல் ஆய்வு.

(7) முனைவர் திருமதி நடராசா – வடமொழி தென்மொழி உறவு.

(8) முனைவர் தின்னப்பன் – மலேசியாவில் நாட்டுக் கோட்டைச் செட்டியார் வரலாறு.

(9) முனைவர் சிங்காரவேலு – தென்கிழக்காசியப் பண்பாடு– மலேசியா, சயாம், இந்தோசீனா ஆகியவற்றில் இராமாயணம்.

(10) திரு நாகப்பன்–தமிழ் மலாய் இலக்கியம்–முதுகலைக்காக.

(11) முனைவர் கந்தசாமி – பக்தி இலக்கியம்.

(12) முனைவர் தண்டாயுதம் – மலேசியத் தமிழ் இலக்கியம் – மலேசிய நாட்டுப் புறப் பாடல்கள்.

இந்தியத்துறை ஆசிரியர்கள் மலேசியாவின் தேவைகளை யொட்டிச் சில திட்டங்கள் செய்யலாம் என்று கருத்துக்கள் வழங்கினர்.

(1) மொழி ஒலிக் கருவி (Lingua Phone) முறை தமிழில் தேவை.

(2) தமிழ்ப் பாடங்களை நாடாக்களில் பதிவு செய்து கொள்ளல் தேவை.

(3) தமிழை முதல் மொழியாகவும் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கும் பாட நூல்களும் திட்டங்களும் தேவை.

(4) மலாய், சீன மொழிகளில் வளர்ந்துள்ளது போன்று தமிழிலும் நாட்டுப் பாடல்கள் கவர்ச்சியான பாடல்களாக அமைதல் வேண்டும்.

(5) எழுத்துச் சீர்திருத்தம் தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளும் உடன்பட்ட ஒன்றாக இருத்தல் வேண்டும்.

(6) கலைச்சொல்லாக்கம் தமிழர் வாழும் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக இருத்தல் வேண்டும்.

(7) எல்லாக் கல்வெட்டுக்களையும் வெளியிடல் தேவை. (திரு சதாசிவ பண்டாரத்தாருடைய பிள்ளையிடம் 30 ஆயிரம் வெளிவராக் கல்வெட்டுக்கள் உண்டாம்.)

(8) சிங்கப்பூர், மலேசியா நாடுகளிடம் உள்ள தமிழ் ஆராய்ச்சிக்கான வெளியீடுகள், சான்றுகள் ஆகியவற்றைத் தொகுப்பதற்குத் திட்டங்கள் தேவை.

(9) அயல்மொழி மாணவர்க்குத் தமிழ் கற்பிக்க ஏற்ற முறையில் தமிழ்ச் சொற்கோவைகள் தேவை.

7-ஆம் ஆண்டு விடுமுறை பெறும் முறை கோலாலம்பூரின் பல்கலைக் கழகத்திலும் உண்டு. தமிழ் ஆசிரியர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வந்து ஆராய்ச்சி செய்ய எண்ணம் கொண்டிருக்கின்றனர்.

கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறை தொடங்கிய போது நாட்டுக் கோட்டைச் செட்டிமார் வழங்கிய பணம் இன்றும் அத்துறையில் இருக்கின்றது. அதனைப் பயன்படுத்தித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு இணைந்து சில திட்டங்கள் நிறைவேற்றலாம் என வெளியே ஒரு கருத்து கூறப்பட்டு உள்ளது. இவ்வாறு இலங்கையின் நிதி (Ceylon Funds) என ஒன்று உண்டு. ஈழ நாடு பற்றி ஈழத் தமிழர் செய்யும் ஆராய்ச்சிக்கும் அயல் நாடு செல்பவரின் போக்குவரத்துக்கும் இந்த உதவி சிலருக்குக் கிடைக்கின்றது.

11-6-82 பிற்பகல் கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தின் நூலகத்தினையும் பிற துறைகள் சிலவற்றையும் பார்வையிடப் பயன்படுத்திக் கொண்டேன்.

தமிழ்த் தொண்டர் வீரப்பன் 12-6-82

கோலாலம்பூர்த் தமிழ் இயக்கங்கள், நிகழ்ச்சிகள், கல்விப் பணி விழாக்கள் ஆகியவற்றில் ஈடுபாட்டோடும் உணர்வோடும் பங்கு கொள்ளும் தமிழர் திரு இர. ந. வீரப்பன் ஆவார். கோலாலம்பூருக்கு அருகில் கிள்ளான் துறைமுகத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் அவர் பணியாற்றி வருகிறார். இங்கே அரசினுடைய போக்கு, தமிழர் மனப்பான்மை, அவர்கள் வாய்ப்புக்கள், எதிர் காலத் திட்டங்கள் ஆகியவை பற்றி எல்லாம் அவர் விரிவாகப் பேசினார். தமிழ் உணர்வு, பணி ஆகியவற்றில் கடந்த 10 ஆண்டுகளில் நடந்த மாற்றத்தை அவர் சுட்டிக் காட்டினார். மலேசியாவில் வாழும்

மேல்மட்டத் தமிழர் பலர் மலாய் மொழிக்கு அடிமையாக வாழ்கின்றனர் என அவர் மனவருத்தப்பட்டார். தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றிப் பெருமிதமும் ஆர்வமும் கொண்டார். அவருடைய உரையாடலில் மலேசியாவில் தமிழின்நிலை பற்றியும், தமிழர்நிலை பற்றியும் பல்வேறு கருத்துக்களைத் தெரிந்து கொண்டேன். கோலாலம்பூரில் இறுதிவரை உடனிருந்து உதவிகள் செய்தார் அவர்.

பள்ளித் தலைமையாசிரியர் சோதிநாதன்

12—6—82 பிற்பகல்

சிறந்த பள்ளி ஒன்றின் தலைவராக விளங்கும் திரு சோதிநாதன், கோலாலம்பூரில் மதிப்பிற்குரிய ஓர் இலங்கைத் தமிழர். தமிழர்கள் சிக்கல்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் சிந்தனைப் போக்கு உடையவர். அவரோடு உரையாடிய போது சில கருத்துக்களைப் பெற்றேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப் பட்டதைத் திரு சோதிநாதன் வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

தமிழ் மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் மலேசியத் தமிழரைக் கலக்காது செய்தது வருந்தத்தக்கது என்பது அவர் கருத்து. ஒரே தமிழையே, அந்தத் தமிழுக்கான வெளியீடுகளையே மலேசிய மக்களும் பயன்படுத்துகின்றார்கள். நூல் வெளியீடுகள் மலேசியாவிலும் உண்டு. அதன் உடன்பாட்டோடு தாய்த் தமிழகம் எந்த மாற்றம் செய்தாலும் மலேசியத் தமிழர்களை அது பாதிக்காது. மலேசியாவிலும் தமிழ்ப் பெருமக்களும், கல்வியாளர்களும் இருக்கின்றனர். மரியாதைக்காவது தாய்த் தமிழகம் எழுத்துச் சீர்திருத்தம் செய்தபோது அயல்நாட்டுத் தமிழர்களின் கருத்து அறிந்திருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. இவ்வாறு, அயல்நாட்டுத் தமிழர்களைக் கலக்காது செய்யப்படும் பல மாற்றங்களால் அயல்நாட்டுத் தமிழ் தனித்துப் போகும்படியான ஒரு நிலை ஏற்பட்டு விடும் என அவர் அஞ்சுகிறார்.

மலேசியத் தமிழர், பள்ளியில் தமிழ் படித்துவிட்டுத் தமிழில் உயர்கல்வி கற்க விரும்புகின்றனர். ஆனால், வாய்ப்பு இல்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழகத்திலிருந்து மலேசியாவிற்கு வரும் அரசியல்வாதிகளும் பிறரும் பல்வேறு உறுதிமொழிகளைத் தருகின்றனர். ஆனால், செயலில் ஒன்றும் நடைபெறுவதில்லை என்று அவர் வருத்தம்

கொண்டார். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழுக்குச் செய்யப்படுவதுகூடத் தமிழகத்தில் செய்யப்படுவதில்லை என்பது அவர் மதிப்பீடு.

தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி நான் எடுத்துரைத்த கருத்துக்கள் அவரைக் கவர்ந்தன போலும். என் கருத்துக்களைக் கோலாலம்பூரில் இருக்கும் பல இயக்கத்தாருக்கும் நான் எடுத்துக் கூற வேண்டும் என்று அவர் விரும்பினார். அதற்கு வாய்ப்பாக 18–6–82 மாலை கோலாலம்பூரில் பல இயக்கத்தாரும் சந்திக்கும் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாட்டினைச் செய்ய முனைந்தார் அவர்.

மலாய் நிறுவனத்தில் தமிழ் 12–6–82 இரவு 8 மணி

மாரா தொழில் நுட்பக் கல்லூரி (Mara Institute of Technology) என ஒன்று கோலாலம்பூரில் இயங்குகின்றது. இது மலாய் மக்களுக்கு மட்டுமே நடைபெறுகிறது. 8000 மாணவர்கள் உயர் தொழில் நுட்பக் கல்வி படிக்கின்றனர்; ஒரு பல்கலைக் கழகம் போன்று இது விளங்குகின்றது. அனைத்துமே மலாய் மொழியில் நடத்தப்படுகின்றன. டிப்ளமோ வழங்கப்படுகிறது. 'மலேசிய பூமி புத்திரர்கள்' இதிலே பயின்று எளிதாக மேலை நாடுகளுக்குச் செல்கின்றனர். இதன் காரணமாக ஓரளவு ஆங்கிலமும் கற்பிக்கப்படுகிறது. இங்குப் படிப்போர் ஏதாவது பிறிதொரு மொழியைப் படிக்கும் திட்டம் உள்ளது. மலேசியாவின் பொருளாதாரம், வாணிகம் ஆகியவற்றின் பெரும்பகுதி சீனர்கள் கையிலே உள்ளது. அதைக் கைப்பற்ற வேண்டும் என்பது மலேய மக்களின் திட்டம். அதன் பொருட்டு அவர்கள் ஓரளவு சீனமொழி கற்க முன்வருகின்றனர். 8000 மாணவர்கள் படிக்கும் அந்நிறுவனத்தில் 100/150 மலாய் மாணவர்கள் தமிழ் படிக்க முன்வருகின்றனர். ஆனாலும், பலரிடையே தமிழ் ஏன் படிக்க வேண்டும் என்ற வினா எழுந்து கொண்டிருக்கிறது. தமிழ்மொழி Language of Technology அல்ல என்பது இதற்குக் காரணம். பொதுவாக அந்நிறுவனத்தில் தமிழுக்கு ஊக்கமும் ஆக்கமும் இல்லை. அந்நிறுவனத்தில் மலாய் மக்களுக்குத் தமிழ் கற்பிக்கப் பாடநூல்கள் போதிய அளவில் இல்லை. இங்குள்ள சூழலுக்கு ஏற்ப அப்பாட நூல்கள் அமைய வேண்டும். பாட நூல்/பதிவு செய்த நாடாக்கள் தேவை. ஆனால், தமிழ் முதல் முதலாகப் படிக்கும் தமிழகத்து மாணவர்களுக்கு ஏற்ற முறையில் அவை இங்கும் இருத்தல் கூடாது. மலேசியாவில் ஏறத்தாழ 10 இலட்சம் தமிழர்கள் வாழ்கின்ற காரணத்தால் அவர்களோடு உறவு கொள்ள அம் **மாரா** நிறுவனத்தில் ஒரு சிலர் தமிழ் படிக்க

முன்வருகின்றனர். இந்தப் போக்கினையும் மாற்றி இங்கே இந்தியைக் கொண்டு வரலாம் என்று இந்தியத் தூதரக அலுவலகம் ஒரு முறை முயற்சி செய்ததையும் அந்நிறுவனத்தின் தமிழ் ஆசிரியர் வருத்தத்தோடு எடுத்துக்காட்டினார்.

மலேசியாவின் அரசியல்வாதிகளிடம் இப்போது ஒரு புதிய குரல் கேட்கிறது. அது 'கிழக்கை நோக்கு' என்பது ஆகும். அதாவது 'ஜப்பான், கொரியா, சீனம் முதலிய நாடுகளின் வளர்ச்சிகளை நோக்கு' என்பது இதன் பொருள். இவ்வளவு காலமும் மேற்கு நாடுகளை நோக்கி இருந்த நிலையினை மாற்றிக் கீழை நாடுகளை நோக்கும் புதிய தத்துவத்தினை இந்தக் கொள்கைக் குரல் விளக்கி நிற்கிறது. இப்புதிய கொள்கை முழக்கத்தின் காரணமாக மலாய் மக்களிற் பலர் இப்போது ஜப்பான் படிக்கத் தொடங்கி இருக்கின்றனர். ஆங்கிலம் கூட முதலிடம் பெறுவது இல்லை.

இத்தொழில்நுட்ப நிறுவனத்தில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றும் திரு மதியழகன் என்ற இளைஞர், இவ்வாறு பல கருத்துக்களைக் கூறி அந் நிறுவனத்தில் தமிழ் கற்பிக்கும் நிலை தொடர்ந்து நீடிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பத்துமலை முருகன் கோயில் 13—6—82 முற்பகல்

கோலாலம்பூரில் இந்தியர்கள் பெருமையோடு பேசிக் கொள்ளும் பத்து மலைக் குகைகள் உள்ளன. நீண்ட நெடுங் காலத்திற்கு முன் இயற்கையின் விளையாட்டால் அமைந்த பெருங் குகைகள் சில கோலாலம்பூருக்கு வெளியே 10 மைல் தொலைவில் உள்ளன. தமிழர் அந்த மலைக் குகையில் குன்றுறையும் குமரவேளைக் குடி அமர்த்தியுள்ளனர்; தமிழரின் பண்பாட்டை விளக்கும் சிலைகள் பலவற்றை நிறுவி உள்ளனர். கோலாலம்பூரில் தமிழரது இந்துசமயத்தின் சான்றுகளாக அவை நின்றுகொண்டிருக்கின்றன. இந்தப் பத்து மலை முருகனுக்கு ஆண்டு தோறும் தைப்பூசத்தில் விழா எடுக்கப்படுகின்றது. இலட்சக்கணக்கான தமிழர்கள் கூடுகின்றனர். காவடிகள் எடுக்கப்படுகின்றன. தேர் இழுக்கப்படுகின்றது. ஏராளமாகக் காணிக்கை குவிக்கப்படுகின்றது. மலேசிய தமிழரின் சமய வாழ்க்கையினைப் பத்துமலை முருகன் வரலாறு வைத்து அறியலாம். இதனைச் சென்று கண்டு அறியச் சிறிது நேரத்தினை நான் எடுத்துக் கொண்டேன். சுப்பிரமணியத்தின் அருளால் தமிழ்ப் பல்கலைக் கழகம் சிறப்புறும் என நம்பிக்கை கொண்டேன்.

தமிழர் பிழைக்கும் தோட்டத்தில் 13—6—82 பிற்பகல்

மலேசியத் தமிழ் மக்களின் வாழ்க்கையினை அறியக் கோலாலம்பூரை மட்டும் சுற்றி வலம் வந்தால் போதாது. உடல் உழைத்து வாழும் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் இடங்களுக்குச் சென்று காண வேண்டும் என எண்ணினேன். கோலாலம்பூர் அரசில் உள்ள கிள்ளானை ஒட்டி மிட்லாண்ட் தோட்டம் என்னும் ஒரு பெருந் தோட்டம் உள்ளது. இரப்பரும் பனை மரங்களும் அங்கே தோட்டப் பொருள்கள்.

ஏராளமான தமிழர்கள் அங்கே பணி புரிகின்றனர். அன்று மாலை அங்கே ஒரு நூல் வெளியீட்டு விழா. தோட்டத் தொழிலாளர்களிடையே தோன்றிய உணர்ச்சி மிக்க தமிழர் ஒருவர் எழுதிய புத்தகங்கள் தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்டு, சுப்பிரமணியம் என்னும் அத்தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் முன்னிலையில் வெளியிடப்பட்டன. கூட்டத்திலேயே பல வெளியீடுகள் விற்பனை ஆயின. 100, 50, 10, 5 என வெள்ளிகள் தந்து பலர் நூல்கள் பெற்றனர். இதுதான் புத்தக விற்பனைத் தந்திரமாகும். மிட்லாண்ட் தோட்டத்தில் 100 ஆண்டுகளுக்கு மேலாக நிற்கும் மாரி அம்மன், அண்டையிலுள்ள சமூகக் கூடம், உச்சியிலுள்ள சிமெண்ட் தகடுகள்வேயப்பட்ட தொழிலாளர் கூடங்கள், இரப்பர் மரங்கள், உயர்ந்த பனை மரங்கள், ஒரு கூடமே மரத் தட்டிகளால் 4 அறைகளாகப் பிரிக்கப்பட்ட தொழிலாளர் வீட்டின் குளிர்ப்பெட்டி, வண்ணத் தொலைக்காட்சி, வானொலி, பதிவுக் கருவி, தெருவிலே கார் நடமாட்டம், குடும்பத்தாரிடையே எக்கப் பார்வை, தமிழகத்தின்மீது சிந்தனை முதலானவற்றைக் காணும் படியான வாய்ப்பு எல்லாம் அன்று பெற்றேன் ஒவ்வொன்றும் நீண்ட நெடிய ஆராய்ச்சிக்கு இடம் தரத்தக்கது. 'தமிழ் நேசன்' நாளேட்டில் பணி புரியும் திரு தமிழ் மணி, கவிஞர் பாதாசன் ஆகியோர் என்னைக் காரில் அழைத்துச் சென்று திருப்பிக் கோலாலம்பூர் கொண்டு வந்து விட்டனர்.

பல்கலைக் கழகத்துக் கல்வித் துறையில்
14—6—82 காலை 10 மணி

பல்கலைக் கழகத்தின் சில துறைகளில் பணியாற்றும் தமிழர்களைக் காணச் சென்றேன். குறிப்பிடத்தக்க ஒருவர், கல்வித் துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றும் முனைவர் மாரிமுத்து அவர்கள்; சமூகவியல் கல்வியாளர் (Sociologist of Education) எனத் தம்மை அவர் அறிவித்துக் கொண்டார்; இங்கி

லாந்தின் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்திலே மலேசியத் தமிழரின் கல்வி நிலை பற்றி ஆராய்ந்து பட்டம் பெற்றவர். அவர் சிந்தனையெல்லாம் மலேசியாவின் ஏழை எளிய தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றியதாகவே இருந்தது. கல்வி நல ஆராய்ச்சி நிறுவனம் (Educational Welfare and Research Foundation) என ஒன்றினை அவர் நிறுவித் தமிழர் பற்றிய ஆராய்ச்சிக்குப் பாடு பட்டு வருகின்றார். தமிழ்ப் பல்கலைக் கழகம் இன்றைய தமிழ் மக்கள் பற்றிய ஆராய்ச்சியினைச் சமூகவியல் கொண்டு ஆராய வேண்டும் என்றும் அதற்கான வாய்ப்புக்கள் அங்கு இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பல்கலைக் கழகத்தின் வழியாகவும் தன் சிறு நிறுவனத்தின் வழியாகவும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு ஒத்துழைத்து ஆராய்ச்சிகள் நிகழ்த்தலாம் என்றும் தம் கருத்தினைக் குறிப்பிட்டார்கள். தம் நிறுவனத்தின் வழியாக 'மலேசியாவில் இந்தியர்களைப் பற்றிய ஆராய்ச்சி' என்னும் ஒரு சிறு வெளியீட்டினை அவர் வெளியிட்டிருந்தார். பல்வேறு நிறுவனங்களில் பணி புரியும் தமிழர்கள் பற்றிய புள்ளி விவரங்களை அந் நிறுவனம் வெளியிட்டுள்ளது. மலேசியத் தமிழர்களைப் பற்றி அறிவியல் நோக்கிலான ஆராய்ச்சிக்கு அவர் பெரிதும் துணையாக நிற்பார் எனக் கருதலாம்.

பல்கலைக் கழகத்து மொழி மையம்

சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் இருப்பது போன்றே கோலாலம்பூர் மலேயாப் பல்கலைக் கழகத்திலும் ஒரு தனித் துறை போன்று **மொழி மையம்** (The Language Centre) ஒன்று அமைந்துள்ளது. இந்தப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் தம்முடைய பல்வேறு பாடங்களோடு ஒரு மொழியினையும் பாடமாக எடுத்துப் படிக்கலாம். அதன் பொருட்டு மேலை ஐரோப்பிய மொழிகள், கீழைஆசிய மொழிகள் ஆகியவை கற்பிக்கும் மையமாக இது நன்முறையில் செயல்பட்டு வருகிறது. ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், தமிழ், சீனம், ஜப்பானியம், மலாய் முதலான மொழிகள் இங்கே கற்பிக்க வாய்ப்புக்கள் உள்ளன. உலக அறிவு வளர்ச்சி பெறுதல் கருதியும் உலகின் வணிக வளர்ச்சி கருதியும் உலகின் மொழிகள் பலவற்றைக் கற்க மலேசிய அரசு விருப்பம் கொண்டுள்ளது. எளிய முறையிலும் புதிய முறையிலும் அறிவியல் சார்ந்த கருவிகள் துணைகொண்டும் (ஒலிப்பதிவுகள், படங்கள் முதலாயின) அயல்மொழிகள் இங்குக் கற்பிக்கப்படுகின்றன. இங்குச் சிறப்பாகக் கருதத்தக்க ஒரு முறை குறிப்பிட்ட பணிக்குரிய மொழி (Language for Specific Purpose) என்னும் ஒன்றாகும். அதாவது வணிகத் தொடர்பிற்கென்றோ அறிவியல்

தொடர்பிற்கென்றோ பொதுமக்கள் தொடர்பிற்கென்றோ இலக்கியத் தொடர்பிற்கென்றோ தனித்தனித் தேவைக்கு ஏற்ப மொழிகள் கற்பித்தல், அதற்கேற்ப மொழிப் பாடப் புத்தகங்கள் தயார் செய்யப்படுகின்றன. **(Language Text Books for Specific Purposes)** அம்மொழி மையத்தில் வேறு மொழியில் கல்வி உயர் மட்டத்தில் கற்பித்தல் ஒன்றும் இல்லை. மலேசியாவில் தமிழ் மொழியினை மலாய் மக்களும் சீனமக்களும் பொது இடங்களிலும் கடைகளிலும் பழகுவதற்குரிய மொழியாக மட்டுமே படிக்க விரும்புகின்றனர். வேறு வகையில் தமிழ் அவர்களுக்குப் பயன் படுவதில்லை. இம்மொழி மையத்தில் பாலசுப்பிரமணியம் என்னும் மலேசியத் தமிழர், தமிழ்ப் பகுதியில் பணி புரிந்து வரு கின்றார். அம்மொழி மையம் பற்றிப் பல்வேறு கருத்துக்களை அவர் விளக்கிவிட்டு அம் மையத்தின் தமிழ் ஆசிரியர் என்ற முறையில் இடர்ப்பாடுகள் பலவற்றைச் சுட்டிக் காட்டியும் அவற்றைக் களைவதற்கான வழிகளை எடுத்துக் காட்டியும் பேசினார்:

(அ) தமிழ்மொழி கற்பித்தலுக்கு என்ன என்ன நூல்கள் தமிழகத்தில் வெளி வந்திருக்கின்றன என்ற விவரம் அங்கு அறிய அவருக்கு வாய்ப்பு இல்லாமல் இருக் கின்றது.

(ஆ) பேச்சாங்கிலம், அறிவியலாங்கிலம் கற்பித்தல், ஆசிரியர் பயிற்சி ஆங்கிலம் கற்பித்தல் போன்று, தமிழிலும் பேச்சுத் தமிழ், இலக்கியத் தமிழ் கற்பிக்கும் தேவை உள்ளது. இதற்கு ஒலிப்பதிவு நாடாக்கள் தேவை.

(இ) தமிழ் எழுத்துக்களைக் கற்பித்தல் கடினமாக இருக் கின்றது. ஏராளமான எழுத்துக்களையும் கற்பிக்க வேண்டி இருக்கின்றது. ஆதலால், உரோமன் எழுத்துக் களில் தமிழ் கற்பிக்கும் முயற்சியும் இருந்து வருகிறது. மலாய் மக்கள் இன்று உரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. உரோமன் எழுத்துக்கள் பயன்படுத்தப்படுமானால் மலாய் மக்கள் எளிதிலே தமிழ் கற்க வாய்ப்பு இருக்கும்.

(ஈ) அங்குள்ள பள்ளி மாணவர்களுக்கு இலக்கியம் கற்பிக் கின்ற போது அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப எடுத்துக் காட்டுகள் இருத்தல் நல்லது. தமிழக எடுத்துக் காட்டுக் களோடுள்ள தமிழ் நூல்கள் ஒத்து வரவில்லை.

(உ) அம்மொழி மையத்தில் இலக்கியத் தமிழ் கற்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(ஊ) மொழி கற்பித்தலில் பிரஞ்சுமொழியினர் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கின்றனர். பிரஞ்சுமொழி கற்பித்தலுக்குப் பலப்பல முறைகள் வளர்ந்துள்ளன. அவை போன்றும் தமிழகம் வளர்த்தல் வேண்டும்.

(எ) பிற மொழி மாணவர்களுக்கு இவ்வாறு தமிழ் கற்பித் தலில் தமிழ்ப் பல்கலைக் கழகமும் தமிழகமும் ஒத்து உழைக்க வேண்டும் எனவும், தமிழ்ப் பல்கலைக் கழகத் தோடு இணைந்து இவ்வகையில் தாம் பாடுபட முன்வருவதாகவும் திரு பாலசுப்பிரமணியம் குறிப் பிட்டார். ஆர்வமுள்ள இவ்விளைஞர் இது பற்றிப் பேசவும் அறிமுகம் பெறவும் அம்மொழி மையத்தின் தலைவரிடம் என்னை அழைத்துச் சென்று கலந்துரை யாடலுக்கு ஏற்பாடு செய்தார். இம்மொழி மையத் தின் தலைவர், மொழியியல் ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற பேராசிரியை ஆவார். திரு பாலசுப்பிரமணியத் துடன் ஆங்கிலத் துறையில் பணியாற்றும் மலேசியத் தமிழர் திரு சுப்பிரமணியத்தையும் நான் கண்டு உரை யாடினேன். அவரும் திரு பாலசுப்பிரமணியம் போன்று சில கருத்துக்களை வற்புறுத்திப் பேசினார்.

பல்கலைக் கழக நூல் விற்பனையகம்

அன்று பிற்பகல் கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தின் நூலகம், நூல் விற்பனையகம் ஆகிய இரண்டையும் சிறிது நேரம் பார்வையிட்டேன். மாணவர்களுக்குத் தேவையான அனைத்துப் புத்தகங்களும் எழுது பொருள்களும் அங்குள்ள விற்பனையகத்தில் கிடைக்கின்றன. அந்த நூல் விற்பனையகம் கோலாலம்பூரிலேயே மிகப் பெரியது எனப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் குறிப்பிடு கின்றனர். அது ஒரு நூலகத்துறை போன்றே பணிபுரிகிறது.

அருள்நெறித் திருக்கூட்டத் தலைவர்

மலேசியாவில் கடந்த 30 ஆண்டுகளாகச் சமயப்பணி ஆற்றிவரும் ஓர்அமைப்பு இது. சமய நிகழ்ச்சிகள், கூட்டங்கள், பிரசாரங்கள் நடத்துதல், தமிழகத்துச் சமயப் பெரியார்களிடத்துத் தொடர்பு வளர்த்தல், சமய வெளியீடுகள் வழங்கல் முதலிய

பணிகளை இது செய்து வருகிறது. இதன் தலைவர், முதியர் **'சைவம் கந்தையா'** என்பவர் இலங்கைத் தமிழர். 15 ஆண்டு களுக்கு முன்னர் சைவ சமயத்திற்கு ஒரு துறை ஏற்படுத்த வேண் டும் என மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு 3,00,000 உரூவா நிதி திரட்டித் தந்த நிறுவனம் இவ்வருள்நெறித் திருக்கூட்ட மாகும். இதன் தலைவர் சைவம் கந்தையா அவர்களை அன்று பிற்பகல் கண்டேன். அன்புடனும் ஆதரவுடனும் அவர்கள் பேசினார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்ட சைவ சித்தாந்தத்துறை பற்றி அவருக்குச் சில கசப்பான உணர்வு கள் உண்டென்பதைக் குறிப்பிட்டார்கள். என் மதுரைப் பல்கலைக் கழக அனுபவத்தைக் கொண்டு அவர்களுக்கு, நான் அமைதி கூறினேன். தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழர் சமயங்கள் அனைத்தும் பற்றி விரிவாக ஆராய ஒரு தனித் துறை—மையம்—அமைக்க எண்ணம் கொண்டிருப்பதை அவர்களுக்கு விளக்கினேன். அவர்கள் மகிழ்ச்சி அடைந்து சில குறிப்பிட்ட ஆராய்ச்சிக்கு உதவு வதற்கான வாய்ப்புக்கள் பற்றிச் சிந்திக்கலாம் என்றனர். அருள் நெறித் திருக்கூட்டத்தையும் ஓர் உதவி வாயிலாக தமிழ்ப் பல்கலைக் கழகம் கருதலாம்.

அமைச்சர்களிடையே 14—6—82 இரவு 7-30 மணி

கோலாலம்பூர் வானொலி நிலையத்தில் உயர் பதவியில் பணியாற்றுபவர் திரு பாலகிருட்டிணன். அவர் கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறையில் முன்னோடி மாணவராகப் படித்துப் பட்டம் பெற்றவர் ஆவார், கோலாலம் பூரில் செல்வாக்குள்ள தமிழ் மக்களோடு அவர் உறவு கொண்டுள் ளார். இந்தியாவிலிருந்து வந்த அமைச்சர் மாண்புமிகு ஆர். வி. சாமிநாதன் அவர்களுக்கு, அவர் ஒரு விருந்து கொடுத் தார், எனக்கும் அழைப்பு விடுத்தார். அவ்விருந்தில் திரு ஆர்.வி சாமிநாதன், தம் குடும்பத்தோடு கலந்துகொண்டார். அவ் விருந்தில் மலேசிய அரசின் துணை அமைச்சர்கள் மாண்புமிகு பத்மநாபன் அவர்களும், மாண்புமிகு திரு சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டனர்; சில பெருவணிகர்களும் அதிகாரி களும் அதில் கலந்து கொண்டனர். இந்திய அமைச்சரிடமும், மலேசிய அமைச்சர்களிடமும் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி விரிவாகப் பேசும் வாய்ப்பு அங்கு எனக்குக் கிடைத்தது. மாண்புமிகு சாமிநாதன் அவர்களிடம் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு யு.ஜி.சி யின் வருகை பற்றிக் குறிப்பிட்டேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் அவர் மிகவும் ஆர்வம் காட்டினார். யு. ஜி. சி. பற்றிக் கவலை வேண்டாம் என்றார். மலேசிய

அமைச்சர்கள் ஆசிரிய மாணவர் பரிமாற்றம், போக்குவரத்து உதவி ஆகியவை பற்றித் தக்கவாறு செய்யலாம் என்றனர்.

மலேசிய அரசில் முதல்நிலை அமைச்சராக விளங்கும் தமிழர் மாண்புமிகு சாமிவேலு அவர்களை, முயன்றும் நான் காண முடியாத குறை ஓரளவு அங்குத் தீர்ந்ததாகக் கருதிக் கொண்டேன். மாண்புமிகு அமைச்சர் சாமிவேலு அவர்கள் அண்மையில் தமிழகம் வருவதாகக் குறிப்பிட்டனர். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் உள்ளது. திரு பாலகிருட்டிணன் அவர்களிடம் மலேசியாவின் தமிழ் நிலை பற்றியும் தமிழர் நிலை பற்றியும் பல்வேறு கருத்துக்களைத் தெரிந்து கொண்டேன். அதில் ஒரு பகுதி:

''தமிழகத்துக் கோவில்களுக்கு இருப்பது போன்று மலேசியாவிலும் தமிழர் கோவில்களுக்கு ஏராளமாகச் சொத்து உண்டு. தமிழ் ஆராய்ச்சிக்காக அவற்றைப் பயன்படுத்தலாம். மலேசிய அரசு மட்டத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கு வாய்ப்புக்கள் குறைவு. மலேசிய அரசு, தமிழ் பற்றியும் தமிழர் பற்றியும் இந்தியா பற்றியும் எப்போதுமே அச்சமும் ஐயமும் கொண்டுள்ளது. அது கடுமையான இசுலாமியப் போக்கு உடையது. மலேசியா பற்றியும் அதன் மக்களைப் பற்றியும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் அன்னியர், தலைமை அமைச்சர் அவர்களிடமிருந்து அனுமதி பெற வேண்டிய கட்டாயம் உள்ளது; அரசியல் சமூகச் சிக்கல்கள் பற்றிய ஆராய்ச்சி என்றால் அவ்வரசுக்குப் பெருங்கலக்கம். அண்மையில் கோலாலம்பூரில் இந்திய விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டபோது அவர்கள் வெற்றியினைப் பாராட்டி ஊக்கம் தந்த தமிழர்களை, மலேசிய அரசு சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றது! ஆதலால், தமிழகம் மலேசியாவுடன் உறவு கொள்கின்றபோது எச்சரிக்கையாக இருக்க வேண்டி இருக்கிறது.''

பல்வேறு இடங்களிலும் பணியாற்றும் தமிழர்களைப் பற்றி, குறிப்பாக நாட்டுக்கோட்டைச் செட்டியார் பற்றி மலாய் மக்களிடம் வெறுப்பு இருப்பதாகத் தெரிகிறது. தமிழர்களுடைய கோவில்களும், பல தெய்வ வணக்கமும் இசுலாமிய மலாயரிடம் வெறுப்பு வருவதற்குக் காரணமாக இருக்கலாம்.

மலேயாப் பல்கலைக் கழகத்தின் பணிகளை முடித்துக் கொண்டு 16–6–82 செவ்வாய் காலை பினாங்கு புறப்பட்டேன். அன்று பிற்பகல் பினாங்கு அடைந்தேன்.

பினாங்கு அறிவியற் பல்கலைக் கழகம் 16—6—82

கோலாலம்பூருக்கு வடக்கே ஏறத்தாழ 200 மைல் தொலைவில் பினாங்கு உள்ளது. இந்தியா போன்ற நாடுகளிலிருந்து கடல்வழி வருவோர்க்குத் தலைவாசல் அது எனலாம். சில ஆண்டுகளுக்கு முன் பினாங்கு, தமிழர் வாழ்க்கைக்கு நடுவிடமாக அமைந்திருந்தது. அங்கு ஏராளமாகத் தமிழர்கள் வணிகத்திலும் சிறுதொழில்களிலும் ஈடுபட்டிருந்தனர். இன்று அத்தொகை பாதியாகக் குறைந்திருந்தாலும் அது பழைய சென்னை நகரம் போன்று விளங்குகின்றது. அங்குத் தமிழருக்கென்று பல தொழில்கள் இருக்கின்றன. 3, 4 தலைமுறைகளைச் சேர்ந்த தமிழர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பினாங்கு ஒரு சிறு தீவு. துறைமுகப் பணியே பெரும்பணி.

பினாங்கில் ஒரு பல்கலைக் கழகம் இருக்கின்றது. அது அறிவியலுக்காக மட்டும் நடைபெற்று வருகிறது. ஆனாலும் வரலாறு, கல்வி முதலிய கலைத் துறைகளும் அங்கு நடைபெறுகின்றன. இப் பல்வேறு துறைகளிலும் தமிழர்கள் பலர் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் தமிழ் அறிவும் தமிழ் உணர்வும் நிறைந்தவர்கள் சிலர் உண்டு. பினாங்கு அறிவியல் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவரும் முனைவர் **கார்த்திகேசு** ஒரு தமிழ் எழுத்தாளரும் கூட; அவர் புதினங்கள் எழுதி வெளியிட்டுள்ளார். ஆனால், நூல்கள் விற்க வாய்ப்பில்லையே எனக் கவலை கொண்டுள்ளார். அவரோடு அறிவியல் பல்கலைக் கழகம் சென்று நண்பர்கள் பலரைக் கண்டேன். பல்கலைக் கழகத்தின் அமைப்புப் பற்றியும், அங்குள்ள வாய்ப்புக்கள் பற்றியும் முனைவர் கார்த்திகேசு அவர்கள் விளக்கினார்கள். பல்கலைக் கழகத்திற்கு அப்போது விடுமுறை. ஆனால், சில துறைகளில் ஆசிரியர்கள் வந்து பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

அங்கு ஒரு வரலாற்றுத் துறையும் உண்டு. முனைவர் **சுந்தரலிங்கம்** என்னும் இலங்கைத் தமிழர் அங்கு இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். தென்னிந்திய வரலாறு பற்றி இங்கிலாந்தில் ஆராய்ச்சி செய்து, முனைவர் பட்டம் பெற்றவர் அவர். அவர் மேற்கொண்ட ஆராய்ச்சி தென்னிந்தியாவில் அரசியலும் தேசிய எழுச்சியும் (Politics and Nationalistic Awakening in South India 1852--1891..............) என்பது ஆகும், இவ்வாய்வுரை அரிசோனா பல்கலைக் கழகத்து வெளியீடாக 1974-இல் வெளி வந்துள்ளது. இந்தியாவில் ஆராய்ச்சிக்கு வேண்டிய குறிப்புக்கள் நிறைய இருந்தாலும், நூலகங்களி

லிருந்து அவற்றைப் பெறுவது மிகக் கடினமாக உள்ளது எனவும், முயற்சி செய்தும் அவற்றைப் பெறமுடியாமல் தாம் இலண்டன் சென்று அவற்றைப் பெற்று ஆராய்ச்சியினை முடித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் துறையிலே பல மாணவர்கள் முதுநிலை வரலாற்றுக் கல்விக்காக ஆய்வினை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலும் இந்தக் காலத்து வரலாறு களே ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மலேசிய இந்தியக் காங்கிரசின் வரலாறு, தமிழ்ப் பள்ளிகளில் கல்வி முறை, தமிழ்ச் செய்தித்தாள்களில் வாசகர் நிலை என்பன போன்ற பொருள்கள் இங்கு ஆராயப்படுகின்றன.

இத்துறையின் வரலாற்று மாணவர்களுக்கு இந்தியத் துணைக் கண்டத்தின் வளர்ச்சியும் எழுச்சியும் பற்றிப் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. முனைவர் சுந்தரலிங்கம், தம்முடைய மாண வர்களுடன் சேர்ந்து இன்றைய இந்திய வரலாற்றை ஆராய் வதற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு ஒத்துழைக்க ஆவல் கொண்டுள்ளார்.

பினாங்கில் அறிவியல் பல்கலைக் கழகத்துக் கல்வித்துறையில் முனைவர் **லோகநாத முத்தரையன்** என்ற ஆர்வமுள்ள தமிழர் பணியாற்றி உள்ளார்; இங்கிலாந்தில் மொழியியல் கல்வி கற்று மலேசிய அரசில் தமிழ்க் கல்விப் பணித்துறையில் பணியாற்றி வருகிறார். பள்ளி மாணவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் பாடப் புத்தகங்கள் தயாரிப்பதற்கு அடிப்படையான ஆராய்ச்சி யில் அவர் ஈடுபட்டுள்ளார். அதேபோது தமிழ் மொழியியல், தமிழ்ச் சமயம், இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றில் அவர் ஆர்வம் கொண்டுள்ளார். தமிழ் இலக்கணத்தில் இருக்கும் தத்துவக் கருத்துக்களை ஆராய்ந்து தமிழகத்து வெளியீடுகள் சிலவற்றில் கட்டுரைகள் எழுதி வருகிறார் அவர். பினாங்கு அறிவியல் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழி இலக்கிய ஆராய்ச்சிக் காக வாய்ப்புக்கள் இல்லாமல் போனாலும்கூடத் தமிழர் வரலாறு, சமூகம், அரசியல், மொழியியல் ஆகியவற்றைப் பற்றி ஆராய வாய்ப்பு உண்டு எனத் தெரிகிறது. அன்று பிற்பகல் பினாங்குப் பல்கலைக் கழகத்தின் நூலகம் முதலான சிலவற்றைக் கண்டுவிட்டுப் பினாங்கு நகர் திரும்பி வந்தேன்.

பினாங்கு நகரில் **17—6—82**

பினாங்கில் வாழும் சில தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், அரசியல் வாதிகள், அமைச்சர்கள், அலுவலர்கள் ஆகியோரைச்

காணப் புறப்பட்டேன். திரு அன்பானந்தம் என்ற ஓர் கவிஞர் பல கவிதை நூல்களை வெளியிட்டு ஓய்ந்து, இப்போது வணிகத் தில் ஈடுபட்டுள்ளார்; தமிழர் சோதிடக் கலையில் ஆர்வம் கொண்டுள்ளார். அவை பற்றித் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆராயலாமே என்றார்.

தமிழகத்தில் திருப்புத்தூரில் தோன்றிப் பினாங்கில் குடியேறி வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டிய பெரியவர், தமிழ் ஆர்வலர் திரு ரெங்கசாமிப்பிள்ளை அவர்கள், என்னை அன்போடு வரவேற்றுப் போக்கு வரத்துக்கும் ஏற்பாடு செய்து, விருந்தும் ஓம்பி ஆதரவு நல்கினார்கள். தமிழர் கூட்டங்கள், இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழர் இயக்கங்கள் ஆகியவற்றில் திரு ரெங்கசாமிப்பிள்ளை அவர்களுக்கு ஈடுபாடு உண்டு. தமிழ்ப் பணிக்கு அவ்வப்போது அவர்கள் பொருள் உதவி செய்து வந்தார் கள். இந்தோ சீனாவில் மேடான் என்னும் பகுதியில் தமிழர் உள்ளனர். ஆனால், அவர்களுக்குத் தமிழ் படிக்கத் தெரியாது. அவர்களுக்குத் திரு ரெங்கசாமிப் பிள்ளை அவர்கள் தமிழ்த் தட்டச்சுப்பொறி ஒன்றை வாங்கி அனுப்பி உதவினார்கள். அங்குள்ள தமிழர்களுக்கு அதுவே அச்சுக்கூடமாக இயங்கி வரு கின்றது என்பதையும் திரு பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுப் பெருமிதம் அடைந்துள்ளார்கள். தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள் சிலர் அவர்களைச் சூழ்ந்திருப்பதை நான் அங்குக் கண்டேன். தமிழர் ஒற்றுமைக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தொண்டாற்றிய தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களின் உற்ற நண்பராக இருந்து பல தமிழ்ப்பணி புரிந்திருக்கிறார்கள் திரு பிள்ளை அவர்கள்; பினாங்கு வரும் தமிழர்களை எல்லாம் வரவேற்று, விருந்தோம்பலில் பெரு மிதம் அடைகின்றார்கள். தமிழவேள் கோ. சாரங்கபாணி நினைவாகத் தமிழகத்தில் அவருக்குச் சிலை எடுக்க வேண்டும் என்னும் முயற்சியினை அவர்கள் மேற்கொண்டு, இப்போது தோல்வி கண்டு அமர்ந்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கோ. சாரங்கபாணி அவர்களுக்குச் சிலை எடுப்பார்களா என்று அவர்கள் கேட்டார்கள். 'தமிழ்ப் பல்கலைக் கழகம் அண்மையில் தோன்றியது, காலஞ்சென்ற தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களோடு அது தொடர்பு கொள்ளவில்லை. அவர்கள் நினைவாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தாங்கள் அறக் கட்டளை ஒன்றை நிறுவினால் அவர்களுக்குச் சிறப்பு செய்ய நாங்கள் முயலலாம்' என்று நான் அவர்களிடம் தெரிவித்தேன். அவ்வாறு செய்யலாம் என்று அவர்கள் உடன்பட்டு, அதற்கான

விளக்கங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

பினாங்கு நகரில் செல்வாக்குள்ள தமிழராக விளங்குபவர் **பாரிஸ்டர் சுப்பையா செட்டியார்** ஆவார். வழக்கறிஞராகப் பணிபுரிகின்றார் அவர். தமிழ்ப்பணி குறித்துத் **தமிழ்ச் சுடர்** என்ற பட்டம் தந்து, பினாங்கு மக்கள் அவரைப் போற்று கின்றனர். பினாங்குச் சட்டமன்றத்தில் உறுப்பினராகி, ஒரு துணை அமைச்சர் தகுதியினையும் அவர் அடைந்துள்ளார்.

பினாங்கு நகரில் தமிழர்களுக்கு எத்தனையோ கோவில்கள் உள்ளன. முருகன், மாரியம்மன், காளி முதலான பலப்பல தெய்வங்களுக்குரிய கோவில்களுக்கு ஏராளமான உடைமைகளும் தமிழ் மக்களால் வழங்கப்பட்டுள்ளன. ஒருசில கோவில்களுக்கு உரிய சொத்துக்கள், சீரான முறையில் ஆட்சி செய்யப்படாத காரணத்தால் பினாங்கு அரசு அந்தக் கோவில்களின் ஆட்சியினை மேற்கொண்டு, அறநிலையத்துறை ஒன்றினையும் அமைத்து, அதன் பொறுப்பினைத் திரு சுப்பையா அவர்களிடம் விட்டிருக் கின்றது. அவை 5 கோவில்கள். இந்த 5 கோவில்களுக்கும் ஏறத்தாழ 1 கோடி டாலர் (4½ கோடி உருவா) சொத்து உள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க பொறுப்பினை மேற்கொண்டிருக்கும் சுப்பையா அவர்களை, அன்று பிற்பகல் நான் கண்டு உரையாடி னேன். ஆதரவோடு வரவேற்றுப் பின்னர் ஒருசில கோவில்களுக்கு என்னை அழைத்துச் சென்றார். தமிழ் ஆராய்ச்சிக்காகப் பொருள் உதவி திரட்டுதல் பினாங்கு நகரில் கடினமானது அல்ல என்று அவர் குறிப்பிட்டார். ஆனாலும், அரசின் பொறுப்பில் இருக்கும் அறநிலையத் துறைக்குரிய கோவில் பணத்தைப் பிற பணிகளுக்குச் செலவிடுதல் முடியாத நிலை உள்ளது என்றும் குறிப்பிட்டார். தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வேண்டிய உதவி களைப் பெறச் சுப்பையா அவர்களைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பினாங்கில் பெரும்பாலும் தமிழர். ஏழைகளாகவும் கூலி களாகவும் வாழ்கின்றனர். உயர்கல்வி பெறும் அளவு அவர்கள் வாழ்க்கை முறை இல்லை. அவர்களுக்குப் பெரும்பாலும் வேண்டியது தமிழ்ப் படமும் பாட்டுமேயாகும்.

கோலாலம்பூர்ப் பழம்பொருட் காட்சியகம்

18—6—82 முற்பகல்

17—6—82 இரவு பினாங்கு விட்டுப் புறப்பட்டு மீண்டும் கோலாலம்பூர் வந்து சேர்ந்தேன். என் பொருட்டுக் கோலாலம்

பூரில் பல்வேறு அமைப்புகள் சேர்ந்து, இரண்டு நாள், இரண்டு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தன. அன்று முற்பகல் கோலாலம்பூரில் உள்ள அரும்பொருட் காட்சியகத்திற்குச் சென்றேன். தமிழகத்தின் தலை நகரில் உள்ள அரும்பொருட் காட்சியகம் போன்று அது அறிவுக் கூடமாகவும் ஆய்வுக் கூடமாவும் இருக்கும் என எண்ணியே அங்கு நான் சென்றேன். மலேசிய நாட்டைப் போன்று அதன் அரும்பொருட் காட்சியகமும் புதிய ஒன்றாகச் சிறிய அளவில் அமைந்துள்ளது. பழ வரலாற்றிற்குரிய சான்றுகள் சில, கலைப் பொருள்கள், புகைப்படங்கள், நாட்டுக் குரிய உயிர்வாழ் இனங்களின் உருவங்கள் ஆகியவை மட்டுமே இக்காட்சியகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இக் காட்சியகத்தை விளக்கும் இரண்டொரு வெளியீடுகள் அங்கே விற்கப் படுகின்றன.

கோலாலம்பூர் இயக்கங்களிடையே

மாலையில் கோலாலம்பூரின் நடுவில் அமைந்த மலேசிய இந்தியக் காங்கிரசின் தலைமையகத்தில் பல்வேறு அமைப்புக் களின் பொறுப்பாளர்கள் ஏறத்தாழ 50 பேர் கூடிய கூட்டத்தில், தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி விளக்கிச் சொற்பொழிவாற்றி னேன். கோலாலம்பூரின் பல பகுதியிலிருந்தும் பல தமிழ் ஆர்வலர் கள் அங்கு வந்து கூடியிருந்தனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாகச் சென்ற என் வருகையினைச் சிறப்புடையதாக்க வேண் டும் என்று கருதிப் பெருமையும் வலிமையும் வாய்ந்த ஒரே மலேசிய இந்தியர் கட்சியின் தலைமையகத்தின் பொலிவு மிக்க கட்டடத் தில் இக்கூட்டத்தினைக் கூட்டினர். கூட்டத்திற்குத் தத்தோ கோவிந்தராஜா என்ற அரசியல் தலைவர் தலைமை ஏற்றார். மலேசிய இந்தியக் காங்கிரசு சார்பாகத் திரு தத்தோ கோவிந்த ராஜா அவர்களும், மகா மாரியம்மன் கோவில் தேவத்தானத்தின் சார்பாக அதன் தலைவர் திரு கோடிவேல் அவர்களும், கோலா லம்பூர்க் கவிதைக் களத்தின் சார்பாகக் கவிஞர் காரைக்கிழார் அவர்களும், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பாகத் திரு துரை இராசா அவர்களும், ஆசிரியர் சங்கச் சார்பாகத் திரு முரசு நெடுமாறன் அவர்களும், தமிழ் இலக்கிய மன்றம் சார்பாகத் திரு இர. ந. வீரப்பன் அவர்களும், மலேசிய இந்தியர் சங்கம் சார் பாகத் திரு பைரோசி நாராயணன் அவர்களும், இந்தியச் சங்கங் களின் ஒருங்கிணைப்புப் பேரவையின் சார்பாகத் திரு எஸ். பி. துரை அவர்களும், மலேசியத் தமிழர் கலை மன்றத்தின் சார் பாகத் திரு டி.எஸ்.நாதன் அவர்களும், இளைஞர் மணிமன்றத்தின் பொறுப்பாளர்களும், தமிழ் நேசன் நாளேடு, தினமணி நாளேடு,

தமிழ் ஓசை நாளேடு, வானம்பாடி இதழ் ஆகியவற்றின் செய்தியாளர்களும் மற்றும் பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பொதுவாகத் தாய்த் தமிழகம் மலேசியத் தமிழகம் ஆகியவற்றிடையே தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கல்வி, தமிழ் மொழி ஆகியவை பற்றி அமைந்துள்ள உறவுகள் குறித்து அங்குப் பேசப்பட்டன. பலர் உணர்ச்சியோடு கருத்துக்கள் வெளியிட்டனர். சிலர் வருத்தத்தோடும், சினத்தோடும் பேசினர். கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டது. கோலாலம்பூர்த் தமிழ் மக்களின் மனப்பான்மையை அறிய அக்கூட்டம் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அங்குத் தோன்றிய கருத்துக்கள் சில வருமாறு:

(1) கோலாலம்பூரில் உள்ள மகா மாரியம்மன் கோவிலுக்கு நிறைய வருமானம் உள்ளது. அது சமயப் பணிக்கும், கல்விப் பணிக்கும், கலைப் பணிக்கும் பொருள் உதவி செய்கிறது. அது தமிழர் சமுதாயத்தைக் காக்கவும் பேணவும் திட்டங்கள் கொண்டுள்ளது.

(2) தமிழர் வரலாற்றை இலக்கியம், சமூகம் ஆகியவற்றோடு இணைத்து ஆராய்ச்சி நிகழ்த்த வேண்டும்.

(3) மலேசியாவில் 200 தமிழ் எழுத்தாளர்கள் இருக்கின்றனர்.

(4) தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் உறவு கொள்ள ஒரு குழு அமைக்கலாம்.

(5) மாணவர்கள் பரிமாற்றம் வைத்துக் கொள்ளலாம்.

(6) மலேசியாவில் கூலிகளாக வந்த தோட்டத் தொழிலாளர்கள் இன்று 3-ஆவது தலைமுறையினர். இன்றையத் தோட்டத் தொழிலாளர்கள் தமிழகத்தின் மாவட்ட ஆட்சித் தலைவரின் வீட்டில் இருக்கும் வசதிகளைவிடக் கூடுதல் வசதிகள் பெற்று வாழுகின்றனர்.

(7) பொதுவாக அயல்நாட்டுத் தமிழர்களைத் தமிழகத்தில் மதிப்பதில்லை.

(8) கடந்த தமிழ் மாநாடு நன்முறையில் நடத்தப்படவில்லை.

(9) மேலும் தமிழ் கற்க வாய்ப்பு, பட்டம் பெற்றவர் ஆய்வு செய்ய வாய்ப்பு, இசை, நடனக் கலைகளில் தேர்ச்சிபெற வாய்ப்பு

ஆகியவற்றை இன்றைய தமிழகம் தருமா எனப் பலர் அறிய விரும்பினர்.

(10) அயல்நாட்டுத் தமிழர்களைக் கலக்காது எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பட்டதற்கு அங்குள்ள தமிழர்கள் வருத்தப்படுகின்றனர்.

(11) கோலாலம்பூரில் நடத்தப்படும் செய்தித் தாள்கள், இதழ்கள் ஒவ்வொரு ஆண்டும் அனுமதி பெற வேண்டியுள்ளதால் சிக்கல் ஏற்படுகிறது.

(12) மதுரை மாநாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட நூல்கள் பல சென்னையில் உள்ளன. அவற்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் தரலாம்.

(13) மலேசியத் தமிழர்கள், அயல்நாட்டுடன் எவ்வகையில் உறவு வைத்துக் கொள்ளலாம் என்பதை மலேசிய அரசு வரையறை செய்துள்ளது:

தமிழர்கள் தமிழ்க் கல்வி, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலை, தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவை பற்றித் தமிழகத்தோடு உறவு வைத்துக் கொள்ளலாம். அரசியல், சமயம் இரண்டிலும் உறவு கூடாது. அரசின் ஆதரவோடு இக்கொள்கைகளுக்குட் பட்டுத் தமிழர்கள் முயற்சிகள் மேற்கொண்டால் மட்டுமே மலேசியாவில் அவர்கள் வாழ முடியும் போலும்.[8]

தமிழர் கோவில்களும் தமிழ்ப் பல்கலைக் கழகமும்

தமிழகத்திலிருந்து சென்ற பல்வேறு தமிழர்கள் 100 ஆண்டுகளாகவே மலேசியாவிலும் ஒரு தமிழகத்தையே படைத்து விட்டனர் எனக் கூறலாம். சாதிகளும் சமயங்களும் கலைகளும் பண்பாடும் அங்கே தமிழகத்தின் மறு பதிப்பாக விளங்குகின்றன. இங்குள்ள எல்லா உணர்வுகளும் அங்கும் உள்ளன. அரசியல் கட்சிகளும் சமூக இயக்கங்களும் மொழி இலக்கிய இயக்கங்களும் அங்கும் உள்ளன. மலேசியாவில் ஏறத்தாழ 600 தமிழர் சங்கங்கள் உள்ளன என ஒருவர் குறிப்பிட்டார். அவற்றிலே சாதிச் சங்கங்களும் ஊர்ச் சங்கங்களும் சமயச் சங்கங்களும் இலக்கியச் சங்கங்களும் உள்ளன. மலேசியத் தமிழரின் வாழ்வில் சமயமும் கோவிலும் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதாகத் தெரி

கிறது.[9] அவர்கள் வாழ்வில் அரசியல் உயர்வு, சமூக உயர்வு, பொருளாதார உயர்வு ஆகியவை எட்டாத உச்சிக் கொம்பாக விளங்குகின்றன. மலேசியாவில் வாழும் 3 இனங்களில் தமிழர் 3-ஆவது இனமாகவே விளங்குகின்றனர். அரசியலிலும் சமூகத்திலும் கல்வியிலும் அரசின் 'பூமி புத்திரர்' கொள்கையால் அவர்கள் தாக்குண்டு தாழ்த்தப்படுகின்றனர். இந்நிலையில் தம்மைத் தமிழர் எனக் காட்டிக்கொள்ள அவர்களுக்கு ஒரே வாய்ப்பு இவ்வளவு நாளும் தமிழர்கள் அங்குக் கட்டி வைத்துள்ள கோவில்களும் அவற்றிற்குரிய விழாக்களுமேயாகும். அவற்றிலே ஈடுபாடு கொண்டு, தம்மை அவர்கள் பிற இனத்தாருக்கு எடுத்துக் காட்டுவது போன்று மற்ற துறைகளிலே காட்டிக் கொள்ள முடிவதில்லை.

மலேசியாவில் 17,500 ஆலயங்கள் உள்ளன எனத் திரு கோடிவேல் குறிப்பிட்டார். அவற்றிலே ஏறத்தாழ 2 ஆயிரம், பேரும் புகழும் பெற்றவை. அவற்றிலே பெரும்பெருமை பெற்றது கோலாலம்பூரில் அமைந்துள்ள மகா மாரியம்மன் கோவில் ஆகும். இதற்குப் பெருஞ் சொத்து உண்டு. மலேசியாவிலுள்ள தமிழர் கோவில்களில், 6 கோடி வெள்ளி (25 கோடி உருவா) மொத்தச் சொத்து உள்ளது எனவும், 60 இலட்சம் வெள்ளி தொகையாகவே உள்ளதெனவும் ஒரு சிலர் கூறுகின்றனர். ஆண்டுதோறும் எடுக்கப்படும் விழாக்களில் ஏழை எளிய தமிழர்கள் கோவில்களில் ஏராளமாகக் காணிக்கை கொடுக்கின்றனர். கோவிலுக்கு எழுதி வைக்கப்பட்ட நிலங்கள் இப்போது பெருமதிப்புடைய சொத்துக்களாக மாறி உள்ளன. கோலாலம்பூருக்கு அருகிலுள்ள பத்துமலையில் முருகன் கோவிலும் கலைக்கூடமும் அமைந்து உள்ளன. அங்கு ஆண்டுதோறும் 60 ஆயிரம் பேர் அதனை வந்து கண்டு செல்கின்றனர். 10 இலட்சம் வெள்ளி (45 இலட்சம் உருவா) செலவாகும் வெள்ளித் தேர் ஒன்று கட்டத் திட்டமிடப்பட்டு உள்ளது.

மகா மாரியம்மன் கோவில் தேவத்தானம் சில சமய, சமூகப் பணிகளைச் செய்து வருகின்றது. சமய இலக்கியங்கள் வெளியிடப்படுகின்றன. திருமறைகள் போட்டி நடத்தப்படுகின்றது. நாதசுவர வித்துவான்கள் தமிழகத்திற்கு வந்து, பயிற்சி பெற்று வர ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழகத்திற்குச் சென்று கலைகள் கற்றுவர இதன் உதவியால் மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர். மலேசியாவில் ஏழைத் தமிழ் மாணவர்கள் உயர் கல்வி கற்க ஆளுக்கு 5 ஆயிரம் வெள்ளியாக 10 மாணவர்களுக்கு உதவிக் கடன் கொடுக்கப்பட்டுவருகிறது. உலகத் தமிழ் மாநாடு போவதற்

காகத் தேவத்தானம், பேராளர்களை அனுப்பி வைக்கின்றது. கடந்த மதுரை மாநாட்டிற்கு அதன் சார்பாக 40 பேர் சென்று வந்ததாக ஒருவர் கவலையோடு குறிப்பிட்டார்:

18–6–82 மலேசிய இந்தியக் காங்கிரசின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அறக் கட்டளை நிறுவவும், தமிழ் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு உதவவும் மகா மாரியம்மன் கோவில் தேவத்தானத் தலைவர் திரு கோடி வேல் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அறக்கட்டளை நிறுவப் பொருள் தேடும் முயற்சிகளை இக்குழு மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அறக்கட்டளை பற்றி யும் திட்டங்கள் பற்றியும் அவற்றிற்குத் தேவைப்படும் பொருள் பற்றியும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முறையான, விரிவான கருத்துக்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மலேசியாவின் அரசியல் பொருளாதார வளத்திற்காகப் பாடுபட்ட, காலஞ்சென்ற பெருந்தலைவர் துன்.சம்பந்தம் நினைவாகவோ, தமிழ் மொழிக்கும் தமிழ் ஒற்றுமைக்கும் பாடுபட்ட தமிழவேள் சாரங்கபாணி நினை வாகவோ அறக்கட்டளை நிறுவலாம் எனவும், அங்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அவ்வகையில் மகா மாரியம்மன் கோவில் தேவத்தானம் பெரும்பொருள் உதவலாம் என எதிர் பார்க்கப்படு கிறது. அதன்சார்பாகச் சமயம், கலை, மொழி ஆகியவற்றில் திட்டங்கள் மேற்கொள்ளலாம்.

இவ்வாறாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கம், திட்டங்கள் பற்றி அறிந்த மலேசியத் தமிழர்கள், ஆர்வம் கொண்டு சில பணிகளைச் செய்ய முன்வந்துள்ளனர். மேற் கொண்டு எடுக்கப்படும் முயற்சியினைப் பொறுத்து அவர்கள் ஆர்வமும் முயற்சியும் பயன் தரலாம்.

திரு கோடிவேல், கூட்டம் முடிந்த பின்னர் பிள்ளையார் கோவிலுக்கும் மகா மாரியம்மன் கோவிலுக்கும் என்னை அழைத்துச் சென்றார்; சிறப்பாகப் பூசைகள் செய்வித்துச் சிறப்பு செய்தார். இத்தேவத்தானத்தின் பிற பொறுப்பாளர்களும் வந்திருந்தனர். அதன் அலுவலகத்தில் அவர்களோடு கலந்து உரையாடும் வாய்ப்பினை நான் பெற்றேன். அத்தேவத்தானத் தின் வரலாறு, செயல்முறைகள், பணிகள் ஆகியவற்றைப்பற்றி அவர்கள் விளக்கம் தந்தார்கள். தலைவர் கோடிவேலும், பிற நண்பர்களும் அன்று இரவு உணவகம் ஒன்றில் உணவு வழங்கி,

என்னை, நான் தங்கி இருந்த மெட்ராஸ் கஃபேயில் விட்டு, விடை பெற்றுச் சென்றார்கள்.

தமிழ் நேசனுக்குப் பேட்டி 19–6–82 முற்பகல்

தமிழ் நேசன் துணை ஆசிரியர் தமிழ்மணி என்னைத் தம் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று, பேட்டி ஒன்றினை வாங்கிக் கொண்டார்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றி நான் பேட்டியில் விளக்கம் தந்தேன்.

சில நண்பர்களிடை

அன்று மாலை உணவு விடுதி ஒன்றில் சில சங்கத்தாரும் நண்பர்களும் என்னை உரையாடலுக்கு அழைத்தனர். பல ஆண்டு களாகவே தமிழ்மொழி பண்பாட்டு இயக்கங்களில் உறவு கொண்டவர்கள் அவர்கள். இந்தியக் கலைச் சங்கங்களின் சார்பாகத் திரு **எஸ் பொன்னுத்துரை** அவர்களும், தமிழ் நேசன் சார்பாக **முத்தமிழ்ச் செல்வன்** அவர்களும், **காசதாசன்** என்னும் கவிஞரும் மலேசியத் தமிழர் பேரவைப் பொறுப்பாளரும், தமிழ் இளைஞர் மணி மன்றப் பேரவைச் செயலாளரும், இன்னும் பலரும், தொழிலாளர் சங்கத்தாரும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். மலேசியாவின் தமிழர் சூழ்நிலை பற்றி மேலும் பல புதிய விளக்கங்கள் பெற அக்கூட்டம் வாய்ப்பாக அமைந்தது. மலேசியத் தமிழரிடையே இருக்கும் உட்பூசல்கள் பற்றியும் என்னால் அறிய முடிந்தது. திரு ஆர். என். வீரப்பன் இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

தோட்டக் கூட்டுறவுச் சங்கம்

மலேசியத் தமிழரின் வாழ்வில் ஒரு முக்கியப் பெரிய சங்கமாக விளங்குவது தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்கம். பல ஆண்டு களுக்கு முன்னர் இரப்பர்த் தோட்டங்கள் எல்லாம் வெள்ளையர் கள் கையில் இருந்தன. ஆட்சி, தேசிய மக்களுக்கு மாறியபோது வெள்ளையர்கள் வெளியேறினார்கள். தோட்டத் தொழிலாளர் களிடை நெருக்கடி ஏற்பட்டது. தோட்டங்கள் பல கை மாறின. இந்நிலையில் அங்குத் தோட்டங்களில் பணியாற்றும் 2,65,000 தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டது. அவர்களுக்கு ஆதரவு தர அச்சங்கம் ஏற்படுத்தப்பட்டது. பல தோட்டங்களை அச்சங்கமே விலைக்கு வாங்கித் தான் நடத்தத் தொடங்கியது. அம்முயற்சி

வெற்றியும் தந்தது. இதன் பெரும் பொறுப்பாளராக விளங்கியவர் முன்னாள் அமைச்சர் துன். சம்பந்தம் அவர்கள் ஆவார். இன்றைக்கு ஏராளமான சொத்துக்கள் பெற்றுப் பல தோட்டங்களை நடத்தி வருகிறது அச்சங்கம். அது இன்றைய தமிழருக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அது, தன் இலாபத்தில் 10 பங்கினை மட்டுமே உறுப்பினர்களுக்கு வழங்கிவிட்டு, எஞ்சிய பணத்தைப் பல்வேறு பணிகளுக்குக் கொடையாக வழங்கி வருகிறது. கோலாலம்பூர்த் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு அது 10,000 வெள்ளி வழங்கி உள்ளது; தமிழ் மன்றங்களும், தமிழர் சங்கங்களும் வெளியிடும் மலர்களுக்கு விளம்பரம் தந்து, ஏராளமான பொருளும் தருகிறது. அச்சங்கத்தை அணுகித் தமிழ்ப் பணிகளுக்காகப் பொருள் திரட்ட வாய்ப்பு உண்டு எனத்தெரிகிறது. இதே போன்று மலேசியாவில் தோட்டத் தொழிலாளர் சங்கம் என ஒன்று உள்ளது. பெரும்பாலான தமிழர்கள் அதிலே உறுப்பினர்களாக விளங்குகிறார்கள். கடந்த தமிழ் மாநாட்டிற்கு அது 10 பேரைத் தன் பேராளராக அனுப்பி வைத்தது. அந்நிறுவனம் தமிழ் ஆராய்ச்சிப் பணிக்கு உதவி செய்யலாம்.

இவ்வாறு பல செய்திகளை அறிந்த மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் 19–6–82 சனி இரவு கோலாலம்பூரை விட்டுப் புறப்பட்டுச் சிங்கப்பூர் வந்து சேர்ந்தேன்.

சிங்கப்பூர்த் தமிழர் சீர்திருத்த இயக்கம்

சிங்கப்பூரில் செலவு கட்டுபடியாகாத காரணத்தால் ஒரு சிலரைக் காண முடியாது செல்லும் நிலை முன்னர் ஏற்பட்டது. அங்கு 19–6–82 ஞாயிறு ஒருநாள் தங்கி, ஒரு சிலரைக் கண்டு, சில கருத்துக்கள் அறிந்து கொண்டேன்.

தமிழர் சீர்திருத்த இயக்கம் சிங்கப்பூரில் ஒரு செல்வாக்குள்ள இயக்கமாகும். அதன் தலைவர் திரு விக்டர் அவர்கள்; செயலாளர் திரு முருகு சீனிவாசன் அவர்கள். சிங்கப்பூர்த் தமிழரின் வாழ்வில் பலதுறைகளிலும் பங்கு பெற்று, அதன் இயல்பினை நன்கு உணர்ந்தவர்கள், இச்சங்கத்தின் பொறுப்பாளர்கள். அவர்கள் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தொடங்க வேண்டும் என்று துணைவேந்தர் அவர்களுக்கு எழுதி ஏமாற்றம் உற்று, வருங்கால வாய்ப்பினை எதிர்பார்த்து இருக்கின்றார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால், சிங்கப்பூரில் 700 பள்ளிக்கூடங்களில் மாணவர் தமிழ் படிக்கும்

நிலை இருந்தும், பல்கலைக் கழகத்தில் 32 தமிழர்களே விண்ணப்பித்துப் படிக்கும் நிலை இருந்தது. அவர்களுள் 8 பேர் மட்டுமே பல்கலைக் கழகத்தில் சேரத் தகுதியுடையவர்களாம். அவர்களுள் நால்வரே தமிழ் படிக்க முன்வந்தனர். இந்த அவல நிலையினைத் துணைவேந்தரவர்களே எழுதி அனுப்பினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டித் திரு முருகு சீனிவாசன் வருத்தப்பட்டார். சிங்கப்பூரில் 40 ஆண்டுகளுக்குள் வெளிவந்த பல நூல்கள் திரு முருகு. சீனிவாசனிடம் உள்ளன.

மன நிறைவுடன் மீளல்

மூன்று நாடுகளில் நான்கு வாரங்களாக மேற்கொண்ட கல்விப் பயணத்தில் மனநிறைவுற்று, தஞ்சையை நெஞ்சத்தில் கொண்டு, 21–6–82 விமானம் ஏறிச் சென்னைக்குப் புறப்பட்டேன். நான் வந்த விமானம் சென்னையில் நொறுங்காது, பம்பாயில் போய் மோதி நொறுங்கிய காரணத்தால் பத்திரமாகத் தஞ்சை வந்தடைந்தேன்.

மலேசியா நாட்டின் கல்வி முறை

மலேசியா நாட்டில் தொடக்கக் கல்வி 6 ஆண்டுகள். அதிலே ஆங்கிலமும் தாய்மொழியும் கட்டாயம் படிக்க வேண்டும், கல்வி, தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுகிறது. மலேசிய நாட்டில் பெரும்பாலானவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. தோட்டங்களுள் தொடக்கப் பள்ளிகள் உண்டு. ஆனால், கல்வி தரமானதாகத் தெரியவில்லை. தமிழ் அப்பள்ளியில் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது.

பிறகு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆண்டுகள். இங்கு மலாய்மொழி கட்டாயமாக்கப்பட்டு, அனைத்துக் கல்வியும் அம்மொழி வாயிலாகவே கற்பிக்கப்படுகிறது. தமிழ் படிக்கவோ சீனம் படிக்கவோ விரும்பும் மாணவர் 15 எண்ணிக்கைக்கு மேல் இருந்தால் பள்ளி நேரம் அல்லாத பிற நேரங்களில் அம்மொழியில் கற்பிக்கலாம். 6-ஆவது வகுப்புவரை தமிழில் படித்து வரும் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் 7-ஆவது வகுப்பு வரும்போது அனைத்தையும் மலாய் மொழியில் படிக்க வேண்டும். இடையில் ஓர் ஆண்டு மலாய் மொழி மட்டுமே கற்பதற்கு ஒதுக்கப்பட்ட பள்ளிகளில் அவர்கள் படிக்க வேண்டியுள்ளது. இதனால் ஓர் ஆண்டு வீணாகிறது.[10] ஆதலால்,

மலேசிய நாட்டில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தமிழே இல்லை என்று சொல்லிவிடலாம். தமிழ் மாணவர்கள் மலாயும் சீனமும் படிக்க இப்போது சென்று கொண்டிருக்கின்றனர். மலேசியாவில் உள்ள தமிழர்களுக்கு இது ஒரு பெருங் கவலை தரும் போக்காக அமைந்திருக்கின்றது.[11]

பல்கலைக் கழகத்தில் முதல் பட்டப் படிப்பு 3 ஆண்டுகள். இலங்கையில் போன்றும், சிங்கப்பூரில் போன்றும் இணைப்புக் கல்லூரிகள் இங்கும் இல்லை. அனைவரும் பல்கலைக் கழகத்திலே வந்து, அதற்குரிய கல்வியினைக் கற்க வேண்டும். மலேசியாவில் கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகம் என்ற ஒன்று பெரிதாக இயங்கி வருகிறது. இதில் அனைத்துப் பாடங்களும் அனைவருக்கும் உரியனவாக நடத்தப்படுகின்றன. இங்கு ஒரே வளாகத்தில் 8,000 மாணவர்கள் படிக்கின்றனர். பல்கலைக் கழகம் முழுவதும் குளிர்அறைகளே. மலாய மக்களுக்கென அறிவியல், தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் ஒன்றும் கோலாலம்பூரில் உண்டு. மலேசியாவின் வட பகுதியில் உள்ள பினாங்கில் அறிவியல் பல்கலைக் கழகம் ஒன்று இயங்குகின்றது கோலாலம் பூர்ப் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறை என ஒன்று நடை பெற்று வருகிறது. பெயர் இந்தியத் துறை என்று இருந்தாலும், அங்குப் பெரும்பாலும் தமிழ்க் கல்வியே கற்பிக்கப்படுகிறது. அங்கே தமிழில் முதல் பட்டப் படிப்பும், முதுகலைப் பட்டப் படிப்பும் நடைபெறுகின்றன. இந்தியக் கல்விக்கென ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்னால் இத்துறை தோற்றுவிக்கப்பட்டது. இதுவரையில் இத்துறையில் ஏறத்தாழ 200 மாணவர்கள் தமிழ்ப் பட்டம் பெற்றுச் சென்றிருக்கின்றனர். இத்துறையில் தமிழ்ப் பட்டக் கல்வி படிக்க மாணவர்கள் மிகமிகக் குறைவாகவே வருகின்றனர். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் இல்லாதது இதற்கு ஒரு காரணம். கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தில் பாடத்திட்டங்கள் பல்வேறு துறைகளுக்குரிய பாடங் களை இணைத்து அமைக்கப்பட்டுள்ள காரணத்தால், பிற துறையில் படிக்கும் மாணவர்கள் பலர் தமிழ்த் துறைக்குரிய பாடங்களைப் படிக்க முன்வருகின்றனர். இதன் காரணமாக இத்துறை உயிர் பெற்று வாழும் நிலை இருந்து கொண்டு இருக் கிறது.[12] முதல் பட்டத்திற்கு மேற்பட்ட முதுகலைப் பட்டம் கற்பதற்கு 2 ஆண்டுகள். முதுகலைக் கல்வி கற்க மாணவர்கள் அரிதாகவே வருகின்றனர். பள்ளிகளில் பணியாற்றுவோரும் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுவோரும் மட்டுமே முதுகலைக் கல்வி பயில வருகின்றனர். உயர்நிலைப் பட்டம் பெற்றவுடன்

வேலை கிடைக்கும் சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் முதுநிலைக் கல்வியினைப் பலர் நாடுவதில்லை. மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களில் ஒருசிலர் தம் கல்வி அறிவினைப் பெருக்கிக் கொள்ள முதுநிலைக் கல்விக்கு வருகின்றனர். இரண்டாண்டுகளுக்கு முன்னர்தான் பல்துறைக் கல்வியைக் கருத்தில் கொண்டு ஒரு முதுநிலைக் கல்வித்துறை தொடங்கப்பட்டுள்ளதாம்.

முதுநிலைக் கல்விக்குமேல் பிஎச். டி. என்னும் ஆராய்ச்சிப் பட்டக்கல்வி இரண்டு ஆண்டுகள் நடைபெறுவது. பொதுவாகவே இலங்கையில் போன்றும், சிங்கப்பூரில் போன்றும், மலேசியர் விலும் முதுநிலைக் கல்வியும் ஆராய்ச்சியும் வளர்ச்சி பெறவில்லை. முன்னர், நாடு இங்கிலாந்துடன் இணைந்திருந்த காரணத்தால் தம் உயர் கல்வித் தேவையினை அந்நாடு இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களின் துணையோடு நிறைவேற்றிக்கொண்டு வந்துள்ளது. உதவித்தொகையோடு கூடிய ஆய்வு மாணவர் பதவிகள் இங்கு இல்லை.

பல்கலைக் கழக ஆசிரியர்களுக்குத் தாராளமான கல்வி விடுப் பும், 7-ஆம் ஆண்டு நெடுவிடுப்பும் வழங்கப்படுகின்றன. பல பல்கலைக் கழகத்து ஆசிரியர்கள் மேலை நாடுகளில் சென்று உயர் பட்டங்கள் பெற்றவராக விளங்குகின்றனர். ஆனால், பல்கலைக் கழகத்தின் பெரும்பணி இளம்பட்டக் கல்வி கற்பித்தலேயாகும்.

பொதுவாக, இக்கீழை நாடுகளில் தன்னிறைவு என்பது கல்வி யில் ஆகட்டும், தொழிலில் ஆகட்டும், பிற துறைகளில் ஆகட்டும் அரும்பொருளாகவே விளங்குகிறது.

இலங்கையில் போன்று, கோலாலம்பூரில் பல்கலைக் கழக மட்டத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கும் ஆசிரிய மாணவர் பரிமாற்றத் துக்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆனால், இரண்டு நாடுகளிலும் அரசினர் தேசியக் கொள்கைகளை வற்புறுத்திப் பிற இனத்தாரை வேறுபடுத்தி, அவர்களுக்குரிய வாய்ப்புக்களை மாய்க்கின்றனர். இவ்விரண்டு நாடுகளிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் முழுமை யாக ஒழிக்கப்பட்டுள்ளன. அவை தோன்றுவதற்கான சூழ்நிலை யும் இப்போது இல்லை. சீனர்கள் விரும்பினால் தமக்கெனப் பல்கலைக் கழகமே அமைத்துக் கொள்ள முடியும். ஆனால் பொருள் வசதி படைத்த சீனர்களும், தமக்கென ஒரு கல்வி நிறுவனத்தைத் தோற்றுவிக்க இயலாதவாறு கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

பல்கலைக் கழகங்களிலும் அனைத்தும் மலாய் மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. 'அனைத்தும் மலாய்' என்ற தேசியக் கொள்கை 15 ஆண்டுகளுக்குமுன் செயற்படுத்தப்பட்டுத் தொடக்கக் கல்வி, பள்ளிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி எனப் படிப்படியாக உயர்ந்து, இன்று பட்டப்படிப்பு வரை மலாய் பயிற்சி மொழியாக வந்துள்ளது.

அரசின் ஆதரவுடன் மலாய்மொழி நிறுவனம் ஒன்று இயங்கி வருகிறது. அதுவே மொழிக்கொள்கைகளை உருவாக்குகிறது. நூல்கள் மொழிபெயர்த்தல், பாடநூல்கள் எழுதுதல், கலைச் சொற்கள் படைத்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் இந் நிறுவனம் ஆற்றுகின்றது. கலைச்சொல்லாக்கங்கள் எளியவை. ஏராளமான ஆங்கிலச் சொற்கள் அப்படியே எடுத்துக் கொள்ளப் படுகின்றன. University Sains — என்பது மலாய். (அதாவது (University of Science). உரோமன் எழுத்துக்களே பயன்படுத்தப் படுகின்றன. வேறு எழுத்து வடிவம் இல்லை. பல்கலைக் கழகப் பாடநூல்கள் ஒருசிலவே மலாய் மொழியில் வந்துள்ளன. ஆங்கிலம் விடப்படவில்லை. ஆங்கில நூல்களைப் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய அளவு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. 'கிழக்கை நோக்கி' என்ற கொள்கையால் இன்று ஜப்பானியம் மொழிக் கல்வியில் இடம்பெற்று வருகிறது.

மலேயாப் பல்கலைக் கழகத்தின் நூலகம் சிறப்பாக அமைந் துள்ளது; குளிர்ச்சியூட்டப்பட்டது. 40 நூலக அறிஞருட்பட 300 பணியாளர்கள் அங்குப் பணிபுரிகின்றனர். 10 மொழிகளில் அவர்கள் பணிபுரிய முடிகிறது. மலேசிய நூற் பிரிவு (Malaysiana Collections) என ஒன்று மலேசியாவிற்கெனவே இயங்கி வருகிறது. மலேசியாவைப் பற்றி அனைத்தும் அங்குப் பெறலாம். அருநூலகம் (Rare Books Collections) எனவும் ஒன்றுண்டு. இவற்றிலிருந்து நூல்களைக் கடன் பெற்று வெளியில் எடுத்துச் செல்லல் இல்லை. மொத்தம் 8,00,000 நூல்கள் இந் நூலகத்தில் உண்டு. 5,200 இதழ்கள் இருக்கின்றன. இன்றைய இதழ்கள் (Current Journals) மட்டும் 3,500. இவையல்லாமல் நுண்படங்கள் வேறு. தமிழ் நூல்கள் 30,000 உண்டாம்.

மலேசியாவில் வெளியாகும் அனைத்து வெளியீடுகளின் விவரங் களை மலேசியத் தேசிய நூலடங்கல் என்ற பெயரில் தேசிய நூலகம் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. தமிழ் நூல்களும் அதில் இடம்பெற்றுள்ளன.

மலேயாப் பல்கலைக் கழக இந்தியத்துறை

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கில் இவ்விந்தியக் கல்வித்துறை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அதன் நோக்கம், அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றை அத்துறையில் வெளியிட்டுள்ள ஒரு குறிப்புரை இங்குக் கருதத்தக்கது.

1. The role of the Department of Indian Studies in the University of Malaya in providing academic courses of study for the undergraduate and the post-graduate students in Malaysia is as follows:

i) To provide higher educational opportunity for the Malaysian students who wish to further their studies in Tamil language and literature through the medium of Tamil language.

ii) To provide higher educational opportunity for the Malaysian students who wish to follow a course of liberal education relating to the Indian social and cultural traditions through the medium of Bahasa Malaysia (Malay).

2. The Department of Indian Studies was established in 1956 as a department of the Faculty of Arts in the University of Malaya then situated in Singapore, and since the shifting of the University of Malaya to the present Pantai Valley Campus in Kuala Lumpur in 1959, the Department has continued to function as an integral part of the Faculty of Arts in the University.

3. The Department of Indian Studies offers to majoring students two streams of courses, namely **Stream A,** consisting of courses in Tamil language, grammar, and literature of the classical, medieval and modern periods, taught in the medium of Tamil language; and **Stream B,** consisting of courses in Indian historical, social, cultural (including linguistic, literary, artistic, and philosophical) aspects of the ancient, medieval and the modern periods, taught in the medium of Bahasa Malaysia (Malay), over a period of three years leading to the B.A. degree with or without Honours. (Please see Appendix A for the list of undergraduate courses offered by the Department of Indian Studies).

4. The undergraduate courses, offered by the Department of Indian Studies, are also taken as elective units by students majoring in other disciplines such as Economics, Geography, History, English, Malay Studies, Chinese Studies, and Islamic Studies.

5. The Department of Indian Studies also offers study programmes for the higher degrees of M.A., and Ph.D., by thesis. Since 1964, fifteen candidates have received the M.A., degree and two candidates have been awarded Ph.D., degree.

6. The Department is currently staffed by a Professor, nine Lecturers and two Tutors, and they are as follows:

Professor:

Dr. S.Singaravelu, M.A., Ph.D., (Malaya).

Lecturers:

Dr. R. Dhandayudham, M.A., Ph.D., (Madr.).

Dr. S.N. Kandaswamy, M.A , M.Litt., Ph.D., (Annam.).

Mrs. D. Nadarajah, M.A., (Malaya).

Miss. K.S. Susan Oorjitham, M.Soc.Sc., (U.S.M.).

Mr. P. Palaniappan, M.A., (Malaya).

Mr. R. Rajakrishnan, M.A., (Malaya).

Mr. R. Rajoo, M.A., (Malaya).

Miss. K. Thilagawathi, M.A., (Malaya).

Dr. SP. Thinnappan, M.A., M.Litt., Ph.D., (Annam.).

Tutors:

Mr. J.R. Daniel. M.A., Dip.Ed., (Malaya).

Mr. N. Subramaniam, M.A, (Malaya).

Appendix B

List of theses for higher degrees

M. A. theses

	Title	*Author*
1.	*A Lexical Stúdy of Tamil Dialects in Lower Perak (Malaya).* (English), pp. vi+219, 72 maps.	Rama Subbiah
2.	*Social Life of the Tamils-the Classsical Period.* (English), pp. viii+214.	Sachithanantham Singaravelu
3.	*A Critical Analysis of Thiru VI. Kaliyanasundaram's works.* (English), pp. xiv+338.	E. Sa. Viswanathan
4.	*Women in Tamil Society–the Classical Period.* (English), pp. v+189.	Devapoopathy Nadarajah
5.	*Women in Modern Tamil Literature.* (English), pp. x+84.	Loganayagy Nannithamby
6.	*Social and Political Developments in Indian Community of Malaya, 1920-1941.* (English), pp. 371.	Rajeswary Ampalavanar
7.	*A Study of imagery relating to Colours in the anthology of Kuruntokai–the Classical Period* (English). pp. xxiv+221.	Lalitha Sambamoorthy
8.	*Bahasa Malaysia in Tamil speakers - a Linguistic analysis.* (English), pp. x+208.	Thilagawathi Kanagaratnam
9.	*Politics of the Indian in Malaya, 1945-1955.* (English), pp. vi+334.	S. Subramaniam

10. *Patterns of Hindu Religious Beliefs and Practices among the people of Tamil origin in west Malaysia* — Rajoo Rengasamy
(English), pp. xxxvii+317.

11. *Teaching of Tamil as a Second Language to Non-Tamils with special reference to Malay students* — P. Balasubramaniam
(English), pp. xix+188.

12. *Caste Consciousness among the Indian Tamils in Malaysia. A case study of four rural and three urban settlements.* — R. Rajakrishnan
(English), pp. xi+285.

13. *A Socio-Economic Study of the Indians in the Rubber and Oil-Palm estates in the States of Perak and Selangor.* — J. R. Daniel
(English), pp. xi+242.

14. *Pengubahsesuaian unsurunsur metos India didalam kesusasteraan Melayu traditional dengan merujuk khas kepada Sejarah Melayu dan Hikayat Hang Tuah.* — P. Palaniappan
(Bahasa Malaysia), pp. ix+189

15. *A Critical Study of Malaysian Tamil Short Stories. (1930–1979).* — N. Subramanian
(English), pp. ix+320.

Ph. D. theses

1. *Kampan's Portrayal of Iraman as an epic hero.* — S. M. Ponniah
(Engl.sh), pp. xxxii+761.

2. *The Ramayana Tradition in Southeast Asia: A Study in Cultural Contact between South India and Southeast Asia in the premodern times.* — S. Singaravelu
(English), pp. xxvi+939.

List of candidates who are engaged in doing research for higher degrees

	Name of Candidate	Field of Research	Degree for which Research being done
1.	P. Balasubramaniam	Tamil Socio-linguistics.	Ph.D
2.	J. R. Daniel	Indian Christian Community in Malaysia.	Ph.D
3.	D. Nadarajah	Comparative Study of Classical Sanskrit and Tamil Poetry.	Ph.D
4.	R Rajakrishnan	Social History of people of Sri Lankan descent in Malaysia.	Ph.D
5.	R. Rajoo	Society and Culture of the people of Indian descent in Malaysia.	Ph.D
6.	N. Kanthasamy	Tamil Devotional Literature.	M.A.
7.	V. Arumugam	Tamil Devotional Literature.	M A.
8.	A Nagappan	Modern Tamil and Malay Literature.	M.A.

தமிழர் சிலரது திட்டங்களும் வேண்டுகோளும்

18–6–82 மலேசிய இந்தியக் காங்கிரசின் தலைமையகத்தில் நடந்த கூட்டத்தில் பல்வேறு தமிழமைப்புக்களின் பொறுப்பாளர் களிடையே நான் பேசிய பின்னர் தமிழிலக்கியக் கழகத்தார் சார்பாகத் திரு இர. ந. வீரப்பன் என்னிடம் அறிக்கை ஒன்றினை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர்க்கு அவர் விடுத்த வேண்டுகோள்கள் கொண்டது அது. அயலகத் தமிழர்களின் உணர்வுகளையும் விழைவுகளையும் தேவைகளையும் அது தெளிவாக எடுத்துப் பேசுகிறது. அதனை இங்குத் தருதல் பயனுடையதாக இருக்கும்.

தமிழ்ப் பல்கலைக் கழக விரிதமிழ் இயக்குநர் முனைவர் தி. முருகரத்தனம் அவர்களிடம் 18–6–82-இல் கோலாலம்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ் இலக்கியக் கழகம் வழங்கிய திட்டங்களும், வேண்டுகோளும் :

1. தமிழ்ப் பல்கலைக் கழகம், மலேசியத் தமிழர் குடியேற்றத் தையும், தமிழர் வரலாறு, தமிழ்மொழி வரலாறு—வளர்ச்சி யையும் ஆராய்ச்சி செய்யத்தக்க ஓர் ஆய்வாளரை நியமித்து மூன்று ஆண்டுகளில் முடித்து நூலாக வெளியிட வேண்டும்.

2. மலேசியத் தமிழ் இலக்கியங்களையும், இங்கு வெளிவந்த படைப்புக்களையும் விலைக்கு வாங்கித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நூலகம் அமைக்க வேண்டுவதுடன், நிரந்தரமான ஆராய்ச்சிக்கு வழி வகுக்க வேண்டும். முதலில் ஒரு நூலடைவும் வெளியிட வேண்டியது மிக அவசரம்.

3. 1978-இல் இங்கு வெளியிட்ட 'மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு' போன்ற நூல்களுக்குப் பரிசும், விருதும் வழங்கும் திட்டத்தைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்க வேண்டும். மற்றப் பல்கலைக் கழகத்திலிருந்து இது மாறுபட்ட விதத்தில் வெளியுலகத் தமிழர்க்கு அதிக வாய்ப்பும் உரிமையும் வழங்க வேண்டும்.

1978-இல் மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை நடத்திய ம.த. சிறுகதைக் கருத்தரங்கப் படைப்புகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட வேண்டும். இதுபோல் அது நடத்தவிருக்கும் 'ம.த. கவிதைகள்' பற்றிய ஆய்வு நூலையும் பின்னர் வெளியிடப் பொருளுதவி வழங்க வேண்டும்.

4. ஆங்கிலப் பட்டமில்லாத தமிழாராய்ச்சியாளர்களும் ம. தமிழ் இலக்கியம் குறித்துத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்ய வரவும், தங்கிப் படிக்கவும், பட்டம் வழங்கவும் தமிழ்ப் புலத்தினை விரிவுபடுத்த வேண்டும். தமிழில் பட்டம் பெறுவதற்கு வேறு எந்தத் தடைமுறைகளும் இருத்தல் கூடாது. அத்தகைய பட்டங்கள் அங்கும் இங்கும் அரசும் பிறவும் ஏற்கத் தக்கதாக உறுதிப்பட வேண்டும். பட்டதாரிகளை மட்டுமே இத்தகைய ஆய்வாளர்களாக ஏற்றுக் கொள்வதை நாங்கள் மறுக்கிறோம்.

5. கி. பி. 19 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழகத் தமிழர் குடியேற்றமும் வாழ்வும் மலேசியாவில் எவ்வாறு இருந்தன என்பது பற்றிய அகழாய்வும்—புதை பொருளாய்வும் செய்யத் தக்க ஒரு திட்டம் தங்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவாக அமைத்தல் நலம். வடக்கே கடாரமும், தெற்கே இந்து மலாக்காச்செட்டி வரலாறும் பல உண்மைகளைக் கொண்டு வரும். இதற்கு யுனெஸ்கோவின் உதவிகளைத் திரட்ட வேண்டும்.

6. தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சென்னையிலும், இங்கும் தனி நிலையம் இருக்க வேண்டும். அங்குமிங்கும் தொடர்புறவு கொள்ளத்தக்க வகையில் இதற்கு நிதியாதரவு ஒதுக்கலாம்.

7. மலாய்க்கும் தமிழுக்கும் உள்ள 500 ஆண்டு உறவுகளையும் தமிழ் வேர்ச் சொற்கள் அதனுடன் ஆழ்ந்து கிடக்கும் வரலாற்று உறவுகளையும் ஆராய்ந்து நூல் தொகுக்கவும், ஆராய்ச்சி செய்யவும் திட்டமிட வேண்டும். பல்லாயிரம் மாணவர்கள் இந்தியாவில் தங்கிப் படிக்கும் சூழலில் அவர்களுக்கு மலாய் மொழியும் கற்பிக்க ஏற்ற வழிவகை உண்டாக்குதல் அவசியம். இது கருதித் தஞ்சையின் சார்பில் சென்னையில் ஒரு மொழிக்கூடம் அமைக்கலாம். தமிழ் படிக்காத எவருக்கும் இத்தகைய வாய்ப்பு வழங்குதல் கூடாது. 1612—இல் எழுந்த 'மலாய் வரலாறும்', 1852—இல் எழுதப்பட்ட முன்சி அப்துல்லா நூல்களும் இத்தகைய ஆய்வுக்கு உரியன.

8 கடந்த கால் நூற்றாண்டாக இங்குப் படைக்கப்பட்ட மலேசியத் தமிழ்நாட்டுப் பாடல்களையும், மரபுகள் உட்படத் தோட்டப்புறப் பேச்சு வழக்கு மொழியியற் கூறுகளையும் ஆராய்ந்து வெளியிடுவதுடன், முனைவர் இரா. தண்டாயுதம் அவர்கள் எழுதிய நாட்டுப் பாடல் வரலாறும் நூலாக்கப்பட வேண்டும். இதற்கு மானியம் ஒதுக்கப்பட வேண்டியதும் இன்றியமையாதது.

9. தமிழ்ப் பல்கலைக் கழகமும், மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையும் அதிகாரபூர்வமான ஒத்துழைப்பும், மேலே கோரப்பட்டவற்றின் திட்டங்களைச் செயல்படுத்தும் பணிகளில் ஒருங்கிணைப்பும் நல்லுறவும் இருக்க வேண்டும். பல்கலைக் கழகச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட தமிழுறவுத் தொடர்புகளைப் பிணைப்பாகவும் இணக்கமாகவும் செய்ய வேண்டும் எனக் கருதுகிறோம்.

10. தங்கள் செய்திக்கதிர் 16–5–81 ஏட்டில் வெளிவந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வேண்டு கோளைப்போல் மலேசியாவும் விரும்புகிறது. இந்த விருப்பம் படிப்படியாக நிறைவுறும் என நம்புகிறோம்.

11. இலங்கைக்கு அடுத்த இடத்தில் இரண்டாவதாகத் தமிழர் பெரும்பான்மையாக (சுமார் பத்து இலட்சம்) வாழும் மலேசியாவுக்கு ஷெ ஆய்வுக்கு அதிகமான செலவினத் திட்டம் வகுத்து, அதிக நிதி ஆதரவு தர வேண்டும். இத்திட்டங்கள் செயல்படும் உரிய நேரம் வரும்போது இங்கும் அதற்கென அறக் கட்டளையும் வாரியமும் அமைக்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறோம்.

12. மலேசியத் தமிழ் அறக்கட்டளை அப்போது அமைக்கப் படும் என்பதுடன் கால் பகுதி நிதியும் இங்குத் திரட்டித் தரப்படும் என்பதும் இதற்கான பேராண்மைக் குழு பின்னர் அமைக்கப் பெறும் என்பதும் உறுதி.

13. மலேசியத் தமிழ்ச் செல்வங்களான தமிழ்ப் படைப்புகள் பலவற்றை இங்கு வரும் பல தமிழகப் பேராசிரியர்கள் கடந்த பத்தாண்டுக்கு மேல் இங்கு வரும்போது ஆய்வுக்காகப் பெற்றுச் சென்றுவிட்டதால் 'பல தமிழ்க் கருவூலங்கள்' அழிந்து அல்லது இழந்து போய்விட்டன. அத்தகைய நிலை இனியும் இல்லாமல் செய்யத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தனது திங்கள், காலாண்டு வெளியீடுகள் மூலமும், அங்குத் தமிழக அரசு மூலமும் விளம்பரம் செய்து அவற்றைப் பெற வேண்டும்; தவறுகளைத் தடுக்க வேண் டும். இத்தகைய படைப்புகளைத் திரட்டித் தர நாங்கள் உறுதி தருகிறோம். பணமும், செலவும் தங்கள் கழகம் ஏற்க வேண்டும். இந்தப் பொறுப்பை எங்களுக்குத் தந்தால் கடந்த முப்பதாண்டு வரலாற்று விவரங்களையும் தொகுத்து வைத்துள்ளவற்றையும் வழங்குவோம். இதற்கான ஒப்புதலையும், அதிகாரத்தையும் எங்களுக்கே வழங்க வேண்டும்.

எங்களிடமுள்ளவை: மலேசியத் தமிழர் வரலாறு, ம.இ.கா.– வரலாறு, கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்குப்பின் தமிழ் அரசர்– ஆட்சி வரலாறு, மலாக்காச் செட்டிகள் (1500–1982) வரலாறு ஆகியவற்றின் படங்கள், குறிப்புகள், சான்றுகள்.

எமது தமிழ் இலக்கியக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு 123 நூல்கள் வழங்கியுள்ளது. புதுடில்லிப் பல்கலைக் கழகத்தில் பல உள்ளன; சென்னையிலும், மதுரையிலும் கண்காட்சி நடத்தியவை நூற்றுக்கு மேற்பட்டவை அங்குப் பாது காப்பாக (சென்னை) உள்ளன. இவற்றையும் தங்கள் ஆய்வுக்குத் தர முடியும்.

தமிழ்க் கல்வியின் வேர் இங்குப் பிடுங்கப்பட்டு வரும் அபாயம் நிலவுகிறது. தமிழர்களில் ஒரு சிறு பகுதி தமிழை அழிக்கும் அரசியல் ஆதிக்கம் கொண்டுள்ளதை எதிர்த்தே 1975 முதல் 4 தமிழ்க் கல்வி மாநாடுகள் நடத்தினோம். தொடர்ந்து அது நடத்தப்படும். எனவே, இத்தகைய பணிகளுக்குப் பணமும் ஆதரவும் தமிழகம் வழங்க வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1 "The earliest evidence of Indian presence and influence in Malaya is found in the southern Kedah and Province Wellesley regions, in the form of fragmentary inscriptions in Indian script of the fourth and fifth centuries, and later of simple structures of Buddhist and Hindu character. The early inscriptions are clearly of Buddhist origin, taking the form of Buddhist prayers inscribed on stone, probably by Buddhist merchants who were travelling in these parts. The inscriptions are in Sanskrit, and the script is the Pallava Grantha script, showing that the traders were in all probability from southern India. South India was permeated in these years by Buddhist and Jain influence, with the city of Kanchipuram as the seat of important institutions of Buddhist learning. The commercial and artisan groups were generally of Buddhist and Jain persuasion, and must have featured prominently in the trade to South-east Asia. From the sixth century, it becomes evident from the abundant artefacts of an Indian character that the ports of the Kedah coast on the mouths of the Sungei Bujang, the Sungei Merbok, and the Kuala Muda were major ports of call for Indian traders. These river valleys appear to have become the seats of settlements of Indian traders, presumably waiting for the change of monsoon and using these places, as centres for participation in the trade of neighbouring regions. Inevitably, the Indians left their cultural imprint in these places, and probably influenced the cultures of societies around them. Soon there sprang up along river valleys and on mountain tops—at Bukit Choras, Bukit Mertajam, Bukit Meriam, and the Kedah Peak—Saivite and Vaishnavite shrines with statues identical to those in the Pallava style of South India. There have also been located, in Perak and towards the north in C' aiya and Wieng Sra, Vishnu statues of Gupta style. The seventh century saw the revival and spread of Saivism and Vaishnavism, resulting in

the decline of Buddhism and Jainism all over southern India. This movement is reflected in the character of Indian influences evidenced in Malaya at the same time."

(— P. 3 & 4, Indians in Malaysia and Singapore.)

When the Kingdom of Sri Vijaya expanded into a powerful maritime empire by the ninth century A.D., controlling all major ports and outlets on both sides of the Straits of Malacca and along the eastern and western coasts of Malaya, Indian trading contacts appear to have changed their character. Now they called at the main ports, and dealt with well-established trading systems and traders of South-east Asia. Kedah, or Kadaram as it was called by the Tamils, continued to feature prominently in South Indian trade. Political relations were established with Sri Vijayan kings, and even with subordinate rulers in the Malay Peninsula. The great trading corporations of southern India appear to have had their stations in South-east Asia until the twelfth and thirteenth centuries. The Colas of South India had such intimate interests in this trade that they went to the trouble of undertaking an extended naval expedition against ports on the east and west coasts of Malaya in the eleventh century.

Indian cultural influence spread into Malayan states and affected political and social institutions through the direct agency of the Indian traders and settlements, or from other Indianised centres in South-east Asia. The institution of kingship was perceptibly changed under this influence; tribal polities were raised in status to kingdoms, and the paraphernalia of court ritual and ceremony adopted. Hindu concepts of kingship and Hindu administrative institutions and ceremonial became so deeply embedded in Malayan courts that even after these states were Islamized many of these practices remained, some even to this day. Hindu and Buddhist ideas and forms of worship seem to have spread widely. Popular or folk Hinduism seems to have mingled especially well with the animism of tribal religion, and produced a pattern of beliefs which also persists in some aspects to the modern day. The influence of the Sanskrit language and its literature appears to

have been most marked. Though the language itself must have been known only to the Brahmins and probably to a few princes and nobles taught by them, the ideas embedded in its literature spread downwards into folk culture. Sanskrit language influenced the development of Malay, giving it many words and concepts. Its well-known literature, such as the Mahabharatha and the Ramayana, the stories of the Puranas and the Panchatantra, was diffused widely and entered Malay literature. The Ramayana was spread through the medium of the shadow theatre, the wayang kulit, and remains a part of traditional Malay culture. By this process of interaction, Indian and Malay culture impinged at many points developing a great deal of similarity in values and external forms.

(—P, 5-6, Indians in Malaysia and Singapore)

1அ It has already been noted that for many decades after the first settlement of Indians, their population was of a predominantly male character and that after the Second World War, this sex imbalance was gradually being redressed. This trend towards a more natural sex ratio was shown further in the 1970 Census when there were 113.7 males to every 100 females as compared to 134 males per 100 females in 1957. Yet the Indians still have the most unfavourable sex balance of the three Malaysian ethnic groups, the Malays and Chinese having respectively 98.7 and 101.8 males per 100 females.

(p. 197, Indians in Malaysia and Singapore.)

2. The D.A P. was verging dangerously on sedition, after the emergency, the subsequent constitutional changes and the new Sedition laws of 1971 rendered issues such as language, Malay rights and citizenship beyond the pale of political controversy. Under the weight of these laws, the support of these opposition parties was sharply reduced.

(p. 202, Indians in Malaysia and Singapore.)

3. The M I C. leadership was at this time a predominantly commercial elite, suspicious of, and increasingly out of touch with, the Indian educated classes, maintaining a patronizing relationship with the masses through a Tamil communal identity

and the utilizing of Hindu religious sentiments. These helped in presenting the M.I.C as the party of the Indians and pulling in the votes at required periods.

(p. 198, Indians in Malaysia and Singapore.)

4. Reform of popular religion had the highest priority in the activities of the Association and those allied to it. Malayan reformers thought that the public performance of some of these practices was degrading, and contributed to lowering the esteem of the Indian in Malaya. A characteristic of reform movements among Indians in Malaya has been their constant concern with the image of the Indian in the eyes of other Malayan ethnic groups. How could Indian society and custom be improved to image? Besides the intrinsic merit of the reforms and the arguments for them on the Indian side, this was an additional factor. The progress of the reform movements of Madras was closely watched, their propaganda was reproduced in publications, and their success held up as an example. In 1938 and 1939, the Association turned its attention to Kavadi-bearing, and attempted to persuade the Government and leaders of the Indian community in favour of legislation to ban or control the practice of various kinds of self-immolation in public.

(p. 173, Indians in Malaysia and Singapore.)

The persistence of caste consciousness is also seen in reports of the caste clashes that occasionally occurred. In fact caste was one of the prime causes of early disturbances among labour. Such clashes occurred between untouchables and upper caste men, and between various 'clean' castes.

(p. 66, Indians in Malaysia and Singapore.)

5. "It is not easy to define "poverty" to everyone's satisfaction but most people will agree that a family is poor if it cannot meet its basic needs for food shelter, clothing, medical care and education. In our consumeristic society of today, it can be easier financially, to pay monthly instalments for a T.V. set or a motorbike than to provide housing, medical care and education of a sufficiently decent standard to one's family. The relative prices of "luxury consumption goods" such as T. V.s and tape-recorders have become cheaper with respect to

the prices of products to satisfy basic needs such as the need for decent housing. As a consequence of this, the poorer people in our country have been drawn into the consumer economy (by advertisements and our society's value system) **before** the problem of their poverty has been solved. This process has tended to worsen their poverty by diverting their already meagre incomes to relatively "useless" expenditure: Let us now turn to one other socio-economic problem that the Indian poor face.

Low savings/An insecure future

The majority of the Indian poor are unable to accumulate much savings in the course of their working lives. At retirement, most of them do not own a house, however small and are forced to carry on working as low-paid daily contract labour. Often, this too does not suffice, and they are forced to depend on their children for support Not only does this increase the dependency ratio among the poor, it also produces demoralization and despair both among these retired or laid-off workers and their children."

(p. 8 & 9, Towards Understanding the Problems of the Indian Poor in Malaysia.)

Causes of the Socio-economic Problems

"Are these problems due to causes which are indigenous to the Malaysian Indian community? Are they due to something in Indian culture or religion, or perhaps in the psychological make-up of Indians ? One can find many instances where cultural and psychological factors do aggravate the socio-economic problems faced by the poorer Indians. For example, poor budgetting and excessive drinking aggravates the problem of low incomes and savings, and so on.

However, no one can claim that shortages of jobs, low incomes and high rates of inflation are things that the Indian community brought upon itself. Backward cultural attitudes and practices have certainly worsened the socio-economic hardships, but they are definitely not the main causes of these hardships."

(p. 10, Towards Understanding the Problems of the Indian Poor in Malaysia)

Socio-Cultural Problems of the Indian Poor

"Indians of working class backgrounds have acquired a culture of poverty which is characterized by apathy, poor parental responsibility, drinking low self-respect, and poor community cooperation. All these features reinforce each other and serve to exacerbate the economic hardships that the Indian poor experience. Perhaps Figure 3 will convey this conception more clearly.

Figure 3: The Subculture of Poverty

Poor Parental	Poor Budgetting	Low Educational Achievement
Excessive Drinking	Depressed & Apathetic Community	
Unemployment Low Wages Low Savings Poor Living Conditions	Low Self-esteem	Poor Community Cooperation

These problems collectively form an interconnecting and mutually reinforcing network that tends to make the community even more demoralized and apathetic. Many Indians who are not from the Indian working class often feel impatient and angry with the Indian poor who are enmeshed within this subculture of poverty. We feel indignant that these people are always whining, begging and quarrelling instead of taking steps to help themselves. What's more we sometimes blame them for "bringing disrepute" to the Indian community and for "making us the laughing stock of this country". Often too, we feel ashamed of them.

(P-17 Towards Understanding the Problems of the Indian Poor in Malaysia.)

6. "The English-educated Indians attained their maximum influence and prosperity in the 1950s and early 1960s. The

expansion of administrative and commercial services after independence in 1957 opened a number of avenues of employment. Malayanization of executive positions increased these opportunities and made possible fast promotions for gifted young men. Both in Malaysia and Singapore, Indians occupy positions in the higher echelons of public service in far greater proportion to their population. There are heavy concentrations in professions that Indians have specially taken to, such as medicine, law, engineering, and teaching. Standards of living and levels of affluence of the educated have vastly improved. Yet some aspects of their present position are the cause of concern. Their education and their ways of life have alienated them from their traditional cultural heritage, to which they are now, by and large, complete strangers. They are growning up, particularly those at school, as a rootless generation. In a country still divided into its distinct cultural traditions, a group that alienates itself from what is its own will have no cultural home.''

(p. 194, 195, Indians in Malaysia and Singapore.)

7. ''இந்நாட்டில் ஐயாயிரம் தமிழர்கள் தெருத்தெருவாக நலிந்து பிச்சை எடுத்து வாழுகிறார்கள். மிகக் குறைந்த தமிழர் சமூகமான நம்மிடையே மிக அதிகமான எண்ணிக்கையில் பிச்சைக்காரர்கள் இருக்கின்றார்கள்''—இவ்வாறு 1979-இல் நடைபெற்ற மலேசியத் தமிழர் மாநாட்டில் திரு. இர.ந.வீரப்பன் குறிப்பிட்டிருக்கிறார்.

All these factors led to a worsening in the economic position of Indians by 1975. Unemployment among them had risen from 11.0 percent in 1970 to 12.2 percent in 1975, as compared to a decline in Malay unemployment from 8.1 percent (1970) to 6.9 percent (1975) and a marginal increase among Chinese from 7.0 percent (1970) to 7.2 percent (1975), making Indians the worst off among the three races in this respect. A survey conducted in 1970 to measure the incidence of poverty in Malaysia put 39 percent of all Indian households below the poverty line, compared to a national average of 49 percent. The evidence also showed an increasing income disparity among Indians, as was also the case with the Malays. These trends had been known to discerning Indian observers for some years but the political leadership had been largely apathetic in

the context of a laissez-faire approach to economic policy. The radicalization of the Malay elite led to a corresponding movement among the university-educated Indians and now they came to the fore with pioneering studies of economic problems as confronting Indians and which had so far been swept under the carpet. *These studies attested the worsening of the Indian position, in employment, in ownership of land and capital, and in education, even after the adoption of the new economic policy.*

(p. 211, Indians in Malaysia and Singapore.)

8. மொழி, பண்பாடு ஆகியவற்றைப் பொறுத்தவரை மலேசியத் தமிழர்க்குள்ள சிக்கல்களைத் திரு. அரசரத்னம் இவ்வாறு விளக்குகிறார்:

Conflict of loyalty is thus no longer a problem to the Malaysian and Singaporean Indian. Consequently there is less hostility to the continuing tendency to look to India (or Sri Lanka) for cultural and religious inspiration. In the absence of a sound and original tradition of creativity in Indian religion and culture in these countries, it is natural that those section of the community that are anxious to retain these traditions *should continue to look to India. What is available in* Malaysia and Singapore is generally but a pale imitation of the original and people will not always be satisfied with this. Thus top-ranking artists public speakers of repute, and well-known expositors of, religion are invited and draw vast crowds wherever they go. People pay large sums of money to be able to appreciate what they offer, showing an abiding and fundamental interest in the higher culture of India.

In the 1960s there was a trend towards attempting a reinterpretation of Indian culture in the light of its local environment and not absorbing it wholesale as prevalent in India. This movement was reminiscent of the indigenization of Indian culture in South-east Asia in the first millennium A.D. It was given official encouragement in Singapore and looked upon with favour even in Malaysia. There were tentative efforts over the media of stage and television, and in creative writing. If this reinterpretation is to progress meaningfully, it would require genuine inter-racial co-operation in cultural and literary associations, a stage which does not appear to have been reached.

If Indian culture is to be firmly planted in Malaysia and Singapore and indigenized in the local milieu, there is the problem of the language in which it will be transmitted. In Malaysia, Tamil may no longer continue as the common language of expression of the Indians, as most Indians grapple with the need to be very proficient in Malay and will want to retain their proficiency in English. There may grow a generation, half of whom have lost even the command of spoken Tamil, using Malay to converse with those Indians who are proficient only in Tamil and Malay. This, of course, exists in some form already. A non-English speaking Tamil and Sikh would converse in Malay. The retention of an Indian language is not a sine qua non for the retention of Indian culture at least in a modified, some might say bastardized, form. In this respect. the prospects in Singapore seem better with official recognition for Tamil and the possibility, if Indians wanted, of Tamil being taught at a high standard in schools. It is paradoxical that while in Singapore official policy is favourable and institutions are there for the cultivation of the Tamil language, the Indians generally seem apathetic. In Malaysia where there is popular interest and desire to retain Tamil, official policy is unfavourable to multi-linguism.

(P. 221 & 222, Indians in Malaysia and Singapore.)

There are now estimated to be about 300 Tamil writers in Malaysia and Singapore, some of them achieving a standard comparable to that in Tamil Nadu. The short story and the play are popular literary forms. The former can be easily published in newspapers and periodicals, the latter produced over radio and television, or in club entertainment. There is an active Tamil Writers' Association co-ordinating the activities of these writers, What is noteworthy is that for most of these people, creative writing in Tamil is at best a hobby. None can make a living out of it. Without State support in any form, lacking the patronage of wealthy foundations or individuals, the very existence of Tamil literary culture in Malaya is an index to the deep roots of the Tamil tradition in Indian society.

(P, 194, Indians in Malaysia and Singapore.)

The reliance on sources of cultural inspirations from India has considerably reduced but still the learned expositor or the spiritual guide is a welcome guest. The declining knowledge of Tamil or any other Indian language would be an obstacle in the transmission of traditional literature; much more resort has to be had to English, and indeed Malay, translations.

(P. 217, Indians in Malaysia and Singapore.)

9. The Indian plantation worker who is poor, ignorant and illiterate feels helpless and powerless to overcome his low socio-economic condition. Under such situations, he is likely to feel fatalistic, living day to day without planning for the future or being ambitious for himself or for his children. He may increasingly rely on God's will and astrology and suffer his deleterious conditions silently, thinking that it is his Karma.

(p.9, "Norms and Values of Plantation Workers")

10. With the devolution of more power to the Malayan people, a national Government took office in 1955 with control over education. It appointed a Committee under the Chairmanship of Dato Abdul Razak to review educational policy. The Razak Report went some way towards accommodating the views of minority groups. It reiterated the aims of educational policy as the bringing together of all races under a national educational system. It made a genuine attempt to bring all existing schools into this national system. There were to be four types of primary schools. Standard primary schools were those where Malay was the medium of instruction with English as a subject Standard-type primary schools were those where the medium of instruction was Chinese, Tamil, or English. Finally there were the Chinese and Tamil vernacular primary schools, where English and Malay were to be taught as second languages. In this manner the existing primary schools of the four language streams were brought under a uniform system with theoretically equal facilities, standards, and requirements. while all Government schools were to be converted to the new types, private and aided schools had the choice of entering the system. Almost all of them chose to do so. Chinese and Tamil schools would progressively be converted to national-type schools, as they became staffed with teachers qualified to teach English and

Malay in addition to the Vernacular taught in the school. In all primary schools, if parents of atleast fifteen children requested the teaching of Tamil or Chinese, provision was to be made for this.

Secondary schools were to be either English – or Malay – medium schools, with the option of teaching Chinese or Tamil as a subject if there were fifteen pupils wanting to learn the language. From 1965 it became possible for pupils from Chinese and Tamil schools to join an English medium secondary school after staying a year in a remote class where they received intensive coaching in English. Bright pupils from Tamil schools in estates take advantage of this provision to secure secondary and higher education.

(p. 189-190, Indians in Malaysia and Singapore.)

11. The Minister of Education, Datuk Rahman Ya'akub, announced late in 1969 that from January 1970 teaching in Standard one classes of the existing English-medium schools would be conducted wholly in Bahasa Malaysia (Malay). Teaching in Malay would progressively moved to higher classes year by year till in 1982 the entire primary and Secondary School teaching in these schools would be in Malay with English as a second language. Apart from the Tamil Primary Schools in the plantations and a smattering of such schools in a few cities, Indian children were generally enrolled in these national-type schools that had hitherto taught in the English medium. Education was a major priority to all Indians except the working class and it was on the skills acquired through education that they depended to earn a livelihood. Indians, had taken avidly to English education as a means of maintaining their share of white-collar jobs and, if need be, to provide the mobility to other English-speaking countries.

(p. 213-214, Indians in Malaysia and Singapore.)

Indians were generally alarmed at this total change in the medium of instruction in schools and concerned at the ability of their children to perform at a high standard of achievement, studying in a medium in which they had only the barest profi-

ciency. Most middle-class Indian families were by now English-speaking, both at home and among friends, and were far more comfortable receiving their education in that medium. The necessity to come to terms with Malay as the language of education and of inter-ethnic social intercourse was brought home in many ways after 1969. In the University of Malaya, where a large proportion of Indians undergoing higher education were enrolled, Bahasa Malaysia was introduced as the medium of instruction in some courses from 1970 onwards and the use of this medium was extended every year to new courses. The Malaysian Certificate of Education examination results announced in early 1973 caused alarm at the large proportion of non-Malays failing because they did not pass the compulsory Bahasa Malaysia (Malay language) paper. All this spurred Indian parents to take urgent steps to improve the proficiency of their children in Malay.

(P. 214, Indians in Malaysia and Singapore.)

The necessity to educate children in the Malay language and to acquire a high level of proficiency in it meant the further relegation of the mother Indian language – Tamil in most cases – into oblivion. Indian parents were very keen to retain the same proficiency in English. Whatever efforts had previously been made to keep the children in touch with the mother languages – meagre enough as they were – were now largely allowed to lapse. There was the possibility of asking for the introduction of Tamil language in a school as a third optional language if a certain number of children wanted to learn it. But this provision was resorted to even less. While earlier, in the Indian Studies Department of the University of Malaya, there would be about a dozen students with the required proficiency to follow the advanced Tamil literature courses, now there are hardly any in that stream which has virtually dried up. The ability to read and write Tamil has virtually died out among Indians educated in national schools.

(P. 215, Indians in Contemporary Malaysia and Singapore.)

12. It is a curious phenomenon of the Tamil educational pyramid in Malaya that it has a base and top but no middle.

Secondary education in Tamil, as seen above, is noteworthy by its absence. But it was decided to establish a Department of Indian Studies in the University of Malaya in 1956 with Tamil as its main language of study. It was a recognition of the fact that both Malaya and Singapore needed people with high academic qualifications in Tamil, albeit in small numbers, to man some services where Government comes into contact with the Tamil-speaking public. Yet it is a serious defect of the educational structure as far as the Indian is concerned that the established educational institutions in the country provide for his studying Tamil at the primary level and at university level with a wide gap in between. Those who come to study Tamil at university are students who have succeeded in retaining their limited proficiency in the language through private informal study. This must inevitably affect standards of teaching in the university, and hamper the further development of this Department as a place for Tamil literary learning of a high order.

(P. 192-193, Indians in Malaysia and Singapore.)

4. முடிவுரையும் பரிவுரையும்

இலங்கை, சிங்கப்பூர், மலேயா ஆகிய மூன்று நாடுகளிலும் தமிழர் ஏறத்தாழ அரைக் கோடி பேர் வாழ்கின்றனர்.

அவர்கள், எல்லா வகையிலும் தனித்தும் உயர்ந்தும் வாழலாம். ஆனால் மொழி, இலக்கியம், பண்பாடு, சமயம், கலைகள் ஆகியவற்றில் தமிழகத்தையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. தமிழகமே தலைக் காவேரி; ஊற்று.[1]

மூன்று நாடுகளிலும் தமிழர்க்குப் பல கவலைகள் தீர்ந்திருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் பெருங்கவலை தமிழ் மொழியே. மொழிக்கு வாய்ப்பின்மையோ, உரிமையின்மையோ கவலை தருகிறது.

மூன்று நாடுகளிலும் தமிழர் சிறுபான்மையர். பூமி புத்திரர்கள் தமிழரைப் பூமி சத்ரு என ஐயுறுகின்றனர். அங்குள்ள தமிழர்க்குத் தாய்த் தமிழகம் ஒரு பெருந் துணை; ஆனால், அரசுகளுக்கோ தீக்கனா.

அங்கெல்லாம் வாழும் தமிழர் புறத்தெல்லாம் மகிழ்ச்சி காட்டுகின்றனர்; அகத்தெல்லாம் கவலை காட்டுகின்றனர்; நசிகின்றனர்.

பிறந்த மண்ணிலே வாழ்வு காண முடியாமல்தான் அதனைத் துறந்து சென்றவர்கள் அவர்கள். அங்கும் பெருவாழ்வு பெற்றதாகக் கூற முடியவில்லை. பொறுப்பும் கடமையும் தமிழகத்துக்கு உண்டு. இரு புறமும் இவ்வெண்ணம்.[2]

இந்தச் சிந்தனைப் பின்னணி மனத்தை விட்டு மாய மறுக்கிறது. பரிந்துரைகளில் பரிவிருக்கலாம். தமிழ்ப் பல்கலைக் கழகம் கீழ்க்கண்ட பொறுப்புக்களை மேற்கொள்ளலாம்:

(1) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவிகள், ஆராய்ச்சி மாணவர் பதவிகள் ஏற்படுத்தலுக்கும் பிறவற்றிற்கும் அறக்கட்டளைகள் (Endowments) பெற மலேசியாவில் வாய்ப்புக்கள் உள்ளன. சிங்கப்பூரிலும் ஓரளவுண்டு. கோவில் தேவத் தானங்களிடத்தும், செல்வர்களிடத்தும், வணிகர்களிடத்தும் பொதுமக்களிடத்தும், அரசியல் கட்சியிடத்தும், தொழிலாளர் சங்கங்களிடத்தும் பொருள் திரட்ட வாய்ப்புண்டு. இது கருதியே கோலாலம்பூர் மகாமாரியம்மன் கோவில் தேவத்தானத் தலைவர் திரு கோடிவேல் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. செல்வர் கொடை மனத்தர் திரு ரெங்கசாமிபிள்ளையும் முன் வந்துள்ளார். மலேசியாவின் தமிழர் தலைவர்கள் பேரிலும் இவ்வறக் கட்டளைகள் அமையலாம். பல்கலைக் கழகத்தின் விதி முறைகள், தேவைகள், அறக்கட்டளையின் விதிமுறைகள் இவற்றை விளக்கி தக்காருக்கு எழுதி, முயற்சி மேற்கொள்ளலாம். இனி இங்கிருந்து மேற்கொள்ளப்படும் முயற்சியைப் பொறுத்தே பயன் விளையும்.

(2) சிலோன் தொழிலாளர் சங்கம், கோலாலம்பூர்த் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவை பெரும் பேரியக்கங்கள் தமிழருடையன; பெரும் பொருளும் உடையன. தொழிலாளரிடை ஆராய்ச்சிக்கும், தமிழாராய்ச்சிக்கும் அவை பொருள் உதவ முன் வரலாம். தனிப்பட்ட திட்டங்களுக்கும், அறக்கட்டளைகளுக்கும் அவற்றைத் தக்கவாறு அணுகி உதவி பெறலாம்.

(3) இலங்கையிலும், மலேசியாவிலும் பல்கலைக் கழகங்களில் தமிழ் பற்றியும், தமிழர் பற்றியும் ஆராய்ச்சி நிகழ்த்த வல்ல அறிஞர்கள் இருக்கின்றனர். தமிழகமும் அந்நாடுகளும் தழுவும் பொதுத் திட்டங்கள் வகுத்து, அவர்களையும் உட்படுத்தி ஆய்வு நிகழ்த்தலாம். குறிப்பிட்ட காலத்திட்ட உதவி, ஆய்வு மாணவர் பதவி, சிறப்புதவி ஆகியவற்றைப் பயன்படுத்தி, இத் திட்டங்களை நிறைவேற்றலாம்.

(4) அயல்நாட்டுத் தமிழ் அறிஞர் முறையாகத் தமிழகத்தில் வந்து ஆய்வு நிகழ்த்திச் செல்ல வாய்ப்பாக ஆய்வறிஞர் பதவி களும், நிதியுதவியும் ஒருசில ஒதுக்கலாம். இலங்கையில் பல பல்கலைக் கழகங்களில், பல தமிழறிஞர்கள் பணி புரிகின்றனர். அங்கு இப்போது ஆராய்ச்சி வாய்ப்புக்கள் குறைந்துள்ளன. இலங்கைக்குக் கூடுதல் உதவி வழங்கலாம்.

(5) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் வந்து சில காலம் தங்கிச் சில அறிவுத் துறைகளில் ஆய்வு நிகழ்த்தவும், விரிவுரைகள் நிகழ்த்த

வும் வல்ல பேராசிரியர்கள் அண்டை நாடுகளில் உள்ளனர். அத்தகையோரைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அழைக்கலாம். அவ்வாறே சில துறை அறிஞர்களை இங்கிருந்து அப்பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பலாம். இருபுறமுள்ள இள ஆராய்ச்சியாளர் பயிற்சி பெறவும் இத்திட்டம் வாய்ப்பாக இருக்கும்.

(6) அயல்நாட்டுத் தமிழர் உள்ளங்களில் அவர்கள் வாழ்க்கைச் சிக்கல்கள் மேலோங்கி நிற்கின்றன. ஆதலால் அவர்கள் சமூக, சமய, அரசியல், பொருளாதார ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்புகின்றனர். தமிழ்ப் பல்கலைக் கழகம் அத்தகைய ஆராய்ச்சிக்கு வாய்ப்பேற்படுத்தித் தரலாம். சமூகக் கல்வித் துறை (Department of Social Sciences) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நிறுவி, இத்தேவையை நிறைவேற்றலாம். தமிழகத்தின் பிற கல்வி நிறுவனங்களுடன் உறவு கொண்டாயினும் இதனைச் செய்யலாம்.

(7) தமிழ்ப் பல்கலைக் கழகமும், தமிழ்த் துறைகளும் இணைந்து பொதுப்பொருள் பற்றிக் கருத்தரங்குகள் நடத்தலாம் என யாழ்ப் பல்கலைக் கழகத்திலும், மலேயாப் பல்கலைக் கழகத்திலும் கூறப்பட்டது. இதுபற்றி முயற்சி மேற்கொள்ளலாம். பொருட் செலவை இரு சாராரும் பகிர்ந்து கொள்ளலாம்.

(8) இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் பழஞ் சுவடிகளும், நூல்களும் இன்றும் கிடைக்கின்றன. அவற்றைத் தொகுக்க ஒரு திட்டம் மேற்கொள்ளலாம்.

(9) இலங்கையிலும், மலேசியாவிலும் தமிழரிடை நாட்டுப்புற இலக்கியங்களும், பண்பாடும், கலைகளும் இன்றும் நிலவுகின்றன. அவற்றைத் தொகுக்கத் திட்டங்கள் வகுத்து, இருபாலும் முயன்று நிறைவேற்றலாம்.

(10) இலங்கையில் பழங் காலந்தொட்டே தமிழர் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மொழி, ஒரு கிளை மொழியாக மாறி வருகிறது. அதனை ஆராயத் திட்டங்கள் வகுக்கலாம். அங்குள்ளோர் உதவ முன் வந்துள்ளனர்.

(11) அயல்நாடுகளில் தமிழ் நூல்கள் வெளியிடலும், விற்பனை செய்தலும், தாய்த் தமிழகத்திற்கு அனுப்பலும் இயலா நிலையில் உள்ளன. அச்சக வசதிகள் அங்கு இல்லை. செலவு மிகை. அறிய நூல்களையும் ஆய்வுரைகளையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடலாம்.[3]

(12) ஆங்கிலப் பாடநூல்கள் மொழிபெயர்ப்பு, கலைச் சொல்லாக்கம் ஆகியவற்றில் அண்டை நாடுகளின் அனுபவம்— குறிப்பாக இலங்கையின் அனுபவம் தமிழகத்திற்குப் பெரிதும் பயன்படும். தமிழ்ப் பல்கலைக் கழகம் அவ்வனுபவத்தைப் பயன் படுத்திக் கொள்ளத் தக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

(13) அண்டை நாடுகளில் வாழும் தமிழர்க்குப் பெரும் பாலும் முதுகலைப் பட்டம் பெறுவதற்கும், ஆராய்ச்சிப் பட்டங் கள் பெறுவதற்கும் வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. அத்தகை யோர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆராய்ச்சித் திட்டங் களையும், உதவிகளையும் பயன்படுத்திக் கொண்டு, பிற இடங் களில் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு நல்கலாம்.

(14) அண்டை நாடுகளில் இன்று வளர்ந்துள்ள பல துறை களில் படித்துப் பட்டம் பெற வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால், தமிழர் இசை, நடனம், ஓவியம், சிற்பம், கிராமியக் கலைகள் ஆகியவற்றில் பயிற்சிகள் பெறவும், பட்டம் பெறவும் உயரவும் அங்கெல்லாம் வாய்ப்பில்லை. இத்துறைகளில் பயிற்சி பெறவும் சான்றிதழ்களோ,பட்டமோ பெறவும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தல் பற்றித் தமிழ்ப் பல்கலைக் கழகம் சிந்தித்துச் செயற்படலாம்.

(15) அண்டை நாடுகளில் தமிழை முதல் மொழியாகவும், இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கத் தக்க முறைகளும், கருவி களும் வேண்டுகின்றனர். அங்குள்ள தமிழர் மலாயர்க்கும், சீனர்க்கும் அவர்கள் மொழி வழியாகவும் ஆங்கிலம் வழியாகவும் அவ்வந்நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்பத் தமிழ் கற்பிக்க விரும்பு கின்றனர்.[4] இதற்குத் தக்க ஆராய்ச்சியும், முயற்சியும் தமிழ்ப் பல்கலைக் கழகம் முயலலாம். அந்நாடுகளில் மொழி கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் பள்ளி ஆசிரியர்கள், பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஆகியோருடன் இது குறித்துக் கலந்துகொண்டு அவர்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

(16) மலாய், சிங்களம், தமிழ் ஆகியவற்றை இணைத்துப் பெரிதாக ஆராய்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை. முறையான ஆராய்ச்சிக்குத் திட்டங்கள் வகுக்கலாம். இருமொழி அகராதிகள் பாடநூல்கள், இலக்கணங்கள், இலக்கிய மொழி பெயர்ப்புக்கள் ஆகியவை தயாரிக்கலாம்.

(17) மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகியவற்றுடன் கடந்த ஈராயிரமாண்டுகளாகவே தமிழகம் பண்பாட்டு மொழி

அரசியல் தொடர்புகள் கொண்டு வந்திருக்கின்றது. இந்நாடுகள் தமிழர்க்கு அயலகம் எனக் கருதவியலாத அளவில் ஒற்றுமைப் பண்புகள் கொண்டுள்ளன.[5] தமிழகத்தோடு அவை இந் நெடுங் காலத்தில் கொண்டிருந்த தொடர்புகளால் அங்கெல்லாம்—தென் கிழக்காசிய நாடுகள் அனைத்திலும்—வரலாற்றுச் சான்றுகளும் கலைச் சான்றுகளும மலிந்து கிடக்கின்றன. ஃபிரஞ்சு அரசு, ஆங்கில அரசு, மலேசிய சிங்கை, இலங்கை அரசுகள் யுனெஸ் கோ ஆகியவற்றின் உதவியுடன் அச் சான்றுகளைத் தொகுத்துக் காத்து ஆராயும் பணியினை இந்நாடுகளின் ஆய்வறிஞர் துணை யுடன் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ளலாம்.

(18) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இசுலாம் சமயப் பேரா சிரியர் பதவி நிறுவவும், ஆய்வுத் திட்டங்கள் நிறைவேற்றவும், மலேசிய அரசு, இந்தோனேசிய அரசு ஆகியவற்றை அணுகலாம். அந்நாடுகள், அரசு முறையிலும் இசுலாம் அரசுகள்.

(19) இலங்கை நாட்டு மருத்துவக் கல்லூரியின் சித்த மருத்துவ அறிஞர்கள் உயர் பயிற்சி பெறவும், அடிப்படை ஆராய்ச்சி நிகழ்த்தவும் பாடப் புத்தகங்கள் எழுதவும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் உதவியை நாடுகின்றனர். அவர்களுக்குத் தக்க உதவி நல்கலாம்.

இலங்கையில் சித்த மருத்துவக்கலை வளர்ந்துள்ளமை நூலகர் முருகவேள் தொகுத்த சித்த ஆயுர்வேத நூலடங்கலால் புலப்படுகிறது. அதனை வெளியிடத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முயலலாம். அவர் அதனைப் பல்கலைக் கழகத்திடம் வழங்கத் தயாராக உள்ளார்.

(20) ஆங்கில மொழிபெயர்ப்பில் பயிற்சி பெற்றோர் பலர் அண்டை நாடுகளில் உள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழக மொழி பெயர்ப்புப் பணிக்கு அத்தகையோர் சிலரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(21) இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வெளியாகும் தமிழ் நூல்களை வாங்கலாம். அந்நாடுகளில் தென்கிழக்காசிய நாடுகள் பற்றி வெளியாகும் நூல்களையும் வாங்கலாம். அவற்றை வாங்கிப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கத் தக்க நூல் விற்பனையாளரை அணுகி நிலையான ஏற்பாடு செய்து கொள்ளலாம். இப்பொறுப்பேற்க முகவர் அமர்த்தலாம்.

அண்டை நாடுகளின் பூமிபுத்திரர், தமிழர்களைப் பலவகையிலும் புறக்கணிக்கின்ற காரணத்தால், உதவி பெரும்பாலும் இங்கிருந்தே செல்லவேண்டியிருக்கும். தாய் வீட்டிலிருந்தே சீதனம் செல்லுவது முறையே.

அயலகத் தமிழரின் விருப்பங்கள் சிலவும் தேவைகள் சிலவும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் நிறைவேற்ற முடியாதவை. ஒரு சட்டத்தின் வரம்புக்குட்பட்டு ஆராய்ச்சிக்கு என்றே இப் பல்கலைக் கழகம் இயங்குவதாலும் அதன் பணிகளும் வரையறைக் குட்பட்டனவாதலாலும் அவற்றை நிறைவேற்ற முடியாத நிலை உள்ளது. தோற்றுவிக்கப்பட இருக்கின்ற உலக தமிழ்ச் சங்கமும் அரசும் பிற நிறுவனங்களும் இத் தேவைகள் பற்றிக் கவனிக்கலாம். தோற்றுவிக்கப்பட இருக்கின்ற உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்கத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் பங்கிருக்கலாம்.

(22) அயலகத் தமிழர் தம் வாழ்க்கை வளத்திற்கான பிற பல தேவைகளை அங்கேயே நிறைவேற்றிக் கொள்கின்றனர். அதற்கான வாய்ப்புக்களும் பெற்றிருக்கின்றனர். ஆனால், தமிழ்க் கலைகள்—இசை, நடனம், கூத்துக்கள், நாடகங்கள், ஓவியம், சிற்பம், கட்டடம்—நுகரவும் பயிலவும் பரப்பவும் வாய்ப்புக்கள் வேண்டி நிற்கின்றனர். கலைக் குழுக்களை அங்கெல்லாம் அனுப்பலாம்; அவர்களுக்கு இங்குக் கலைப்பயிற்சிகள் தரலாம். தமிழக அரசுக்கும் உலகத் தமிழ்ச் சங்கத்துக்கும் தமிழ்ப் பல்கலை கழகம் தக்க காலத்தில் இவை குறித்துப் பரிந்துரைக்காலம்.

(23) அயலகத் தமிழர்—குறிப்பாகச் சிங்கப்பூர், மலேசியத் தமிழர் பலர் தமிழ்க் கல்வி கற்றுப் பட்டமும் சான்றிதழ்களும் பெற விரும்புகின்றனர். அஞ்சல் வழியாகத்தான் அது கூடும். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் இதற்கான முயற்சி மேற் கொண்டுள்ளதாக அறிந்து ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்கள் ஏமாற்றம் அடையாதவாறு பிறர் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஊக்கமும் ஆக்கமும் தரலாம்.

(24) சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழும் பதினோர் இலட்சம் தமிழரும் தமிழ் கற்றதை மெல்ல மெல்ல இழந்து வருகின்றனர். மலேசியாவில் தமிழும் ஆங்கிலமும் கற்க வாய்ப்பு இன்றியும் வலிவின்றியும் அவர்கள் மலாய் கற்கின்ற கட்டாயத்தில் வாழுகின்றனர். வருங்காலத் தமிழர் இனி அங்குத் தம் கலை,

பண்பாடு, சமயம், இலக்கியங்கள் முதலானவற்றை மலாய் வழியாகக் கற்க வேண்டிவரும். தமிழ்ப் பல்கலைக் கழகம் இங்கு மலாய்க் கல்வியை வலுப்படுத்தி அதில் தமிழ்ச் செல்வங்களை மொழி பெயர்க்கும் பணியில் முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

(25) அயலகத்தமிழர்களிடமும் கலையுணர்வும் இலக்கிய உணர்வும் தமிழுணர்வும் தமிழகத்திற் போலவே ஓங்கி நிற்கின்றன. அங்கும் கலை மன்றங்களும் எழுத்தாளர் மன்றங்களும் துடிப்போடு இயங்குகின்றன. (மலேசியாவில் மட்டும் இப்போது 300 தமிழ் எழுத்தாளர்கள் உள்ளனர் என குறிப்பு கூறுகின்றது). ஆனால், அவ்வுணர்வுகளைக் கலைப்படைப்புக்களாகவும் இலக்கியப் படைப்புக்களாகவும் உருவம் தந்து செயற்படுத்தம் அவர்களுக்கு அரிதாக உள்ளது. எழுத்தாளராகவும் கலைஞராகவும் அங்குப் பிழைத்தல் அரிது. அவர்களுக்கு நூலாக்கத்திலும் நூல் விற்பனையிலும் கலைப்படைப்புக்கள் பரப்பிலும் தமிழகத்து நிறுவனங்களே உதவ வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகம் தன்னலான உதவியை நல்கலாம்.[6]

அடிக்குறிப்புகள்

1. மலேய நாட்டுத் தமிழர் தம்மைப் பற்றியும், தமிழகத் தமிழரைப் பற்றியும், உலகின் பிறநாட்டுத் தமிழர்களைப் பற்றியும் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்வு மயமாய் வெளியிடும் பாட்டு ஒன்று மலேசியத் தமிழ்ச் செய்தித் தாளில் (நான் கோலாலம்பூரில் இருந்தபோது) வெளிவந்தது. 'தமிழ் எங்கே வாழ்கிறது' என்று தலைப்புத் தாங்கித் தமிழகத் தமிழர் போக்குப் பற்றிக் கசப்பையும் ஏமாற்றத்தையும் அது வெளியிடுகிறது. அயலகத் தமிழர் ஒருசிலர் (பலர்) மனத்தை அது திறந்து காட்டுகிறது என்று கொள்ளலாம்.

தமிழ் எங்கே வாழ்கின்றது?

(எல்லோன்)

தமிழ்நாட்டுத் தமிழ்மகன் தமிழை விட்டான்
தன்மானஞ் சிறிதேனும் இன்றிக் கெட்டான்
அமிழ்தான பழம்நிலையின் உயர்வை எல்லாம்
அழகாக இடைக்காட்டில் அளந்தே விற்றான்

குமிழாரும் ஒழுக்கங்கள் பண்பு யாவும்
குழிதோண்டிப் புதைத்ததிலே நடக்கை செய்தான்
இமிழாரும் உலகத்தில் அவனுக் கீடாய்
எங்கேயான் பிறவினத்தைத் தேடிச் செல்ல?

அரசியலென் ஆர்ப்பரிப்புக் கூட்ட மோர்பால்
அம்மாமித் தமிழ்வளர்க்கும் கூட்ட மோர்பால்
திரைப்படத்தின் இழிகாமக் கூட்ட மோர்பால்
தெளிவில்லா இனத்தலைமைக் கூட்ட மோர்பால்
உறவாடிக் கெடுக்கின்ற கூட்ட மோர்பால்
உட்சாதிப் பிரிவினையென் கூட்ட மோர்பால்
இறைவா—இப் புகழ்க்கிடையில் வாழு கின்ற
இவன்எக்கால் விழித்தெழுவோ? ஏலா ஒன்றே!

உரிமைக்குப் போராடி ஈகம் செய்தே
உணர்விற்கே வித்திட்டான் ஈழ நாட்டான்!
அருமைத்தாய் மொழிபேணிப் பல்லாற் றானும்
அயராது நிற்கின்றான்; மலைய நாட்டான்!
கரு—மைபோல் பல்திக்கும் சிதறி நின்று
கலைபேணத் துடிக்கின்றான்; உலக நாட்டான்!
ஒருமைக்கு நிலையான எதிர்ப்பைச் சேர்த்தே
இருக்கின்றான்; இருக்கைவிடாத் தமிழ நாட்டான்!

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்
மாண்புமிகு வி. டேவிட்

''தமிழகம் வேறு மலைநாடு வேறு. இவ்விரு நாடுகளுக்கும் உள்ள பிரச்சினைகளும் வேறு அரசியல்கூட வேறுதான். ஆனால் நாம் மொழியால், கலாச்சாரத்தால், பண்பாட்டால் ஒன்றுபட்டுள்ளோம். இதைப்பிரிக்க இயலாது. இப்படிச் சொல்வதால் நமக்கு இந்நாட்டின் மீது விசுவாசம் இல்லையெனக் கூறும் எட்டப்பர்களும் நம்மிடையே உண்டு. மலேசியா நமது நாடு; தாய் நாடு; தாயிடம் மகனுக்கு உள்ள பாசம் குறித்துச் சந்தேகம் எழுப்ப வேண்டாம். இந்நாட்டின் குடிமகன் என்ற முறையில் நமது உரிமைகளைக் கேட்டு வாங்குவதும் நமது பிறப்புரிமை.''

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு
மலேசிய மலர்—1981, பக்-14.

மலேசியப் பொதுப்பணி
பயனீட்டுத் துறை அமைச்சர்
மாண்புமிகு டத்தோ. ச. சாமிவேலு

2. ''உலகெங்கணும் வாழுகின்ற தமிழ் மக்களின்மொழித்துறை, கலைத்துறை, கலாச்சாரத்துறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தமிழகம் என்றும் ஆயத்த நிலையில் இருந்துவர வேண்டியதவசியம். சொல்லளவில் மட்டுமல்லாமல் செயலளவிலும் இந்நிலைமை நீடிக்க வேண்டும். அத்தகைய பணிகள் தான் உலகெங்கணும் பரந்த அளவிலே வாழுகின்ற தமிழ்மக்களுக்கிடையே நல்லதொரு பாலமாக அமைய முடியும்.''

''எங்கு வாழினும் தமிழர்கள் தங்கள் நிலை உணர்ந்து, கலை உணர்ந்து மொழி உணர்ந்து அவைகளைப் பேணிப்பாதுகாக்க உற்சாகமளிக்கும் பெரும் பொறுப்பு தமிழகத்துக்கு உண்டு அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட அளவிலே இந்தப் பணி சிறப்புற நிறைவேற்றப்படுமானால் தேனினுமினிய நம் தமிழ் மொழி, பாரம்பரியப் பெருமைமிக்க உலகக் கலாச்சாரத்தில் முற்பட்டதாக விளங்கும். நமது கலாச்சாரம் ஆகியவை அகிலம் எங்கும் பெருமைக்குரியதாக விளங்கும்.''

3. ''தமிழாராய்ச்சி மாநாடுகள் வெறும் விவாத அரங்குகளாக மட்டும் விளங்கி, மாநாடு முடிவுற்றதும் மறக்கப்பட்டவைகளாக ஆகிவிடாமல் அங்கு சமர்ப்பிக்கபெறும் கட்டுரைகளையும்,விவா

தங்களின் தொகுப்புகளையும் அச்சிட்டு உலகெங்கிலுமுள்ள தமிழ் மொழி பேணும் அமைப்புகளுக்கு இலவசமாக வழங்குகின்ற பொறுப்பைத்தமிழ்நாடுஅரசு ஏற்கவேண்டுமென்பது எனதுஆசை. எங்கெங்கெல்லாம் நூலகங்கள், மொழி ஆய்வுக் கூடங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இப்பிரதிகள் அனுப்பப் பெற்றுப் பாதுகாக்கப் பெற வேண்டும்.''

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு
மலேசிய மலர்—1981 பக்-9

' சிங்கப்பூர், தமிழ்மொழி பண்பாட்டுக்
கழகத்தின் தலைவர்
திரு சி.வி. தேவன் நாயர்

4. ''இத்தகைய பண்பாட்டுச் செல்வங்கள் நிலைத்திருக்க முக்கிய கருவியாக அமைவது தமிழ்மொழியே ஆகும். எனவே, உலகின் பல பகுதிகளிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது. இந்த அமைப்பு தமிழ்க் கல்வியில் அதிகமாகக் கவனம் செலுத்துவது தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரியும் என்று நம்புகிறேன். குறிப்பாக, தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றவர்கள் அந்த மொழியைச் செம்மையாகவும், எளிதாகவும் கற்பதற்கு ஏற்ற வகையில் மொழியியல் அடிப்படையில் அமைந்த நவீன பயிற்றுமுறைத் திட்டங்களை உருவாக்குவதற்குஇம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முன் வருமானால், அது மெத்தவும் பயனுடையதாக அமையும்.''

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு
மலேசிய மலர்—1981, பக்-26

5. Thus we note a historic continuity in the relations between these two countries from the early centuries of the Christian era to the present day. The contact is almost unbroken century after century but alters its nature to fit changing conditions in both countries. The movement of people and ideas before modern times may in a sense be said to have made the more intensive modern movement of people less painful. It may be argued that short-term migration and settlement in Malaya was already part of Indian history and tradition, and contributes and additional factor in explaining the ready and continuing migration in modern times. It certainly explains the ease with which

the Indian settled down, since the country was not far different from his own. He had come into a society which in its institutions, its habits of daily life, and even its basic cultural values, was not totally alien to his own. Though for many years there was little or no contact with indigenous society, when contact was established it was found that a fruitful co-existence was possible between the two peoples. The Indian in Malaya, unlike the Indian in the West Indian Islands or the colonies of East and South Africa, did not feel himself so completely alienated from his environment or so drastically separated from the indigenous people.

6. ''18,19, 20-ஆம் நூற்றாண்டுகளில் பல லட்சக் கணக்கான தமிழர்களைக் குடியேற்றி, ஆங்காங்குத் தமிழ்ப் பயிற்சிக்கு வாய்ப்பு உருவாக்காமல் கைவிடப்பட்ட நாடுகளான ஆண்டில்லி, கயானா, திரினிடாட், சுரிநாம், கெசனா, தெமரா, கெனியா, நியூகலிடோனியா, தகித்தி, செயின்ட்கிரோசு, கொனடலோப், மார்ட்னிக், சமேய்க்கா, கிரீன்டா, செயின்ட் வின்செண்ட், செயின்ட் லுக்கா, செயின்ட் கிட்சு, நேவிசு, சீசெல்சு, ரியூனியன், தங்கனிக்கா மற்றும் பல நாடுகளில் தமிழ்மொழியைப்பயில்வதற்கு ஏற்பாடு செய்யத் தூண்டும் நடவடிக்கையை மதுரை மாநாடு ஆராய வேண்டும். தமிழ் நாடும், பரதவ கண்டமும் அக்கறை கொள்ள வேண்டும்.''

''இந்தியாவிலும்,கீழைநாடுகளிலும்16ஆம்நூற்றாண்டு முதல் ஆட்சி செய்து இங்கிருந்து கொண்டுசென்ற கலைச் செல்வங்களையும், பழந்தமிழ்ச் சுவடிகளையும்,அகழ்வாய்வுக் கண்டுபிடிப்புகளையும், நாணயங்களையும் பிறவற்றையும் மீட்க வேண்டும். இலண்டன், பாரிசு, லிசுபன், நெதர்லாந்து மற்றும் சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்து தமிழகம் இழந்த பொருட்களை திரும்பப்பெற வேண்டும். அரிய அறிவியல் மூலக் கருவூலங்களை எல்லாம் நகல் எடுத்துத் திரட்டி மதுரையிலும்,சென்னையிலும் பழந்தமிழ்க் களஞ்சியக் காப்பகத்தில் பாதுகாக்க வேண்டும். இதனைத் தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாற்ற ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடும் பொறுப்புடன் திட்டமிடலாம்.''

''இந்தோனேசியா, கடாரம், இலங்கை, வியட்நாம், மலேசியா, தமிழகம், ஆத்திரேலியா, ஆப்பிரிக்கா பகுதிகளில் மேலும்

மேலும் அகழ்வாராய்ச்சி செய்ய யுனெசுகோவின் பேருதவியை நாட வேண்டும். இதற்கான அரிய பெரிய திட்டம் இடவேண்டும். உலக தமிழாராய்ச்சி மன்றம், அடையாறு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், யுனெசுகோ ஆகிய இம்மூன்றுக்கும் ஒரிணைப்பும் ஆய்வுத் திட்டக் கூட்டுறவும் ஏற்படத் தமிழக அரசு இந்தியப் பேரரசை வலியுறுத்துவதில் தவறில்லை.''

''பழந்தமிழர்களான பல்லவர், சோழர், விசயநகரப் பேராட்சிகளின் போது கீழை நாடுகளில் தமிழரின் சிற்பம்,கட்டிடக்கலை, கோயில், சமயம், கல்வெட்டு முதலியனவற்றைப்பாதுகாக்கவும், ஆராயவும் யுனெசுகோ பெரும் பொறுப்பாற்ற வேண்டும். போர்ச்சுகல், டச்சு, ஆங்கில பிரெஞ்சு அரசுகள் கோடிக்கணக்கில் பணம் தர வேண்டும். உலகப் பல்கலைக் கழகங்களும் தமிழகப் பல்கலைக் கழகங்களும் இத்துறைகளில் ஆழ்ந்த ஆராய்ச்சிப் பட்டத்துறையை வகுக்கத் திட்டம் கொணர வேண்டும். இனம், மொழி, ஆட்சி, மரபு போன்ற துறைகளில் நாடுகளுக்கிடையே கூட்டுறவான ஒப்பீட்டுத்துறை ஆய்வுகள் நடந்துகொண்டே இருக்க வேண்டும்.''

ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு
மலேசிய மலர்—1981, பக்–69.

நூலடங்கல்

1. Arasaratnam, Sinnappah : *Indians in Malaysia and Singapore* (Revised Edition, 1979), Oxford University Press, Kuala Lumpur.

2. Kailasapathy, Dr. K. : *Tamil Studies in Sri Lanka* A lecture at the University of California, Burkeley, U. S.A., (1978).

3. —Do— : *The Cultural and Linguistic Consciousness of the Tamil Community in Sri Lanka.*

4. Marimuthu, Dr. T. : *Norms and Values of Plantation Workers (*Seminar paper 1978*).*

5. Silva, De, K.M., : *A History of Sri Lanka* (1981), Oxford.

6. Somasundaram, Aru. : *சிங்கப்பூர் (1980)*, பொன்முடி பதிப்பகம், *காரைக்குடி*.

7. Vaiyapuri Pillai, S. : *History of Tamil Language and Literature, (*1956*),* N. C. B. H., Madras, 600 002.

8. Wilson, A. Jeyaratnam : *Politics in Sri Lanka* 1947-1973 *(*1974*)*, MaCmillan.

9. .... : *A Guide to The National Library, Singapore.*

10. .... : *Annual Report* 1980-81, *Institute of South East Asian Studies, Singapore.*

11. .... : *Census of Population and Housing, Sri Lanka.* 1981. *Primary Release No. 1* Department of Census and Statistics, Ministry of Plan Implementation, Sri Lanka.

12. .... : *National University of Singapore,* 1982-83. *General Information.*

13. .... : *Report on The Establishment of A Department of Tamil Studies at The National University of Singapore.* 1981, National University of Singapore Tamil Language Society.

14. .... : The Tamil University Ordinance 1981.

15. .... : *Towards Understanding The Problems of The Indian Poor in Malaysia.*

16. .... : The Information Division, Ministry of Culture, Singapore.

17. .... : உலகத் தமிழ் (1981), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

18. .... : ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு மலேசிய மலர் 1981.

பின்னிணைப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகம்

TAMIL UNIVERSITY

TANJORE, TAMILNADU

V. I. SUBRAMONIAM, M. A. Ph.d.(Ind. USA),

VICE-CHANCELLOR .

Phone: 40

Date: 21-4-1982

My Dear friend,

வணக்கம்: You might have known by now the establishment of the Tamil University at Thanjavur, Tamil Nadu, South India with comprehensive programmes for research in all aspects of Tamil culture. To start with the University has established five Faculties with Departments for Sculpture, Painting, Music, Drama, Palm Leaf Manuscripts, Rare Ancient Books, Epigraphy, Tamil Studies in Foreign Countries, Translation, Compilation, Literature, Linguistics, Siddha Medicine, Ancient Science, Industries and Architecture. Senior Professors and promising youngmen have taken up academic positions in the University. The Library, the heart of the University, for research is being rapidly built up with all the available materials through the modern means.

The Tamil migrants, in more than twenty countries varying in number from 38 lakhs in Ceylon to a few thousands in the Reunion Islands, will be glad to get in touch with the Tamil University a) for the study of Language, Literature, Culture and Society of the Tamils and b) for the training in cultural, social, religious and artistic life. It is the University's endeavour to meet the cultural needs of the Tamils living abroad to their satisfaction. Besides the Exchange Programmes sponsored by the respective Governments a limited number of visiting Fellowships and Research grants are available with this University. Similarly Foundations in India and elsewhere can also help you. The

Tamil University Library has also to be equipped with published materials on the Tamil migrants in Tamil, English, French, and other languages. Having these points in mind one of our Directors is going shortly to visit a few countries to undertake a survey of the situation. We will appreciate if the educational and cultural needs of the Tamils, the problems in research and the publications, old and new, about the country where you live, are brought to his notice.

* A monthly bulletin, TAMIL UNIVERSITY NEWS and a Research Quarterly TAMIL CIVILIZATION are shortly to be issued, which will keep us in touch with you. If you are interested in getting a sample copy without entering your subscription, the Director of Publications, Tamil University, will send one to you. You may later file the subscription.

Though, late, I request you keep in touch with the infant University which has a sizable academic programme about the Tamil migrants in countries near and far-off.

With greetings and regards.

delnet NBD Pilot Project

பெருமதிப்புடன்,
Yours sincerely,

(Sd.) V. I. SUBRAMONIAM

---

* Monthly Bulletins Ceithi Malar in Tamil, News Bulletin in English and Quarterly Research Journals Tamil Kalai in Tamil, Tamil Civilization in English are being issued.